# அச்சத்திற்குள் வாழ்தல்
# சிறீ லங்காவில் தமிழ்ப் புலிகளும் சிறார் படையினரும்


அருஞ் சொற்கள; (GLOSSARY) …………………………………………01

I. சாராம்சம் …………………………………………………………...02
யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் புலிகள் இயக்கத்தினால்
சிறார்களை படையில் சேர்த்தலும் பயன்படுத்தலும் ..……….......06
யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான
செயல் திட்டமும; (Action Plan),புலிகளின் கடப்பாடும் ..…………... 09
சட்டத் தராதரங்கள்………………………………………………... 10
முறைமை தொடர்பாக ஒரு குறிப்பு ……………………………... 11

II. பரிந்துரைகள் ……………………………………………………….. 12
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (LTTE): ……………………………. 12
இலங்கை அரசாங்கத்திற்கு……………………………………………..13
ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்திற்கு (UNICEF) …………………14
சர்வதேச தொழில் ஸ்தாபனத்திற்கு (ILO) ………………………… 15
மனித உரிமைகளுக்கான வடக்கு கிழக்கு
ஆணைக்குழுவிற்கு (NECOHR)………………………………………... 15
நோர்வே அரசாங்கத்திற்கு …………………………………………... 15
சிறீ லங்கா கண்காணிப்பு குழுவினருக்கு (SLMM)……………….... 16
நிதி வழங்குநர்களுக்கு (ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா,
ஐரோப்பிய யூனியன். ஸ்கென்டிநேவிய நாடுகள் உட்பட) ……….. 16
புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினருக்கு…………………...17
புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் கணிசமாக உள்ள
நாடுகளான, கனடா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா,
ஐக்கிய இராச்சியம் (UK), அமெரிக்கா, மற்றும்
ஸ்கென்டிநேவிய நாடுகளுக்கு………………………………………. 17
ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு…………………………... 17
ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து அங்கத்துவ
நாடுகளுக்கும் …………………………………………………………. 18

III. பின்னணி நிலவரம் ………………………………………………... 18
IV. யுத்த நிறுத்த காலகட்டத்தில் புலிகள் இயக்கம்
சிறார்களை படையில் சேர்த்தமை……………………………………21

V. புலிகள் இயக்கத்திற்குள்ளே சிறார் படையினரின் வாழ்க்கை…… 34
அடிப்படைப் பயிற்சி……………………………………………………....34
குடும்பங்களுடனானதொடர்பு……………………………………………36
முன்னேறிய பயிற்சி……………………………………………………... 37

தண்டனையும் ஒழுக்கக் கட்டுப்பாடும் ……………………………….. 39
சண்டைகள் ……………………………………………………… 40

**VI.** புலிகள் இயக்கத்திற்குள் பிளவும் சிறார்கள் விடுதலையும் …….. 42
ஏப்ரல் மாத சண்டையின் போது சிறார்கள் உயிரிழப்பு ………… 45
பிள்ளைகளை விடுவிக்குமாறு பெற்றோர்கள் வலியுறுத்தல் …….. 47

**VII.** மீள-ஆட்சேர்ப்பு ……………………………………………………… 51
சொந்த சகோதரங்களுக்கு ஆபத்து………………………………… 58
பாடசாலைக்கு செல்வதில் அச்சம் ……………………………………60
திருமணம் ………………………………………………………... 61
மீள பிடிக்கப்படக்கூடிய ஆபத்து நிலையில் பெண் பிள்ளைகள் 63
ஆட்சேர்ப்பை தடுப்பதில் பெற்றோர்களின் பங்கு…………………… 64

**VIII.** ஆட்சேர்ப்பு மற்றும் சிறார்கள் படையினராக பாவிக்கப்படுதல் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருவதில் புலிகள் இயக்கத்தின் கடப்பாடு ……………………………………………... 66

**IX.** தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் புலிகள் இயக்கம் தவறியுள்ளமை ……………………………………………………... 68

**X.** யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயற் திட்டம் **(Action Plan)** ………………………………………….. 74
தங்கு மடங்கள் (Transit Centers) ……………………………………... 76
தமிழர் புணர்வாழ்வு கழகத்தின் (தபுக) பாத்திரம் …………………78
கருணாவின் படையணிகளை விடுவிப்பது தொடர்பான பிரதிபலிப்பு ……………………………………………... 81

**XI.** செயல் திட்டத்தின் (Action Plan) எதிர்காலமும் யுனிசெப் அமைப்பின் பாத்திரமும் ……………………………………………... 82

**XII.** தேசிய அரசாங்கத்தின் பிரதிபலிப்புக்கள் ……………………………91

**XIII.** சிறீ லங்கா கண்காணிப்பு குழு (SLMM) …………………………… 95

**XIV.** சர்வதேச நிதி வழங்குநர்கள்………….……………………………99

**XV.** சர்வதேச சட்டத் தராதரங்கள் …………………………………..102
இணக்கம் காணப்பட்டவற்றை அடைவது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முயற்சிகள்……………………....….106

நன்றியுரை…………………………………………………………..… 108

# MAP OF SRI LANKA



## அருஞ் சொற்கள் (GLOSSARY)

| | |
|---|---|
| ICRC | சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் |
| ILO | சர்வதேச தொழில் அமைப்பு |
| ISGA | இடைக்கால தன்னாட்சி அதிகார சபை |
| LTTE | தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் |
| NCPA | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை |
| NHRC | தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு |
| TRO | தமிழர் புனர்வாழ்வுக் கழகம் |
| SLA | சிறீ லங்கா இராணுவம் |
| SLMM | சிறீ லங்கா கண்காணிப்பு குழு |
| UNICEF | ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் |

# I. சாராம்சம்

*எனது பெற்றோர்கள் என்னை புலிகள் இயக்கத்திடம் ஒப்படைக்க மறுத்து விட்டதனால் அவர்கள் பத்துப் பதினைந்து பேர் எங்களின் வீட்டுக்கு வந்தார்கள். சீருடை தரித்த ஆண்களும் பெண்களும் கைகளில் றைபிள்களுடனும், இடைப்பட்டிகளில் கட்டப்பட்ட துப்பாக்கிகளோடும் வந்திருந்தனர்…. என்னை கொண்டு செல்வதற்கு அவர்கள் வந்த, அந்த அதிகாலை நேரம் நான் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தேன். …..திடீர் என வீட்டுக்குள் நுழைந்த அவர்கள் என்னை தற தறவென்று வீட்டுக்கு வெளியே இழுத்துச் சென்றனர். ''என்ன செய்கிறீர்கள், என்ன நடக்கிறது இங்கே?'' என எனது தந்தையார் அவர்களை நோக்கி கத்தினார். ஆனால் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சில சிப்பாய்கள் எனது தந்தையை அருகில் இருந்த புதர்களை நோக்கி இழுத்துச் சென்று அவரை கடுமையாக தாக்கினார்கள்… அதை தடுக்க முயன்ற எனது தாயாரை அவர்கள் கீழே தள்ளி விழுத்தினார்கள்.*

-2003 ம் ஆண்டில் தனது 16ம் வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்ட பெண்

*ஒரு நாள் அவர்கள் எனது தம்பியை கொண்டு சென்றனர். அவன் சந்தையில் இருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் வேளையில் பிடிக்கப்பட்டான். ''எனது வாழ்க்கையில் 8வருடங்களை நான் உங்களுக்கு தந்திருக்கிறேன், எனது காலையும் தந்திருக்கிறேன். என் தம்பியை என்னிடம் திருப்பி தாருங்கள், அவன் ஒருவன்தான் என்னை பார்த்துக் கொள்வதற்கு இருக்கிறான், அவன்தான் என்னை மலசல கூடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், படுக்கைக்கு கொண்டு செல்ல வேண்டும், என்று சொல்லி அவர்களிடம் கெஞ்சி மன்றாடினேன். அவர்கள் அவனை விடுவிக்கவில்லை மாறாக இக்கடத்தல் பற்றி நான் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவித்தால் அவர்கள் என்னைச் சுட்டு விடுவதாக அச்சுறுத்தினார்கள். அது மட்டுமன்றி, நான் அவர்களுடன் திரும்பச் சேரவேண்டும் என்றும் சொன்னார்கள். என்னை அவர்களுக்கு எல்லா வழிகளிலும் கொடுத்த எனக்கு இப்படித்தானா அவர்கள் நன்றி காட்டுவது? ஏன் அவர்கள் எனக்கு இப்படி செய்கிறார்கள்?*

-தனது 16வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டு சண்டையில் மிக மோசமாக அங்கவீனமான ஒரு பெண்

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் அரசாங்கத்திற்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே முடிவுக்கு கொண்டுவரப்பட்ட மோதல் தவிர்ப்பு நிலமையானது, சிறீ லங்காவில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் குடும்பங்களைப் பொறுத்தவரை, கடந்த 20 வருடகால மோதல் சூழ்நிலையின் மோசமான அம்சமான சிறுவர்களை சேர்த்து அவர்களை சிப்பாய்களாக பயன்படுத்தும் முறையில் இருந்து பரிகாரம் எதனையும் கொடுக்கவில்லை. அதாவது சிறுவர்களை சேர்க்கும் முறைக்கு பரிகாரம் எதனையும் கொடுக்கவில்லை எனலாம். யுத்தம் முடிவுக்கு வந்திருந்தாலும் சிறார்களை படையில் சேர்ப்பதை தாங்கள் நிறுத்துவதாக உறுதிமொழிகளை பலமுறை புலிகள் வழங்கிய போதும் சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கையை புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில்

மட்டுமன்றி முன்னர் புலிகள் இயக்கத்தால் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடமாடக்கூடியதாக இருந்த வடக்கு கிழக்கின் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் தற்போது இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது நடைபெறுகின்றது. 2004ம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் கிழக்கு பிரிவினரால் விடுவிக்கப்பட்ட சிறார்களை மீண்டும் படையில் சேர்த்தது உட்பட, யுத்த நிறுத்த காலகட்டத்தில் புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக சிறார்களை படையில் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவே இவ்வறிக்கையானது குறிப்பாக தன் கவனத்தை செலுத்துகின்றது.

இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது பதினொன்று அல்லது பன்னிரண்டு வயதையுடைய சிறார்களே மிக ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக தமிழ் வீடுகளுக்கு சென்று தமது “இயக்கத்திற்கு” ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு பிள்ளையைத் தர வேண்டும், என அறிவித்து வருகின்றது. இதனை மறுக்கும் குடும்பங்கள் அச்சுறுத்தலுக்கும் மோசமான இடைஞ்சல்களுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர். தாங்கள் மறுக்கின்ற பட்சத்தில் ஒன்றில் தங்களுடைய பிள்ளை பலவந்தமாக கொண்டு போகப்படுவது, அல்லது அப்பிள்ளைக்காக அக்குடும்பத்தில் இருக்கும் இன்னுமொரு பிள்ளையை அல்லது ஒரு குடும்ப அங்கத்தவரைக் கொண்டு செல்லுதல், அல்லது அக்குடும்பமானது பலாத்காரமாக அவர்களின் வீடுகளில் இருந்து வெளியேற்றப் படுவது போன்றவையே அங்கு நடப்பதாக பெற்றோர்கள் தெரிவித்தனர். புலிகள் இயக்கத்தினர் இவ் அச்சுறுத்தல் நடவடிக்கையை மிகத் திறம்பட மேற்கொள்ளுகின்றனர். அடிக்கடி சிறார்கள் வீடுகளில் இருந்து இரவு நேரங்களில் கடத்தப்படுதல் அல்லது சிறார்கள் வீதிகளில் நடக்கும்போது பாடசாலைக்கு போகும்போது கோவில் திருவிழாவிற்கு போகும்போது கடத்தப்படுதல் நடைபெறுகின்றது. தமது பிள்ளைகள் கடத்தப்படுவதை தடுக்க முனையும் பெற்றோர்கள், புலிகளின் வன்முறையை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

பெரும்பாலான சிறார்கள் ஒருமுறை புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர் அவர்கள் தமது குடும்பங்களோடு தொடர்பு வைக்க அனுமதிக்கப் படுவதில்லை. புலிகள் இயக்கத்தினர் அநேகமாக அவர்களை கடுமையான பயிற்சிகளிலும் சிலவேளைகளில் கொடுமையான பயிற்சிகளிலும் ஈடுபடுத்துகின்றனர். அவர்களுக்கு இராணுவத் தந்திரோபாயங்கள் கற்பிக்கப் படுவதோடு, வெடிகுண்டுகள் கண்ணிவெடிகள் உட்பட ஆயுதங்கள் போன்றவற்றை கையாளுவதையும் அவர்கள் கற்றுக் கொள்ளுகின்றனர். தவறு விடுபவர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தப்பி ஓட முனைபவர்களை புலிகள் இயக்கத்தினர் மிக மோசமாக தண்டனைக்கு உள்ளாக்குகின்றனர். தப்பியோட முனைகின்ற சிறார்கள் அவர்களின் பயிற்சிப் பிரிவினர் அனைவருக்கும் முன்னால் வைத்து மிக கடுமையாக தாக்கப்படுகின்றனர். இப்பகிரங்கத் தண்டனையானது தாமும் தப்பி ஓட நினைப்பவர்களுக்கு தமது எண்ணத்தை பின் போட வைக்கும் உத்தியாகவே வழங்கப்படுகின்றது.

2002ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையோடு கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலமாக கடந்த 20 வருடங்களாக 60,000 உயிர்களைப் பலிகொண்ட கடும் மோதல் நிலைமைக்கு இவ் யுத்த நிறுத்த ஒப்பந்தமானது உண்மையிலேயே வரவேற்கத்தக்க ஓர் முடிவை கொண்டுவந்திருக்கிறது. ஆனால்

மறுபுறம் யுத்தநிறுத்தம் புலிகள் சிறுவர்களை படையில் சேர்ப்பதை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் இன்னும் மோசமாக்கியிருக்கிறது எனலாம். யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்னும் இப்பதமானது "விடுவிக்கப்பட்ட பகுதி" என அழைக்கப்படும் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஆயுதமேந்தாத புலிகள் இயக்க அங்கத்தவர்கள் சட்ட பூர்வமாக உள் நுழைவதற்கு அங்கீகாரம் வழங்குகின்றது. உண்மையான யதார்த்த நிலை யாதெனில், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு உட்பட வடக்கு கிழக்கின் பிரதான நகரங்களில் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம் போன்ற விடயங்களில் புலிகள் இயக்கத்தினரே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவ் ஆதிக்கத்தை பயன்படுத்தி புலிகள் சிறார்களைச் சேர்க்கும் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

யுத்த நிறுத்த ஒப்பந்த காலம் முழுவதும் புலிகள் புதியவர்களை படையில் சேர்ப்பதில் ஈடுபட்டிருந்தனர். இறுதியான சமாதான ஒப்பந்த இணக்கப்பாடொன்று வருகின்ற பட்சத்தில் வடக்கு கிழக்கை முழுமையாக கட்டுப்படுத்துவதற்கு தம்மைத் தயார்படுத்திக் கொள்வதற்காகவோ அல்லது சமாதானப் பேச்சுக்கள் முறிவடைகின்ற பட்சத்தில் இராணுவ ரீதியில் தாம் தயாராக இருக்க வேண்டும் என்கின்ற நோக்கிலோ அல்லது மேற்சொன்ன சகல காரணங்களுக்குமாகவோ புலிகள் இயக்கத்தினர் இச்சமாதான பேச்சுவார்த்தை காலகட்டத்தில் தமது கரங்களை பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர் என்று கூறலாம். இச் சமாதானக் காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தினர் தமது படைகளில் சேர்த்துக்கொண்ட சிறார்களின் உண்மையான எண்ணிக்கையானது தெளிவில்லாது இருந்தாலும் கூட இலங்கை அரசாங்கம் மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளியிடும் தகவல்களின்படி இக்காலகட்டத்தில் புலிகள் இயக்கத்தினர் பல்லாயிரக்கணக்கான புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொண்டுள்ளனர் என நம்பப்படுகின்றது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து 2004ம் ஆண்டு ஒக்டோபர் 31ம் திகதி வரை, வயது குறைந்த சிறார்கள் புதிதாக படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமை தொடர்பான 3,516 சம்பவங்களை ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியமானது (UNICEF- யுனிசெப்) ஆவணப் படுத்தியுள்ளது. (கீழே குறிப்பிடப் பட்டுள்ளபடி, முன்னர் விடுவிக்கப்பட்டு பின்னர் மீள சேர்க்கப்பட்டவர்கள் உட்பட). இக்கால கட்டத்தில் 1,206 சிறார்களை புலிகள் இயக்கத்தினர் சம்பிரதாய பூர்வமாக விடுவித்தனர். ஆனால் நவம்பர் 2004ம் ஆண்டுவரை யுனிசெப் அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட நபர்களில் இன்னும் 1,395 பேர் விடுவிக்கப்படாமல் உள்ளனர்.[1] அதே வேளை உண்மையாக புலிகள் இயக்கத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறார்கள் தொகையில் ஒரு பகுதியினர் பற்றிய விபரங்கள் மட்டுமே தம்மால் ஆவணப்படுத்தப் பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனம் குறிப்பிட்டுச் சொல்கிறது. இதற்கு காரணங்களாக இவ்வாறு பதிவு செய்யக்கூடியதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக பல குடும்பங்கள் அறியாமல் இருப்பதும், பலர் அவ்வாறு செய்வதற்கு அச்சப்படுவதும் அல்லது யுனிசெப் காரியாலயம் ஒன்றைச் சென்றடைவதற்கு உள்ள சிரமங்களையும் கூறலாம். புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்பட்ட அல்லது வீடுகளுக்கு திரும்பிய

[1] புள்ளி விபரங்கள் 2004 நவம்பரில், யுனிசெப் அமைப்பினால் மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவிற்கு வழங்கப்பட்டன.

சிறார்களில் 25வீதமானோர் மட்டுமே முன்னர் யுனிசெப் நிறுவனத்தின் புள்ளி விபரக் கோவைக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளனர். எனவே புலிகள் இயக்கத்தினுள் இன்னும் எஞ்சி இருக்கின்ற சிறார்களின் தொகையானது 1,395 தொகையை விடவும் நான்கு மடங்கு அதிகமாக இருக்கலாம் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது.

2004ம் ஆண்டு மார்ச் மாதம் வடக்கே வன்னியென்று அழைக்கப்படுகின்ற பிரதேசத்தில் அதியுயர் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விசுவாசமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதான படையில் இருந்து, புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண தளபதியான கேணல் கருணா பிரிந்து சென்றார். 2004ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் புலிகள் இயக்கத்தின் வன்னிப் பிரிவினர் கருணாவின் கிழக்குப் படைகளை தாக்கி தோற்கடித்ததுடன், அது மிக விரைவில் கலைக்கப்பட்டது. கருணாவிற்கு கீழ் இருந்த 2000ற்கும் மேற்பட்ட சிறார் படையினர் ஒன்றில் தாமாகவே விலகிச் சென்றனர், அல்லது குடும்பங்களிடம் செல்லுமாறு தமது தளபதிகளினாலேயே ஊக்குவிக்கப்பட்டனர்.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது வீடுகளுக்கு திரும்பிய சிறார்களுக்கு இது ஒரு கடும் சோதனையின் தொடக்கமே. அவர்கள் வீடு திரும்பி சில வாரங்களுக்குள்ளேயே, சிறார்கள் உட்பட முன்னர் கருணாவோடு இருந்த அங்கத்தவர்களை மீள தமது படைகளில் சேர்த்துக் கொள்வதற்காக தீவிர பிரச்சாரத்தை புலிகள் இயக்கத்தினர் முடுக்கிவிட்டனர். சீருடைகளோடும் ஆயுதபாணிகளாகவும் கிராமம் கிராமமாகவும், வீடு வீடாகவும் சென்ற, வன்னிப் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் முன்னாள் அங்கத்தவர்களை, மீண்டும் புலிகள் இயக்கத்தில் வந்து சேரவேண்டும் என அழுத்தமிட ஆரம்பித்தனர். ஆட்டோ வண்டிகளைப் பாவித்து (Auto Rickshaw) அறிவிப்புக்களை மேற்கொண்டும், கிராமங்களில் கூட்டங்களை நடத்தியும், குடும்பங்களுக்கு கடிதங்களை அனுப்பியும் மீண்டும் பிள்ளைகளைத் தம்மிடம் தருமாறு புலிகள் இயக்கத்தினர் வற்புறுத்தினர்.

வீடுகளுக்கு திரும்பிய சிறார்களை அநேகமாக பலாத்காரத்தை பாவித்தே புலிகள் இயக்கத்தினர் மீளத் தம்மோடு சேர்த்துக் கொண்டுள்ளனர். தமது பிள்ளைகள் இரண்டாம் தடவையாகவும் புலிகள் இயக்கத்தினால் சேர்த்துக் கொள்ளப்படுவதை தடுக்க முயன்ற பெற்றோர்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர் அல்லது தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர். எஞ்சியுள்ள சிறார்களும் அவர்களின் குடும்பங்களும் மிகுந்த அச்சத்துடனேயே வாழுகின்றனர். பாடசாலைகளுக்கு சென்றுவிட்டு வீடு திரும்புகின்ற வழியில் மீண்டும் தமது பிள்ளைகள் புலிகள் இயக்கத்தினால் கடத்திச் செல்லப் படலாம் என்கின்ற அச்சம் காரணமாக பாடசாலைகளுக்கு பிள்ளைகளை மீளவும் அனுப்பி வைப்பதற்கு பெற்றோர்கள் அஞ்சுகின்றனர். சில பிள்ளைகள் வீடுகளை விட்டு வெளியே வருவதற்கே அஞ்சுகின்றனர். இன்னும் சிலர் பாதுகாப்புக் கருதி தமது உறவினர் வீடுகளுக்கு சென்றிருப்பதோடு, பலர் மத்திய கிழக்கு நாடுகளில் வேலை தேடுவதற்கென்று நாட்டைவிட்டே வெளியேறிச் செல்கின்றனர். திருமணம் முடித்தவர்களை புலிகள் இயக்கத்தினர் தமது படைகளில் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என்னும் ஓர் கருத்து நிலவுவதால், அவ்வாறு திருமணம் செய்து கொள்வது புலிகள் இயக்கத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் இருந்து தமக்கு ஒருவித பாதுகாப்பை வழங்கும் எனக் கருதி, பல பையன்களும் சிறுமிகளும் திருமணம் செய்து

கொண்டுள்ளனர். புலிகள் இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளப் படும்போதே பெண் பிள்ளைகளின் தலைமயிர்கள் கட்டையாக வெட்டப்பட்டு விடுவதால் அவர்கள் மிக இலகுவாக இனங்காணப்படக் கூடியவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாக குறிப்பாக பெண்பிள்ளைகளின் நிலை மிக ஆபத்தாக மாறியுள்ளது.

***யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் புலிகள் இயக்கத்தினால் சிறார்களை படையில் சேர்த்தலும் பயன்படுத்தலும்.***

இலங்கையில் நடைபெற்ற இரு தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தில் தொடர்ச்சியாகவே புலிகள் இயக்கமானது சிறார்களை தமது இயக்கத்தில் சேர்த்து, அவர்களை படையினர்களாக ஈடுபடுத்துவதை மேற்கொண்டு வந்துள்ளனர். குறிப்பாக 1987ம் ஆண்டு ஒக்டோபரில் புலிகள் இயக்கமானது இந்திய அமைதிகாக்கும் படையினர் மீது தாக்குதல்களைத் தொடுத்து அவர்களை வடக்கில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து வெளியேறச் செய்ததில் இருந்தே இதனைச் செய்து வருகிறது.[2]

பல வருடங்களாக புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படும், சிறார்களை படையில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையானது பல காரணிகளால் ஊக்குவிக்கப் பட்டுள்ளது. முதலாவதாக, புலிகள் இயக்கத்தின் மிகத் திறமையான பிரச்சார இயந்திரத்தின் மூலம் தொடர்ச்சியாக வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் நடத்தப்படுகின்ற புலிகள் இயக்க வீரர்களை கௌரவிக்கின்ற நிகழ்வுகள், புலிகள் இயக்க அங்கத்தவர்களின் படை அணிவகுப்புகள், பகிரங்கமாக பார்வைக்கு வைக்கப்படுகின்ற யுத்த வெற்றிச் சின்னங்கள் மற்றும் வீடியோ திரைப்படங்கள், உரைகள் என்பவற்றின் மூலம் தமிழ் சிறார்கள், குறிப்பாக பாடசாலைப் பிள்ளைகள் வெகுவாக கவர்ந்திழுக்கப் படுகின்றனர். புலிகள் இயக்கத்தினால் மாவீரர் குடும்பங்களுக்கு விசேட கௌரவம் வழங்கப்படுகின்ற அதேவேளை தமது இயக்கத்தின் அங்கத்தவராக பணியாற்றுவது ஓர் உயர்ந்த பணியென்னும் பெருமை உணர்வுக்கூடாகவும் சிறார்கள் அதை நோக்கி கவர்ந்திழுக்கப் படுகின்றனர்.

இரண்டாவதாக, இலங்கை பாதுகாப்பு படையினரின் அத்துமீறல்களினால் மோசமாக பாதிப்புக்கு உள்ளான அல்லது அழிவுகளை நேரடியாக கண்ணுற்ற சிறார்களும், புலிகள் இயக்கத்தில் போய்ச் சேர்ந்து கொள்ளுவதற்கு உந்தப்படுகின்றனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னர் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்களாக, சட்ட விரோதமான தடுத்து வைப்புக்கள், விசாரணைகள், சித்திரவதை, சுட்டுக் கொல்லுதல், காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் பாலியல் பலாத்காரம் என்பவை குறிப்பாக உள்ளடக்கப்படுகின்றன. 1993ம் ஆண்டில் வடக்கே வட்டுக்கோட்டை என்னும் இடத்தில் இளம் பருவத்தினரிடையே நடத்தப்பட்ட ஓர் கற்கை ஆய்வின்படி, சிறார்களில் நான்கில் ஒரு பகுதியினர் நேரடியாக வன்முறைகளைக் கண்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.[3] இதன் பிரதி பலனாக பல சிறார்கள் தமது குடும்பங்களை பாதுகாத்துக்

---

[2] சிறார்கள் படைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவதை நிறுத்துவதற்கான கூட்டமைப்பு, *சிறார் படையினர் தொடர்பான அனைத்துலக அறிக்கை 2001.* பக்.341

[3] D.J .சோமசுந்தரம், *சிறார்களின் மன அதிர்ச்சி* (யாழ். பல்கலைக்கழகம்: யாழ்ப்பாணம்,1993)

கொள்வதற்காகவோ அல்லது நிகழ்ந்த அத்துமீறல்களுக்கு பழி வாங்குவதற்காகவோ புலிகள் இயக்கத்தில் சேர்ந்தனர்.

மூன்றாவதாக, கையறு நிலை. இது வறுமை மற்றும் கல்வி, தொழில் சார் வாய்ப்புக்கள் இல்லாதுபோன நிலைமை போன்றவை இவர்கள் போய்ச் சேர்ந்து கொள்வதற்கு உந்துதலாக அமைந்துள்ளன. குறிப்பாக கிழக்கில் உள்ள மாவட்டங்களைச் சேர்ந்த தமிழர்கள் மிகவும் வறியவர்களாக இருக்கின்ற அதே நேரத்தில் வடக்குத் தமிழர்களை விட தரத்தில் குறைந்தவர்கள் என்றும் கணிப்பிட்டுப் பார்க்கப் படுகின்றனர். எனவே அச்சமூகத்தின் சிறார்களைப் பொறுத்தவரையில் மற்றைய வழிகளைவிட புலிகள் இயக்கத்தோடு தம்மைச் சேர்த்துக் கொள்வதே தகுந்த மாற்று வழி என அவர்களை கருதவைக்கின்றது.

இறுதியாக, பலவந்தமும் அச்சுறுத்தலும் பெருந்தொகையான சிறார்களை புலிகள் இயக்கத்தினுள் கொண்டு வந்துள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ''கொள்கை'' என்று குடும்பத்திற்கு ஒரு மகனையோ அல்லது மகளையோ நிற்சயம் தர வேண்டும் என தமிழ் குடும்பங்களை வற்புறுத்துகின்றனர். ஏதாவது ஒரு குடும்பம் இதற்கு மறுப்பு தெரிவிக்கின்ற பட்சத்தில் அவர்கள் பெரும்பாலும் அச்சுறுத்தலுக்கும் இடைஞ்சலுக்கும் உள்ளாக்கப் படுகின்றனர். பொதுவாக பல்வேறு தருணங்களில் அவர்களின் பிள்ளைகள் பலவந்தமாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச சட்டங்களின்படி சிறார்களை பலவந்தமாக படைகளில் சேர்த்துக் கொள்வது மட்டுமல்ல சட்ட விரோதமானது, ''சுயமாக'' வந்து தம் படையணிகளில் இணைந்து கொள்ளும் சிறார்களை ஏற்றுக் கொள்ளுவதன் மூலமும் புலிகள் இயக்கத்தினர் சர்வதேச சட்டங்களை மீறுகின்றனர்.

''குழந்தைப் படைப்பிரிவு'' (Baby Brigade) என அழைக்கப்பட்ட பிரிவுக்குள்ளேயே ஆரம்பத்தில் சிறார்கள் சேர்க்கப்பட்டு பின்னர் அவர்கள் ஏனைய பிரிவுகளுக்குள் இணைக்கப்பட்டு கொள்ளுகின்றனர். புலிகள் இயக்கத்தினால் நடத்தப்படுகின்ற அநாதை இல்லங்களில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட சிறார்களைக் கொண்டு ''சிறுத்தைப்புலி படைப்பிரிவு'' (Leopard Brigade) அமைக்கப்பட்டது. இதுவே புலிகள் இயக்கத்தின் மிக உக்கிரமான சண்டைப் பிரிவாக கணிக்கப்படுகின்றது.

யுனிசெப் அமைப்பின் அறிக்கையின்படி புலிகள் இயக்கத்திற்குள் சேர்க்கப்பட்டுள்ள சிறார்களில் 40 வீதமானோர் பெண்களே ஆவர்.[4] ''தற்போதைய சமூக அமைப்பில் உள்ள பாரம்பரியமான ஒடுக்கு முறையை எதிர்ப்பதற்கும், பெண்களின் விடுதலைக்கு ஒத்தாசை வழங்குவதற்குமே'' தமது இயக்கத்தில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாக புலிகள் இயக்கமானது கூறுகின்றது.[5] புலிகள் இயக்கத்தினுள் பெண் படையினர் ''சுதந்திரப் பறவைகள்'' என்றே அழைக்கப்படுகின்றனர். பெண்களைப் படைகளில் சேர்த்துள்ள,

---

[4] *ஆட் சேர்ப்பில் பால்நிலை வேறுபாடு பற்றிய ஆய்வு,* 2004 நவம்பர் 2ல் யுனிசெப் வழங்கிய தகவல்

[5] சிறார்கள் படைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவதை நிறுத்துவதற்கான கூட்டமைப்பு, *சிறார் படையினர் தொடர்பான உலக அறிக்கை 2001.* பக்.342

ஏனைய மோதல் நிகழும் இடங்களைப் போல் அல்லாது, புலிகள் இயக்கத்தினுள் பெண்கள் மீதான பாலியல் அத்துமீறல்கள் மிக அரிதாகவே உள்ளன. அது மட்டுமன்றி பொதுவாக இவர்களுக்கு இடையே பாலியல் உறவுகள் தடை செய்யப்பட்டும் உள்ளன.

யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் புலிகள் இயக்கமானது தொடர்ச்சியாக சிறுவர்களையும் சிறுமிகளையும் சண்டைகளில் ஈடுபடுத்தி உள்ளது.[6] 1991ம் ஆண்டில் ஆனையிறவு இராணுவ தளத்தின்மீது புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய இராணுவ நடவடிக்கையின் போது, குழந்தைகள் படைப் பிரிவில் இருந்து எடுக்கப்பட்ட சிறார்கள் அலை அலையாக சண்டையில் ஈடுபடுத்தப் பட்டதில், 550 புலிகள் இயக்க அங்கத்தவர்கள் உயிர் இழந்துள்ளனர்.[7] 1990களில் நிகழ்ந்த சண்டைகளின் போது கொல்லப்பட்ட புலிகள் இயக்க அங்கத்தவர்களில் 40க்கும் 60க்கும் இடைப்பட்ட வீதமானோர் 18வயதிற்கும் குறைந்த சிறார்கள் என்றே கணிப்பிடப் பட்டுள்ளது.[8] ஐக்கிய நாடுகள் சபையின் (UN ) பிரதானமானதோர் கற்கை ஆய்விற்காக மேற்கொள்ளப்பட்ட, சிறார்கள் மீதான யுத்தத்தின் பாதிப்பு என்பது தொடர்பான ஆய்வின் அடிப்படையில், பெரும் சண்டைகளின் போது "முன்னணித் தாக்குதல்களில் பெருந்தொகையாக" (*massed frontal attacks)* சிறார்கள் பாவிக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. மேலும் ஒதுக்கமான கிராமப் புறங்களில் பெண்களையும் குழந்தைகளையும் கொன்று குவிப்பதற்காகவும் 12வயதிற்கும் 14வயதிற்கும் இடைப்பட்ட சிறார்கள் பாவிக்கப்பட்டுள்ளனர். மேலும் 10 வயதை ஒத்த இளம் சிறார்கள் கொலையாளிகளாக பாவிக்கப்பட்டுள்ளனர், என்பதையும் இக்கற்கையானது மேலும் சுட்டிக்காட்டுகின்றது.[9]

சிறார்கள் உட்பட தமது அங்கத்தவர்களிடம் புலிகள் இயக்கத்தினர் சைனைற் குப்பிகளையும் கைக்குண்டுகளையும் கொடுத்திருக்கிறது. புலிகளின் கட்டளைப்படி இலங்கை இராணுவத்தினரிடம் எக்காரணம் கொண்டும் தாம் பிடிபடுவதை தவிர்த்துக் கொள்வதற்காக, ஒன்றில் சைனைற் குப்பியை கடித்தல் அல்லது கைக்குண்டினால் தன்னைத் தானே வெடிக்க வைத்தல்[10]

சிறுவர்கள் உட்பட தமது அங்கத்தவர்களை தற்கொலைத் தாக்குதல்களில் ஈடுபடுத்துகின்ற ஆயுத குழுக்களில் 1980களில் இருந்தே புலிகள் இயக்கமானது

---

[6]முன்னாள் தமிழ் ஆயுதக் குழுக்கள், மிகவும் குறிப்பாக ஈபிடீபி, மிக அண்மையில் அவர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில், உத்தியோக பூர்வமாக நிராயுதபாணிகளாகும் வரை சிறார்களை மோதல்களில் ஈடுபடுத்தியுள்ளனர்.

[7] ரோஹான் குணரத்னவின் "புலிகள் இயக்க சிறார் போராளிகள்" ஜேன்ஸ் உளவு மீளாய்வு, 1998

[8] ஐபிட் (Ibid)

[9] ரேச்சல் ப்ரெட்டும் மார்கரெட் மெக்கலினும், (Rachel Brett & Margaret McCallin) *சிறார்கள் : கண்களுக்குப் புலப்படாத படையினர்கள்,* ராட்டா பார்னென், 1998 பக். 98, 99. இக்கற்கையானது ஐ.நா வின் சிறார்களின் மீது மோதல்களின் தாக்கம் என்னும் கற்கைக்காக மேற்கொள்ளப்பட்டது. க்ராக்கா மாச்செல் (Graca Machel) என்பவரால் தயாரிக்கப்பட்டு 1996 இல் ஐ.நா. விற்கு கையளிக்கப்பட்டது.

[10] உ.தா.குனரட்ணவின் *"புலிகள் இயக்க சிறார் போராளிகள்"*; ய்வோனே க்யர்ன்ஸ் இனுடைய (Yvonne Keairns), *சிறீ லங்காவில் பெண் சிறார் படையினர்களின் குரல்கள்*, என்பவற்றைப் பார்க்கவும். குவேக்கர் அமைப்பின் ஐ.நா. காரியாலயம். 2003

முதல் வரிசையில் அடங்குகிறது. ஏறத்தாழ 200 தாக்குதல்களை அது மேற்கொண்டுள்ளது.[11] இவ்வாறான பல தாக்குதல்களில் பல பெண் அங்கத்தவர்கள் சிறுமிகள் உட்பட ஈடுபடுத்தப்பட்டனர். அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற பாதுகாப்பு சோதனைச் சாவடிகளில் பெண்கள் கடுமையான உடல் சோதனைக்கு உள்ளாக்கப் படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதே இவ்வாறு பெண்களை அதிகம் ஈடுபடுத்துவதற்கான காரணமாகும்.

### *யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயல் திட்டமும் (Action Plan), புலிகளின் கடப்பாடும்*

1998ம் ஆண்டில் இருந்தே புலிகள் இயக்கமானது தாம் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதில்லை என திரும்பத் திரும்ப ஐக்கிய நாடுகள் சபை சிரேஷ்ட அதிகாரிகள் பலரிடம் பகிரங்கமாக வாக்குறுதிகளை அளித்துள்ளது. 2003ம் ஆண்டில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயற் திட்டம் ஒன்றை இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் சம்பிரதாய பூர்வமாக ஏற்றுக் கொண்டனர். அத்துடன் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதை முடிவுக்கு கொண்டு வருவதும், தமது படைகளில் உள்ள சிறார்களை விடுவித்து அவர்களை நேரடியாக அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைப்பது, அல்லது இதற்கென விசேடமாக அமைக்கப்பட்டுள்ள புதிய இடைமாற்று நிலையங்களுக்கு அவர்களை அனுப்பி வைப்பது என்னும் உறுதிப்பாட்டையும் புலிகள் இயக்கம் வழங்கியிருந்தது.

2004 நடுப்பகுதிவரையில் இந்த செயல் திட்டம் மட்டுமே யுத்தநிறுத்தத்தின் பின் நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளின் பலாபலனாக ஏற்பட்ட ஒரே ஒரு உடன்படிக்கை. புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்படுகின்ற சிறார்களை ஏற்றுக்கொள்ளுகின்ற இடைக்கால தற்காலிக தங்குமட (Transit centers) நிலையங்களை நிறுவுதல், மற்றும் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு கல்வி, தொழில்சார் பயிற்சி, சுகாதாரம் மற்றும் நிறை உணவுத் திட்டங்கள், மனோவியல் கவனிப்புகள் போன்றவை உட்பட பல வேலைத் திட்டங்களை மேற் கொள்வதற்காகவே இச் செயற்திட்டம் உருவாக்கப்பட்டது. இதனை 2003ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் புலிகள் இயக்கமும் அரசாங்கமும் ஏற்றுக் கொண்டது மட்டுமன்றி 2003ம் ஆண்டு யூன் மாதத்தில் இரு சாராரும் கையொப்பமும் இட்டுக் கொண்டனர். இச் செயற்திட்டம் தொடர்பாக இரு சாராரோடும் அணுகி பேச்சுவார்த்தை நடத்தும் பிரதான பாத்திரத்தை யுனிசெப் வகித்தது. அது மட்டுமன்றி இதனை நடைமுறைப்படுத்தும் பிரதான பாத்திரத்தையும் அது வகித்தது.

இச்செயல் திட்டம் கையொப்பமிடப்பட்ட நாளிலிருந்து, விடுவிக்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையை விடவும், படைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையானது இரு மடங்கை விட அதிகமானது என்பதையே யுனிசெப் புள்ளி விபரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் திறக்கப்பட்ட ஒரு தங்குமடத்தின் நிலையமானது தனது முதலாவது வருட செயற்பாட்டில் அது மொத்தமாக 172 சிறார்களையே பொறுப்பேற்றுக்

---

[11] வெளிநாட்டு உறவுகளுக்கான சபை , *பயங்கரவாதிகள், கேள்வியும் பதிலும்: தமிழீழ விடுதலைப் புலிகள்,* 2004

கொண்டுள்ளது. அந்த தங்குமடத்தின நிலையமானது 100 சிறார்களை ஒரே நேரத்தில் வைத்திருக்கக் கூடிய வசதிகளை கொண்டிருந்தாலும், ஒரு பொழுதுமே அது 49 சிறார்களுக்கு மேல் கொண்டிருக்கவில்லை. அதே வேளை 2004ம் ஆண்டு நடுப்பகுதியில் ஆறு வார காலத்திற்கு அந்த நிலையம் முற்றும் முழுதாக மூடப்பட்டே இருந்துள்ளது. இதைத் தவிர மேலும் இரு தங்குமட நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் மிக குறைந்த எண்ணிக்கையான சிறார்களின் வருகை காரணமாக அவை திறக்கப் படாமலேயே இருந்தன.[12]

*சட்டத் தராதரங்கள்*

சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளுவதை முடிவுக்கு கொண்டு வரவேண்டிய தமது செயற்பாடு தொடர்பாக புலிகள் இயக்கமானது தமது கடப்பாட்டை எந்த வழிகளாலும் நிறைவேற்றத் தவறியுள்ளனர். புலிகள் இயக்கத்தினால் தொடர்ச்சியாக சிறார்களை படையில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையானது, சிறார்களை படைகளில் சேர்ப்பது அல்லது அவர்களை மோதலில் பங்கேற்க செய்வது என்பவற்றை குறிப்பாக தடைசெய்கின்ற சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை அப்பட்டமாகவே மீறுவதாகவே இருந்து வந்துள்ளது. சிறீ லங்கா உட்பட சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சிறுவர்களின் உரிமை தொடர்பான சட்டத்தின்படியும், 1949ம் ஆண்டு ஜெனிவா சட்ட திட்டத்தின் மேலதிக சட்ட வரைபுகளின்படியும் 15 வயதிற்கு உட்பட்ட சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதும் மோதல்களில் ஈடுபடுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தராதரமானது தற்போது ஒரு சர்வதேச சட்டமரபாக கொள்ளப்படுவதோடு இவ்வாறான ஆட்சேர்ப்பானது சர்வதேச குற்றச்செயல் நீதிமன்றத்தின் சட்டப்படி ஒரு யுத்தக் குற்றமாகவும் (War Crime) அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

இராணுவ சேவைக்கு15 வயதை குறைந்த எல்லையாக வகுப்பது தகுதியற்றது என்ற, 1990 பிற்பகுதியில் ஏற்பட்ட சர்வதேச கருத்து ஒருமைப்பாடு உயர் தராதரத்தை பேணும் நிலைக்கு இட்டுச் சென்றது. இணக்கப்பாடானது, இது தொடர்பாக இன்னும் பலமான தராதரங்கள் வகுக்கப்பட வகைசெய்தது. 1999ம் ஆண்டில் சர்வதேச தொழில் ஸ்தாபனம் (ILO) ஏற்றுக்கொண்ட, ஒப்பந்தத்தின் மூலம், 18 வயதிற்கு குறைந்த சிறார்களை பலவந்தமாகப் படையில் சேர்த்துக் கொள்வது, அவர்களை ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவது என்பவை கேவலமான சிறார் உழைப்பு முறை என அவற்றைத் தடை செய்கிறது. 2000 ஆண்டில் ஐ.நா.வினால் பிரகடனப்படுத்தப்பட்டு, இலங்கை அரசாங்கத்தால் அதே ஆண்டில் கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட, சிறார்கள் உரிமை சட்டம் தொடர்பான மேலதிக சரத்தின் மூலம், அரசசார்பற்ற ஆயுதக் குழுக்களினால் பலவந்தமாக பிடிக்கப்படுகின்ற, சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மற்றும் சண்டைகளில் ஈடுபடுத்தப் படுகின்றவர்களின் ஆகக் குறைந்த வயதெல்லையானது 18 என ஆக்கப்பட்டது.

---

[12] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு ஆகஸ்ட் 2004ல் சிறீ லங்காவில் யுனிசெப்புடன் நடத்திய பேட்டிகள். 2004 செப்டெம்பரில் யுனிசெப்பானது மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் நடத்திய மின்னஞ்சல் தொடர்பாடல்கள்.

*முறைமை தொடர்பாக ஒரு குறிப்பு*

சிறார்களை படைகளில் சேர்ப்பது மற்றும் அவர்களை பயன்படுத்துவது என்னும் விடயம் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வெளியிடும் பதினைந்தாவது அறிக்கை இதுவாகும். இதற்கு முன்னர் அங்கோலா, பர்மா, புறூண்டி, கொலம்பியா, கொங்கோ ஜனநாயக குடியரசு, லெபனான், லைபீரியா, ருவாண்டா, சியெரா லியோன், சூடான், மற்றும் உகண்டா போன்ற இடங்களிலும் இந் நடவடிக்கைகள் தொடர்பாக நாம் குறிப்பான அறிக்கைகளை வெளியிட்டுள்ளோம்.

இவ் அறிக்கையைத் தயாரிப்பதற்கு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் ஆய்வொன்றை நடத்தியது. நியூ யோர்க் மற்றும் ஹெய்க் ஆகிய இடங்களில் இருந்து பெரும்பாலும் தொலைபேசி மற்றும் மின் அஞ்சல் மூலமாகவும் இவ் ஆய்வை மேற்கொண்டது. அதே வேளை எமது ஆய்வாளர்கள் கொழும்பு, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தனர். இத்தகவல் அறியும் பணியின் போது தமது 12க்கும் 17க்கும் இடைப்பட்ட வயதுகளில் புலிகள் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முன்னாள் சிறார் படையினர் 35பேர்களுடன் கதைத்தோம். நாம் அவர்களைப் பேட்டி காண்கின்ற பொழுது அவர்களின் வயதுகள் 14 தொடக்கம் 21வரையாக இருந்தன. அவர்களில் அநேகமானோர் 2001ம் ஆண்டுக்கும் 2004ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்ததோடு, அவர்கள் மூன்று வாரங்கள் முதல் எட்டு ஆண்டுகள் வரை புலிகள் இயக்கத்தினுள் இருந்திருக்கின்றனர். இச்சிறார்கள் ஏறத்தாழ புலிகள் இயக்கத்திற்குள் இருந்த காலமானது 2.7 ஆண்டுகளாகும். அதுமட்டுமன்றி இவ்வறிக்கைக்காக நாம் இன்னும் நாற்பதிற்கு மேற்பட்ட பேட்டிகளைக் கண்டுள்ளோம். பெற்றோர்களுடன் கதைத்தல், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், உள்ளுர் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கதைத்தல் - யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள், புலிகள் இயக்கம் ஆதிக்கம் செலுத்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO), சர்வதேச தொழில் ஸ்தாபனம் (ILO) மற்றும் சிறீ லங்கா கண்காணிப்புக் குழு (SLMM) போன்றவை இதில் உள்ளடங்குகின்றன. அதே வேளை நாங்கள் இலங்கை அரசாங்கம் மற்றும் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் பேசினோம்.

மீள ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கும். அத்தோடு தொடர்புடைய உண்மையான அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை இருப்பதால், அவர்களின் தனிப்பட்ட பிரத்தியேகங்களை (Privacy) பாதுகாக்கின்ற நோக்கில் இவ்வறிக்கையில் உள்ள சகல சிறார்களின் பெயர்களும் மாற்றப் பட்டுள்ளன. மேலும் பல பாதுகாப்பு காரணங்களுக்காக இவ் அறிக்கைக்காக நடத்தப்பட்ட பேட்டிகளுடன் தொடர்புடைய தனி நபர்கள், அமைப்புக்கள் மற்றும் பேட்டிகள் நடத்தப்பட்ட இடங்கள் சம்பவங்கள் என்பவை இங்கே எம்மால் வெளியிடப்பட வில்லை.

18 வயதிற்கு குறைந்தவர்களே ''சிறார்கள்'' என இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளனர்..

## II பரிந்துரைகள்

*தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (LTTE):*

- சிறார்களை படையில் சேர்க்கும் சகல நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். இதில் கருணா படையணியில் இருந்த சிறார்களை மீளச்சேர்த்தல் அவர்களை மீண்டும் பதிவு செய்ய முயற்சித்தல் ஆகியவும் அடங்கும்.

- புலிகள் இயக்கத்தில் இருக்கும் 18 வயதிற்கு குறைந்த சகல சிறார்களையும் விடுதலை செய்வதோடு 18 வயதிற்கு முன்னரே சேர்க்கப்பட்டவர்களுக்கும் அதை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

- 18 வயதிற்கு குறைந்த எவரையும் தாம் படைகளில் சேர்த்துக் கொள்ளப் போவதில்லை என்னும் தமது கடப்பாட்டை இலங்கையில் வடக்கு கிழக்கு எங்கும் வாழும் குடும்பங்களுக்கு பகிரங்க அறிவித்தல் மூலம் அறியத் தரவேண்டும். அதற்கு புலிகள் இயக்கத்தின் சொந்த ஊடகங்கள் உட்பட சகல உள்ளூர் ஊடகங்களையும் பயன்படுத்துவதோடு, ஆட்களைச் சேர்ப்பதற்கான தமது அறிவிப்புப் பிரசுரங்களில் தம்முடன் சேர்வதற்கான ஆக குறைந்த வயதெல்லையானது 18 என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

- தமது தளபதிகள் மற்றும் அங்கத்தவர்கள் எக்காரணம் கொண்டும், புலிகள் இயக்கத்தின் படைகளுக்குள் 18 வயதிற்கு குறைந்த சிறார்களை அவர்களின் சுயவிருப்பத்தின் காரணமாகவோ அல்லது வேறுவழிகளிலோ சேர்த்துக் கொள்ளாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு, அவ்வாறு சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடும் புலிகள் இயக்க அங்கத்தவர்கள் மீது எடுக்கப்படுகின்ற ஒழுக்காற்று நடவடிக்கைபற்றிய ஆவணம் ஒன்றை சர்வதேச சமூகத்திடம் (யுனிசெப் ஊடாக) கையளிக்க வேண்டும்.

- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உருவாக்கப்பட்ட செயற் திட்டத்தின் கீழ் தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து கடப்பாடுகளையும் நிறைவேற்றுதல்.
- 2004ம் ஆண்டு ஜனவரி மாதம் யுனிசெப் நிறுவனத்தினால் புலிகள் இயக்கத்திடம் கையளிக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பிரச்சார நடவடிக்கையை பரவலாக மேற்கொள்வதற்கு உடனடியாக அனுமதியை வழங்க வேண்டும்.

- யுனிசெப் அமைப்பு சகல இராணுவப் பயிற்சி முகாம்களுக்கும் செல்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து அங்குள்ளவர்களின்

வயதுகளை மதிப்பீடு செய்யவும் வயது குறைந்த சிறார்களை அங்கிருந்து விடுவிக்கவும் வகைசெய்தல் வேண்டும்.

- இன்னமும் தீர்க்கப்படாமல் இருக்கின்ற, படையில் சேர்க்கப்பட்ட வயது குறைந்தவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு உயர்மட்ட பணிக் குழு (Task Force) ஒன்றை உருவாக்க வேண்டும்.

- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்பான முறைப்பாடுகள் பற்றி பொறுப்புச் சொல்லுபவர் யார் என்பதை தெளிவாக நியமித்து அறியத் தருவதோடு, புதிதான ஆட்சேர்ப்பு நடவடிக்கை தொடர்பாக உடனடி பதில் வழங்கக்கூடிய நேரடி தொலைபேசி (Hot line)சேவை அல்லது துரித நடவடிக்கை சேவை ஒன்று நிறுவப்பட வேண்டும்.

- தொடர்ச்சியாக யுனிசெப் அமைப்பினால் எழுப்பப்படும் பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய நிலைமைகள் என்ன என்பதை பிரசுரிக்க வேண்டும்.

***இலங்கை அரசாங்கத்திற்கு:***

- புலிகள் இயக்கத்தில் இருந்து சிறார்கள் உடனடியாக விலக்கப்படுவதும், சிறார்கள் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்படுவது முடிவுக்கு கொண்டுவரப்படுவதும், புலிகள் இயக்கத்துடனான புதிய சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்பதை உறுதி செய்ய வேண்டும்.

- சிறார்கள் கடத்திச் செல்லப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்ற கோயில் திருவிழாக்கள் மற்றும் பாடசாலைகள் போன்றவற்றிற்கு அருகே அரசாங்கம் தனது இருப்பை அதிகரிப்பது உட்பட, அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில், சிறார்கள் புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- பாதுகாப்பு படைகளுக்குள் தமிழ் பேசக் கூடியவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதோடு தமிழர் அல்லாதவர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சியை வழங்குவதன் மூலம் இலங்கை இராணுவம் மற்றும் பொலீசாருக்கு தமிழ் சமூகத்துடன் இருக்கும் உறவினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- புலிகள் இயக்கத்தில் பங்கு கொண்ட சகல முன்னாள் சிறார் படையினருக்கும் பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.

- அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்ள உரித்துடைய அனைவருக்கும் (முன்னாள் சிறார் படையினர் உட்பட எவ்வித பாரபட்சமும் காட்டப்படாமல்) அடையாள அட்டைகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- அரசாங்கத்தால் நடத்தப்படுகின்ற தொழில்சார் கல்வி நெறிகளுக்கு முன்னாள் சிறார் படையினரும் சேர்ந்து கொள்வதை ஊக்குவிக்கின்ற நோக்கில் அந் நெறிகளுக்கான வழமையான நுளைவுத் தேர்வு அவசியப்பாடுகளில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும்.

- ஹக்கோன் பேச்சுவார்த்தைகளின் போது முன்வைக்கப்பட்ட, சிறீ லங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையோடு சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு ஆதரவு வழங்க வேண்டும்.

- சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான ரோமானிய சட்ட மூலத்தை உறுதிசெய்ய வேண்டும்.

*ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்திற்கு (UNICEF):*

- சிறார்களை படைகளில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாகவும் ஏற்கனவே படைகளில் இருக்கும் சிறார்களை விடுதலை செய்வது தொடர்பாகவும் புலிகள் இயக்கத்தின் கடப்பாடு மற்றும் பொறுப்புச் சொல்லல் தொடர்பான உறுதியான கால வரையறைகளையும் முன்மாதிரிகளையும் நிறுவ வேண்டும். அவ்வாறு குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் புலிகள் இயக்கமானது அவற்றை நிறைவேற்றத் தவறுகின்ற பட்சத்தில், இடைமாற்று நிலையங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தையும் இடை நிறுத்துவதோடு, இடைமாற்று நிலையங்களின் பணிக்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் வழங்கப்படுகின்ற சகல நிதிகளும் இடை நிறுத்தப்பட வேண்டும்.

- முன்னாள் சிறார் படையினர்கள் மீளப் படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதை தடுப்பது உட்பட, சிறார்ளை படைகளில் சேர்க்கும் நடவடிக்கையை தடுக்ககூடிய சகல முயற்சிகளையும் தொடர்ச்சியாக பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

- சிறார்கள் படையில் சேர்க்கப்படுதலை திறம்பட கண்காணித்தல் என்பதை நோக்கமாக கொண்டு, உள்ளூர் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களுடன் செயல் உறவையும் தொடர்புகளையும் பலப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிறந்த ஆதரவுகளை வழங்குவதோடு சிறார்கள் படையில் சேர்க்கப்படுவதற்கு எதிராக அவர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கை களுக்கும் ஆதரவு வழங்குவது உட்பட காத்திரமான தடுப்பு மூலோபாயங்களையும் நடைமுறைப் படுத்தல் வேண்டும்.

- சிறார்கள் படையில் சேர்க்கப்படுகின்ற சம்பவங்களின் போது அது தொடர்பாக இயன்ற அளவு விரைவில் அக்குடும்பங்களையும் இணைத்துக்கொண்டு அவ்விடயம் தொடர்பாக தலையீடு செய்வதுடன்

முடிந்த பொழுதெல்லாம் அச்சிறார்களை விடுவிப்பதற்கான கோரிக்கைகளும் விடப்பட வேண்டும்.

- புலிகள் வழங்குகின்ற பதிலுரைகள் உட்பட ஆட்சேர்ப்பு மற்றும் சிறார்கள் விடுவிப்பு போன்ற சம்பவங்கள் தொடர்பான புள்ளிவிபரங்களை கிரமமாக பிரசுரிக்க வேண்டும்.

*சர்வதேச தொழில் ஸ்தாபனத்திற்கு (ILO):*

- முன்னாள் சிறார் படையினருக்கான தொழில்சார் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற தலைமைப் பங்காளி என்னும் நிலையில் இருந்து, தொழில்சார் பயிற்சி வாய்ப்புக்களை உருவாக்குவதோடு பொருத்தமான இடங்களில் புலிகள் இயக்கத்தினுள் இருந்து இராணுவ பயிற்சி பெறாத முன்னாள் படையினரையும் இதற்கு பயன்படுத்துதல் (உதா. மருத்துவ பயிற்சி) வேண்டும்.

*மனித உரிமைகளுக்கான வடக்கு கிழக்கு ஆணைக்குழுவிற்கு (NECOHR):*

- சிறார்கள் படையில் சேர்க்கப்படுவதை கண்டித்து பகிரங்க அறிக்கை யொன்றை வெளியிடுவதுடன், சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதை தடுக்கவும் புலிகள் இயக்கத்தில் இருந்து சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் அவசியமான மூலோபாயங்களை, யுனிசெப் மற்றும் சிறீ லங்கா மனித உரிமைகள் ஆணைக்குழு என்பவற்றுடன் கூட்டாக இணைந்த வகையில் கட்டி எழுப்புதல் வேண்டும்.

*நோர்வே அரசாங்கத்திற்கு:*

- சமாதான நடவடிக்கையின் ஊக்குவிப்பாளர் என்கின்ற வகையில், புலிகள் இயக்கத்தில் உள்ள சிறார்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப் படுகின்ற விடயத்தையும், சிறார்கள் படையில் சேர்க்கப்படுகின்ற நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப் படுவதையும் எந்தவொரு புதிய சமாதான ஒப்பந்தத்தினதும் ஒரு பகுதியாக உறுதிப்படுத்த வேண்டும்.

- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் ''அரசியல் பணிகள்'' மேற்கொள்ளல் என்பதற்குள் எவ்வகையிலும் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளுதல் என்பது உள்ளடக்கப் படவில்லை என்பது தொடர்பாக தெளிவான புரிந்து கொள்ளலுக்கான பேச்சுக்களை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் மேற்கொள்ள வேண்டும்.

*சிறீ லங்கா கண்காணிப்பு குழுவினருக்கு (SLMM):*

- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் சாதாரண பொதுமக்களை இடைஞ்சலுக்கு உள்ளாக்குதல், கடத்துதல், பலவந்தமாக பணம் சேகரித்தல், அச்சுறுத்துதல் போன்ற தடைசெய்யப்பட்டுள்ள விடயங்களோடு, சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுகின்ற விடயம் தொடர்பாகவும் தொடர்ச்சியானதும், காத்திரமானதுமான கண்காணிப்புகளை மேற்கொண்டு அறிக்கைப் படுத்த வேண்டும்.

- குறிப்பான சம்பவங்கள் உட்பட சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக புலிகள் இயக்கத்திடம் கிரமமாகவும் தொடர்ச்சியாகவும் கேள்விகளை எழுப்புதல் வேண்டும்.

- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள சர்வதேச சட்டங்கள் மீறப்படுவதை ஓர் ஒழுங்கு முறைப்படி கண்காணிப்பதற்கென்றே முழுமையாக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மனித உரிமைப் பிரிவு ஒன்றை நிறுவதோடு அதில் பயிற்சி பெற்ற மனித உரிமை கண்காணிப்பாளர்களை பணிக்கு அமர்த்த வேண்டும்.

*நிதி வழங்குநர்களுக்கு (ஜப்பான், ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஸ்கான்டிநேவிய நாடுகள் உட்பட):*

- புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளின் போது உடனடி தலையீடுகளைச் செய்யக் கூடிய வகையில் உள்ளூர் தரப்பினர் மற்றும் யுனிசெப் அமைப்புடன் மிக நெருக்கமான தொடர்பை வைத்திருக்கக்கூடிய நிதி வழங்குநர் விசேட பணிக் குழு (Donor Task Force) ஒன்றை நிறுவ வேண்டும்.

- ஹக்கோனே பேச்சுவார்த்தைகளில் சுட்டிக் காட்டப்பட்டபடி சிறீ லங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒத்தாசையுடன் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான நிதி மற்றும் அடிப்படை வசதிகளை வழங்க வேண்டும்.

- அவ்வாறு வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற நிறுவனங்களுக்கு ஊடாக வழங்கப்படுவது சரியானதா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- தற்போது புலிகள் இயக்கத்தின் படை அணிகளில் இருக்கும் சிறார்கள் அனைவரும் விடுவிக்கப்படுவதை ஊக்குவிப்பதற்கும், புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதை முடிவுக்கு கொண்டு வருவதற்கும் அழுத்தமிடக் கூடியவகையில் பொருளாதார அழுத்தத்தைப் பாவிக்க வேண்டும்.

*புலம் பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்தினருக்கு:*

- இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மானுட சட்டங்கள் மோசமாக மீறப்படுவற்கும், புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவது மற்றும் ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தப்படுவது என்பவற்றுக்கும் எதிராக உங்கள் மறுப்பை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும்.

- புலிகள் இயக்கத்தால் தொடர்ந்தும் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையும், மோசமான மனித உரிமைகள் மீறப்படுதலும் மேற்கொள்ளப் படுகின்ற பட்சத்தில், இலங்கையில் உள்ள அமைப்புகளுக்கு நீங்கள் அனுப்பிவைக்கின்ற நிதியானது நேரடியாகவோ மறைமுகமாகவோ புலிகள் இயக்கத்தின் பயன்பாட்டிற்கு செல்லாமல் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

***புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் கணிசமாக உள்ள நாடுகளான, கனடா, சுவிற்சர்லாந்து, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம் (UK) அமெரிக்கா, மற்றும் ஸ்கான்டிநேவிய நாடுகளுக்கு:***

- புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைக்கு எதிரான உங்கள் அரசாங்கங்களின் தெளிவான கண்டனங்களை தமிழ், மற்றும் பொதுவான ஊடகங்களுக்கு ஊடாகவும் மற்றும் புலம்பெயர் தமிழர் சார்பான தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு ஊடாகவும் தெளிவாகத் தெரியப்படுத்தல் வேண்டும்.

*ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கு:*

- சிறார்களும் ஆயுத மோதல் நிலமைகளும் தொடர்பான பாதுகாப்பு சபையின் (2004 ஏப்ரல், 22) 1539வது தீர்மானத்தின், 6வது பந்தியின் படி, சிறார்களை படையில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டுவர புலிகள் இயக்கம் தவறி உள்ள நிலைமையைக் கையாளுவதற்கு குறிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அந்நடவடிக்கைகளாவன, தலைவர்கள் பயணம் செய்வதற்கான கட்டுப்பாடுகளை விதித்தல், சகலவித ஆட்சி கட்டுமானங்கள் மற்றும் மன்னிப்பு நிபந்தனைகளில் இருந்தும் அவர்களை வெளியேற்றுதல், சிறிய ரக ஆயுதங்களை தடைசெய்தல், இராணுவ உதவிகளை தடைசெய்தல் மற்றும் நிதி வளங்களின் வருகையை கட்டுப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

- சிறார்களும் ஆயுத மோதல் நிலைமைகளும் தொடர்பான பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில், பாதுகாப்புச் சபையின் கொழும்பிலுள்ள உள்நாட்டு தூதரகமானது புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டு சிறார்கள் விடுவிக்கப்படுவது தொடர்பான முன்னேற்றம் குறித்து அழுத்தமிட வேண்டும்.

*ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து அங்கத்துவ நாடுகளுக்கும்:*

- சிறார்களும் ஆயுத மோதல் நிலைமைகளும் தொடர்பான பாதுகாப்புச் சபையின் 1379வது (2001 நொவம்பர், 20) தீர்மானத்தின் 9வது பந்தியின் அடிப்படையில், மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் யாவரும் சிறார்கள் பாதுகாப்பு தொடர்பாக சர்வதேச தராதங்களை மதிப்பதை உறுதி செய்வதற்காக, சட்ட, அரசியல், இராஜதந்திர, பொருளாதார, மற்றும் பொருள் ரீதியான சகல அழுத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக புலிகள் இயக்கமானது தமது படையணிகளில் இன்னமும் வைத்திருக்கும் அனைத்து சிறார்களையும் விடுதலை செய்வது மற்றும் சிறார்களை படைகளில் சேர்ப்பதை முற்றாக நிறுத்திக் கொள்ளும்வரை அவர்களுக்கான சகலவித பொருளாதார மற்றும் அரசியல் அல்லது இராணுவ உதவிகளை நிறுத்திவைப்பதோடு புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவது மற்றும் அவர்களை படையினர்களாக பாவிக்கும் செயற்பாட்டை இந்நாடுகள் குறிப்பாக ஒரே குரலில் கண்டனத்திற்கு உள்ளாக்க வேண்டும்.

## III பின்னணி நிலவரம்

இலங்கை என்பது இருபது மில்லியனை அண்மித்த சனத்தொகையைக் கொண்டதும் இந்தியாவுக்கு தென்கிழக்கே உள்ளதுமான ஓர் தீவாகும். இங்குள்ள சனத்தொகையில் எழுபத்து நான்கு வீதமானவர்கள் சிங்களவர்களும், 18 வீதமானவர்கள் தமிழர்களும், 7வீதமானவர்கள் முஸ்லீம்களும் ஆவர். இச்சனத்தொகையில் சிங்களவர்கள் பெரும்பாலும் பௌத்தர்களாகவும் குறிப்பாக நாட்டின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதியில் வாழுகின்ற அதே வேளை தமிழர்கள் பெரும்பாலும் இந்துக்களாகவும் நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியில் பெரும்பான்மையாகவும் வாழுகின்றனர்.

1983ம் ஆண்டிற்கும் 2002ம் ஆண்டிற்க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மிக உக்கிரமான உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டிருந்ததோடு இக்கால கட்டத்தில் இரு சாராரும் பெருமளவில் மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் சிறுபான்மை மக்களுக்காக ‘‘தமிழ் ஈழம்’’ என்னும் தனிநாடு ஒன்றை வென்றெடுப்பதற்காகவே வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கம் போராடி வந்தது. 1995ம் ஆண்டில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியானது, புலிகள் இயக்கமானது ஒருதலைப்பட்சமாக பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகி மோதல்களை ஆரம்பித்ததோடு முறிவடைந்தது.

2001ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் புலிகள் இயக்கமும் அரசாங்கமும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றை அறிவித்தனர். 2002ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில்

நோர்வே அரசாங்கத்தின் ஊக்குவிப்பாளர் குழுவொன்றின் அனுசரணையுடன் ஓர் யுத்தநிறுத்த ஒப்பந்தம் இரு சாராரினாலும் கைச்சாத்திடப்பட்டது. இவ் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளானது சிறார் போராளிகள் தொடர்பாக மிகப் பொருத்தமாக இவ்வாறு கூறுகிறது:

- சித்திரவதை செய்தல், அச்சுறுத்தல், ஆட்கடத்தல், பலவந்த நிதி சேகரிப்பு, உட்பட சாதாரண பொதுமக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதை இருசாராரும் தவிர்க்க வேண்டும்.
- ஆயுதம் தரிக்காத சகல புலிகள் இயக்க அங்கத்தவர்களும் அரசியல் பணிகளுக்காக அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப் படுவார்கள்.
- யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருசாராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை நோர்வே தலைமையிலான சிறீ லங்கா கண்காணிப்பு குழு (SLMM) கண்காணிக்கும்.

நோர்வே அனுசரணைக் குழுவின் மத்தியத்துவத்துடன் அரசாங்கமும் புலிகள் இயக்கமும் ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தின. 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புலிகள் இயக்கமானது பேச்சு வார்த்தைகளில் இருந்து விலகிக் கொண்டதோடு அது இன்னும் தொடங்கப்படவில்லை. 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் தாம் முன்வைத்த “இடைக்கால தன்னாட்சி அதிகார சபை” (ISGA) என அறியப்படும் இடைக்கால அதிகாரம் தொடர்பான முன்மொழிவுகளின் அடிப்படையில் பேசுவதற்கு அரசாங்கம் தயார் என்றால் மட்டுமே, தாம் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட சம்மதிப்போம் என புலிகள் இயக்கம் கூறுகிறது. இவ் இடைக்கால நிர்வாக அதிகார சபையானது அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களையும் முற்றும் முழுதாக கட்டுப்படுத்தும் அதிகாரத்தை புலிகள் இயக்கத்திற்கு வழங்குவதாக இருக்கும். பேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பிக்கப்படாமல் இருந்தாலும் மீண்டும் மோதல்கள் தொடங்கவில்லை.

அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையேயான ஆயுத மோதல்களை முடிவுக்கு கொண்டுவரும் விடயத்தில் யுத்த நிறுத்த ஒப்பந்தமானது பயனுள்ளதாக உள்ளது. ஆனாலும், வடக்கு கிழக்கில் நடத்தப்படும் கொலைகள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்கள் உட்பட, குறிப்பாக புலிகள் இயக்கம் சாராத ஏனைய தமிழ் கட்சி அங்கத்தவர்களுக்கு எதிராகவும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் கீழ் ஆயுதங்களைக் கைவிட்ட முன்னாள் ஆயுதமேந்திய குழுக்களின் அங்கத்தவர்களுக்கு எதிராகவும், புலிகள் இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் போன்றவை இவ் ஒப்பந்தத்தினால் நிறுத்தப்படவில்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நாளில் இருந்து நடத்தப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட அரசியல் படுகொலைகளுக்கு புலிகள் இயக்கமே காரணம் என கூறப்படுகிறது. புலிகள் இயக்கமானது தாமே இலங்கைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதி என கூறிக் கொள்ளுகின்றது. அவர்களின் இந்த நிலைப்பாட்டை ஏனைய தமிழ்க் கட்சிகள் நிராகரிக்கின்றன. புலிகள் இயக்க அங்கத்தவர்கள், அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் என்றுமே இல்லாதவாறு நடமாடுவதற்கு

வாய்ப்புக்கள் இருப்பதனால், ஏனைய இத்தமிழ்க் கட்சிகளின் அங்கத்தவர்கள் தாம் எந்த நேரமும் கொல்லப்படலாம் என்கின்ற அச்சத்துடனேயே வாழ்கின்றனர்.

இதே வேளை நீண்டகாலமாக புலிகள் இயக்கத்திற்குள் அடக்கி வைக்கப்பட்டிருந்த முரண்பாடுகள் வெளிக்கிளம்ப ஆரம்பித்தன. 2004ம் ஆண்டு மார்ச் மாதத்தில் புலிகள் இயக்கத்தின் கிழக்கு மாகாண தளபதியான கேணல் கருணா எனப் பிரபல்யமாக அறியப்பட்ட வி.முரளீதரன் அவ்வியக்கத்தில் இருந்து விலகினார். அவர் வடக்கின் (அல்லது வன்னி) ஆதிக்கத்தைக் கொண்ட புலிகள் இயக்கத் தலைமையையும் பிரபாகரனையும் எதிர்த்ததோடு, வடக்கின் நலன்களுக்காக கிழக்கு மக்களின் நலன்கள் தியாகம் செய்விக்கப்பட்டதன் மூலம், கிழக்கு தமிழர்களுக்கு வேறுபாடு காட்டப்படுவதாக கூறினார்.

தனது தளபதிகள் மீது எப்போதுமே முழுமையானதும் இறுக்கமானதுமான கட்டுப்பாட்டை வைத்திருக்கும் புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை கருணாவின் வெளியேற்றமானது மோசமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏப்ரலில் நடத்தப்பட்ட பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிந்த சில நாட்களின் பின் வன்னிப் புலிகள் இயக்கமானது கிழக்கு மாகாணத்தில் கேணல் கருணாவின் கீழ் இருந்த சுமார் 6,000 படையினர் மீது தாக்குதலை தொடுத்தது. அச்சண்டையானது மிக உக்கிரமாகவும் குறுகியதாகவும் இருந்தது. இந்த யுத்தத்தில் இறந்தவர்களைப் பார்க்கும் போது பல சிறார்கள் யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டது தெரியவருகிறது. தனது தோல்வியை உணர்ந்த கருணா தனது படைகளை கலைத்துவிட்டு தலைமறைவாகி விட்டார். அவ்வாறு கலைக்கப்பட்ட படையினருள் முன்னர் புலிகள் இயக்கத்தில் பலவந்தமாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அல்லது “சுயமாகவே” போய்ச் சேர்ந்துகொண்ட ஆயிரக்கணக்கான சிறார்களும் அடங்குவர். கணிசமான சிறார்கள் உட்பட இப் பெருந்தொகையான கிழக்கு மாகாண அங்கத்தவர்களின் விடுவிப்பானது, தயாரற்ற நிலையில் இருந்த உள்ளூர் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களுக்கு, மிகப்பெரும் பாதுகாப்பு வழங்கும், மிகவும் தனித்துவமானதொரு சிக்கலான பிரச்சினையை உருவாக்கியது.

2004ம் ஆண்டு நடுப்பகுதில், வடக்கு கிழக்கு மாத்திரமன்றி தலைநகர் கொழும்பிலும் புதிய அலையாக தமிழர்கள் மீதான அரசியல் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. அநேகமாக புலிகள் இயக்கத்திற்கு எதிரான கருத்துக்களை கொண்டிருந்த அரசியல் வாதிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் போன்றோரைக் குறிவைத்தே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வன்னிப் பிரிவுக்கும் கிழக்குப்பிரிவுக்கும் இடையிலான தொடர்ந்த பிரச்சனைகளினால் இருசாராரும் கொலைகள் சிலவற்றில் ஈடுபட்டதாக கூறப்பட்டது. கருணா பிரிவுடன் தொடர்பானவர்கள் என நம்பப்பட்டவர்களும் கொலை செய்யப்பட்டனர். புலிகள் இயக்கத்தை விமர்சிக்கின்ற மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மிகுந்த அபாயத்திலேயே இருக்கிறார்கள்.

## IV. யுத்த நிறுத்த காலகட்டத்தில் புலிகள் இயக்கம் சிறார்களை படையில் சேர்த்தமை

பெப்ரவரி 2002ம் ஆண்டு அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின்படி ஆட்கடத்தல், மற்றும் மக்களை அச்சுறுத்தல், அவர்களுக்கு நெருக்குவாரம் அளித்தல் போன்றவை மிக வெளிப்படையாக தடைசெய்யப்பட்ட விடயங்கள் ஆகும்.[13] எவ்வாறாயினும் புலிகள் இயக்கமானது தொடர்ந்து யுத்த நிறுத்த ஒப்பந்த காலகட்டத்திலும் குடும்பங்களை அச்சுறுத்தல், அவர்களுக்கு அழுத்தமிடுதல் மற்றும் பலவந்தப்படுத்தல் என்னும் வழிமுறைகளைப் பாவித்து தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கையை செய்தவண்ணமே இருந்துள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதிக்கும் 2004ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் மாத்திரம், 3,516 சிறார்கள் புலிகளால் படையில் சேர்க்கப்பட்டதாகவும் இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு பேர் எடுக்கப்பட்டதாகவும் யுனிசெப் (UNICEF) நிறுவனம் ஆவணப்படுத்தியுள்ளது. ஆனாலும் புலிகள் இயக்கத்தால் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறார்களின் உண்மைத் தொகை இதைவிட மிக அதிகமாகும்.[14]என கருதப்படுகிறது. இதனை உறுதிப்படுத்த முடியாவிட்டாலும் கூட, இலங்கை அரசாங்க அதிகாரிகளும் மற்றும் சில உள்ளூர் மனித உரிமை ஸ்தாபனங்களும் நம்புகின்ற அடிப்படையில் யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த காலகட்டம் முதல் புலிகளின் படையணிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களில் பல சிறார்கள் உட்பட சில ஆயிரக்கணக்கானோர் இருக்கலாம் என நம்பப்படுகிறது.

“யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததில் இருந்தே மிகப் பாரிய அளவிலான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக” திருகோணமலையில் உள்ள யுனிசெப் பிரதிநிதி ஒருவர் மனித உரிமைகள் கண்காணிப்பு (HUMAN RIGHTS WATCH) அமைப்புக்கு தெரிவித்தார். “இது தொடர்பாக அதிக முறைப்பாடுகள் எமக்கு கிடைத்ததோடு பாடசாலைகளில் இருந்தும் அவசர அழைப்புக்கள் எமக்கு வந்தன. முன் எப்போதும் இல்லாத அளவிற்கு புலிகள் இயக்கமானது அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்லக் கூடியதாக இருந்தது”.என்றார் அவர். 2002 ஆண்டு காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் அதி தீவிர தன்மை காரணமாக 50 வீதத்திற்கு குறைந்த மாணவர்களே பாடசாலைக்குச் சென்றனர். பிள்ளைகள் பாடசாலைக்கு போகும் வழியிலும் வீட்டிற்கு திரும்பி வரும் வழியிலும் சேர்த்துக் கொள்ளப்படலாம்

---

[13] ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே 2002, பெப்ரவரி 22ம் திகதி கையொப்பமிடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம். பிரிவு 2.1.

[14] தமது பிள்ளைகளின் பெயர்களை பதிவுசெய்ய தம்மால்முடியும் என்பதை சில குடும்பங்கள் அறியாமல் இருந்ததாலும், அச்சத்தின் காரணமாக பதிவுசெய்வதை தவிர்த்ததாலும், யுனிசெப் காரியாலயத்தை சென்றடைவதில் இருந்த சிரமங்களினாலும், ஒட்டுமொத்தமாக படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக கருதப்படும் சிறார்களின் எண்ணிக்கையில் ஒரு பகுதி மட்டுமே யுனிசெப் அறிக்கையின் பதிவுகளில் வெளிவந்துள்ளன.

என்னும் அச்சத்தின் காரணமாக அநேகமான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வீட்டிலேயே வைத்துக் கொண்டனர்.[15]

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் புலிகள் அரசியல் காரியாலயங்களை திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது புலிகள் புதியவர்களை அமைப்பில் சேர்க்க ஏதுவாக இருந்தது.[16] இக்காரியாலயங்கள் புலிகள் இயக்கம் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்கே திறக்கப்பட்டதாக புலிகள் இயக்கம் கூறிக் கொண்டாலும் உள்ளூர் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் கணிப்பின்படி இக்காரியாலயங்கள் பலவந்தமாக சிறார்களை படையில் சேர்த்துக் கொள்ளுதல் உட்பட ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட இவ்வாறான நான்கு அல்லது ஐந்து காரியாலயங்கள் திருகோணமலை மாவட்டத்தில் 2004ம் ஆண்டு யூலை மாதம் திறக்கப்பட்டதாக திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு தெரிவித்தார்.[17]

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து அரசாங்க படைகளுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டதன் பின் தொடர்ந்தும் தமது பிள்ளைகளை படைகளில் சேர்வதற்கு அனுப்பிவைக்க வேண்டிய தேவை இல்லை என்றே அதிக தமிழ் குடும்பங்கள் நம்பின. ஆனால் யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்திலிருந்து தங்கள் படையை பெருப்பிக்கும் முயற்சியிலேயே புலிகள் ஈடுபட்டனர். இறுதி சமாதான உடன்படிக்கை ஒன்று வருகின்ற பட்சத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் தமது கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்கு தயாராகின்ற வகையிலோ அல்லது சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தால் இராணுவ ரீதியில் தம்மை தயாராக வைத்திருப்பதற்காவோ, அல்லது மேற்சொன்ன சகல காரணங்களுக்குமாகாவோ புலிகள் இயக்கமானது சமாதானப் பேச்சுவாத்தை காலகட்டத்தில் தம்மை இயன்றவரை பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியே இந் நடவடிக்கைகளாக இருக்கலாம்..

இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கையின்போது அச்சுறுத்தல் ஆட்கடத்தல் மற்றும் பலவந்தப் படுத்தல் போன்றவை பொதுவாக இடம்பெற்றன. யுத்த நிறுத்த ஒப்பந்த ஆரம்பம் முதலே புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் பலவந்தமாக படையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவரான ஹரேந்திர டீ சில்வா எம்மிடம் கூறினார்:

> தமது பிள்ளைகளுக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை என எண்ணும் பட்சத்தில் தமது

---

[15] திருகோணமலை மாவட்ட யுனிசெப் காரியாலயப் பிரதிநிதியோடு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய பேட்டியிலிருந்து. 2004, ஆகஸ்ட் 12

[16] யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பிரிவு 1.13 இன்படி ஆயுதம் தரிக்காத புலிகள் இயக்க அங்கத்தவர்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் சிறீ லங்கா அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் "அரசியல் பணிகளைச் மேற்கொள்வதற்காக" சுதந்திரமாக நடமாடலாம் என இடமளிக்கிறது.

[17] திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே உடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 11ம் திகதி நடத்திய பேட்டியில் இருந்து.

> பிள்ளைகளை புலிகள் இயக்கத்திடம் கொடுப்பதற்கு எவ்வித நியாயமான காரணங்களும் இருப்பதாக மக்கள் நினைக்கவில்லை. எனவே புலிகள் ஆள் கடத்தலில் ஈடுபடுகிறார்கள். 1994ம் ஆண்டளவில் 19 பேருக்கு ஒரு சிறார் மட்டுமே பலவந்தமாக கடத்தப்பட்டு புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டதை நான் அறிந்து கொண்ட போதிலும் இன்று 2004ம் ஆண்டில் அந்நிலமையானது தலைகீழாக மாறி 19 பேருக்கு ஒருவர் மட்டுமே சுயவிருப்பின் பேரில் அதில் இணைந்து கொண்டுள்ளார் என்பதே உண்மை நிலமையாகும்.[18]

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒவ்வொரு தமிழ் வீட்டிலும் இருந்து ஒவ்வொரு பிள்ளையை தரவேண்டும் என்று புலிகள் கட்டளையிட்டிருந்தது தொடர்பாக பல முறைப்பாடுகள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு கிடைத்தன. கிராமங்களில் நடத்தப்படும் கூட்டங்கள், வானொலி அறிவிப்புக்கள், வீடு வீடாகச் செல்லுதல் மற்றும் கடிதங்கள் அனுப்புதல் என்பவற்றுக்கூடாகவே புலிகள் இயக்கம் அவர்களின் கட்டளையை மக்களுக்கு விடுகின்றனர். தமது பிள்ளை ஒன்றை கொடுக்க மறுத்த குடும்பங்களின் வீடுகள் கொளுத்தப்படுதல், பிள்ளைகளின் பெற்றோர்கள் அச்சுறுத்தப் படுத்தல், பிள்ளைகள் பலவந்தமாக கடத்தப்படுதல் போன்ற மிகமோசமான நடவடிக்கைகளுக்கு அக்குடும்பங்கள் முகம் கொடுக்க நேர்ந்தன.

2002ம் ஆண்டு தனது 15வது வயதில் படையில் சேர்க்கப்பட்ட ஒரு பெண்பிள்ளை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு பின்வருமாறு கூறினாள்:

> பாடசாலை முடிவடைந்த பின்னர் மாலையில் நடைபெற்ற மேலதிக வகுப்புகளுக்காக கிட்டத்தட்ட 15 மாணவ மாணவிகளுடன் நான் சென்றிருந்தேன். நாங்கள் மேலதிக வகுப்புகளுக்காக (Extra Classes) போய்க்கொண்டிருக்கும் பொழுதே ஒரே தினத்தில் பலவந்தமாக கடத்தப்பட்டோம். நாங்கள் அனைவருமே 15 வயதை ஒத்தவர்களாக இருந்தோம். வீட்டிற்கு ஒரு பிள்ளை என்ற அடிப்படையில் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. இது தொடர்பாக புலிகள் இயக்கம் ஏற்கனவே கட்டளை பிறப்பித்திருந்தாலும் பெற்றோர்கள் இது பற்றி அசட்டையாக இருந்தனர். முதலில் அவர்கள் கடிதங்களை அனுப்பினார்கள். அதன் பின் அவர்கள் வீடுகளுக்கு வரத் தொடங்கினார்கள் அவர்கள் எனது வீட்டிற்கும் வந்து ‘‘எங்களுடைய அறிவித்தல் தொடர்பாக நீங்கள் அறிந்திருப்பீர்கள் அல்லவா? வீட்டிற்கு ஒரு பிள்ளை என்கின்ற அடிப்படையில் எம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாங்கள் எப்படியோ ஒரு பிள்ளையை எடுத்துச் சென்றே தீருவோம்.’’ என்றனர்.
>
> ஒரு நாள் அவர்கள் வந்தார்கள். புலிகள் இயக்கத்தினுடைய முகாமுக்கு அருகிலேயே ரியூஷன் வகுப்புக்கள் நடைபெற்றன. எனவே எங்களை எடுத்துச் செல்வது அவர்களுக்கு இலகுவாக இருந்தது. அவர்கள் என்னை

[18] கொழும்பிலுள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர், ஹரேந்திர டி சில்வாவுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 4ம் திகதி நடத்திய பேட்டியிலிருந்து.

ஒரு பெண் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும் முகாமுக்கு கொண்டு சென்றனர். முதலாம் நாள் அவர்கள் எங்களை நோக்கி ''வீட்டிற்கு ஒரு பிள்ளை என்ற அடிப்படையில் எங்களிடம் கொடுக்கப்பட வேண்டும் என நாங்கள் ஏற்கனவே அறிவித்திருந்தோம் உங்களுடைய குடும்பங்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. உங்கள் 15 பேரைத் தவிர உங்கள் கிராமத்தில் இருந்து ஏற்கனவே நாங்கள் பல பெண் பிள்ளைகளை எடுத்து வந்திருக்கிறோம். பயிற்சியின் பின்பு எங்களைப் போலவே உங்கள் கிராமங்களுக்கு சென்று வேலை செய்யலாம்.'' என்று கூறினர்.[19]

சகுந்தலா என்னும் இன்னுமொரு பெண்பிள்ளை எம்மிடம் கூறுகின்ற பொழுது, குடும்பத்திற்கு ஒரு பிள்ளையை தரவேண்டும் என அறிவிக்கும் கடிதமொன்று புலிகளிடமிருந்து கிடைத்த பின் அப்பிரதேசத்தை விட்டு வெளியேறிவிட எம் குடும்பம் தீர்மானித்தது. எமது குடும்பம் வெளியேறியதன் பின்னர் புலிகள் இயக்கத்தினர் எம் வீட்டை எரித்தனர்.. இதே காரணத்திற்காக தமது வீடுகளை விட்டு வெளியேறிய இன்னும் 15 குடும்பங்களின் வீடுகளும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. அக்குடும்பம் ஐந்து மாதங்களின் பின் திரும்பி வந்தது. 2002ம் ஆண்டில் அவர்கள் திரும்பி வந்து ஒரு வாரத்திற்குள்ளேயே அப்போது 15 வயதே ஆன சகுந்தலாவைத் தேடி புலிகள் இயக்கத்தினர் மீண்டும் வந்தனர். ''இம்முறை அவர்கள் மிக கடுமையாக நின்றனர். ஆனால் எனது பெற்றோர் 'நாங்கள் தரமாட்டோம்' என கூறினர். ஆனால் அவர்கள் எனது தங்கையை கொண்டு போய்விடுவார்களோ என நான் அச்சமடைந்தேன். எனவே நான் போக சம்மதித்தேன். அவர்கள் எமது கிராமத்தில் இருந்து மேலும் 5 பேரை எடுத்துக் கொண்டனர். அவர்கள் அனைவரும் எனது வயதை ஒத்த பெண்களே.''[20]

தான் 14 வயதாக இருக்கின்ற பொழுது தன்னை படையில் சேரும்படி புலிகள் இயக்கம் கோரியதன் பின்பு, புலிகள் இயக்கத்தால் கைது செய்யப்பட்டிருந்த தனது தந்தையின் விடுதலைக்காக எவ்வாறு தன்னைத் தானே பரிமாற்றம் செய்ய வேண்டி வந்தது என்பதை மலர் எம்மிடம் விளக்கினாள்.:

அப்போது புலிகள் இயக்கத்தினர் தீவிர ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது எமது கிராமத்திற்கும் வந்த அவர்கள், நானும் எனது சகோதரியும் அவர்களுடன் இணைந்துகொள்ள வேண்டும் என அறிவித்தனர். எனது சகோதரியும் எனது தாயாரும் மிகவும் பீதியுற்றிருந்தனர். சில நாட்களுக்கு முன்னர் எனது தந்தையார் அவர்களினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தார். 50 வயதுடைய எனது தந்தையார் மூட்டு வாதத்தால் பாதிக்கப்பட்டவராக இருந்தார். எனது வீட்டாரின் பாதுகாப்புக் கருதி நானே அவர்களோடு போகத் தீர்மானித்தேன். நான் அவர்களோடு இணைந்து கொள்வதாக நானே என் தாயாரிடம் கூறினேன்.

---

[19] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் ''செல்வமணியுடன்'' திகதி நடத்திய பேட்டியிலிருந்து.

[20] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி ''சகுந்தலாவுடன்'' நடத்திய பேட்டியிலிருந்து.

எனவே நானும் என் தாயாரும் புலிகளின் காரியாலயத்திற்குச் சென்றோம். எனது தந்தையாரை அவர்கள் விடுவித்தால் நான் அவர்களுடன் இணைந்து கொள்ளத் தயார் எனக் கூறினேன். அவர்களும் அதற்கு இணங்கி எனது தந்தையை விடுவித்தனர். அவர் விடுவிக்கப்பட்டதன் பின் நாங்கள் ஒருவரை ஒருவர் கட்டி முத்தமிட்டோம். கண்ணீர் விட்டு அழுதோம். நான் அவர்களின் காரியாலயத்திலேயே தங்கிவிட்டேன். அங்கிருந்துதான் எங்களை (இன்னும் புதிதாக சேர்க்கப்பட்ட எழுபது பேர்களுடன்) புல்லுமலை என்னும் இடத்தில் உள்ள பயிற்சி முகாமுக்கு அழைத்துச் சென்றனர். புதிதாக சேர்க்கப்பட்ட 70 பேர்களைக் கொண்ட அக்குழுவில் பத்துப் பேர்கள் மட்டில் வயது குறைந்த சிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்.[21]

தான் 16 வயதாக இருக்கும் பொழுது 2003ம் ஆண்டு யூன் மாதத்தில் தன்னை கொண்டு செல்லவந்த போது அதற்கு மறுப்புத் தெரிவித்த தன்மீதும், தனது குடும்பத்தார் மீதும் நடத்தப்பட்ட உடல் ரீதியான பலாத்காரம் பற்றி இன்னொரு சாட்சியான ரஞ்சினி இவ்வாறு கூறினாள்:

எங்களுடைய கிராமத்திலும் புலிகள் இயக்கத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தது. எங்கள் கிராமங்களுக்கு வருகை தந்து அவர்கள் எங்களை அவர்களோடு இணைந்து கொள்ளும்படி கேட்டனர். எனது பெற்றோர்கள் என்னை புலிகள் இயக்கத்திடம் ஒப்படைக்க மறுத்து விட்டதனால் அவர்கள் பத்துப் பதினைந்து பேர் எங்களின் வீட்டுக்கு வந்தார்கள். அவர்களில் சீருடை தரித்த ஆண்களும் பெண்களும் கைகளில் றைபிள்களோடும், இடைப்பட்டிகளில் கட்டப்பட்ட துப்பாக்கிகளோடும் வந்திருந்தனர்.... என்னை கொண்டு செல்வதற்கு அவர்கள் வந்த, அந்த அதிகாலை நேரம் ஒரு மணிக்கு நான் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தேன். முதலில் அவர்கள் எங்கள் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். எனது சிறிய தாயாராக இருக்கலாம் என்ற நினைப்பில் எனது தாயார் வாசல் கதவைத் திறந்தார். .....திடீர் என வீட்டுக்குள் நுழைந்த அவர்கள் என்னை தற தறவென்று வீட்டுக்கு வெளியே இழுத்துச் சென்றனர். "என்ன செய்கிறீர்கள், என்ன நடக்கிறது இங்கே?" என எனது தந்தையார் அவர்களை நோக்கி கத்தினார். ஆனால் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சில சிப்பாய்கள் எனது தந்தையை அருகில் இருந்த புதர்களை நோக்கி இழுத்துச் சென்று அவரை கடுமையாக தாக்கினார்கள்... அதை தடுக்க முயன்ற எனது தாயாரை அவர்கள் கீழே தள்ளி விழுத்தினார்கள்.[22]

ஏறத்தாழ 15 வயதை அடையும்போது சிறார்கள் ஆட்சேர்ப்புக்கு பெரும்பாலும் குறிவைக்கப்பட்டனர். புலிகள் இயக்கத்தில் படையில் சேர்க்கப்பட்ட ஓர் முன்னை நாள் சிறுமி, மேலும் பல சிறார்களை புலிகள் இயக்கத்தில் சேர்ப்பதற்காக நியமிக்கப்பட்டாள். அவள் எம்மிடம் கூறும் பொழுது:

---

[21] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி மட்டக்களப்பில் "மலர்"உடன் நடத்திய பேட்டியிலிருந்து.

[22] மனித உரிமைகள் கண்னாணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி மட்டக்களப்பில் "ரஞ்சினியுடன்" நடத்திய பேட்டியிலிருந்து.

நான் இன்னும் இரண்டு பிள்ளைகளை அவர்களுக்கு பிடித்துக் கொடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் எனக்கு உணவு கொடுக்கப்பட மாட்டாது என்றும் அவர்கள் கூறினார்கள். "நானே பலவந்தமாகத்தான் பிடிக்கப்பட்டிருக்கிறேன் எனவே நான் ஏன் அதனை இன்னொரு பிள்ளைக்கும் செய்ய வேண்டும்" என நினைத்தேன். சற்றுப் பெரிய உருவ அமைப்பைக் கொண்ட 15 வயதை அண்மித்த பிள்ளைகளையே நாங்கள் வழமையாக அதிகம் பிடிக்க முயற்சிப்பது உண்டு. "நாங்கள் உங்களை கோவில் திருவிழாவுக்கு அனுப்பப் போகிறோம் அங்கே நீங்கள் ஒவ்வொருவரும் இரண்டு பிள்ளைகளை பிடிக்க வேண்டும்." என்று கூறிய அவர்கள், பிடிக்கும் போது சற்று திடகாத்திரமான உடலமைப்பைக் கொண்ட 15 வயதை அண்மித்த பிள்ளைகளையே பிடிக்கும்படியும் கூறினார்கள். "திருமணம் முடித்தவர்களை இங்கே பிடித்துக்கொண்டு வராதீர்கள்" என்றும் அவர்கள் கூறினார்கள்.[23]

மிக இளம் வயதுடைய பிள்ளைகளும் அடிக்கடி படையில் சேர்க்கப்பட்டனர். புலிகள் இயக்கத்தினால் எடுத்து செல்லப்பட்ட 12 அல்லது 13 வயதுடைய பிள்ளைகள் பலரை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பேட்டிகண்டது. 12 வயதில் கடத்திச் செல்லப்பட்ட சரஸ்வதி எம்மிடம் கூறும் பொழுது "நள்ளிரவு நேரத்தில் புலிகள் இயக்கத்தினர் எனது வீட்டுக்கு வந்தனர். எனது குடும்பத்தினர் அவர்களின் கோரிக்கைக்கு மறுத்த பொழுது அவர்கள் என் பெற்றோரை தாக்க முற்பட்டனர். இதனால் நான் அவர்களுடன் போவதற்கு ஒத்துக் கொண்டேன்."[24] தனக்கு 13 வயதாக இருக்கும் பொழுது புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டதாகவும் அதற்கு காரணம் புலிகள் இயக்கத்தில் சேர்ந்த ஏனைய இளம் பெண்களைப்போல் தானும் இருக்க வேண்டும் என்றும், அவர்களைப் போலவே கிராமங்களுக்குள் வந்து ஏனைய பிள்ளைகளை சேரும்படி தானும் அழைக்க வேண்டும் என்ற விருப்பத்தில் தான் சேர்ந்ததாக இன்னுமொரு சாட்சி கூறினார்.[25] பிள்ளைகளை படையில் சேர்த்துக் கொள்ளும்போது புலிகள் இயக்கமானது அவர்களின் பெயர் மற்றும் பிறந்த திகதி போன்ற விபரங்களை பதிந்து கொள்வதாகவே நாம் பேட்டி கண்ட அனைத்து சிறார்களும் கூறினர்.

2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாத முற்பகுதியில் 11 வயதே ஆன ஒரு பெண்பிள்ளை எவ்வாறு பலவந்தமாக சேர்க்கப்பட முயற்சிக்கப்பட்டாள் என்பதை கண்ணால் கண்ட சாட்சியான மட்டக்களப்பு வாழைச்சேனைப் பகுதியில் இருக்கும் ஒருவர் பின்வருமாறு விபரித்தார்:

அது மாலை ஐந்து மணி இருக்கும் என்று நினைக்கிறேன். நான் வீதியால் நடந்து போனேன், அப்பொழுது புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நபர்கள்

---

[23] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி "மஞ்சுளாவுடன்" நடத்திய பேட்டியிலிருந்து.

[24] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி "சரஸ்வதியுடன்" நடத்திய பேட்டியிலிருந்து.

[25] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி "அருணாவுடன்" நடத்திய பேட்டியிலிருந்து.

> உழவு இயந்திரத்தில் (Tractor) வருவதைக் கட்டேன். ஒரு பிள்ளை அப்போது ரியூஷன் வகுப்புகளுக்கு சென்று கொண்டிருந்தாள். புலிகள் இயக்கத்தினர் அந்த பிள்ளையோடு பேசுவதை நான் கண்டேன், அவர்கள் அப்பிள்ளையை தம்மோடு சேர வரும்படி பலவந்தப் படுத்துவதை நான் புரிந்து கொண்டேன். அவர்கள் கூடி நின்ற இடத்திற்கு நான் சென்றதும் புலிகள் இயக்கத்தினர் தாம் பேசுவதை நிறுத்திக் கொண்டனர். ஆனால் நான் அப்பிள்ளையிடம் என்ன நடந்தது எனக் கேட்டேன். அதற்கு இடையில் புலிகள் இயக்கத்தினர் அப்பிள்ளையை பலவந்தமாக ஏற்றிச் செல்ல முயன்றனர். நான் அப்பிள்ளையை பற்றிப் பிடித்துக் கொண்டேன். அவர்கள் கைகளில் துப்பாக்கி இருந்தது. துப்பாக்கியின் அடிப்பாகத்தால் அவர்கள் என்னைத் தாக்கினார்கள். எனவே நான் பிள்ளையின் கையை விடவேண்டியதாகிவிட்டது. இருந்தாலும் நான் மீண்டும் அப்பிள்ளையை இறுகப் பற்றிப் பிடித்து எனது வீட்டிற்குள் இழுத்துச் சென்று வைத்துக் கொண்டேன். அப்பெண் பிள்ளைக்கு 11வயதே ஆகியிருந்தது. அவள் படிப்பதற்கு ஆர்வமாக இருந்தாள்.[26]

12 அல்லது 13 வயதுடைய பெரும்பாலான பிள்ளைகள் நேரடியாகவே பயிற்சிக்காக கொண்டு செல்லப்பட்டபோதும் சிறிய வயதுப் பிள்ளைகள் "கோழிக் குஞ்சுகள்" பிரிவு (Chicken Unit) என்று அழைக்கப்பட்ட விசேட பிரிவுக்குள்ளும் இணைக்கப்பட்டனர்.. அங்கு அவர்கள் அதிக நேரத்தை தமது வகுப்புகளிலேயே கழித்தனர். 14 வயதிலேயே பலவந்தமாக சேர்க்கப்பட்டு அப்பிரிவுக்குள் போடப்பட்ட தற்போது 16 வயதை உடைய ஒருவர் எம்மிடம் கூறும் பொழுது, அவ்விசேட பிரிவுக்குள் வாழ்க்கையானது சாதாரண பாடசாலை வாழ்க்கையைப்போல் இருந்ததாகவும், பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியைகளின் வயதை ஒத்த ஆசிரியைகள் அங்கு கல்வி கற்பித்ததாகவும் விபரித்தாள்.[27] குறிப்பாக மிகவும் வறிய குடும்பங்களில் இருந்து புலிகள் இயக்கத்தில் சேர்வதற்கு சென்ற சிறார்கள் புலிகள் இயக்கத்தால் நடத்தப்பட்ட அநாதை விடுதிகளுக்கு சிலவேளை முதலில் அனுப்பப்படலாம்.. இவர்கள் சற்று வயது முதிரும்வரை இவ்அனாதை விடுதிகளில் இருந்து பாடசாலைக்கு போய்க் கற்பதும், புலிகள் இயக்கத்தின் முகாம்களில் விடுமுறை நாட்களைக் கழிப்பதுமாக இருந்து பின்னர் முழுநேர இயக்க அங்கத்தவர்களாக மாறிவிடுவர்.[28]

ஒவ்வொரு தமிழ் குடும்பத்தில் இருந்தும் ஒரு பிள்ளையை கட்டாயம் தமக்கு தரும்படி புலிகள் இயக்கம் கோரினாலும் அது குடும்பத்திற்கு ஒரு பிள்ளை என்ற மட்டத்திலேயே அவர்களால் நடைமுறையில் கடைப்பிடிக்கப் படுவதில்லை. ஏற்கனவே குடும்பத்தில் ஒரு அங்கத்தவர் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இருக்கும் குடும்பங்களின் ஏனைய சகோதர சகோதரிகளுக்கு கூட ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது விதிவிலக்கோ பாதுகாப்போ வழங்கப் படுவதில்லை.

---

[26] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 10ம் திகதி 'பெயர் தரப்படவில்லை' நடத்திய பேட்டியிலிருந்து

[27] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்டில் மட்டக்களப்பில் "தாமரை"உடன் நடத்திய பேட்டியிலிருந்து.

[28] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி "மஞ்சுளாவுடன்" நடத்திய பேட்டியிலிருந்து.

அப்போது 15 வயதை அடைந்திருந்த இந்திரா உள்ளூர் கடையொன்றுக்கு சென்ற பொழுது புலிகள் இயக்கத்தினரால் அணுகப்பட்டாள். ''நீ எங்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும்'' என அவர்கள் கூறியதாக அவள் எம்மிடம் கூறினாள். ஏற்கனவே தனது 18வது வயதில் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து 9வருடம் அவ்வியக்கத்தில் பணியாற்றிய ஓர் அண்ணன் இந்திராவிற்கு இருந்தான். அவள் அதுபற்றி விபரிக்கும் பொழுது:

> ''எனது சகோதரன் ஏற்கனவே புலிகள் இயக்கத்தில்தான் இருக்கிறான்'' என்று நான் அவர்களிடம் கூறினேன். ஆனால் அவர்கள் அதற்கு செவிசாய்க்க வில்லை. ஆனால் அவர்கள் என்னை பலவந்தமாக ஓர் வானுக்குள் இழுத்துப் போட்டு கொண்டு சென்றனர். நான் அழுதேன். நான் எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாக அறிந்த எனது பெற்றோர்கள் அவர்களின் முகாமிற்கு ஓடி வந்தார்கள். ''நாங்கள் இன்று எந்தப் பெண் பிள்ளையையும் பிடிக்கவில்லை'' என புலிகள் இயக்கத்தினர் கூறினர். ஆனால் நான் ஏற்கனவே அவர்களுடைய முகாமிற்குள்தான் வைக்கப் பட்டிருந்தேன். நான் ஓர் அடைக்கப்பட்ட அறைக்குள் வைக்கப்பட்டிருந்தேன். நான் தொடர்ச்சியாக அழுதபடி ''நான் வீட்டிற்குப் போக வேண்டும், நான் வீட்டிற்குப் போகவேண்டும்,'' என்று கூறியபடியே இருந்தேன்.[29]

பதினேழு வயதையுடைய தனது சகோதரன் 2001இல் புலிகளினால் கடத்திச் செல்லப்பட்டதாக இன்னொரு பெண்பிள்ளை கூறினாள். இரண்டு வருடங்களின் பின் 13 வயதாக இருக்கும்போது அவளும் புலிகளால் பலவந்தமாக இணைக்கப்பட்டாள்..[30]

சிறு பிள்ளைகள் உட்பட பெருந் தொகையான பொதுமக்கள் ஆர்வத்தோடு கலந்து கொள்கின்ற கோயில் திருவிழாக்கள் பெரும்பாலும் புலிகளின் ஆட்சேர்ப்பு களமாக இருந்தன. அவ்வாறான இடங்களில் சிறார்களை அணுகுவதும் அவர்களுக்கு இலகுவானதாக இருந்தது. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினர் மட்டக்களப்புக்கு விஜயம் செய்வதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்னர், 2004ம் ஆண்டு யூலை 31ம் திகதியன்று தாந்தாமலை முருகன் ஆலய திருவிழாவின் போது மட்டும், பெரும்பாலும் சிறுவர்கள் உட்பட 26பேர் அளவில் புலிகளினால் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் என அறிவிக்கப்படுகிறது. கோயில் திருவிழாக்கள் புலிகளின் வழமையான ஆட்சேர்ப்பு களங்களாக இருப்பதாக உள்ளூர் மனித உரிமைக் குழுக்களால் யுனிசெவ் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்கு எச்சரிக்கை விடப்பட்டிருந்தாலும், திருவிழா ஆரம்பித்த பொழுது எந்தவிதமான தேவையான மேலதிக கண்காணிப்பு நடவடிக்கைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை.[31] மறுநாள் காலையில் புலிகளின் அரசியல் காரியாலயத்திற்கு சென்ற பெற்றோர்களடங்கிய குழுவொன்று தமது பிள்ளைகளை

---

[29] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி ''இந்திராவுடன்'' நடத்திய பேட்டியிலிருந்து.

[30]மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 8ம் திகதி ''அருணாவுடன்'' நடத்திய பேட்டியிலிருந்து.

[31] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் செயற்பாட்டாளர் ஒருவருடன் நடத்திய பேட்டியிலிருந்து

விடுவிக்குமாறு கோரினர். அப் பெற்றோர்கள் அனைவரையும் மறுநாள் மீனகம் முகாமிற்கு செல்லும் படியும் அங்கே அவர்களின் பிள்ளைகள் அவர்களுக்கு காண்பிக்கப்படுவார்கள் என்றும் புலிகள் இயக்கத்தினர் கூறினர். இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக பெற்றோர்கள் உள்ளூர் மனித உரிமை அமைப்புகளுக்கும் யுனிசெவ் அமைப்பிற்கும் அறிவித்துள்ளனர்.

மறுநாள் காலை உள்ளூர் மனித உரிமை அமைப்புக்களுடன் சேர்ந்து பெற்றோர்கள் மீனகம் முகாமிற்கு சென்றனர். அவர்கள் அங்கு பல மணித்தியாலங்கள் காத்திருந்த பின்பு புலிகள் இயக்கத்தின் அப்பிரதேச தளபதி கேணல் கௌசல்யன் மோட்டார் சைக்கிளில் வந்தார். ஆரம்பத்தில் அவர் பெற்றோர்களுடன் பேச மறுத்ததோடு உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் மட்டும் பேசினார். அவர்களின் கருத்துப்படி கௌசல்யன் என்பவர் மிக ஆக்ரோஷமானவராகவும், எந்த வித இணக்கப்பாட்டிற்கும் வர மறுப்பவராகவும், தமது கேள்விகளுக்கு சரியான விளக்கங்கள் அளிக்காதவராகவுமே காணப்பட்டார்.[32] சற்றுப் பின்னர் அவ்விடத்திற்கு வருகை தந்த யுனிசெப் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் மிகச் சுருக்கமாக கௌசல்யன் பேசினார்.[33] அதன் பின்னர் மனித உரிமை அமைப்பின் பிரதிநிதிகள் போகும்படி பணிக்கப்பட்டனர். அதன் பின்னரே பெற்றோர்கள் முகாமிற்குள் வரும்படி கௌசல்யனால் அழைக்கப்பட்டனர். அன்று மாலை அச்சிறார்கள் விடுவிக்கப்பட்டனர்.

அச்சிறார்களின் விடுதலையானது அக் குடும்பங்களுக்குள் ஏற்பட்டிருந்த அச்ச உணர்வை எந்த வகையிலும் முடிவுக்கு கொண்டுவரவில்லை. புலிகளின் முகாமிற்குள் இருந்த அந்த ஓரிரு நாட்களுக்குள் இச்சிறார்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ அல்லது இச்சிறார்கள் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக கௌசல்யன் பெற்றோரிடம் என்ன பேசினார் என்பது பற்றியோ எங்கும் எவரிடமும் கதைக்க கூடாது என்று அப்பெற்றோர்கள் எச்சரிக்கப்பட்டனர் என நாம் அறிந்தோம். புலிகள் இயக்கத்தினால் இக் குடும்பங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட அச்சமும் பாதிப்பும் புரிந்து கொள்ளக் கூடியதே.

குறிப்பிட்ட இச்சிறார்களைக் கொண்ட குழுவானது புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்பட்டது வரவேற்கப்படத் தக்கதாக இருந்தாலும் அச்செயற்பாடானது வழக்கமான நிகழ்வல்ல எனவும் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்கள் அப்பிரதேசத்தில் நின்று செயற்பட்டதினால் கிடைத்த பலாபலனாக இருக்ககூடும் என்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டினார்கள். அத்துடன் கோயில் திருவிழா நடைபெறுகின்ற இடத்திற்கு நேரடியாக சென்று கோயில் திருவிழா முடியும் வரையும் நிலைமையை கண்காணிப்பதற்கு மனித உரிமை அமைப்புக்கள் ஏற்றுக் கொண்டன.

---

[32] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் செயற்பாட்டாளரான, 'பெயர் வழங்கப்பட வில்லை' நடத்திய பேட்டியிலிருந்து.

[33] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய யுனிசெப் காரியாலய பொறுப்பாளரான ஆன்டிரியா ஜேம்ஸ் (Andrea James) என்பவருடன் நடத்திய பேட்டியிலிருந்து.

சில பிள்ளைகள் தாமே விரும்பி புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொள்ளத் தீர்மானித்தனர். அவ்வாறானவர்களில் பெரும்பாலானோர் மிக வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. அவ்வாறு சேர்வதன் மூலம் தமக்கு வேறுசில நலன்கள் கிடைக்கலாம் என அவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவ்வாறான சிறார்களை சேர்த்துக் கொள்ளாமல் நிராகரிப்பது என்பது புலிகள் இயக்கத்தின் கடமையாகும். தனது 16 வயதில் புலிகளுடன் சேர்ந்து கொண்ட வான்மதி எம்மிடம் விபரிக்கும் போது

> நான் 5ம் வகுப்புவரை பாடசாலைக்குச் சென்றேன். எனது அப்பாவும் அம்மாவும் இறந்ததினால் நான் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை. என்னை கவனிப்பார் யாரும் இல்லை. எனக்கு பெற்றோர்கள் இல்லை, ஆகவே எனக்கு புலிகளுடன் இணைவதற்கு விருப்பம் இருந்தது. எனது பெற்றோர்கள் இறந்த பின் நான் எனது மாமியுடன் இருந்தேன்.. நான் அவர்களின் குடும்பத்திற்கு சமைத்தேன். எனது வாழ்க்கையைப் பற்றி எனக்கு  விரக்தி இருந்தது. ஆகவே நான் புலிகளுடன் இணைந்து கொள்ள விரும்பினேன். இந்த உலகில் ஒருவருடைய உதவியும் இல்லாமல் நான் வாழ வேண்டும் என விரும்பினேன். நான் புலிகளின் அரசியல் காரியாலயத்திற்குச் சென்று, நான் புலிகளில் சேர விரும்புகிறேன் என்று சொன்னேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். எனக்கு 16வயது என்று நான் அவர்களிடம் சொன்னேன். ஆனால் அவர்கள் அதைப்பற்றி அக்கறைப் படவில்லை.[34]

தனது மகள் தனக்குத் தெரியாமலே புலிகள் இயக்கத்துடன் சேர்ந்ததாக கூறிய ஒரு தாய் எம்மிடம் விபரிக்கும் பொழுது

> எனது மகள் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தபொழுது அவளுக்கு 14வயது. எனது கணவர் இறந்துவிட்டார். எங்களுக்கு ஒரு வருமானமும் இல்லை. சாப்பாடு இல்லை. ஏனைய எனது அயலவர்கள், பிள்ளைகள் புலிகள் இயக்கத்தில் சேர்வதை ஊக்குவித்தார்கள். நான் வயலில் வேலை செய்து கொண்டிருந்த பொழுது அவள் எனது அயலவர் ஒருவருடன் இயக்கத்திற்கு சென்று விட்டாள். நான் வயலில் இருந்து வந்து எல்லா இடமும் தேடினேன். அப்போது ஒருவர் அவள் புலிகள் இயக்கத்திற்கு சென்றுவிட்டதாகக் கூறினார்கள்.[35]

தனது மிகச் சிறந்த நண்பி புலிகள் இயக்கத்தில் சேர்ந்து கொண்டதால் தானும் அதில் இணைந்து கொண்டதாக இன்னும் ஒரு பெண் பிள்ளை கூறினாள். தான் புலிகள் இயக்கத்தில் சேரும் பொழுது அவ்வியக்கத்தைப் பற்றி தான் எதையுமே அறிந்திருக்கவில்லை எனக் கூறிய அவள், மேலும் சொல்கையில், மிக மோசமாக உடல் ரீதியான பாதிப்புகளுக்கு உள்ளாகிய குடும்ப பின்னணியில் இருந்து வந்த தனது நண்பி கூறிய கருத்துக்களின் அடிப்படையில் புலிகள் இயக்கமொன்றே ஒரு

---

[34] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘வான்மதியுடன்’’ நடத்திய பேட்டியிலிருந்து.

[35] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியிலிருந்து.

மாற்றான நல்வாழ்க்கையை எமக்குத் தரமுடியும் என தான் நம்பியதாக தெரிவித்தாள்.[36]

2002ம் ஆண்டில் தனது 14வது வயதில் சேர்ந்த ஒரு பையன் விபரிக்கும் பொழுது ''எனது ஜாதகம் கூறியபடி நான் அதில் சேரவேண்டும்'' என உணர்ந்ததாக கூறினான். ''நான் பாடசாலைக்கு செல்வதாக கூறிவிட்டு எனது தாயாருக்கு சொல்லாமலே புலிகள் இயக்கத்திடம் சென்றேன்.'' என்று கூறிய அவன் பாடசாலையில் இருந்து தாமாகவே சென்ற வேறுபல நண்பர்களுடன் சேர்ந்து சென்றிருந்தான்.[37]

அரசாங்கத்தினால் தமது குடும்பங்கள் மிக மோசமாக நடத்தப்பட்டதனாலோ அல்லது அரசியல் நம்பிக்கைகளினாலோ அல்லது சமூகம் உந்தப்பட்டு சில பிள்ளைகள் புலிகளுடன் சென்று இணைந்து கொண்டனர். வடக்கில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவன் பாடசாலையை விட்டு தான் புலிகளுடன் சென்று இணைந்து கொண்டதற்கு காரணமாக கூறியது ''எனக்கு தனி ஈழம் வேண்டும்'' என்பதாகும்.[38] 2004ம் ஆண்டு யூலை மாதத்தில் தனது 16வது வயதில் புலிகள் இயக்கத்துடன் இணைந்து கொண்ட இன்னொரு பையன் தான் அவ்வாறு இணைந்து கொள்வதற்கான உணர்வைப் பெற்றதற்கு காரணமாக, ''1991ம் ஆண்டில் இராணுவம் தமது வீட்டைக் கொளுத்தியதோடு தனது அயலவரான பெண்களை பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்கினர். அவர்கள் எம்மை சித்திரவதை செய்தனர்.''[39] என்பதைக் கூறினான். தனது 16 வயதில் தானே விரும்பி இணைந்து கொண்ட ஓர் பெண் பிள்ளை மிக கூர்மையான வகையில் தனது அனுபவத்தை விபரித்தாள்.

> எனக்கு எட்டு வயதிருக்கும் பொழுது எனது அப்பாவும் அப்பாவின் சகோதரர்கள் நான்கு பேரும் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்கள். அவர்களுக்கு விடுதலைப் புலிகளுடன் எந்தவித தொடர்பும் இருக்கவில்லை. அவர்கள் சாதாரண தமிழ் மக்கள். அந்த நாளில் இருந்து இன்று வரைக்கும் அவர்களுக்கு என்ன நடந்தது என்று எங்களுக்குத் தெரியாது. எனக்கு சிறிலங்கா இராணுவத்தின் மீது கடுமையான கோபம் இருந்தது. எனக்கு இப்போது அவ்வளவாகக் கோபம் இல்லை. ஆனால் எனது அப்பாவுக்கு என்ன நடந்தது என்பதை எனக்குத் தெரிந்தாக வேண்டும்.[40]

---

[36] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''பாவை''உடன் நடத்திய பேட்டியிலிருந்து.

[37] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''கணேஷனுடன்'' நடத்திய பேட்டியிலிருந்து.

[38] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் கிளிநொச்சியில் ''அருண்''உடன் நடத்திய பேட்டியிலிருந்து.

[39] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 13ம் திகதி ''மதுரன்''உடன் நடத்திய பேட்டியிலிருந்து.

[40] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''சிவாமி''உடன் நடத்திய பேட்டியிலிருந்து. இனப் பிரைச்சினையின்போது பல தமிழர்கள் சிறீ லங்கா இராணுவத்தினரால் கொல்லப் பட்டுள்ளனர் அல்லது காணாமல் செய்யப்பட்டுள்ளனர்.

“சுயமாக படையில் சேருதல்” என கூறப்படும் விடயமானது புலிகள் இயக்கத்தின் ஓர் பிரச்சார அங்கமாக பாடசாலை மட்டங்களில் கொண்டு செல்லப்பட்டது. அடிக்கடி புலிகள் இயக்கத்தினர் பாடசாலைகளுக்குள் சென்று தமது இயக்க நடவடிக்கைகள் பற்றி பேசுவார்கள். சில வேளைகளில் தாம் செய்கின்ற பணிகளை மிகச் சாதகமான ஓர் கண்ணோட்டத்தில் திரைப்படங்கள் மூலம் காண்பிப்பார்கள்.[41] குறிப்பாக திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கருத்துப்படி, 2004ம் ஆண்டு யூலை மாதத்தில் புலிகள் இயக்கத்தினர் தமது இயக்கத்தின் வரலாறு தொடர்பாக ஓர் பரீட்சை ஒன்றை மாணவர்களிடையே நடத்தும் படி ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் வினாத் தாள்களை வழங்கினர். அவர்கள் பின்னர் வந்து அவ்வினாத்தாள்களை சேர்த்துக் கொண்டு சென்றார்கள். இது அவர்களின் ஒருவித பிரச்சார வேலையாகும். ஆனால் அதிபர்கள் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் இதை அவர்கள் நிராகரிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் உயிர்வாழ வேண்டும். எனவே புலிகள் இயக்கத்தின் கட்டளைப்படி அவர்கள் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது.”[42] என்று கூறினார்.

திருகோணமலையில் பணியாற்றுகின்ற ஒரு சர்வதேச சேவையாளர் கூறுகின்ற பொழுது “புலிகள் இயக்கத்தினர் இவற்றை தமது வரலாற்று போதனை என்கின்றனர். ஆனால் நாம் அவற்றை பிரச்சார நடவடிக்கைகள் என்றே கூறுகின்றோம். இது ஆட்சேர்ப்பு அல்ல என புலிகள் கூறுகின்றனர். ஆனால் இதன் மூலம் தனிநபர்கள் தாம் புலிகளுடன் இணைந்து கொள்ள வேண்டும் எனத் தீர்மானித்தால், அது அப்படித்தான். அதிபர்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு வேறு வழி கிடையாது. புலிகள் இயக்கத்தினர் எப்போதும் அனுமதி கோருவதில்லை. அவர்கள் தாமாகவே நுளைந்து விடுவார்கள்”.[43]

2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் கிராமம் கிராமமாக சென்ற புலிகள் இயக்கத்தினர் ஒவ்வொரு குடும்பங்களுடனும் கதைத்தனர்.[44] இக்குறிப்பிட்ட பிரச்சார நடவடிக்கைக்கான காரணம் தெளிவில்லாவிடினும், இந்த நடவடிக்கையானது தமது பிள்ளைகள் மீண்டும் பலவந்தமாக பிடித்துச் செல்லப்படலாம் என்னும் அச்சத்தை அக்கிராமத்தவர்

---

[41] அரசாங்கத்தால் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்படுகின்ற பாடநூல்கள் பெரும்பாலும் சிங்கள ஆதிக்கம் சார்ந்ததாகவும், தமிழர்களின் எழுச்சிகள் மற்றும் ஆதிக்கம் தொடர்பாக சரியான உண்மைகளை அவை வெளியிடுவதில்லை என்று பரவலானதொரு கருத்து அங்கு நிலவுகின்றது. புலிகள் இயக்கமானது மிகச் சரியான வரலாறு எனத் தானே கருதி தமிழப் பிள்ளைகளுக்கு வழங்குகின்ற நூல்கள் தொடர்பாக பெரும்பான்மையான பெற்றோர்கள் ஆதரவு தெரிவிக்காத நிலைமையே அங்கு காணப்படுகின்றது. சிறீ லங்கா வரலாற்றை மீளச் சரிசெய்து எழுதுதல் என்னும் கலந்துரையாடலானது எவ்வித முன்னேற்றமுமின்றி கிடப்பில் போடப்பட்டுள்ளது.

[42] திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகே உடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 11ம் திகதி நடத்திய பேட்டியில் இருந்து.

[43] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில், நடத்திய பேட்டியில் இருந்து.

[44] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் திருகோணமலை மாவட்டத்தில் பெயர் வெளியிடப்படவில்லை - நடத்திய பேட்டியிலிருந்து.

களிடையே மீளப் புதுப்பித்தது. தம்மை வன்னிப் புலிகள் என அறிமுகப்படுத்திக் கொண்ட நபர்களாலேயே வீடு வீடாகச் செல்லும் இப்பிரச்சார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஒரு குடிசனத் தொகை கணக்கெடுப்பு இடம்பெறும் போது கேட்கப்படுகின்றதை ஒத்த கேள்விகளே ஒவ்வொரு குடும்பத்திடமும் கேட்கப்பட்டுள்ளன. தற்போது இலங்கை இராணுவத்தினரால் தமக்கு எந்தப் பிரச்சினையையும் இல்லை என துணிந்து கூறிய குடும்பங்கள் மிக கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டன. மீண்டும் யுத்தம் ஒன்று தொடங்குகின்ற பட்சத்தில் நிட்சயமாக ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒரு பிள்ளையை தந்தே ஆகவேண்டும் எனப் புலிகள் இயக்கத்தினர் கூறினார்கள், என ஓர் உள்ளூர் மதகுரு எம்மிடம் தெரிவித்தார்.[45]

குடும்பங்களைச் சந்திக்கின்ற இப்பிரச்சார நடவடிக்கைகளின் போது குறிப்பாக சிறுவர்களைக் கவர்ந்திழுக்கின்ற வீதி நாடகங்களையும் தமது பிரச்சாரக் கருவியாக புலிகள் இயக்கத்தினர் இணைத்துச் செயற்படுத்தினர். இவ்வாறான வீதி நாடகம் ஒன்றை பார்த்த ஒரு நபர் அதில் வந்த காட்சிகளை இவ்வாறு விபரித்தார்.

> அடிப்படையில் மக்களை இயக்கத்தில் சேரும்படி கோரும் கதையம்சத்தைக் கொண்ட நாடகமே அது. போராட்டத்தைப் பற்றி மிக உணர்ச்சி மயமாக அது தயாரிக்கப் பட்டிருந்து. அங்கே எல்லா வயதினரும் பார்வையாளர்களாக வந்திருந்தனர். ஆனால் அது உண்மையில் சிறுவர்களுக்கான நாடகம். அக்கதையில் ஒரு குடும்பம், அப்பா, அம்மா, இரண்டு பிள்ளைகள். ஒரு பிள்ளை சிறீ லங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்படுகின்றான். எஞ்சியிருக்கும் பிள்ளை –அதாவது நாடகத்தில், பாடசாலைக்கு செல்லும் வயதை ஒத்த சிறுவன். அவன் இயக்கத்தில் போய் சேர்வதற்கு முடிவெடுக்கிறான். நாடகத்தில் வரும் தாய், எனக்கு உயிருடன் இருக்கும் பிள்ளை நீ ஒருவன் தான் என்று சொல்லி, அம்மகனை இயக்கத்தில் போய் சேரவேண்டாம் என்று கெஞ்சி மன்றாடுகிறாள். தாய் மனநிலை பேதலித்துப் போய் நிற்கிறாள். பின்னர் தந்தை துன்பத்துடன் இருந்தும் கூட பகுத்தறிவுடன் நிதானமாகவும் பேசுகிறார். பின்னர் தந்தை தாயிடம் இப்படிச் சொல்கிறார், நாம் எடுக்கக்கூடிய சரியான முடிவு எஞ்சியிருக்கும் பிள்ளையை புலிகள் இயக்கத்திற்கு கொடுப்பதுதான்.[46]

ஆட்சேர்ப்பு நடவடிக்கையானது பருவகாலம் போன்று மாறி மாறி வருவது.. சில அவதானிப்பாளர்களின் கருத்துப்படி புலிகள் இயக்கமானது புதிதாக ஒரு பயிற்சி நெறியை ஆரம்பிக்கின்ற காலத்தை கணக்கில் வைத்தே தமது ஆட்சேர்ப்பு நடவடிக்கையை முடுக்கி விடுவார்கள். புதிய பயிற்சி ஆரம்பிக்கு முன்னர் புது ஆட்சேர்ப்பு நடவடிக்கை முடுக்கப்படுவதன் நோக்கம் ஏற்கனவே நடத்தப்படும் பயிற்சி முழுமை அடைவதே..[47]

---

[45] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் திருகோணமலை மாவட்டத்தில், உள்ளூர் மதகுரு ஒருவருடன் -பெயர் வெளியிடப்படவில்லை- நடத்திய பேட்டியில் இருந்து

[46] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் திருகோணமலை மாவட்டத்தில், நடத்திய பேட்டியில் இருந்து.

[47] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.

## V. புலிகள் இயக்கத்திற்குள்ளே சிறார் படையினரின் வாழ்க்கை:

*அடிப்படைப் பயிற்சி:*

தாங்கள் பயிற்சி முகாம்களுக்கு கொண்டு செல்லப் படுவதற்கு முன்னர் புலிகள் இயக்க முகாம் அல்லது காரியாலயங்களில் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு வைக்கப்பட்டிருப்போம் என சில முன்னாள் சிறுவர் படையினர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு தெரிவித்தனர். அடிப்படை பயிற்சிக்காக ஆண்களும் பெண்களும் வெவ்வேறாக பிரிக்கப்படுவார்கள் அநேகமாக 250-300 வரையான இளைஞர்கள் மற்றும் சிறார்கள் கொண்ட குழுக்களாகவே இப்பயிற்சிகள் நடத்தப்பட்டன. முன்னாள் சிறுவர் படையினரின் கூற்றுப்படி அவர்கள் மிகக் கடுமையான உடற் பயிற்சி, ஆயுதப் பயிற்சி மற்றும் இராணுவ தந்திரோபாயம் போன்ற பயிற்சிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். தவறு விடுதல் அல்லது தப்பி ஓட முயற்சித்தல் என்பவற்றுக்கு மிக கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன.

தனது 13வது வயதில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு பெண் தனது பயிற்சி அனுபவத்தை கீழ்கண்டவாறு விபரித்தாள்:

> முகாமில் நாங்கள் உடற் பயிற்சி செய்தோம். உலோகத்தினாலான ஆயுதங்களின் பகுதிகள் எமக்கு கொடுக்கப்பட்டு எப்படி கழற்றுவது, பூட்டுவது என்பதில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. நாங்கள் குறிபார்த்து சுடுவதற்கும் பயிற்சி பெற்றோம். நாங்கள் சரியாக குறிபார்த்து சுடவில்லை என்றால் எங்களுக்கு தண்டனை வழங்கப்பட்டது. எங்களை அடித்தார்கள். எங்களை தோப்புக்கரணம் போடச் செய்தார்கள். முழங்கைகளாலும் முழங்கால்களாலும் ஊர்ந்து செல்லுவது என்னும் ஒரு தண்டனையும் இருக்கிறது. அது எனக்கும் நடந்தது. நாங்களும் நிலத்தில் பதுங்கு குழிகள் கிண்டினோம். எதிரியின் முகாம் ஒன்று இருந்தால் அவற்றை எவ்வாறு அணுகுவது, தாக்குவது, எவ்வாறு எதிரியை கொல்வது, எப்படி முகாமை தாக்கத் திட்டமிடுவது போன்ற போர் யுக்திகளில் எங்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.[48]

தாம் பயிற்சிகளுக்காக அதிகாலை 4 மணிக்கே சரியாக எழுந்துவிடுவதாகவும் இப்பயிற்சியாளர்கள் கூறினார்கள். 2002ம் ஆண்டில் தனது 15வது வயதில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு பெண்பிள்ளை எம்மிடம் கூறும்பொழுது:

> பயிற்சிகள் மிகவும் கடினமாக இருந்தன. அவர்கள் மழையையோ வெயிலையோ பொருட்படுத்துவது இல்லை. நீங்கள் அதிகம் களைப்படைந்தால், உங்களால் பயிற்சியை தொடரமுடியாது இருந்தால், அவர்கள் உங்களை அடிப்பார்கள். ஆரம்பகாலத்தில் ஒரு முறை எனக்கு

---

[48] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''மஞ்சுளாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

மயக்கம் வரும் போல் இருந்தது. என்னால் தொடர முடியவில்லை, நான் சற்று ஓய்வு கேட்டேன். ‘‘இது விடுதலைப் புலிகள் இயக்கம். பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். ஓய்வெடுக்க முடியாது’’ என்று கூறினார்கள். அவர்கள் தங்களின் கையால் என்னை நான்கு ஐந்து முறை அடித்தார்கள்.[49] என்று விபரித்தாள்.

2002ம் ஆண்டில் பயிற்சி பெற்ற இன்னுமொரு முன்னாள் சிறார் படையை சேர்ந்த ஒருவர் எம்மிடம் விபரிக்கும் பொழுது ‘‘மிகக் கடினமான விடயம் யாதெனில் எதிரியின் முகாமை நோக்கி ஊர்ந்து செல்லுதல் ஆகும். நாங்கள் ஆயுதங்களைப் பயன்படுத்த கற்றுக் கொண்டோம். ஆனால் உண்மையான தோட்டாக்களை நாம் பாவிக்கவில்லை. நான் மிக மனக் கவலையோடு இருந்தேன். ஆனால் எங்கள் உணர்வுகளை நாங்கள் வெளிப்படுத்த முடியாது’’.[50]

பயிற்சி அளிக்கப்பட்ட மிக வயது குறைந்த அங்கத்தவர்கள் 12 அல்லது 13 வயதுடையவர்களாக இருந்தார்கள். 12 வயதுடைய அவ்வாறான ஒரு பெண்பிள்ளை எம்மிடம் கூறும் பொழுது பயிற்சி முகாமில் நானே மிக குறைந்த வயதுடையவளாக இருந்தேன்.[51] ஆனால் என்வயதை ஒத்த இன்னும் 10 பிள்ளைகள் அங்கே இருந்தார்கள்.’’ 15 வயதில் படையில் சேர்க்கப்பட்ட இன்னொரு பெண் கூறும் பொழுது ‘‘எனது குழுவில் ஆக குறைந்த வயதுடையவருக்கு 11 வயதாகும். அதே வயதுடைய இன்னும் ஒன்பது பேர் அங்கிருந்தனர். வளந்தவர்களுக்கு கொடுக்கும் அதே பயிற்சிதான் இச்சிறார்களுக்கும் வழங்கப்பட்டது. அவர்களால் அதை செய்ய முடியாதிருந்தாலும் கூட, அவர்கள் அதைக் கட்டாயம் செய்தே ஆகவேண்டும்’’ என்றாள்.[52] 15 வயதில் சேர்க்கப்பட்ட இன்னுமொரு பெண் தனது சாட்சியத்தில் கூறும் பொழுது 35 பெண்பிள்ளைகள் அடங்கிய தனது பயிற்சிப் பிரிவில் ஆக குறைந்தது 12 பேராவது மிக இளமையானவர்களாகவும் மிக வயது குறைந்தவர்களாகவும் காணப்பட்டனர்’’.[53] என்று கூறினார்.

2002ம் ஆண்டில் தனது 13வது வயதில் பயிற்சி அளிக்கப்பட்ட இன்னுமொரு பெண்பிள்ளை கூறும் பொழுது ‘‘நான் மிகவும் மனவேதனையுடனும் சுகயீனமுற்றும் இருந்தேன். சில பயிற்சிகள் நாம் பின்பற்றக்கூடிய வகையில் இலகுவானவையாக இருந்தன. ஆனால் சில பயிற்சிகள் மிக மிக கடினமானவை. நிலத்தில்

---

49 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘செல்வமணியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

50 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘இந்திராவுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

51 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘பாமினியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

52 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘நான்மணியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

53 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘நடனம்’’ என்பவருடன் நடத்திய பேட்டியில் இருந்து.

உருளுதல், வேலிகளுக்கு மேலால் பாய்தல் போன்றவை மிக கடினமான பயிற்சிகள் ஆகும்.''[54] என்றாள்.

*குடும்பங்களுடனான தொடர்பு*

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பேட்டி கண்ட முன்னாள் சிறுவர் படையினர் அநேகமானோரின் கருத்துப்படி பயிற்சிக் காலத்தில் அவர்கள் எவருமே குடும்பங்களோடு தொடர்புகளை வைத்திருக்க அனுமதிக்கப்படவில்லை. ''நான் வீட்டு நினைப்பாகவே இருந்தேன். என் சகோதரர் சகோதரிகளை விட்டுப் பிரிந்தது கவலையைத் தந்தது. என்னைப் பார்ப்பதற்காக எனது பெற்றோர்கள் முகாமிற்கு வந்தனர். ஆனால் புலிகள் இயக்கத்தினர் அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டனர். எனவே ஒரு வருட காலத்திற்கு நான் எனது பெற்றோர்களை காணவில்லை. எனது பெற்றோர்கள் பல தடவைகள் என்னை பார்க்க வந்தாலும் கூட புலிகள் இயக்கத்தினர் அவர்களுக்கு அவ் அனுமதியை வழங்கவில்லை''[55] என அருணா கூறினாள்.

விமலா கூறியதின்படி ''நாங்கள் ஒன்றாக விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது நான் மகிழ்ச்சியாக இருந்தேன். ஆனால் இரவுகளில் நான் எனது குடும்பத்தைப் பற்றி நினைத்து கவலைப் பட்டேன். எனது பெற்றோர்களால் என்னை வந்து பார்க்க முடியவில்லை. எவருமே அங்கு சென்று எவரையும் பார்ப்பதற்கு அனுமதி கிடைக்காது''.[56] என்றாள்.

2003ம் ஆண்டில் தனது 16வது வயதில் பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்ட ரஞ்சினி, தன்னைப் பார்க்க தனது பெற்றோர்கள் முதல் முறை வந்த பொழுது தான் எவ்வாறு உணர்ந்தாள் என விளக்கும் பொழுது: ''எனது தாயாரைக் கண்டதும் நான் மிக மிக மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அவள் திரும்பிச் செல்லுகின்ற பொழுது நான் கவலைப் பட்டேன். முன்னர் இருந்ததைவிட அதிக கவலை ஏற்பட்டது.[57] அவள் இன்னொரு முறையும் தன் தாயைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் அது முற்றும் முழுதாக ஒரு எதேச்சையான சந்திப்பே. அவளுடைய மாமனார் இறந்து போன செய்தியை புலிகள் இயக்க முகாமுக்கு அறிவிப்பதற்காக வந்த அவளது தாயை, முகாமில் இருந்த மகளைச் சந்திக்க அவர்கள் அனுமதி வழங்கினர்.[58]

---

[54] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''அம்மணியுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[55] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''அருணாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[56] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''விமலாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[57]மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''ரஞ்சினியுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[58] ஐபிட் Ibid

2002ம் ஆண்டில் தனது 15வது வயதில் பயிற்சி பெற்ற செல்வமணி: ''நான் இரண்டரை வருட காலம் புலிகள் இயக்கத்தில் இருந்தேன். நான் எனது பெற்றோரை இரண்டு முறைதான் பார்த்துள்ளேன். கடிதங்கள் எழுதுவதற்கு அவர்கள் என்னை அனுமதிக்கவில்லை''.[59]

*முன்னேறிய பயிற்சி*

நான்கு முதல் ஏழு மாதங்கள் வரை வழமையாக நடத்தப்படும் அடிப்படை பயிற்சியின் பின்னர் புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள் விசேட பயிற்சிகளுக்காக வேறு பல பிரிவுகளுக்குள் சேர்க்கப்படுவர். இவை புலிகள் இயக்கத்தில் உயர் பதவி வகிக்கும் அங்கத்தவர்களால் தனி நபர்களது தனித்துவமான திறமைகள் எது என்று அவர்கள் கருதும் பட்சத்தில் எடுக்கும் முடிவுகள். மேலதிக பயிற்சிகள் என்பது மோதல் நடவடிக்கைகளில் ஈடுபடல், குறிப்பான ஆயுதப் பாவனை முறைகளைக் கற்றுக் கொள்ளுதல் (நிலக்கண்ணிகள், வெடிகுண்டுகள், அல்லது கனரக ஆயுதங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.), பாதுகாப்பு வழங்குதல் (குறிப்பாக உயர் பதவி வகிக்கும் கருணா போன்ற தனிப்பட்ட நபர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்) உளவுத்துறைப் பயிற்சி, மருத்துவம் மற்றும் நிர்வாகம் உட்பட இராணுவத்துறை சாராத திறமைகள், போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கப்படும். மிக குறைந்த அளவு கல்வித் தகமைகள் உடையவர்கள் அநேகமாக சண்டையிடும் பிரிவுகளிலேயே பொதுவாக சேர்க்கப்படுவார்கள். அதே வேளை சற்று அதிக வருடங்கள் பள்ளிக்கூடத்திற்கு சென்றுள்ள பின்னணியைக் கொண்ட பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்கள் மருத்துவத் துறை, உளவுத்துறை அல்லது நிர்வாக சேவை என்பவற்றில் பயிற்றுவிக்கப்படுவதற்கான சான்றுகளே அதிகம்..

தனது 19வது வயதில் சேர்ந்து பயிற்சிகளை பெற்ற ஒரு இளம் பெண் வைத்தியப் பிரிவில் தனக்கு வழங்கப்பட்ட பயிற்சி பற்றி கீழ்க்கண்டவாறு விபரித்தாள் ''நான் முதல் உதவி வழங்குவது பற்றியும், காய்ச்சல் வராது தடுப்பது பற்றியும், சேலைன் போத்தல்களை பாவிப்பது எவ்வாறு என்பது பற்றியும், காயங்களுக்கு மருந்து போடுவது பற்றியும் கற்றுக் கொண்டேன். நான் ஒரு வருடம் இதில் பயிற்சி பெற்றேன். அப்பயிற்சியின் பின்னர் ஒரு குழுவில் சிறு காயங்களுக்கு மருந்திடவும், காய்ச்சல் போன்ற வருத்தங்களுக்கு மருத்துவம் செய்யவும் மருத்துவ தாதியாக சேர்க்கப்பட்டேன்.[60] 16 வயதுடைய இன்னுமொரு பெண்பிள்ளை விபரிக்கும் போது தான் முன்னணி மருத்துவ தாதியாக பயிற்றுவிக்கப் பட்டதாக கூறினாள். தான் முன்னணி மருத்துவ தாதியாக பயிற்சி பெற்றது தனது அதிர்ஷ்டம் என்றும், அதன் மூலம் தான் ஆங்கிலம் கற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்ததாகவும் அவள் கூறினாள். வன்னிப் புலிகள் கருணா பிரிவினரைத் தாக்கிய பொழுது தான் அங்கு வாகரையில் முன்னணி மருத்துவப் பணிக்காக ஈடுபடுத்தப் பட்டதாகவும், ஆனால்

[59] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''செல்வமணியுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[60] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''காஞ்சனாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

மோதல் ஆரம்பிப்பதற்கு முன்னரே தான் அங்கிருந்து தப்பிவிட்டதாகவும் கூறினாள்.[61]

இன்னுமொரு புலிகள் இயக்க அங்கத்தவர் கூறும்போது அவர்கள் தன்னை, தங்கள் அரசியல் பிரச்சார வேலைக்காக முதலில் அனுப்பியதாகவும், அதன் பின்னர் புலிகள் இயக்கத்திற்குள் பிளவுகள் ஏற்படும் வரை அரசியல் காரியாலயத்தில் பணியாற்றியதாகவும்  கூறினாள்.[62]

2003ம் ஆண்டில் தனது 17வது வயதில் சேர்க்கப்பட்ட விமலா கூறுகையில்:

> நான்கு மாதங்களின் பின் என்னை அவர்கள் கண்ணிவெடிகள் குழுவிற்கு அனுப்பினார்கள். நான் கண்ணிவெடிகளை எப்படிக் கையாளுவது, புதைப்பது என்பதைப் படித்தேன். நான் இதை நான்கு மாதங்களாகச் செய்தேன். என்னால் அதில் கவனம் செலுத்த முடியவில்லை. சில வேளைகளில் கண்ணிவெடி வெடித்து பிள்ளைகளின் கை, கால், முகம் என்பன  காயப்பட்டிருக்கிறது. ஒரு முறை, நாங்கள் வரிசையாக வேலை செய்து கொண்டிருக்கும் பொழுது, கடைசியாக நின்றவள் கண்ணிவெடி அகற்றுவதில் தவறு விட்டுவிட்டாள். அது வெடித்து அவளின் விரல் இல்லாமல் போய்விட்டது. அவளுக்கு 17 வயது. கண்ணிவெடிகளைக் கையாளுவதில் எனக்கு சரியான பயம்.[63]

தனது 14வது வயதில் சேர்க்கப்பட்டு பயிற்றப்பட்ட நிர்மலா கூறும்பொழுது:

> நான் சண்டைப் பிரிவில் இருந்தேன். ஒன்பது பிள்ளைகளுக்கு பயிற்சியளிக்கும் பொறுப்பு என்னிடம் வழங்கப்பட்டிருந்தது. சில பிள்ளைகள் 12, 13 வயதை உடையவர்கள். RPG போன்ற மிகவும் கனரக ஆயுதங்களின் பயிற்சி மிகவும் கடினமாக இருந்தது. நாங்களும் குண்டுகள், நிலக்கண்ணி வெடிகள் போன்றவற்றை கையாண்டு இருக்கிறோம். நாங்கள் நிலக் கண்ணிவெடிகளை (போலியான) புதைப்பதில் பயிற்சியெடுத்தோம். எதிரிப் படைகள் வரும்போது நாங்கள் புதைத்த நிலக் கண்ணிவெடிகள் வெடிக்கவில்லை என்றால், நாங்கள் அந்த நிலக் கண்ணி வெடிக்கு மேல் படுக்க வேண்டும் என்பது அவர்களின் தண்டனையாக வழங்கப்பட்டது. இன்னுமொரு பயிற்சியில் கிளேமோர் கண்ணி வெடிகளை (ரிமோட்டால் இயக்கப்படும்) கண்டுபிடிப்பதற்காக எங்களை அனுப்புவார்கள். அப்படி நாங்கள் அவற்றை கண்டுபிடிக்காவிட்டால், தொடர்ந்து ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் ஓடுவதற்குப் பலவந்தப்படுத்தப்படுவோம்.[64]

---

[61] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''ரஞ்சினியுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[62] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''தூயாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[63] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''விமலாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[64] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''நிர்மலாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

இன்னுமொரு பெண்பிள்ளை தனது பதினைந்தாவது வயதில் பலவந்தமாக சேர்க்கப்பட்டாள். அவள் தனது சாட்சியத்தில்: முன்னணிச் சண்டையில் தலையில் காயம் ஏற்பட்டதன் பின்னர், வேறு பல பொறுப்புக்களைச் செய்வதற்கு அவள் பயிற்சியளிக்கப் பட்டாள். புலிகள் இயக்கத்தில் நிதி மற்றும் நிர்வாக சேவைகளில் பணியாற்றுவதற்கான விசேட பயிற்சிகள் அவளுக்கு வழங்கப்பட்டன. அவளுக்கு ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டது. அவளுக்கு காயம் ஏற்பட்டதன் பின்னர் முன்னணி சண்டைக் களத்திற்கு அவள் அனுப்பப் படவில்லை, ஆனால் புலிகள் இயக்கத்திற்கான நிர்வாக சேவைகளில் ஈடுபடுத்தப் பட்டாள்.[65]

*தண்டனையும் ஒழுக்கக் கட்டுப்பாடும்*

புலிகள் இயக்கத்திற்குள் கட்டுப்பாடு மிகத் தீவிரமாக கடைப்பிடிக்கப்படுகிறது; தவறுகளுக்கான தண்டனைகள் மிக மோசமான வகையில் வழங்கப் படுகின்றன. இது பற்றி மஞ்சுளா விபரிக்கும் பொழுது “எனது முதலாவது பயிற்சி நெறியின் பின் என்னை கனரக ஆயுதங்கள் பயன்படுத்துகின்ற விசேட பயிற்சிக்காக அனுப்பினார்கள். அவற்றைக் காவிக் கொண்டு நாங்கள் மைதானத்தை சுற்றி வர வேண்டும். ஒருநாள் எனக்கு தசை இழுப்பு ஏற்பட்டதோடு (Cramping) காய்ச்சலும் இருந்தது. நான் என்னால் முடியாமல் இருப்பதாக கூறினேன். ஆனால் அவர்கள் தண்டனையாக எனது உடம்பிலும் பின்புறத்திலும் கொதிநீரை ஊற்றினார்கள். அதனால் எனக்கு எரிதழும்பு ஏற்பட்டது”.[66]

ஒட்டுமொத்த தண்டனைகள் வழங்குவதையும் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்டனர். அநேகமாக ஒரு குழுவில் உள்ள ஒருவர் செய்யும் தவறுக்காக ஏனைய சகலருக்கும் தண்டனைகள் வழங்கப்பட்டன. தனது 13வது வயதில் பயிற்சி பெற்ற அம்மணி இவ்வாறு கூறினாள். நீங்கள் தவறுவிட்டாலோ அல்லது கட்டளைகளை சரியாக பின்பற்றாது விட்டாலோ, உடல் ரீதியாக கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். இது எனக்கு ஒருமுறை நடந்தது. எனது குழுவில் ஒரு பெண்பிள்ளை தவறு விட்டதற்காக நாங்கள் எல்லோரும் தண்டிக்கப்பட்டோம்.[67]

வான்மதி கூறும்போது, தான் ஒரு அநாதைப் பிள்ளையாக இருந்த காரணத்தினால் புலிகள் இயக்கத்தினர் தன்னை நன்றாக நடத்தினார்கள் என்றாள். ஆனாலும் தனது குழுவில் செய்யப்படும் தவறுகளுக்கு இன்னும் அவள் பொறுப்பு சொல்ல வேண்டியவளாகவே இருந்தாள். நான் இன்னும் 10 அங்கத்தவர்களை பயிற்றுவிக்க வேண்டி இருந்தது. ஆனால் அவர்களில் யாராவது ஒருவர் தவறு இழைத்தாலோ அல்லது தப்பி ஓட முயற்சித்தாலோ நான் தான் தண்டனையை அனுபவிக்க வேண்டும். அத்தண்டனையானது சிலவேளை இரு சிரேஷ்ட உறுப்பினர்களுடன்

[65] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் “காவேரியுடன்” நடத்திய பேட்டியில் இருந்து.

[66] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் “மஞ்சுளாவுடன்” நடத்திய பேட்டியில் இருந்து.

[67] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் “அம்மணியுடன்” நடத்திய பேட்டியில் இருந்து.

காடுகளுக்குள் அனுப்பப்பட்டு அங்குவைத்து அடிவாங்குவதாக கூட இருக்கக்கூடும்.[68]

குறிப்பாக தப்பியோடுவதற்கான தண்டனையானது மிகக்கடுமையானது. தப்பியோட முயன்ற சிறார்கள் மீண்டும் பிடிக்கப்பட்டு, ஏனையோருக்கும் ஓர் எச்சரிக்கையாக இருக்கக்கூடிய வகையில் தமது பயிற்சிப் பிரிவின் அங்கத்தவர்களின் முன்னிலையிலேயே கடுமையாக தாக்கப்பட்டனர். இதுபற்றி நிர்மலா கூறும்போது:

> அதிகமானோர் தப்பி ஓட முயற்சித்தார்கள். ஆனால் நீங்கள் பிடிபட்டால் மீண்டும் முகாமிற்கு கொண்டு சென்று அடிப்பார்கள். சில பிள்ளைகள் இறந்திருக்கிறார்கள். நீங்கள் இரண்டு முறை தப்பியோட முயற்சித்தால் உங்களை சுட்டு விடுவார்கள். எனது அணியில் யாராவது தப்பியோடினால் எனது அணி வரிசையாக நின்று அவர்கள் அடிக்கப் படுவதைப் பார்க்க வேண்டும். மற்ற குழுக்களில் சிலருக்கு இது நடந்ததை நான் பார்த்திருக்கிறேன். அந்த நபர் இறந்துவிட்டால் அவர்கள் எங்களுக்கு சொல்லமாட்டார்கள், ஆனால் என்ன நடந்திருக்கும் என்று எமக்குத் தெரியும்.[69]

நாங்கள் பேட்டிகண்ட பல பிள்ளைகள் எம்மிடம் கூறும்பொழுது, தாங்களும் தப்பியோடுகின்ற விடயம் தொடர்பாக சிந்தித்துக் கொண்டிருந்தாலும் தப்பியோடிப் பிடிபட்டவர்களுக்கு விழுந்த அடிகளைப் பார்த்ததன் பின் எமது திட்டங்களை கைவிட்டு விட்டோம் என்றனர். இது தொடர்பாக செல்வமணி கூறுகின்ற பொழுது, இன்னும் சிலர் தப்பி ஓட முயற்சித்தனர். அவர்கள் தப்பியோடி தமது வீடுகளுக்கே சென்றனர். எனவே புலிகள் இயக்கம் அவர்களை மீளப்பிடித்துச் செல்லக்கூடியதாக இருந்தது. அவ்வாறு பிடிபட்டவர்கள் கட்டப்பட்டு நையப் புடைக்கப்பட்டனர். நானும் தப்பியோடுவது பற்றி யோசித்தேன். ஆனால் ஏனையவர்கள் மோசமாக தாக்கப்பட்டதை கண்டதன் பின்பு நான் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டேன்.[70] என்றாள்.

***சண்டைகள்***

2002ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டதன் பின்னர் ஓரிரு மிகக் குறிப்பான சந்தர்ப்பங்களைத் தவிர புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையே இராணுவ மோதல்கள் இடம்பெறவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் பேட்டி காணப்பட்ட முன்னாள் சிறார் படையினருள் மிகச் சிலரே சண்டை அனுபவங்களை பெற்றிருக்காதவர்களாக இருந்தார்கள். இதற்கு காரணம் மோதல் தவிர்ப்பு

[68] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘வான்மதியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

[69] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘நிர்மலாவுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

[70] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘செல்வமணியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு இடையில் அல்லது மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவதற்கு சிறிது காலத்திற்கு முன்னர் மிகப் பாரிய எண்ணிக்கையானோர் புலிகள் இயக்கத்தின் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதே.

1990ம் ஆண்டுப் பிற்பகுதியில் தனது 16 வயதில் படையில் சேர்க்கப்பட்டு மருத்துவப் பிரிவில் பயிற்றப்பட்டு, தற்போது 21 வயது நிரம்பியுள்ள ஓர் இளம்பெண் எம்மிடம் கருத்து தெரிவிக்கையில் தான் பல தடவைகள் சண்டையில் ஈடுபடும் நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டி வந்ததாக தெரிவித்தார்:

> நான் நிறைய சண்டைகளில் பங்கேற்றிருக்கிறேன். அங்கே நடந்த சம்பவங்களை என்னால் மறக்க முடியாது. 1998ம் ஆண்டு சிங்கள எல்லைப் பகுதியில் நான் முதன் முதலில் சண்டை பிடித்தேன். போராளிகள் காயப்படும் பொழுது அவர்கள் கத்துவார்கள். அபொழுது நான் அவர்களுக்கு மருந்து போட வேண்டும். சில வேளைகளில் இராணுவத்தினரால் நான் பிடிபடக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் நான் தப்பிவிட்டேன். அப்படியான வேளைகளில் எங்கள் வீடுதான் எங்களுக்கு ஞாபகத்தில் வரும். நான் ஒரு சயனைற் குப்பியும் கைக்குண்டொன்றும் வைத்திருந்தேன். நாங்கள் மருத்துவப் பிரிவினர், அது எங்களின் பாதுகாப்பிற்கு. இராணுவம் வரும் பொழுது நாங்கள் கைக்குண்டுகளை அவர்கள் மீது எறிய வேண்டும். அல்லது எங்களையே வெடிக்க வைக்க வேண்டும். நிறைய வேளைகளில் இது நடந்திருக்கிறது.[71]

தனது 15வது வயதில் பலவந்தமாக படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இன்னும் ஒரு பெண் தனது 16வது வயதில் தலைக்கவசம் ஏதுமின்றி ஏகே 47ரக துப்பாக்கியை ஏந்திய வண்ணம் தான் சண்டையிட நேர்ந்ததாக கூறினாள்.[72] சண்டையின் பொழுது அவள் தலையில் சூடுபட்டாள். தனக்கு 16வயதாக இருக்கும் பொழுது புலிகளால் பிடிக்கப்பட்டு நான்கு மாதத்திற்குள்ளேயே 1997ம் ஆண்டில் தன் முதலாவது சண்டை அனுபவத்திற்கு முகம் கொடுக்க நேர்ந்ததாக கூறினாள். அவள் மிக மோசமாக காயப்பட்டாலும் மீண்டும் சுகமடைந்தவுடன் திரும்பவும் இன்னுமோர் முன்னரங்க சண்டைக்களத்திற்கு அனுப்பப்பட்டாள். அதன் பின்னர் இரண்டாவது சண்டையின் பொழுது அவள் மிகவும் மோசமாக நோய்வாய்ப் பட்டதனால் அடுத்த ஒரு வருடகாலம் புலிகள் இயக்கத்தின் வைத்திய சாலையில் தான் சுகப்படும் வரை இருக்கவேண்டி இருந்தது. அதன் பின்னரும் இரண்டு தடவைகள் முன்னரங்க களத்திற்கு அவள் அனுப்பப்பட்டாள்.[73]

---

[71] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''வாசுகியுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[72] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''காவேரியுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[73] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''பாவை'' என்பவருடன் நடத்திய பேட்டியில் இருந்து.

தனது 16வது வயதில் தனது சுயவிருப்பின் பேரில் சேர்ந்த வாஞ்சி முன்னரங்க சண்டைக் களத்தில் மிக மோசமாக அங்கவீனம் அடைந்தாள். தற்போது தனது கடந்தகால மிக கசப்பான அனுபவத்தை அவள் பின்வருமாறு விபரித்தாள்:

> ஒரு நாள் அவர்கள் எனது  தம்பியை கொண்டு சென்றனர். அவன் சந்தையில் இருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருக்கும் வேளையில் பிடிக்கப்பட்டான். எனது வாழ்க்கையில்  பல வருடங்களை நான் உங்களுக்கு தந்திருக்கிறேன், எனது ஆரோக்கியத்தையும் தந்திருக்கிறேன். என் தம்பியை என்னிடம் திருப்பி தாருங்கள், அவன் ஒருவன்தான் என்னை பார்த்துக் கொள்வதற்கு இருக்கிறான், அவன்தான் என்னை மலசல கூடத்திற்கு கொண்டு செல்ல வேண்டும், படுக்கைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று சொல்லி அவர்களிடம் கெஞ்சி மன்றாடினேன். அவர்கள் அவனை விடுவிக்கவில்லை. மாறாக இக்கடத்தல் பற்றி நான் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவித்தால் அவர்கள் என்னைச் சுட்டு விடுவதாக அச்சுறுத்தினார்கள். அது மட்டுமன்றி, எந்த நேரத்திலும் நான் அவர்களுடன் திரும்பச் சேரவேண்டி வரும் என்று சொன்னார்கள். என்னை அவர்களுக்கு எல்லா வழிகளிலும் கொடுத்த எனக்கு இப்படித்தானா அவர்கள் நன்றி காட்டுவது? ஏன் அவர்கள் எனக்கு இப்படி செய்கிறார்கள்?[74]

சண்டையில் ஈடுபட்ட அனுபவங்களை உடைய சிறார்களை நாம் பேட்டி கண்டபொழுது அவர்கள் எல்லோருமே சண்டையின்போது தாம் மிகவும் அச்சமடைந்ததாக கூறினார்கள்.

மோதல் தவிர்ப்பு அமுலுக்கு வந்ததில் இருந்து தமது படையில் இருந்த சில சிறார்களை அவர்களின் அடிப்படை பயிற்சி முடிவடைந்ததின் பின்னர் புலிகள் இயக்கம் அவர்களைப் படிப்பதற்காக அனுப்பி வைத்தது. ஆனால் அவர்களில் பெரும்பாலானோர் தொடர்ச்சியாக இராணுவப் பயிற்சியையே பெற்றுக் கொண்டதாக பார்க்க முடிகிறது.. அடிப்படைப் பயிற்சியின் பின்னர் அநேகமாக அவர்கள் ஆறு மாத கால விசேடப் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதோடு அதனைத் தொடர்ந்து மேலதிக இராணுவப் பயிற்சி நெறிகளிலும் ஈடுபடுத்தப் பட்டனர்.

## VI. புலிகள் இயக்கத்திற்குள் பிளவும் சிறார்கள் விடுதலையும்

2004ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்க படைகளுக்கு பொறுப்பாக இருந்த கேணல் கருணா, வடக்கே வன்னியில் நிலைகொண்டிருந்த தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விசுவாசமான பிரதான புலிகள் இயக்க படையணியில் இருந்து தனியாக பிரிந்து சென்றார். 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புலிகள் இயக்கத்தின் வன்னிப் பிரிவு

---

[74] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘வாஞ்சியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

கருணாவின் கிழக்குப் படையினர் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை தோற்கடித்தாலும், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களை பிரிக்கும் வெருகல் ஆற்றை அண்டிய பகுதியில் குறுகிய ஆனால் மிக கடுமையான மோதல் இடம்பெற்றுள்ளது. இம்மோதலின் விளைவாக எண்ணிக்கை தெரியாத பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டன. தயார் அற்ற நிலையிலும் எண்ணிக்கை குறைந்த நிலையிலும் இருந்த தனது படைகளை கருணா கலைத்ததோடு, அவர் தலைமறைவாகச் சென்றுவிட்டார். இதன் பிரதிபலனாக கருணாவின் படைப்பிரிவில் இருந்த சிறார்கள் ஒன்றில் தாமாகவே வெளியேறி தமது வீடுகளுக்கு சென்றார்கள். அல்லது சில சந்தர்ப்பங்களில் அவர்களின் குடும்பத்தவர்களிடம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இது பற்றி மஞ்சுளா விளக்கும்பொழுது:

> நபர்களைச் சேர்க்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. எனவே நான் பல இடங்களுக்கும் சென்றேன். அதனால் தொலைக்காட்சி பார்ப்பதற்கும் பத்திரிகை வாசிப்பதற்குமான அனுமதி எனக்கு கிடைத்தது. இதன்மூலம் தான் நான் பிளவைப்பற்றி அறிந்து கொண்டேன். வாகரை முகாமிற்கும் மீனகம் முகாமிற்கும் வரும்படி எனக்கு அழைப்பு வந்தது. பிரச்சினை தொடர்பாக எங்களுக்கு விளக்கம் தருவதாகவும் எங்களைக் கட்டாயம் அங்கு வரும்படியும் எமது தலைவர்கள் சொன்னார்கள். பிளவு தொடர்பாக பொதுமக்களும் எமக்கு கூறினார்கள். நாங்கள் அச்சம் அடைந்தோம். அச்சத்தின் காரணமாக பலர், இப்படியே நாங்கள் எங்கள் வீடுகளுக்கு ஓடிப்போய் விடுவோம் எனக் கூறினார்கள். இயக்கத்தை விட்டு வெளியேறிச் செல்வதற்கு எம்மை தயார் படுத்திக் கொள்ளும்படி ஒரு அக்கா எம்மிடம் கூறினாள். தப்பிச் செல்வது பற்றியே நாங்கள் யோசித்தோம். ஆனால் எமக்கு போதிய போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை.[75]

இன்னொருவர் கூறும் பொழுது:

> நான் கருணாவின் பாதுகாப்புப் படையில் இருந்தேன். கருணா நேரடியாக வந்து வாகரை தாக்குதலைப் பற்றி எங்களுடன் பேசினார். நாங்கள் ஒன்றாக இருக்க வேண்டும், நாங்கள் பிரியக் கூடாது என்று சொன்னார். ஆனால் அதன்பின் அவர் தலைமறைவானார். அன்றிரவு ஆட்கள் மாறத்தொடங்கினார்கள். அதிகாலையில் நாங்கள் நடக்கத் தொடங்கினோம்….. மதியம் 12 மணியில் இருந்து மறுநாள் காலை 7 மணிவரைக்கும் நடந்தோம். நான் ஏப்ரல் மாதம் 13ம் திகதி வீட்டிற்கு வந்தேன்.[76]

---

[75] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘மஞ்சுளாவுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

[76] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘நான்மணியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

கருணா படையணியின் சில தளபதிகள் தமது படையில் இருந்தவர்களை போகும்படி சொன்னார்கள். 18 வயதுடைய சகுந்தலா இது பற்றிக் கூறும்பொழுது, எம்மை வன்னி படையினரோடு சேர வேண்டாம் என்றும், வீடுகளுக்கு செல்லும்படியும் சில தளபதிகள் சொன்னார்கள். இன்னும் ஒரு முன்னாள் படையினன் சொல்லும் பொழுது நீங்கள் எப்படியாவது ஓடித்தப்பி உங்கள் உயிர்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று கூறப்பட்டோம். 100பேர் மட்டில் ஒன்றாக ஓடிப்போய்விட்டார்கள்.[77] இன்னும் ஒரு பெண் கூறும்பொழுது எல்லோரும் தத்தமது வீடுகளுக்கு போவதைக் கண்டேன், எனவே நானும் சென்றுவிட்டேன் என்றாள்.

புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அண்மித்துள்ள, வெளிச் செல்லும், உள் நுழையும் இடங்களில் (exit-entry points)எல்லாம் தாங்கள் அவதானிப்பாளர்களை நிறுத்தியிருந்ததாக இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சிரேஷ்ட இராணுவத் தளபதி ஒருவர் எம்மிடம் கூறினார். அவ்வாறான பத்து பதினைந்து இடங்களுக்கூடாக 2,000த்தை அண்மித்த எண்ணிக்கையான இயக்க அங்கத்தவர்கள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நுழைவதை அரச இராணுவத்தினர் அவதானித்ததாக அவர் மேலும் எம்மிடம் தெரிவித்தார். அவ்வாறு வந்தவர்களில் பெரும்பாலானோர் சிறார்களே என்று தெரிய வருகிறது. நான் அப்போது கறுத்தப் பாலம் (Black Bridge) என்னும் இடத்தில் இருந்தேன். ஏப்ரல் 8ம் திகதி நிலைமையை அவதானிப்பதற்காகவே அங்கு நின்றேன்.[78] அன்றைய தினம் மட்டும் 380 இயக்க அங்கத்தவர்கள் அவ்வெல்லையைக் கடந்து வந்தனர். அவ்வாறு வெளியே வந்தவர்களில் 75 வீதமானோர் சிறார்களே.[79] என அவர் கூறினார்.

மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு பேட்டிகண்ட சில சிறார்கள் புலிகள் இயக்கத்தின் வன்னிப் பிரிவிற்கும் கருணா பிரிவிற்கும் இடையே நடந்த சண்டையில் பங்கேற்வர்களாக இருந்தனர். ஏனைய படையினர்கள் கொல்லப் படுவதையும் காயப்பட்டதையும் சிலர் தம் கண்களால் கண்டுள்ளனர். தனது அணியைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட படையினர் அச்சண்டையில் கொல்லப்பட்டதை ஒரு சிறுமி நேரடியாக கண்டுள்ளாள். தாங்கள் வன்னிப் படையினரால் சுற்றி வளைக்கப் பட்டிருப்பதாக கூறப்பட்ட குரலொலிகளைக் கேட்டு தான் அவ்விடத்தில் இருந்து ஓடிவிட்டதாக அவள் கூறினாள்.[80] 16 வயதுடைய இந்திரா இதுபற்றி விபரிக்கும் பொழுது:

> சண்டையிடுவதை நான் நேரில் பார்த்தேன். நானும் அதில் இருந்தேன். நடு இரவில் வன்னிப் படைவந்து எங்கள் முகாமை பிடித்து தாக்கத் தொடங்கினார்கள். அந்த தாக்குதலில் பல பிள்ளைகள் இறந்தார்கள்,

---

[77] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''தாரிணியுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[78] 'கறுத்தப் பாலமானது' அரசாங்கத்தினதும் புலிகள் இயக்கத்தினதும் கட்டுப்பாட்டு எல்லைகளைப் பிரிப்பதுடன், இராணுவத்தினரின் பிரதான சோதனைத் தடைமுகாமாகவும் உள்ளது.

[79] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சிறீ லங்கா இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[80] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''மலர்'' என்பவருடன் நடத்திய பேட்டியில் இருந்து.

> உயிர் தப்பியவர்கள் ஓடுவதற்கு தீர்மானித்தோம். ஒவ்வொரு முகாமிலும் 350 பேர் இருந்தார்கள். நான் மறுநாள் தப்பிவந்தேன். அந்த தாக்குதலில் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்று எனக்கு சரியாக தெரியாது. ஆனால் அந்த தாக்குதலில் என்னுடைய வயதை ஒத்த 10 பிள்ளைகள் இறந்து கிடப்பதை நான் கண்டேன். அந்த தாக்குதல் எனக்கு அதிர்ச்சியையும் பயத்தையும் தந்தது.[81]

மருத்துவப் பிரிவில் பயிற்றப்பட்ட காஞ்சனா என்பவளும் இச்சண்டையின் போது வெருகல் பகுதியில் நின்றிருந்தாள். அவள் இதுபற்றி எம்மிடம் கூறும் பொழுது

> நான் மோட்டார் பிரிவின் சிகிச்சைப் பிரிவில் இருந்தேன். அத்தாக்குதலில் ஆட்கள் தலையிலும், காலிலும், கைகளிலும், பின்பக்கத்திலும் காயப்பட்டார்கள். அதுதான் என்னுடைய முதற் தாக்குதல். நான் பயந்தேன். சில பேர் மிக மோசமாக காயப்பட்டார்கள். நான் அவர்களின் காயங்களுக்கு மருந்துபோட்டு பாதுகாத்தேன். பின் காயப்பட்ட எல்லோரும் வன்னிப் படையால் கொண்டு செல்லப்பட்டார்கள். நான் ஏழு பேருக்கு வைத்தியம் பார்த்தேன். எனக்கு அவர்களின் வயது தெரியாது.[82]

*ஏப்ரல் மாத சண்டையின் போது சிறார்கள் உயிரிழப்பு*

புலிகள் இயக்கத்தின் வன்னிப் பிரிவிற்கும் கருணா பிரிவிற்கும் இடையே நடந்த கடும் உள் மோதலில் பெருமளவில் சிறார் போராளிகள் உயிரிழந்ததாக தெரியவருகிறது. இதன் மூலம், புலிகள் இயக்கத்தின் தலைமைத்துவமானது சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வது அவர்களை சண்டைகளில் ஈடுபடுத்துவதற்கே என்பதே தெளிவு. அச்சண்டையின் போது காயப்பட்டவர்களினதும் இறந்தவர்களினதும் எண்ணிக்கையானது பரவலாக வித்தியாசப் படுகிறது. இம்மோதல் நடைபெற்றுக் கொண்டிருந்த இடைக்காலத்தில் புலிகள் இயக்கமானது சர்வதேச கண்காணிப்பாளர்கள் அப்பகுதிக்குச் செல்வததற்கான அனுமதியை மறுத்திருந்தனர். இம்மோதலின்போது இறந்த நபர்களின் உடல்கள் புலிகள் இயக்கத்தினால் அல்லது உள்ளூர் கிராம வாசிகளினால் ஒன்றில் எரிக்கப்பட்டுள்ளன அல்லது புதைக்கப்பட்டுள்ளன என ஒரு நேரடி சாட்சி எமக்கு தெரிவித்தார். வெளியிடப்பட்ட செய்தி அறிக்கைகளின்படி பார்க்கின்ற பொழுது இரு பிரிவினரும் மொத்தமாக பத்துப் படையினர் மட்டிலேயே கொல்லப்பட்டதாக தெரிவித்தனர். ஆனால் இராணுவ அதிகாரிகளின் அறிக்கையின்படி பொதுமக்கள் உட்பட இறந்தவர்களின் எண்ணிக்கையானது 33 என தெரிவிக்கப்படுகிறது.[83] இறந்தவர்களிடையே ஆக குறைந்தது இரண்டு சிறார்

---

[81] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''இந்திராவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[82] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''காஞ்சனாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[83] ' பிரிந்து சென்ற புலித் தலைவருக்கு புகலிடம் கொடுப்பதில் சிறீ லங்கா அரசுக்கு குழப்பம்,அகதிகள் மீளத் திரும்புகின்றனர்'2004 ஏப்ரல் 13ம் திகதி AFP செய்தி, ''சிறீ லங்காவில் பிரிந்து சென்ற கிளர்ச்சிக் காரர்கள் பின்வாங்குகின்றனர்''.2004 ஏப்ரல் 12ம் திகதி AP செய்தி. ''சிறீ லங்காவில் பிரிந்து சென்ற புலிகள் தப்பி ஓட்டம், பிரதான பிரிவினால் சிறார் படையினர் விடுவிப்பு''. 2004 ஏப்ரல் BBC செய்தி.

படையினர் இருந்துள்ளனர், என யுனிசெப் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அவர்களிடையே, தமது 16வயதில் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இம்மோதலின்போது தமது 17ம் 18ம் வயதில் இறந்துபோன இருவரும் அடங்குவர்.

அப்பிரதேச குடியிருப்பாளர்களின் கருத்துப்படி பெருந்தொகையான சிறார்கள் உட்பட இறந்துபோனவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். சண்டை நடந்து சில தினங்களுக்கு பின்னர், கொல்லப்பட்ட 50 பேர் மட்டிலான உடல்கள் அப்பகுதியில் சிதறிக் கிடந்ததை நேரடியாக கண்டதாக கூறிய சாட்சிகள் பலரை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பேட்டிகண்டது. ஒரு சாட்சி இதுபற்றிக் கூறும் பொழுது, "நான் காட்டுக்குள் விறகு சேகரிப்பதற்காக சென்ற பொழுது அங்கு 15 உடல்கள் மட்டில் கண்டேன். சண்டை முடிந்து கிட்டத்தட்ட 15 நாட்களின் பின்னரே இதை நான் கண்டேன்……. அவ்வுடல்கள் மிக மோசமாக சிதைந்த நிலையில் இருந்தன."[84]

அவ்வுடல்கள் கருணா குழுவைச் சேர்ந்த போராளிகளினுடையது தான் என எவ்வாறு தெரியும், என கேட்டதற்கு அவர் கூறியதாவது:

> ஏனெனில், அவருடன் இருந்த நபர்கள் யார் என்று எமக்குத் தெரியும். அவர்களுக்கு சீருடை இருந்தது. அவர்கள் எல்லோரினதும் வயது 13க்கும் 20க்கும் இடைப்பட்டது. அவர்களில் மூன்று பெண் பிள்ளைகள். நான் இறந்தவர்களை எண்ணியபடியால் தான், பதினைந்து பேர் இறந்திருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அவைகள் எல்லாம் ஒரு இடத்தில் இருக்கவில்லை, எல்லாம் சிதறிக் கிடந்தன. அவர்களிடத்தில் நான் ஒரு ஆயுதத்தையும் காணவில்லை ஆனால் வெற்று துப்பாக்கி ரவைகளைக் கண்டேன்…. நான் திரும்பி அங்கு போகும் பொழுது உடல்கள் அங்கிருக்கவில்லை. என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை, ஆனால் நான் திரும்பி போகும்பொழுது உடல்கள் மறைந்து விட்டன.[85]

யுனிசெப் இன் கூற்றுப்படி வாகரை கரையோரப் பகுதிகளில் நடந்த இச்சண்டையின் காரணமாக 3,000 பேர்வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாங்கேணி பாடசாலைக்கு இடம்பெயர்ந்திருந்தனர்.[86] அப்பிரதேசத்தின் குடியிருப்பாளராக இருந்த ஒருவர் மனித உரிமைக் கண்காணிப்பு அமைப்புக்குச் சொல்லும் பொழுது, ஏப்ரல் 10ம் திகதி தானும் ஏனைய இரு கிராமங்களைச் சேர்ந்த குடியிருப்பாளர்களும் பாதுகாப்புக் கருதி பத்து கிலோ மீற்றர் தூரம்வரை பயணம் செய்ததாக கூறினார். அவ்வாறு நான் போகும் பொழுது 15ந்து 16 வயதை ஒத்தவர்களுடைய நான்கைந்து உடல்களைக் கண்டேன். அவர் மேலும் சொல்கையில் மறுநாள் கிராமத்தவர்கள் வீடு திரும்பினார்கள். திரும்பி வரும்பொழுது சிறார்கள் உட்பட 40 அல்லது 50 உடல்களை நான் கண்டேன்.

---

[84] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.

[85] ஐபிட் Ibid

[86] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு, யுனிசெப் அமைப்பினால் 2004, செப்டெம்பரில் வழங்கப்பட்ட தகவல்களிலிருந்து.

அவர் மேலும் சொல்கையில், பிரபாகரனின் நபர்கள் கிராமத்தாரை அழைத்து அவ்வுடல்களை அக்கிராமத்தில் புதைத்து விடும்படி கூறினார்கள். ஆனால் நான் அங்கு போகவில்லை. அவர்கள் என்னையும் கேட்டார்கள், அதற்கு நான் “முடியாது, நீங்களே அவர்களைக் கொன்றீர்கள் எனவே நீங்களே அவர்களைப் புதையுங்கள்” என்று சொன்னேன். கிராமத்திற்குள்ளும் சில உடல்கள் கிடந்தன அதில் அநேகமாக 10 மட்டில் இருக்கலாம். அவர்களின் வயது 12முதல் 16வரை இருக்கும்[87]

இன்னும் ஒரு நபர் எம்மிடம் விபரிக்கும் பொழுது ஏப்ரல் மாதம் 10ம் திகதி அளவில் கதிரவெளி என்னும் இடத்தில் 20 உடல்கள்வரை, தான் கண்டதாகவும், அதில் ஒரு அம்புலன்ஸ் சாரதியும் கொல்லப்பட்டிருந்தார் என்றும் கூறினார். அவர் மேலும் கூறும் போது:

> நாங்கள் அம்புலன்ஸ் சாரதியின் உடலை கொண்டு செல்வதற்கு முயற்சித்தோம், ஆனால் புலிகள் இயக்கத்தினர் அதற்கு அப்போது அனுமதிக்கவில்லை. பின் நாங்கள் 11ம் திகதி மீண்டும் போனோம். எல்லா உடல்களில் இருந்தும் துர்நாற்றம் வீசியது. ஆனால் நாங்கள் இரண்டு உடல்களை கொண்டுபோய் எங்களுடைய கிராமத்து மயானத்தில் புதைத்தோம். நாங்கள் கிராமங்களை சுற்றிப்பார்த்து ஆறுக்கும் மேற்பட்ட உடல்களை எடுத்தோம். நான் ஆறு ஆண்பிள்ளைகளினதும் இரண்டு பெண்பிள்ளைகளினதும் உடல்களைப் புதைப்பதற்கு உதவிசெய்தேன். அதில் ஒன்று இருபதிற்கும் இருபத்தி இரண்டிற்கும் இடைப்பட்ட வயதை உடையது. மற்றவை எல்லாம் பதினெட்டு வயதிற்கு குறைந்தன .[88]

மனித உரிமை கண்காணிப்பு அமைப்பு பேட்டிகண்ட வேறு நபர்கள் தாமும் பல உடல்களை அங்கு கண்டதாக கூறினர். அவர்களில் அநேகமானோர் சிறார்கள் என்றும் கூறினர். இன்னும் ஒருவர் கூறுகையில் ஒரு பக்கத்தில் 40 - 50 உடல்களைக் கண்டதாகவும் மறுபக்கத்தில் 26 உடல்களைக் கண்டதாகவும் கூறினார்.[89]

### *பிள்ளைகளை விடுவிக்குமாறு பெற்றோர்கள் வலியுறுத்தல்*

புலிகள் இயக்கத்தில் வன்னித் தலைமைக்கும் கருணா பிரிவிற்கும் இடையே பிளவு ஏற்பட்டுவிட்டது என்கின்ற செய்தியும் அவர்களுக்கிடையே மோதல்கள் நிகழலாம் என்னும் ஊகங்கள் பரவிய உடனேயே பெருந்தொகையான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை விடுவிக்க கோரி புலிகள் இயக்கத்தின் முகாம்களுக்கு படையெடுக்கத் தொடங்கினர்.

இன்னும் நூற்றுக்கணக்கான பெற்றோர்களுடன் தானும் இணைந்துகொண்டதாக கூறிய, பதினேழு வயதுடைய நிர்மலாவின் தாய் மனித உரிமை கண்காணிப்பு அமைப்பிடம் விபரிக்கும் போது:

---

[87] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.
[88] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.
[89] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.

> 250க்கும் 300க்கும் இடைப்பட்ட பெற்றோர்கள் கருணாவின் ஒரு முகாமான சாந்தனகத்திற்குச் சென்று பெரும் கோஷமிட்டோம். புலிகள் இயக்கத்தின் கருணாபிரிவு தங்களிடமிருந்த பிள்ளைகளை ஒளித்துக்கொண்டு பெற்றோரை விலகிச் செல்லுமாறு கூறினார்கள். பெற்றோர்கள் மூன்று நாட்கள் அங்கேயே தங்கினார்கள். நான் சாந்தனகம் முகாமை நோக்கி கத்தினேன். ஆனால் பிள்ளைகள் வாகரை முகாமில் இருந்தார்கள். கிராமத்தில் இருந்த மக்கள் வாகரை தாக்குதல் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். சில பிள்ளைகள் தப்பி ஓடிவந்தார்கள், எனவே நாங்கள் சென்று அவர்களை கொண்டு வந்தோம். நாங்கள் புலிகள் இயக்கத்திடம் பிள்ளைகளின் விடுவிப்புபற்றி வாதிட்டோம். அவர்கள் எங்களை பயமுறுத்துவதற்காக துப்பாக்கியால் சுட்டார்கள். அந்த சத்தத்தை தாங்காமல் நாங்கள் விலகிச்செல்ல வேண்டியதாயிற்று.[90]

நான்மணி சாந்தனக முகாமில் இருந்து வெளியேறும் போது கருணாவைக் தேடிக் கண்டு தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு கோருவதற்காக பெற்றோர்கள் அம் முகாமை நோக்கி வருவதைக் கண்டாள். தான் அங்கு ஆயிரக்கணக்கான பெற்றோர்களைக் கண்டதாகவும் அவர்களுக்கிடையில் தனது பெற்றோரும் இருந்தனா் எனவும் தான் தனியாக வீடுவந்து சேர்ந்த பின்னரே அறிந்து கொண்டதாக அவள் கூறினாள்.[91]

பெற்றோர்கள் வாகரை முகாமுக்கு வரும்பொழுது அங்கிருந்த பதினாறு வயதையுடைய மஞ்சுளா இவ்வாறு கூறினாள்:

> தாய்மாரும் தந்தையரும் எங்கள் முகாமிற்கு வந்து, நீங்கள் எங்களைக் கொன்றாலும் சரி நாங்கள் இங்கிருந்து போக மாட்டோம் என்று கூறினார்கள். கருணாவின் ஆட்கள் பெற்றோரை பயமுறுத்துவதற்காக அவர்களைச் சுற்றி சுட்டார்கள். பிள்ளைகள் தப்பி ஓடிவிடக்கூடும் என்பதற்காக கருணாவின் அங்கத்தவர்கள் பிள்ளைகளை சுற்றி வளைத்து நின்று கொண்டார்கள். நான் நடுவில் நின்றிருந்தேன். வயதில் மூத்தவர்கள் எங்களை சுற்றி நின்ற வண்ணம், எங்களின் ஆயுதங்களினால் சுடும்படி சொன்னார்கள். அவர்கள் எங்களின் பெற்றோர்கள், எப்படி நாங்கள் இதை செய்ய முடியும் என நாங்கள் சொன்னோம். பெற்றோர்கள் இவ்விடத்தை விட்டு விலகிச் செல்லாவிட்டால் அது அவர்களுக்கு நல்லதில்லை, என்று அவர்கள் பெற்றோர்களை நோக்கிச் சொன்னார்கள். ஆகவே என்னுடைய அப்பா என்னிடத்தில் வந்து என்னோடு வா நாங்கள் போவோம். அவர்கள் என்னைச் சுட்டால் பரவாயில்லை, நாங்கள் இந்த இடத்திலேயே செத்துப்போவோம் என்று கூறினார். அதற்கு நான் இல்லை அப்பா எங்களால் முடியாது, நீங்கள் போய்விடுங்கள் இங்கு ஏதும் பிரச்சினை என்றால், நான் வீட்டுக்கு வருவேன் என்று கூறினேன். நாங்கள் எங்கள் பெற்றோருடன் வாதிட்டோம். மாறி மாறி கத்தினோம். சில பெற்றோர்கள் சாதாரண மக்களின் உடைகளையும்,

---

[90] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.
[91] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘நான்மணியுடன்’’ நடத்திய பேட்டியில் இருந்து.

> பெண்பிள்ளைகள் தலைகளை மறைத்துக் கொள்வதற்காக முடிமயிர்களையும் கொண்டு வந்திருந்திருந்தார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 100 பிள்ளைகளுக்கு உடைகளை மாற்றி தம்மோடு அழைத்துச் சென்றார்கள். ஏனையோர் காடுகளுக்குள்ளே போய் விட்டனர்.[92].

அதே வேளை உள்ளுர் கிராமத்தவர்கள் பிளவினால் ஏற்பட்ட மோதல் தொடர்பாக வன்னிப் புலிகளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஏப்ரல் 10ம் திகதி பெருந்தொகையான மக்கள் வன்னியில் இருந்து வந்த படையினருக்கு சவால் விடுவதற்காக வெருகல் பகுதிக்குச் சென்றார்கள். இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய ஒருவர் எம்மிடம் கூறும்பொழுது மக்கள் வன்னிப் புலிகளுக்கு எதிராகவும் போராடினர் என்றார். மக்கள் 'நீங்கள் ஏன் எங்கள் பிள்ளைகளைக் கொல்கிறீர்கள்? பிரபாகரனுக்கும் கருணாவிற்கும் இடையிலான பிரச்சினை தனியானது- அதில் எங்கள் பிள்ளைகளை ஏன் சம்பந்தப் படுத்துகிறீர்கள்?' என்றனர். கிராமத்தவர்கள் புலிகள் இயக்கத்தின் வாகனங்களைத் தடுத்து அவற்றின் மேல் கற்களை வீசினார்கள். அவர் தொடர்ந்து சொல்கையில், அங்குவந்த புலிகள் இயக்கத்தினர் தமது பிக்கப் வாகனத்தை விட்டு கீழே இறங்கி, நீங்கள் இதைத் தொடர்ந்தால் நாங்கள் உங்களை சுடுவோம். என்றனர், ஆனால் நாங்கள் பயப்படவில்லை. பின்னர் அவர்கள் எங்கள் தலைக்கு மேலாகவும் தரையிலும் சுட்டார்கள்.[93]

இன்னொரு கிராமத்தில் நடந்த நிகழ்ச்சியை இன்னொருவர் விளக்கும் பொழுது:

> எல்லா மக்களுமே சண்டை பிடிக்க வந்தார்கள், சிறு பிள்ளைகளும் கூட…. 1.000 பேருக்கு மேலான மக்கள் (தமது பிள்ளைகளை விடுவிப்பதை வலியுறுத்தி) சண்டை பிடித்தார்கள். இது நடக்கும் பொழுது எல்லா மக்களும் வீதிக்கு வந்தார்கள். எல்லா இடங்களிலும் மக்கள் தடுக்கப் பட்டார்கள், ஆனால் அவர்கள் சண்டையிட்டனர். நாங்கள், உதவி அரசியல் பொறுப்பாளருடன் நேரடியாக கதைத்தோம். நாங்கள் உங்களைப் பாதுகாக்கவே வந்தோம் என்று அவர் சொன்னார். அந்த நேரத்தில் எங்களுடைய மக்கள்- பிரபாகரனின் ஆட்களிடமும் கருணாவின் ஆட்களிடமும்-, எங்களுடைய பிள்ளைகளை எங்களிடத்தில் இருந்து எடுத்தீர்கள் இப்போது அவர்களை சுடுகிறீர்கள். ஏன் எங்கள் பிள்ளைகளை சுடுகிறீர்கள்? நீங்கள்தான் தமிழ்த் தலைவர்கள் என்று கூறினீர்கள், ஏன் தமிழ் மக்ளையே கொல்கிறீர்கள்? தயவு செய்து எங்கள் பிள்ளைகளை எங்களிடத்தில் திருப்பி தந்துவிட்டால் நீங்கள் இங்கிருந்து போகலாம் என்று சொன்னோம்.[94]

ஏப்ரல் 13ம் திகதி ஆகும் பொழுது கருணா பிரிவைச் சேர்ந்த அனேகமான பிள்ளைகள் ஒன்றில் தமது தளபதிகளால் விடுவிக்கப் பட்டார்கள் அல்லது

---

[92] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''மஞ்சுளாவுடன்'' நடத்திய பேட்டியில் இருந்து.

[93] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.

[94] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.

தாங்களாகவே விலகிச் சென்றுவிட்டார்கள். அவர்களில் பலரை சிரேஷ்ட உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிள்களில் அல்லது சைக்கிள்களில் வீடுகளுக்கு கூட்டிச் சென்றார்கள். அதே வேளை ஏனையோர்களை வந்து அழைத்துச் செல்லும்படி அவர்களின் குடும்பங்களுக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பலர் காடுகளில் தங்களுக்கு தெரியாத பாதைகளுக்கு ஊடாக மிக நீண்ட தூரம் பயணித்து பல நாட்களின் பின் வீடுகளுக்கு வந்து சேர்ந்தனர். தமது பெற்றோர்கள் இன்னும் தம்மை பல முகாம்களில் தேடி அலைகிறார்கள் என்பதை சில பிள்ளைகள் தாங்களாகவே வீடுவந்து சேர்ந்ததன் பின்னரே அறிந்து கொண்டனர்.

16வயதுடைய இந்திரா வெருகலில் சண்டை நடக்கும் பொழுது அங்கிருந்தாள். அவள் கூறும்பொழுது, நான் வீடுவந்து சேர்வதற்கு முதலேயே, நான் சண்டையில் கொல்லப்பட்டு விட்டேன் என்று என் பெற்றோர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே அவர்கள் ஈமைக் கிரிகைகளை செய்ய தொடங்கி விட்டார்கள். வீட்டுக்கு வந்த நான் இதைக்கண்டு திடுக்குற்றேன். எனது பாட்டிதான் இறந்துவிட்டாள் என நான் நினைத்தேன். என்னைக் கண்டதும் எனது குடும்பத்தார் எல்லோரும் கதறி அழத் தொடங்கினர். 2002ம் ஆண்டில் நான் இயக்கத்திற்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்பு இப்போதுதான் முதன் முறையாக என் குடும்பத்தாரைப் பார்க்கிறேன்.[95]

வெருகலில் வைத்து வன்னிப் புலிகளால் கைது செய்யப்பட்ட கருணா பிரிவைச் சேர்ந்த சிறார்கள் பெரியவர்கள் உட்பட பல நூற்றுக் கணக்கானோர் முதலில் திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பின்னர் வாகரைக்கு கொண்டு வரப்பட்டனர். ஏப்ரல் 12ம் திகதி யுனிசெப் நிறுவனத்துடன் தொடர்பு கொண்ட வன்னிப் புலிகளின் பிரதிநிதி ஒருவர் தாங்கள் மறுதினம் சிறார்களை விடுவிக்க இருப்பதாகவும் தங்களிடம் நூற்றுக்கு மேற்பட்ட சிறார்கள்கள் இருக்கிறார்கள் என்றும் கூறினார்கள்.[96]

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பேட்டிகண்ட சிறார்களில் இருவர் இக் குழுவைச் சேர்ந்தவர்கள். அதில் காஞ்சனா எம்மிடம் கூறும்பொழுது:

> வன்னிப் படையினர் மிகச் சுலபமாக கருணா குழுவினரை பிடித்துவிட்டார்கள்...நானும் சரணடைந்தேன். வன்னிக்குழு என்னை திருகோணமலைக்கு கொண்டு சென்றது. பின்னர் பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். திருகோணமலையில் 140ஆண்கள் 200பெண்கள் இருந்தார்கள். நான் சரணடைந்த இரண்டு நாட்களின் பின் என் பெற்றோர்கள் வந்தார்கள். நான் என்னுடைய தாயை வாகரையில் கண்டேன். எவ்வளவு பெற்றோர்கள் வந்திருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. இரண்டு நாட்களின பின் வன்னிக்குழு எங்களை [சிறார்கள்,இளைஞர்கள்] விடுவித்தது. அங்கே யுனிசெப் இருந்தது. என்னை விடுவிப்பதற்கான பத்திரம் ஏதும் இருக்கவில்லை. ஆனால் பெற்றோர்கள்

[95] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் "இந்திராவுடன்" நடத்திய பேட்டியில் இருந்து.

[96] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்கு, யுனிசெப் அமைப்பினால் 2004, செப்டெம்பரில் வழங்கப்பட்ட தகவல்களிலிருந்து.

> தங்கள் பிள்ளைகளை எடுத்துச் செல்லும் பொழுது [புலிகள் இயக்கம் வழங்கிய கடிதத்தில்] தங்கள் கையெழுத்துக்களை இட்டார்கள்.[97]

யுனிசெப் அமைப்பின் தகவலின் படி ஏப்ரல் 13ம் திகதி இருநூறுக்கும் மேற்பட்ட வயது குறைந்த சிறார்கள் விடுவிக்கப்பட்டனர். அநேகமானோர் யுனிசெப் இனாலும் புலிகள் இயக்கத்தினாலும் பதிவு செய்யப்பட்ட பின்னரே பெற்றோர்களிடம் விடுவிக்கப்பட்டனர். அநேகமான சிறார்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் யுனிசெப் போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்தது. உடனடியாக தம் குடும்பங்களுடன் சேர்க்கப்பட முடியாதிருந்த ஏழு சிறார்களுக்கு தற்காலிக தங்குமிட வசதிகளையும் யுனிசெப் செய்து கொடுத்தது.

புலிகள் இயக்கமானது இவ் அங்கத்தவர்களை விடுவிக்கும் நடவடிக்கையை தற்காலிகமான தொன்றாகவே கருதியிருக்க வேண்டும். ஏனெனில் யுனிசெப் அதிகாரிகள் அங்கு வருவதற்கு முன்னர் புலிகள் இயக்கத்தினர் சகல குடும்பங்களினதும் அடையாளங்கள் உட்பட்ட அனைத்து தகவல்களையும் பெற்றுக் கொண்டதோடு, அவ் அங்கத்தவர்களையும் பெற்றோர்களையும் நோக்கி, புலிகள் இயக்கம் எப்போது அழைக்கிறதோ அப்போது மீண்டும் வந்து தங்களோடு இணைந்து கொள்ள வேண்டும் என்று கூறியதாக காஞ்சனா எம்மிடம் கூறினாள். அவள் இதுபற்றி கூறும்பொழுது, அவர்கள் இதை அதிகாலை 6.30 மணிக்கு ஒலிபெருக்கி மூலம் எமக்கு அறிவித்தார்கள். பின்னர் யுனிசெப் காலை 10.00 மணிக்கு அங்கு வந்தார்கள் என்றாள்.[98]

## VII. மீள்-ஆட்சேர்ப்பு

2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கருணாவின் படைகள் கலைக்கப்பட்டதன் பின்பு பெருந்தொகையான சிறார்கள் உட்பட 4,000 - 6,000 வரையான படையினர் தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப் பட்டுள்ளது. 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 1,800 சிறார்கள் திரும்பி வீடுகளுக்கு வந்துள்ளனர்-பிரதானமாக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு- என யுனிசெப் பதிவு செய்துள்ளது. ஆனால் உண்மையான தொகை இதைவிட பல மடங்காகும், ஏனெனில் அநேகமான குடும்பங்கள் இவ்வாறு பதிவு செய்வதற்கான வாய்ப்புக்கள் இருப்பது பற்றி அறியாமல் இருப்பதும், அவ்வாறு பதிவதற்கு அச்சமடைவதும் மற்றும் தாம் வாழ்ந்த தொலைதூரக் கிராமங்கள் அல்லது முக்கியமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து யுனிசெப் காரியாலயத்திற்கு நீண்ட தூரம் வரவேண்டி இருப்பதற்கான சிரமங்கள் போன்றவையே காரணமாக அமைந்துள்ளன.

2004ம் ஆண்டு யூன் மாதத்தில் கருணா படையில் இருந்தவர்களை மீளச் சேர்க்கும் நடவடிக்கை ஒன்றை புலிகள் இயக்கத்தின் வன்னிப் பிரிவு தீவிரமாக முடுக்கி விட்டது. இத்தீவிர ஆட்சேர்ப்பு பிரச்சாரத்தின் பின்னால் இரு பிரதான காரணங்கள் இருப்பதாக ஒரு யுனிசெப் உத்தியோகத்தர் இனம் கண்டார்: "முதலாவதாக, மீண்டும்

---

[97] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் "காஞ்சனாவுடன்" நடத்திய பேட்டியில் இருந்து.

[98] ஐபிட் Ibid

கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதை மீள உறுதி செய்தல். இரண்டாவது, கருணாவின் பிளவால் ஏற்பட்ட படைகளின் இழப்பை மீண்டும் நிவர்த்தி செய்தல் ".[99]புலிகள் இயக்கமானது கிராமங்களில் கூட்டங்களை ஒழுங்கு செய்தும், வீடு வீடாகச் சென்றும் மோட்டார் வாகனங்களில் ஒலிபெருக்கிகளைக் கட்டி அறிவித்தும், வீடுகளுக்கு கடிதங்களை அனுப்பியும் முன்னாள் அங்கத்தவர்களை மீளச் சேரும்படி அல்லது தங்களுடன் பதிவு செய்து கொள்ளும்படி தமது பிரச்சாரத்தை மேற்கொண்டனர். 18 வயதுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களை சேர்ப்பதையே தாம் செய்வதாக புலிகள் இயக்கத்தினர் யுனிசெப் இடம் கூறினாலும், சிறார்கள் பலரும் குறிவைக்கப்பட்டனர், என்பதை தெளிவாகக் காட்டும் வெளிப்படையான சாட்சியங்கள் உண்டு.

இச்சிறார்கள் திரும்பி வராவிட்டால் அவர்களை தாங்கள் பலவந்தமாக எடுத்துச் செல்வோம் அல்லது அவர்களுக்காக வீட்டில் உள்ள ஏனைய பிள்ளைகளை, அல்லது குடும்ப அங்கத்தவர்களை எடுத்துச் செல்வோம என அவர்கள் குடும்பங்களை அச்சுறுத்தினர். புலிகள் இயக்கத்தினர் இவ் அச்சுறுத்தல்களை மிக கச்சிதமாக செய்தாக கூறிய பெற்றோர்கள் அதை இவ்வாறு விபரித்தனர்: புலிகள் இயக்கத்தினர் இரவு நேரங்களில் திடீர் என எமது வீடுகளுக்குள் நுழைந்து பிள்ளைகளை கடத்திக் கொண்டுபோக முயற்சித்தார்கள், அவற்றை தடுக்க முயன்ற எங்களை தாக்கினார்கள்.

யூலை மாதத்தில் ஒரு நாள் இரவு தனது 17வயது நிரம்பிய தன் மகளை புலிகள் இயக்கத்தினர் எவ்வாறு கொண்டு சென்றனர் என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவிடம் ஒருவர் விபரித்தார். ஏப்ரல் மாதத்தில் விடுதலையாகு முன் அவள் தனது 13வது வயதில் விறகு பொறுக்க சென்றபொழுதே புலிகள் இயக்கத்தினால் முதன் முறையாக கடத்தப்பட்டு நான்கு வருடமாக அவர்களுடன் பணியாற்றி இருந்தாள். இரண்டாம் தரமும் அவள் கொண்டு போகப்பட்டாள். மேலும் அவர் கூறும் பொழுது:

> புலிகள் ஓர் இரவு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களில் 20பேர் மட்டில் இருந்தனர். அவர்கள் சீருடைகளுடன், பகல் வேளைகளில் வீதிகளை சுற்றிவருவதை நாங்கள் பார்த்திருக்கிறோம். நான்கு புலிகள் இயக்க பெண்கள் திடுதிப்பென எங்கள் வீட்டிற்குள் நுழைந்து எங்களுடன் வா என்று எங்கள் மகளை நோக்கிச் சொன்னார்கள். அதற்கு அவள், இல்லை என்னால் வரமுடியாது, நான் ஏற்கனவே பல துன்பங்களை அனுபவித்து விட்டேன், நான் காயப்பட்டிருந்திருக்கிறேன், ஆகவே என்னால் உங்களுடன் வரமுடியாது என்றாள். அவள் மிகவும் கோபமடைந்து மறுத்தாள். அதற்கு அவர்கள் இல்லை நீ எங்களுடன் வந்தேயாக வேண்டும் என வலியுறுத்தினர்.
>
> அதற்கு நான் அவள் ஒரு பெண்பிள்ளை, அவளை நடு இரவில் வீட்டைவிட்டு வெளியில்போக அனுமதிக்க முடியாது, நான் அவளை காலையில் கூட்டிவருகிறேன் என்று சொன்னேன். இதில் தலையிட வேண்டாம்

---

[99] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் 12ம் திகதி திருகோணமலை மாவட்ட யுனிசெப் பிரதிநிதியுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

என்றுசொல்லி என்னை அடித்தார்கள். அவர்கள் எங்கள் வேலியில் இருந்த தடியை முறித்து, என்னை நிலத்தில் தள்ளி தடியால் இரண்டு மூன்று முறை அடித்தார்கள். அவர்கள் கயிறு கொண்டு வந்திருந்தார்கள், அவர்களின் கைகளில் ஆயுதங்களும் இருந்தன. அவர்கள் கயிற்றால் என்னைக் கட்டி இழுத்துச் செல்லப்போவதாக பாவனை செய்தார்கள். பின்னர் என்னுடைய மகள் வீட்டை விட்டு வெளியே வந்தாள். அவள் வந்தவுடன், அங்கு நின்ற ஆண்கள் அவளை இழுத்துச் சென்றார்கள். அப்பொழுது அவள் தனது இரவு உடையில் இருந்தாள். அவளுக்கு தனது உடைகளை மாற்றிக் கொள்ளக்கூட சந்தர்ப்பம் இருக்கவிலை.

> நாங்கள் இதை ஒருபொழுதும் எதிர்பார்த்திருக்கவில்லை. நாங்கள் இதை எதிர்பார்த்திருந்தால், அவளை எங்காவது அனுப்பி இருப்போம். இதற்கு முன்னர், அவள் காயப்பட்டு இருப்பதால் அவளை தங்களுக்கு தேவையில்லை என்றே கூறியிருந்தார்கள். ஆனால் அவர்கள் கூறியது எல்லாமே பொய்.[100]

இன்னுமொரு பெண் மனித உரிமை கண்காணிப்பு குழுவிடம் கூறும் பொழுது, தனது மகள் 2003ம் ஆண்டில் தனது 17 வயதில் புலிகளுடன் இணைந்ததாகவும், பின்னர் 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கருணாவின் படைகளோடு நின்று அவள் திரும்பி வந்ததாகவும், மீண்டும் 2004ம் ஆண்டு யூலை மாதத்தில் பலவந்தமாக கடத்தப்பட்டதாகவும் கூறினாள்.

> அவள் பாடசாலைக்குச் செல்வதற்காக பதிவு செய்திருந்தாள். யூலை 29ம் திகதி அவளை பாடசாலைக்கு கூட்டி வரும்படி சிஸ்ரர் (கன்னியாஸ்திரி) கூறியிருந்தார், ஆனால் அதற்கு முன்னரே புலிகள் வந்து அவளை கொண்டு சென்றுவிட்டனர். புலிகள் இயக்கத்தினர் எங்கள் வீட்டை சுற்றிவளைத்துக் கொண்டார்கள். அவர்களில் எழுபத்தைந்து பேர் மட்டில் இருந்தனர். அவர்ளை எதிர்த்த என் அம்மம்மா, எனது மகள் கடுமையான காய்ச்சலில் இருக்கிறாள் அவளை நாளைக்கு உங்களிடம் கூட்டிவர முடியும். நான் ஏற்கனவே என்னுடைய மகனை உங்களுக்கு தந்துவிட்டேன் அவன் சண்டையில் இறந்துவிட்டான். மீண்டும் அதை நான் செய்ய விரும்பவில்லை என்று கூறினாள். புலிகள் அவளை விடுவிப்பதாக வாக்கு தந்தார்கள். தன்னை அவர்கள் கொண்டுபோவதற்கு விடவேண்டாம் என்று என்மகள் கூறினாள். ஆனால் அவர்கள் அவளைக் கொண்டுபோய் விட்டனர்.[101]

ஏப்ரலுக்கும் ஆகஸ்ட்டுக்கும் இடையில் மீள் ஆட்சேர்ப்பு தொடர்பாக ஏறத்தாள 100 சம்பவங்களை யுனிசெப் பதிவுசெய்துள்ளது. இதில் பெரும்பாலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிகழ்ந்தவை.[102] எவ்வாறாயினும் மனித உரிமைகள் கண்காணிப்பு

---

[100] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[101] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[102] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 5ம் திகதி யுனிசெப், வேலைத்திட்ட அதிகாரி (பாதுகாப்பு) கிறிஸ் வொட்கின்ஸ் (Chris Watkins) உடன் நடத்திய பேட்டியில் இருந்து.

குழுவானது சிறுகச் சிறுக சேகரித்த சாட்சியங்களின் படி மீள ஆட்சேர்ப்புக்குள் அகப்பட்ட சிறார்களின் தொகை மிகப் பெரியதாக இருக்க கூடும். மட்டக்களப்பு நகரத்திற்கு வடக்கே உள்ள பல கிராமங்களைச் சேர்ந்தவர்கள் கூறிய சாட்சியங்களின்படி திரும்பி வந்த அங்கத்தவர்களில் மூன்றில் ஒரு பங்கிற்கு மேற்பட்ட தொகையினர் மீண்டும் ஆகஸ்ட்மாத அளவில் சேர்த்துக் கொள்ளப்பட்டு விட்டனர்.

வாழைச்சேனைக்கு வடக்கே வாழ்ந்த ஒரு நபர் கூறும் பொழுது "எனது கிராமத்தில் திரும்பி வந்தவர்கள் பத்துப்பேர் மட்டில் இருந்தனர். அவர்களில் 12 முதல் 15 வயதிற்கு இடைப்பட்ட நான்கு முதல் ஆறுபேர் வரை மீண்டும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் எப்படியாவது சமாளித்துக் கொண்டு தங்களை புலிகள் இயக்கத்தில் இருந்து காப்பாற்றிக் கொள்ளமுடியும். ஆனால் சிறார்களால் ஒன்றுமே செய்யமுடியாது".[103]

வாகரைப் பிரதேசத்தை சேர்ந்த இன்னும் ஒருவர் கூறும் பொழுது:

> எனது கிராமத்தில் இருந்து நாற்பது பேர்வரை புலிகள் இயக்கத்திற்குச் சென்றிருந்தனர். அதில் ஏப்ரல் மாத சண்டையில் 20பேர் இறந்துபோக மிகுதி 20பேர் திரும்பி வந்தார்கள். அவர்களில் உடல் ரீதியாக பலமாக இருந்த 16 பேரை திரும்பவும் வன்னிப் புலிகள் கொண்டு சென்றுவிட்டார்கள். மிகுதியாக இருந்தவர்களை யுனிசெப் அமைப்பினர் நகரத்திற்கு கூட்டிச் சென்றார்கள். இல்லாவிட்டால் அவர்களையும் புலிகள் இயக்கத்தினர் கொண்டு போயிருப்பார்கள்.[104]

வாகரைப் பிரதேசத்தை சேர்ந்த மூன்றாவது நபர் கருத்து வெளியிடும் போது தனது கிராமத்தில் திரும்பி வந்தவர்கள் 18 பேர்வரை இருந்ததாக கூறினார். அவர்களில் ஏழுபேரை புலிகள் இயக்கம் மீள எடுத்துக் கொண்டது. இன்னும் 11பேர் வேறு இடங்களில் இருக்கிறார்கள். அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட ஏழு பேரில் அநேகர் 16 வயதிற்கு குறைந்த பெண்களே. அவர்கள் இரவு நேரத்திலேயே கொண்டு செல்லப்பட்டார்கள். அவர்கள் தங்களுடைய பெற்றோருடன் வீடுகளில் இருக்கும் போது புலிகள் இயக்கத்தினர் வந்து அவர்களை கொண்டு சென்றனர்.[105]

கருணாவின் படையணியில் இருந்து திரும்பி வந்து மீளச் சேர்க்கப்படாமல் இருந்த முப்பது முன்னாள் அங்கத்தவர்களை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நேரடியாக பேட்டி கண்டது. சகலருமே தாங்கள் மீண்டும் பலவந்தமாக புலிகளில் சேர்க்கப்படலாம் என அச்சம் தெரிவித்தனர். பாதுகாப்பு பிரிவு அல்லது உளவுப் பிரிவில் வேலை செய்த சிறார்கள், புலிகளால் அடையாளம் காணப்படின் தாங்கள் கொல்லப்படுவோம் என நம்பினர். இதுபற்றி ஒருவர் கூறும்பொழுது புலிகள் இயக்கம் மீண்டும் என்னை அவர்களுடன் சேரும்படி கோரியுள்ளது. முன்னர் கருணா அணியுடன் இருந்து விலகி தற்போது வன்னிப் படைகளுடன் சேர்ந்துள்ள பெண்களை அவர்கள் என்னிடம் அனுப்பினார்கள். மீண்டும் வந்து இணைந்து

---

[103] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.
[104] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.
[105] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் நடத்திய பேட்டியில் இருந்து.

கொள்ளும்படி அவர்கள் என்னைக் கோரினர். அவர்கள் என்னை மிரட்டும் வகையில் நடந்து கொள்ளாதபோதும் அவர்களின் வருகை என்னை உண்மையிலேயே அச்சத்திற்கு உள்ளாக்கிவிட்டது.[106]

பாடசாலைக்கு சென்று வரும் தங்கள் பயணத்தின் போது இடையில் புலிகள் இயக்கத்தினால் தாங்கள் கடத்தப்படலாம் என்கின்ற கவலையாலும் பல சிறார்கள் பாடசாலைக்குச் செல்ல அச்சப்பட்டனர். சிலர் வீடுகளைவிட்டு வெளியே வரவே மறுத்த அதேவேளை மற்றையோர் தம் உறவினர்களுடன் போய்த் தங்கினர், அல்லது நாட்டின் வேறு பல பாகங்களுக்கு இடம்பெயர்ந்தனர். அல்லது நாட்டைவிட்டு வெளியேறி மத்திய கிழக்கு நாடுகளில் வேலைதேடிச் சென்றனர். திருமணம் ஆட்சேர்ப்புக்கு எதிரான ஒரு பாதுகாப்பு என நம்பி முன்னாள் அங்கத்தவர்கள் பலர் திருமணம் செய்துகொண்டார்கள். (கீழே தொடர்ந்துவரும் உரையாடலைப் பாருங்கள்)

16 வயதுடைய செல்வமணி கூறும் பொழுது கருணாவினால் விடுவிக்கப்பட்டு ஒரு மாதகாலம் சென்றபின்னர் அவர்கள் மீண்டும் ஆட்சேர்க்க தொடங்கினர். நான் எனது கிராமத்தை விட்டு இரண்டு மணித்தியாலம் பஸ்சில் பயணம் செய்து எனது உறவினர் ஒருவரின் வீட்டிற்கு சென்றேன். நான் அங்கு ஒரு மாதம் அவர்களுடன் தங்கியிருந்தேன். நான் வீட்டிற்குள்ளேயே இருந்தேன். நான் அங்கிருப்பது எவருக்கும் தெரியாது. அவர்கள் என்னை பிடித்துவிடுவார்கள் என்கின்ற அச்சத்தினால் நான் வெளியில் போகவே இல்லை. நான் வீட்டின் முன் வாசலுக்கு கூட வருவதில்லை[107] இன்னொரு சிறார் கூறுகின்ற பொழுது, அவர்கள் மீளச் சேர்ப்பதை தவிர்ப்பதற்காக தான் பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு செல்லும் வரை, இரவு நேரங்களில் தொடர்ச்சியாக தனது கிராமத்தில் ஒரு வீட்டில் இருந்து இன்னொரு வீட்டிற்கு மாறி மாறி சென்று தங்கியிருந்ததாக கூறினாள்[108]

ஏப்ரல் மாதம் தனது வீட்டிற்கு திரும்பி வந்த பதினாறு வயதையுடைய இந்திரா கூறுகையில்:

> புலிகள் இயக்கத்தினர் என்னைத் தேடி வந்தார்கள், ஆனால் நான் காட்டுக்குள் ஒளிந்திருந்தேன். புலிகள் இயக்கத்தினர் இரவு நேரத்திலேயே என்னைத் தேடி வருவார்கள் என்பதனால் நான் என் வீட்டிற்கு அருகாமையில் இருந்த காட்டிற்குள்ளேயே படுத்தேன். புலிகள் இயக்கத்தினர் இரண்டு தடவைகள் எனது கிராமத்துக்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் இன்னும் எவரையும் கொண்டு போகாவிட்டாலும் தொடர்ச்சியாக தேடினார்கள். கருணாவினால் விடுவிக்கப்பட்ட யாரோ ஒருவர் எனது வீட்டை காண்பித்து விட்டார். அவர்கள் எனது வீட்டிற்கு வரும்போது அங்கு யாரும் இருக்கவில்லை. புலிகள் இயக்கத்தினர் எனது வீட்டிற்கு வந்து, என்னை மீண்டும் அவர்களுடன் இணையும்படி கேட்டு நான் மறுத்தால், என்னை சுட்டு

---

[106] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘காவேரியுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

[107] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘செல்வமணியுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

[108] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘பாவையுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

விடுவதற்கு அவர்களுக்கு உத்தரவு இருப்பதாக நான் அறிந்திருந்தேன். நான் திரும்பி போக விரும்பவில்லை.[109]

முன்னர் தாமாகவே புலிகள் இயக்கத்தோடு போய் இணைந்துகொண்ட அங்கத்தவாகள் உட்பட, கருணாவோடு இருந்து விடுவிக்கப்பட்ட எந்த ஒரு அங்கத்தவருமே, மீண்டும் புலிகள் இயக்கத்துடன் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவிக்கவில்லை என்பது மனித உரிமை கண்காணிப்பு அமைப்பின் பேட்டியின் போது தெரியவந்தது. புலிகள் இயக்கத்திற்குள்ளான வாழ்க்கையானது மிக கடினமானது என்றே அவர்களில் அநேகம் பேர் கூறினர். சிலர் தாம் படிக்க செல்ல விரும்புவதாக கூறினர்.

ஏனையோர், புலிகள் இயக்கத்திற்குள் ஏற்பட்டிருந்த பிளவினால் குழப்பமடைந்திருந்தனர். இதுபற்றி பிரியா கூறுகின்ற பொழுது, முன்னர் புலிகள் இயக்கம் ஒரு குழுவாக இருந்தது. இப்போது இரண்டு குழுவாகி உள்ளது. நான் கருணா குழுவினரோடு சென்றால், வன்னி குழுவினரோடு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். நான் வன்னிக் குழுவினரோடு சென்றால், கருணா குழுவினருடன் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும். நான் எந்த ஒரு குழுவினருடனும் போகக் கூடாது என்றே எனது குடும்பத்தினர் கூறுகின்றனர்.

தனது பதினாறு வயதில் சேர்க்கப்பட்டு தற்போது இருபத்தொரு வயதில் இருக்கும் வாசுகியின் கூற்றுப்படி:

> நான் திரும்பிப் போக விரும்பவில்லை. நான் பிளவை விரும்பவில்லை. ஆனால் அவர்கள் மீண்டும் ஒரு குழுவாகுவதற்கு சந்தர்ப்பம் இருந்தால், நான் திரும்பிச் செல்லக்கூடும். தமிழ் மக்கள் துன்பப்படுகிறார்கள், அவர்கள் இறக்கிறார்கள். என்னுடைய குடும்பம் இதை சிலவேளை விரும்பாதிருக்கலாம். ஆனால் எனக்கு இதில் சேர்ந்து சேவை செய்வதற்குரிய கடமை இருக்கிறது. இது தமிழர்களுக்கு இடையிலான சண்டை. நான் இந்தச் சண்டைக்காக இணைந்து கொள்ளவில்லை. நான் சிங்களவர்களையே எதிர்த்தேன். இப்பொழுது இதில் பங்கேற்க வேண்டிய தேவை எனக்கில்லை. சிங்களவர்கள் எங்களுடன் சண்டை பிடிக்கவில்லை. இப்பொழுது நாங்கள் எங்களுக்குள்ளேயே சண்டைபிடிக்கிறோம். நான் வீட்டில் இருப்பதையே விரும்புகிறேன்.[110]

முன்னாள் அங்கத்தவர்களின் வீடுகளுக்கு விஜயம் செய்வதற்கு மேலாக ,புலிகள் இயக்கமானது தனது முன்னாள் அங்கத்தவர்களை தம்மோடு வந்து மீண்டும் இணைந்து கொள்ளும் படி கடிதங்களையும் அனுப்பியிருக்கிறது. 17 வயதுடைய சந்தானம் இதுபற்றிக் கூறும் பொழுது நான் திரும்பி அவர்களிடம் வரவேண்டும் என புலிகள் இயக்கத்தினர் கடிதம் ஒன்றை எனது வீட்டிற்கு அனுப்பியிருந்தனர்.

---

[109] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் “இந்திராவுடன்”நடத்திய பேட்டியில் இருந்து.

[110] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் “வாசுகியுடன்”நடத்திய பேட்டியில் இருந்து.

அக்கடிதம் எனது தந்தையாருக்கு எழுதப்பட்டிருந்தது. அதில் எனது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. எனது தந்தையார் இது பற்றி கலந்துரையாடுவதற்கு முகாமுக்கு வரவேண்டும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் அவர் அங்கு சென்றால் அவர்கள் என்னை எடுத்துவிடுவார்கள். அதன் பின்பு எனது குடும்பத்தார் என்னை எப்பொழுதுமே பார்க்க முடியாது. எனவே அவர் என்னை அங்கு கூட்டிப் போகவில்லை.[111] இதைப்போலவே இன்னும் ஒரு முன்னாள் சிறார் படையைச் சேர்ந்தவர் கூறுகின்ற பொழுது, தனது பெயர் குறிப்பிட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டிருந்த ஓர் கடிதத்தில் புலிகள் தங்களை வந்து சந்திக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்தனர். அவள் உடனே யுனிசெப் காரியாலயம் ஒன்றுக்கு சென்று தன்னை பதிவு செய்து கொண்டாள். அதன் மூலம் அவள் பாதுகாப்பான இடம் ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டாள்.[112]

சில சமூகத்தினரிடையே புலிகள் இயக்கத்தினர் கூட்டங்களை ஒழுங்கு செய்து அதன்மூலம் முன்னாள் கருணா பிரிவின் அங்கத்தவர்கள் புலிகள் இயக்கத்தினருடன் வந்து இணைந்துகொள்ள வேண்டும் என அறிவித்தனர். 2004ம் ஆண்டு யூலை மாதம் பிற்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தனது கிராமத்தில் நடத்தப்பட்ட இவ்வாறான ஒரு கூட்டம் பற்றி ஒரு பெண் விபரிக்கையில்:

> கடந்த சனிக்கிழமை புலிகள் இயக்கத்தினர் ஒரு கூட்டத்தை நடத்தி, புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் சேரவேண்டும் என்றனர். வெள்ளிக்கிழமையன்று நாளை ஒரு கூட்டம் நடைபெறவிருப்பதாக அவர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் அறிவித்தனர். நான் என்னுடைய மகளை பின் அறையில் ஒளித்து வைத்துவிட்டு, எல்லோரும் கூட்டத்திற்கு போவோம் என்று கூறினேன். அங்கு இரு ஆண்கள் இருந்தார்கள். அவர்கள் தங்களை புலிகள் இயக்கத்தினர் என்று கூறவில்லை. ஆனால் அவர்கள் யார் என்று எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் ஒருவர் கட்டாயமாக கூட்டத்திற்கு வரவேண்டும் என்று சொன்னார்கள்.

இந்தக் கூட்டம் கிராமத்து பாடசாலையில் நிகழ்ந்தது. அது காலை 8.30க்கு தொடங்கி 9.30க்கு முடிவடைந்தது. அங்கு புலிகள் இயக்கத்தில் உயர்பதவி வகிக்கும் ஆறு அல்லது ஏழு பேர் இருந்தனர். அத்துடன் ஐம்பதிற்கு மேற்பட்ட கிராமத்தவர்களும் வந்திருந்தார்கள். முன்னாள் போராளிகளில் தங்களுக்கு சந்தேகம் இருப்பதாகவும் அதனாலேயே அவர்களை மீண்டும் வரச்சொல்வதாகவும் கூறினார்கள். எங்கே எப்பொழுது என்று எதுவும் அவர்கள் சொல்லவில்லை, ஆனால் நாங்கள் அவர்களைத் திருப்பித் தரவேண்டும் என்று சொன்னார்கள். என்ன நடக்கப்போகிறது என்பது பற்றி அவர்கள் கூறவில்லை, ஆனால் அவர்கள் இன்னுமொரு கூட்டம் வைப்பார்கள் என்று நாங்கள் நினைத்தோம். இதற்கு முன்னர் அவர்கள் மூன்று கூட்டங்களின் பின்னர் ஆட்களைச் சேர்த்தார்கள்.

---

[111] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘சந்தானத்துடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

[112] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘தாமரையுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

அன்றிரவு அவர்கள் மூன்று சிறுவர்களை சேர்த்துக் கொண்டனர், அவர்கள் எல்லோரும் முன்னாள் போராளிகள். நான் பயந்து என்னுடைய மகளை ஒளித்து வைத்திருந்தேன். எல்லாமாக இந்தக் கிராமத்தில் நாற்பத்தைந்து பேர் திரும்பி வந்திருந்தார்கள். ஆனால் அன்றைய தினம் அவர்கள் தங்களிடம் வந்திருந்த சிறுவர்களை மட்டுமே எடுத்துச் சென்றனர்.[113]

யூலை மாதம் பிற்பகுதியில் தனது ஊரில் நடத்தப்பட்ட இதே போன்ற ஒரு கூட்டத்தைப் பற்றி பதினேழு வயதுடைய நிர்மலா விபரிக்கும் பொழுது:

> புலிகள் இயக்கம் மீண்டும் வந்து கூட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி முன்னாள் போராளிகள் எல்லோரும் திரும்பிச் சேர வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அவர்கள் மேலும் கூறுகையில் யார் இயக்கத்தில் இருந்து திரும்பி வந்தார்களோ அவர்கள் திரும்பிச் சேர வேண்டும், அவ்வாறு திரும்பி வந்தவர்கள் மீண்டும் வந்துசேர விரும்பாவிட்டால், அவர்களின் வீடுகளில் இருந்து இன்னொரு பிள்ளையை எங்களுக்குத் தர வேண்டும். இதை கூட்டத்திற்கு சென்றிருந்தவர்களே என்னிடம் கூறினார்கள். நான் ஒளிந்திருந்தேன். நான் போகவில்லை. சுமார் இருபத்து ஐந்துபேர் மட்டில் போயிருந்தார்கள், ஏனையோர் ஒளிந்துவிட்டார்கள். என்னுடைய வீட்டிற்கு அருகே உள்ள இன்னுமொரு பிள்ளை திரும்ப சென்றுவிட்டாள். அவளின் உறவிர்கள் எல்லாம் மிக வறியவர்கள். ஏனையோர் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுவிட்டார்கள். நான் ஒருத்தி மட்டுமே எஞ்சியிருக்கிறேன்.[114]

*சொந்த சகோதரங்களுக்கு ஆபத்து*

பொதுவாகவே புலிகள் இயக்கத்தினர் குடும்பத்திற்கு ஒரு பிள்ளை தமது இயக்கத்தில் பணியாற்ற வரவேண்டும் என கட்டாயப் படுத்துவதால், இயக்கத்தைவிட்டு திரும்பி வந்து, திரும்பி போக மறுத்த சிறார் போராளிகள் எல்லோரும் தமக்காக புலிகள் இயக்கத்தினர் தமது சகோதர சகோதரிகளை எடுத்துச் செல்லலாம் என அச்சம் தெரிவித்தனர். திரும்பி வந்தவர்களில் அநேகமானோர் மீண்டும் போய்ச் சேருவதற்கு விரும்பாவிட்டாலும் கூட, சிலர் தமது சகோதர சகோதரிகள் பிடிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக மீண்டும் போய் சேரவிருப்பதாக கருத்து தெரிவித்தனர்.

பதினேழு வயதுடைய செல்வமணி இதுபற்றிக் கூறுகையில், அவர்கள் எனது சகோதரர் அல்லது சகோதரிகளை கொண்டு செல்ல முயற்சித்தால், நான் மீண்டும் சேர்ந்து விடுவேன். நான் கவலையுடனேயே இருக்கிறேன் என்றாள்.[115]

---

[113] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[114] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''நிர்மலா''நடத்திய பேட்டியில் இருந்து.

[115] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''செல்வமணியுடன்''நடத்திய பேட்டியில் இருந்து.

தற்போது பதினாறு வயதுடைய மஞ்சுளா கூறும்பொழுது:

> எந்த ஒரு நிலைமையின் கீழும் நான் (திரும்பி) போக விரும்பவில்லை. பொது இடங்களில் உதாரணமாக கோயிலுக்கு போகும் போது சிறார்களை பிடித்துக் கொண்டுபோக முடியும் என்பதே பிரச்சினையான விடயம். ஏனெனில் அவர்கள் எல்லா இடத்திலும் நடமாடுகின்றனர். அவர்கள் எனது தம்பியை கொண்டுபோய் விடுவார்கள் என நான் பதட்டத்துடன் இருக்கிறேன் அப்படி நடந்தால் நான் திரும்பி போகவேண்டி இருக்கும். எனக்கு ஒரு தம்பியும் ஒரு தங்கையும் இருக்கின்றனர்.[116]

தனது பதினாறு வயது மகள் மீண்டும் பிடித்துச் செல்லப்படுவதில் இருந்து தடுப்பதற்காக பாதுகாப்பான ஒரு இடத்திற்கு அனுப்பியிருந்த ஒரு தாய், இப்போது தனது ஏனைய பிள்ளைகளைப் பற்றி கவலையடைந்தாள். அவள் கூறும் பொழுது:

> நான் ஒரு நபரை கொடுக்காவிட்டால் அவர்கள் இன்னொரு பிள்ளையை எடுத்து சென்று விடுவார்கள், என நான் அச்சப்படுகிறேன். ஆனால் இப்பொழுது நாங்கள் ஒரு பிள்ளையை ஒளித்துவிட்டோம், அவர்கள் மற்றுமொரு பிள்ளையை கொண்டுபோய் விடுவார்களோ என்று பயப்படுகிறேன். என்னுடைய இளைய பிள்ளைகள் நன்றாக படிக்க வேண்டும் என்றே விரும்புகிறேன். எனவே என்னுடைய மற்ற பிள்ளையை புலிகள் இயக்கத்திடம் கொடுத்து, தொடர்ந்து சண்டையில் ஈடுபடுத்த நான் விரும்பவில்லை. என்னால் இதை அனுமதிக்க முடியாது. பிள்ளைகளை நினைத்தே நான் கவலைப்படுகிறேன். எங்களால் நகரத்திற்குச் சென்று வாடகைக்கு வீடு எடுத்து இருக்க வசதியில்லை. அங்கு விலை மிக அதிகம்.[117]

கிழக்கில் அரசாங்க கட்டுப்பாட்டில் உள்ள பெரிய நகரங்கள் புலிகளின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இருந்து தப்புவதற்கான அதிக பாதுகாப்பை அவர்களுக்கு வழங்கக்கூடும், எவ்வாறாயினும் கிராம புறத்தில் உள்ள அதிகமான குடும்பங்கள் மிக வறுமையானவர்கள். ஆதலால் நகரங்களுக்குச் சென்று வாழ்வதற்கான வளங்கள் அவர்களிடம் இல்லை.

இதே விதமான நிலமையை இன்னும் ஒரு தாயும் வெளிப்படுத்தினார். எனது ஏனைய பிள்ளைகளுக்கு புலிகள் இயக்கத்திடம் இருந்து பிரச்சினைகள் வரும் என நான் அஞ்சுகிறேன். எனக்கு 18வயதை தாண்டிய ஒரு மகன் மட்டுமே இருக்கிறான். இப்போது அவன் படித்துக் கொண்டிருக்கிறான். எனது மகளைக் காணவில்லை என்றால் அவர்கள் இன்னொருவரை கொண்டு செல்லக்கூடும்[118]

---

[116] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் “மஞ்சுளா”நடத்திய பேட்டியில் இருந்து.

[117] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[118] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

*பாடசாலைக்கு செல்வதில் அச்சம்*

யுனிசெப் அறிக்கையின் படி கருணாவின் படையணியில் இருந்து திரும்பிவந்து தமது அமைப்புடன் பதிவு செய்துகொண்ட 1,800 சிறார்களில் 700 பேர் வரை 2004ம் ஆண்டு ஆகஸ்ட் முற்பகுதியில் மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டு விட்டனர். எவ்வாறாயினும் மீண்டும் பாடசாலைகளுக்கு செல்ல ஆரம்பித்த சிறார்களில், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பேட்டி கண்ட சில சிறார்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, பாடசாலைகளில் இருந்து பாடசாலைக்கும் வீட்டிற்கும் இடையே தாம் பயணம் செய்கையில் மீளச்சேர்க்கப்படும் ஆபத்து இருக்கின்றது என்று தமது அச்சத்தை தெரிவித்தனர். முக்கியமாக தமது வீடுகள் அதிக தொலைவில் இருப்பவர்களுக்கு இவ் அச்சம் இருந்தது. தாங்கள் பாடசாலைக்கு செல்லத் தொடங்கியதாகவும் பின்னர் தாம் போய்வரும் பாதையில் புலிகள் இயக்கத்தினர் சிறார்களை பிடிப்பதைக் கண்டதும் தாம் போவதை நிறுத்திக் கொண்டோம். என்றனர்.

உதாரணமாக, பதினைந்து வயது நிரம்பிய பாமினி எம்மிடம் கூறும் போது:

> நான் வீட்டுக்கு சென்றதன் பின்பு மீண்டும் பாடசாலைக்கு செல்ல ஆரம்பித்தேன். ஆனால் நான் ஐந்து நாட்கள் மட்டுமே செல்லக் கூடியதாக இருந்தது, அதற்குள் புலிகள் இயக்கத்தினர் மீண்டும் ஆட்சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்தார்கள். அவர்கள் நான் பாடசாலைக்கு நடந்து செல்லும் பொழுதோ அல்லது, பாடசாலைக்கே வந்தோ என்னை பிடித்து செல்வார்கள் என்று நான் அச்சமடைந்தேன். நான் பாடசாலைக்கு நடந்து செல்லும்போது அவர்கள் என்னை பிடிப்பார்களோ என நான் அச்சமடைந்தேன். ஒவ்வொரு நாளும் நான் நடந்து செல்லும்பொது அவர்களைக் காண்பேன். நான் பாடசாலைக்கு மூன்று மணித்தியாலம் நடந்து செல்ல வேண்டும். பாடசாலை காலை 8 மணிக்கு ஆரம்பிக்கும். ஆனால் நாங்கள் அங்கு போய்ச் சேரும்பொழுது 10 மணியாகிவிடும். எங்களுடைய பாதுகாப்புக்காக பாடசாலையும் பிந்தியே ஆரம்பிக்கும்.[119]

பதின்நான்கு வயதான அருணா கூறும்பொழுது, நான் தொடர்ச்சியாக பாடசாலைக்கு செல்லவே விரும்பினேன். ஆனால் அது முடியாதிருந்தது. பாடசாலை அதிக தூரத்தில் இருந்தது. பாடசாலைக்கு நான் செல்லும் பொழுது புலிகள் இயக்கத்தினர் என்னை பிடித்துக்கொண்டு போய்விடக்கூடும்.[120] இதே போல், பதினேழு வயதுடைய செல்வமணி கூறும்பொழுது, நான் வன்னிக் குழுவினருடன் சேரவேண்டும் என சொல்லப் பட்டிருந்ததால் என்னால் பாடசாலைக்கு போக முடியவில்லை. சில சிறுவர்கள் மீளச் சேர்க்கப்பட்டிருந்தனர்.. புலிகள் இயக்கத்தினர் என்னை கொண்டு செல்வார்கள் என்ற அச்சத்தின் காரணமாக நான் பாடசாலைக்கு போக முடியவில்லை..[121]

---

[119] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘பாமினி’’நடத்திய பேட்டியில் இருந்து.

[120] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘அருணாவுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

[121] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘செல்வமணி’’நடத்திய பேட்டியில் இருந்து.

*திருமணம்*

தாங்கள் புலிகள் இயக்கத்தால் மீண்டும் பிடித்து செல்லப்படுவதில் இருந்து திருமணமானது தமக்கு ஏதோ ஒருவித பாதுகாப்பை வழங்கும் என்ற நம்பிக்கையில், திரும்பி வந்த பல இளம் அங்கத்தவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். திருமணமானவர்களை புலிகள் இயக்கத்தினர் தமது இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதில்லை என பொதுவான ஓர் கருத்து நிலவுகிறது. (அதே வேளை புலிகள் இயக்கத்தினர் பல வருடங்களாக தமது இயக்கத்தில் உள்ள அங்கத்தவர்களுக்கு இடையேயான திருமணங்களை தடை செய்திருக்கின்றனர்)

தாங்கள் வேலை செய்கின்ற ஒரு பிரதேசத்தில் மாத்திரம் முன்னைநாள் அங்கத்தவர்கள் 10 பேர் மட்டில் மூன்று வாரங்களுக்கு முன்பு திருமணம் செய்துகொண்டனர் என ஒரு அரச சார்பற்ற நிறுவனம் தெரிவித்தது. அங்கிருந்த உத்தியோகத்தர்கள் கூறும் பொழுது, அவர்களில் ஆக குறைந்த வயதுடையவர்கள் 14 அல்லது 15 வயதில் இருந்தனர்.[122] மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசத்தில் உள்ள இன்னும் ஒரு நபர் கூறும் பொழுது, அக்கிராமத்தில் திரும்பி வந்த 7 அல்லது 8 அங்கத்தவர்களுள் 5 பேர் திருமணம் முடித்தனர். புலிகள் இயக்கம் அவர்களை தம்மோடு மீண்டும் இணைந்து கொள்ளும்படி கோரலாம் அல்லது அவர்களை கொண்டுபோகலாம் என்ற காரணத்தினால் அவர்கள் இயக்கத்தை விட்டு திரும்பி வந்தவுடனேயே திருமணம் செய்து கொண்டனர்.[123]

18 வயதுடைய நான்மணி கூறும்பொழுது, தான் புலிகள் இயக்கத்தில் இருக்கும்போதே இன்னுமொரு அங்கத்தவருடன் காதல் கொண்டிருந்தேன். அவர்கள் விடுவிக்கப்பட்ட பின்னர், அவள் அவ் அங்கத்தவனுடன் அவனுடைய வீட்டுக்கே சென்றாள். அவள் மேலும் கூறும் பொழுது ஒரு மாதத்தின் பின்பு கருணா படையில் இருந்து விலகிய பின் புலிகள் இயக்கத்தினர் எனது கணவனை தேடிக்கொண்டு வந்தனர். ஆனால் நாங்கள் திருமணம் முடித்துவிட்டோம், என்று கண்டதும் அவர்கள் சென்று விட்டனர்[124] ஆனாலும் புலிகள் இயக்கத்தினர் மீண்டும் வரலாம் என்கின்ற பதட்டத்துடனேயே தான் இருப்பதாக அவள் கூறினாள்.

18 வயதுடைய தாரிணி, அவள் திரும்பிவந்து ஒரு மாதத்திற்குள்ளேயே திருமணம் முடித்தாள். ஏனைய முன்னாள் அங்கத்தவர்களைப் போலவே அவளும் இன்னுமோர் முன்னாள் அங்கத்தவனையே திருமணம் செய்து கொண்டாள். அவள் கூறும் பொழுது, அவர்கள் மீண்டும் வந்து என்னை கொண்டுபோய் விடுவார்கள் என்ற அச்சத்தினால் நான் திருமணம் செய்துகொண்டேன்[125] என்றாள்.

மீளவும் சிறார்கள் பிடிக்கப்பட்டு, கொண்டு செல்லப்படுவதில் இருந்து காப்பாற்றுவதற்கு என்ன செய்யலாம் என ஒரு தாயிடம் கேட்டபொழுது, நான் எனது மகளை திருமணம் செய்து கொடுப்பதைப் பற்றியே சிந்திக்கிறேன் எனக் கூறினாள்.

---

[122] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[123] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[124] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘நான்மணியுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

[125] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘தாரணியுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

அவளுடைய 17 வயது மகள் கருத்து கூறும்பொழுது தப்புவதற்கு இது ஒரு வழி[126] என்றாள். தனது பிள்ளையை பாதுகாப்பு கருதி வேறோர் இடத்திற்கு அனுப்பி வைத்திருந்த இன்னுமொரு தாய் கூறும்பொழுது, இன்னும் ஒரு தடவை அச்சுறுத்தல் வருமானால், நான் எனது மகளை பாதுகாப்பு கருதி திருமணம் முடித்து அனுப்பிவிடுவேன், என்றாள்.[127] எம்மிடம் கருத்து தெரிவித்த இன்னும் சில சிறார்கள் கூறும்பொழுது, புலிகள் இயக்கம் மீண்டும் எங்களை தேடி வருமாக இருந்தால், உண்மையாக இல்லாவிட்டாலும் நாம் திருமணம் முடித்துக்கொண்டு விட்டோம் என்றே கூறுவோம், என்றனர்.[128]

மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவிடம் கருத்து கூறிய 28 வயதுடைய ஒரு நபர் சிறார்களை பாதுகாப்பதற்கான ஒரே வழி அவர்களை விரைவில் திருமணம் முடித்து கொடுப்பதுதான். நானும் கூட எனது பாதுகாப்புக்காகவே திருமணம் செய்து கொண்டேன். இது 2000 ஆம் ஆண்டில் நடந்தது. ஒக்டோபர் 27ம் திகதி புலிகள் என்னைப் பிடித்தார்கள் அனால் நான் தப்பி விட்டேன், பின்னர் நான் திருகோணமலைக்கு சென்று அங்கு திருமணம் முடித்தேன். அதன்பின் திரும்பி வந்தேன். நான் அவர்களால் கொண்டு போகப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவே திருமணம் முடித்தேன்.[129]

தங்குமிட தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்மொன்றில் பங்குபற்றிக் கொண்டிருக்கும் 21 வயதுடைய பெண் ஒருவரை நாம் பேட்டி கண்டபொழுது, நான் திரும்பி எனது கிராமத்திற்கு செல்வது பாதுகாப்பானது என கருதவில்லை. இன்று எனது பெற்றோர்கள் என்னிடம் வந்து மீண்டும் கிராமத்திற்கு வரவேண்டாம் என்று சொன்னார்கள், நான் திருமணம் செய்துகொள்ளப் போவதாக அவர்கள் கூறினர். தான் திருமணம் முடித்துக் கொண்டதால் புலிகள் இயக்கத்தினர் தன்னை போக அனுமதித்து விட்டார்கள் என அங்குள்ள ஒரு பெண் கூறி இருக்கிறாள். ஆனால் நான் திருமணம் முடித்துக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் நான் என்னை பாதுகாத்துக் கொள்வதற்கு திருமணம் செய்து கொள்வதே வழி என எனது பெற்றோர்கள் கூறுகின்றனர். இதுவே ஒரே தீர்வு என்றும் அவர்கள் கருதுகின்றனர் என்று எம்மிடம் தெரிவித்தாள்.[130]

புலிகள் மீள் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பகுதியில் வாழும் ஒரு நபர் எம்மிடம் கூறும் பொழுது திருமணமும் கூட எந்த நேரமும் பாதுகாப்பாக அமைந்துவிடாது என்றார். புலிகள் இயக்கம் அவர்களை கொண்டு போகாமல் இருப்பதற்காகவே பெற்றோர்கள் அவர்களை திருமணம் முடித்து வைக்கின்றனர். இது ஒன்றைத்தான் நாம் செய்ய முடியும். ஆனாலும் புலிகள் இயக்கத்தினர் அவர்களை நேரடியாக கொண்டு செல்லாவிட்டாலும், அவர்களை தமது

---

[126] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் "நிர்மலாவுடன்"நடத்திய பேட்டியில் இருந்து.
[127] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.
[128] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் "வான்மதி"நடத்திய பேட்டியில் இருந்து.
[129] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.
[130] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் "வாசுகியுடன்"நடத்திய பேட்டியில் இருந்து.

ஆதரவாளர்களாக பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு இன்னமும் உண்டு. இவர்களுக்கு பயிற்சிகளை அளித்து, எல்லைப்புற கிராமங்களிலும் அல்லது எமது கிராமத்திற்கு உள்ளேயே கூட அவர்களை பயன்படுத்த முடியும்.[131]

அவர் தொடர்ந்து எம்மிடம் கூறும் பொழுது, முன்னர் எமது கிராமத்தில் இருந்து 27 சிறார்கள் புலிகள் இயக்கத்தினால் கொண்டு செல்லப்பட்டிருந்தனர். அவர்களில் 23 பேர் திரும்பி வந்துவிட்டனர். அவர்களில் இரு சிறார்கள் இப்போது திருமணம் முடித்து விட்டார்கள். ஆனால் மீண்டும் 5 பேரை புலிகள் இயக்கத்தினர் தண்டனைக்காக கொண்டு சென்றுவிட்டனர் .திருமணம் முடித்த இருவரான 18 வயது மற்றும் 23வயது இருவரையும் புலிகள் இயக்கத்தினர் மீண்டும் கொண்டு சென்று விட்டனர். அவர்கள் எல்லோரையும் மீண்டும் வரும்படி புலிகள் இயக்கத்தினர் கூறி இருந்தனர். ஆனால் அவர்கள் திரும்பி போகாத பொழுது அவர்களை பங்கர்களுக்குள் போட்டு விட்டனர்..[132]

அரச சார்பற்ற நிறுவனத்தை சேந்த  உத்தியோகத்தர்கள் கூறுகின்ற பொழுது, அநேகமான இத் திருமணங்கள் வேறுவழியின்றி நிகழ்பவை ஆகும்.[133] கருணாவின் படையில் இருந்து விலகி வந்து சில நாட்களுக்குள்ளேயே இன்னுமொரு திரும்பிவந்த அங்கத்தவரை மணமுடித்த ஒரு பெண்ணின் தாய் கூறும்பொழுது, புலிகள் இயக்கம் அவர்களை திரும்பவும் கொண்டு செல்லமாட்டார்கள் என்கின்ற காரணத்திற்காகவே அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். ஆனால் இப்போது அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து விட்டனர். அப் பையனால் வேலைக்கு செல்ல முடியவில்லை. அவர்களுக்கு எந்த வருமானமும் இல்லை. நானே அவர்களுக்கு உதவி செய்தேன்[134] அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்த பின்னர் புலிகள் இயக்கத்தினர் அப் பெண்ணின் கணவனை திரும்ப கொண்டு சென்றுவிட்டனர்.

### *மீள பிடிக்கப்படக்கூடிய ஆபத்து நிலையில் பெண் பிள்ளைகள்*

பொதுவாகவே இலங்கையில் வாழும் தமிழ் பெண்பிள்ளைகள், குறிப்பாக கிராம புறங்களில் வாழ்பவர்கள் தமது தலைமயிர்களை நீளமாக வளர்த்து வைத்திருப்பதே வழமையாகும். பெண் பிள்ளைகள் புலிகள் இயக்கத்தின் ஒரு பகுதியாக உள்வாங்கப்பட்டதன் பின்னர் அவர்களின்  ஆட்படுத்தலின் காரணமாக அப்பிள்ளைகளின் தலைமயிர்கள் கட்டையாக வெட்டப்படுகின்றன. மிக குறுகிய காலம் புலிகள் இயக்கத்தில் இருந்தவர்களை தவிர, கருணாவின் படைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட அனைத்து பெண் பிள்ளைகளின் தலைமயிர்களும், அவர்கள் வீடு திரும்பும் போது மிக கட்டையாகவே வெட்டப்பட்டிருந்தன. இதனால்

---

[131] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[132] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[133] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[134] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

பார்த்தவுடனனேயே அவர்கள் புலிகள் இயக்கத்தின் முன்னாள் அங்கத்தவர்கள் என இனங்காணக்கூடியதாக இருந்தனர்.

அநேகமான பெண்கள் கட்டையாக வெட்டப்பட்டிருந்த தமது தலைமயிர்கள் தொடர்பாக அதி உணர்வுடன் இருந்தனர். அது தாம் மீள பிடிக்கப்படுவதற்கான ஆபத்தை அதிகரிக்க செய்வதாகவே அவர்கள் உணர்ந்தனர். பாதுகாப்பான ஒரு இடத்தில் தொழில்சார் கல்விப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் ஓர் பெண் பிள்ளையை நாம் பேட்டி கண்ட பொழுது, இந்த பயிற்சி நெறியின் கால எல்லையை எப்படியாவது ஒருவருடத்திற்கு நீட்டிக்கொள்ள வேண்டும், என்றே நாம் விரும்புகிறோம். ஏனெனில் ஆறு மாதத்தில் தேவையான அளவிற்கு எமது தலைமயிர்கள் வளரமாட்டாது. நாம் இலகுவாக இனங்காணப்பட்டு விடுவோம்.[135] என்று கூறினாள். இன்னொரு பெண் பிள்ளை கூறும் பொழுது, தான் பயிற்சி நிலையத்தில் இருந்து தனது தங்கும் விடுதிக்கு செல்லுகின்ற வழியில் அச்சுறுத்தப் பட்டதாகவும் இதைவிட பத்திரமாக பயிற்சி நிலையத்திற்கு செல்வதற்கு தனி வழியேதும் இருக்குமா[136] என்று அறிய விரும்பினாள்.. பயிற்சி நிலையமானது இவர்களின் தங்கு விடுதியில் இருந்து பதினைந்து நிமிடத்தை விட குறைந்த நடை தூரத்திலேயே இருக்கிறது. ஆனாலும், அவர்கள் அம்பலப்பட்டு ஆபத்தில் சிக்கி கொள்வதற்கு அச்சிறிய நேரம் கூட போதுமானது.

தங்களுடைய தலைமயிர்கள் சரியாக வளரும் வரை தங்களுடைய எதிர்காலத்தைப் பற்றி நிற்சயமாக எந்த திட்டத்தையும் மேற்கொள்ள தம்மால் முடியாது என்றே அவர்களில் பலர் உணர்கின்றனர். 18வயதையுடைய விமலா கூறுகின்ற பொழுது, எனது குடும்பத்தில் 11 அங்கத்தவர்கள்.. எனது தந்தையாருக்கு மட்டுமே தொழில் உண்டு. ஒரு தொழிற்சாலையிலோ, ஓர் புடவை ஆலையிலோ, அல்லது ஓர் கடையிலோ சென்று நான் தொழில் செய்யமுடியாத நிலையில் இருக்கிறேன். எனது தலைமயிர் வளரும்வரை நான் காத்து இருக்க வேண்டும்.[137]

### *ஆட்சேர்ப்பை தடுப்பதில் பெற்றோர்களின் பங்கு*

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பேட்டி கண்ட பல தனிநபர்களும், சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதற்கு எதிராக எழுந்துள்ள பெற்றோர்களின் புதிய பங்கு தொடர்பாக விபரித்தார்கள். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் ஹரேந்திர டீ சில்வா எம்மிடம் கூறுகையில், பத்து வருடத்திற்கு முன்பு நாம் காணமுடியாமல் இருந்த ஒன்றை, இன்று காணக்கூடியதாக இருக்கிறது. தாய்மார்கள் எதிர்க்கிறார்கள். குடும்பங்கள் எதிர்க்கின்றன.[138] யுனிசெப் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் எம்மிடம் கூறுகையில், பெற்றோர்கள் வர வர பலம்

---

135 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘செல்வமணயுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

136 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘றஞ்சினியுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து. இன்னும் பல பெண்களும் பிரத்தியேகமாக கதைக்கின்ற பொழுது இதே உணர்வினை பிரதிபலித்தனர்.

137 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ‘‘விமலாவுடன்’’நடத்திய பேட்டியில் இருந்து.

138 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 4ம் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கொழும்பு, இனது தலைவர் ஹரேந்திர டீ சில்வாவுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

பெறுவதை நாம் காண்கின்றோம். அவர்கள் ஏப்ரல், மே மாதங்களில் புலிகள் இயக்கத்தின் பிளவின்போதும் அதனைத் தொடர்ந்தும் மிக உறுதியுடனும் ஆத்திரத்துடனும் காணப்பட்டனர். ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வதற்காக நாங்கள் எங்கள் பிள்ளைகளை அனுப்பவில்லை என அவர்கள் கூறினார்கள்.[139]

மட்டக்களப்பை சேர்ந்த ஓர் உள்ளூர் செயற்பாட்டாளர் கூறுகின்ற பொழுது பெற்றோர்களுடைய இவ் எதிர்ப்பு எழுச்சியானது குறிப்பிடத்தக்க ஓர் வளர்ச்சியாகும். அது இரு காரணங்களின் அடிப்படையில் மேலெழுந்ததாகும். ஒன்று சிறார்கள் படையில் சேர்க்கப்பட்டது தொடர்பாக பெற்றோர்களிடம் ஏற்பட்டிருந்த மனக் களைப்பு. மற்றையது புலிகள் இயக்கத்தின் பிளவைத் தொடர்ந்து கிழக்கில் அவர்களுக்கு இருந்த பிடி தளர்ந்து போனமை என்பவையாகும்.[140]

2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மூன்று நாட்கள் சாந்தனகம் முகாமில் தங்களது பிள்ளைகளை விடுவிக்க கோரி சென்றிருந்த பெற்றோர்களுடன் இருந்த ஒரு பெண்ணின் தாய் தனது மகளைக் காப்பாற்றுவது தொடர்பாக தனது உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகையில், ‘‘அவர்கள் என்னை சுட்டுக் கொன்றாலும், நான் எனது பிள்ளையை ஒளித்தே தீருவேன்” என்றார்.[141]

இன்னுமொரு அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதி கூறுகையில் பெற்றோர்களின் இந்த செயற்பாடானது சிலவேளை தற்காலிகமானதாக இருக்கலாம் என எச்சரித்தார். ‘‘ஆரம்பத்தில் பிள்ளைகள் வீடுகளுக்கு திரும்பி வந்ததன் பின், புலிகள் இயக்கத்தால் அவர்கள் மீண்டும் எடுத்து செல்லக்கூடாது என்றே பெற்றோர்கள் இவ்வாறு செயற்பட்டனர். ஆனால் இப்போது அவர்களை பயம் ஆட்கொண்டு உள்ளது………. ஏனைய பிரதேசங்களில் பெற்றோர்கள் தாக்கப்பட்டும், அவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டும் உள்ளன. அதே வேளை இதுவரை எவரும் கொல்லப்படவில்லை. ஆனால் எவரும் அவ்வாறு கொல்லப்படுவதை விரும்பவும் இல்லை.’’[142]

மனித உரிமைகள் கண்காணிப்பு குழு தனது கிழக்கு மாகாண விஜயத்தை முடித்துக் கொண்டதன் பின்னரான உள்ளூர் தகவல்களின் அடிப்படையில், தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், அரசியல் படுகொலைகள் மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை மூலம் பெற்றோர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளானது பெருமளவில் சிதைக்கப் பட்டுவிட்டதாகவே தெரிய வருகின்றது.[143]

---

[139] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பில் உள்ள யுனிசெப் நிகழச்சித்திட்ட அதிகாரி (பாதுகாப்பு) கிறிஸ்ரீன் வொட்கின்ஸ் (Christine Watkins)உடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[140] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் செயற்பாட்டாளர் ஒருவருடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[141] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்திய பேட்டியில் இருந்து.

[142] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[143]மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஒக்டோபர் 19ல் மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவருடன் மேற்கொண்ட தொலைபேசி பேட்டியில் இருந்து.

## VIII. ஆட்சேர்ப்பு மற்றும் சிறார்கள் படையினராக பாவிக்கப்படுதல் என்பவற்றை முடிவுக்கு கொண்டு வருவதில் புலிகள் இயக்கத்தின் கடப்பாடு

சிறார்களை படையில் சேர்ப்பதையும் தொடர்ச்சியான ஆட்சேர்ப்பையும் தாம் முடிவுக்கு கொண்டு வருவதாக புலிகள் இயக்கத்தினர் பல தடவைகள் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளனர். குறிப்பாக 1998ம் ஆண்டு மே மாதத்தில் சிறீ லங்காவிற்கு விஜயம் செய்த சிறார்கள் மற்றும் ஆயுத மோதல்கள் விடயம் தொடர்பான, ஐ.நா செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி ஒலாரா ஒட்டுண்ணுவை சந்தித்த பொழுது, 17 வயதுக்கு குறைந்தவர்களை தாம் படைகளில் சேர்த்துக் கொள்வதில்லை என்றும், 18 வயதுக்கு குறைந்தவர்களை சண்டைகளில் ஈடுபடுத்துவது இல்லை என்றும் புலிகள் இயக்கத்தினர் உறுதியளித்தனர்.[144] அதேவேளை 2001ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் வட புலத்திற்கு விஜயம் செய்த யுனிசெப் அமைப்பின் பிரதி நிறைவேற்று அதிகார பணிப்பாளரான ஆந்திரே றொபர்புறொய்ட் இடமும் (Andre Roberfroid) மீண்டும் ஒரு உறுதிப் பாட்டை மீண்டும் புலிகள் இயக்கம் வழங்கியது.[145] 2003ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த யுனிசெப் அமைப்பின் நிறைவேற்று அதிகார பணிப்பாளர் கரோல் பெலாமி (Carol Bellamy)யும் புலிகள் இயக்கத்தினரிடம் சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கையை நிறுத்துவது தொடர்பாக மீண்டும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தார்.[146]

2003ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முற்பகுதியில் இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் தமது சமாதானப் பேச்சு வார்த்தையின் ஐந்தாவது சுற்றை பேர்லினில் நடத்தினர். குறிப்பாக யுனிசெப் அமைப்பு உட்பட சிறீ லங்கா கண்காணிப்பு குழுவினது (SLMM), மற்றும் பாரிய சர்வதேச அழுத்தங்களின் காரணமாக, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கண்காணிக்கின்ற விடயத்தில் சிறார் படையினர் தொடர்பான விடயமானது நோர்வே தலைமையிலான பகுதியினரால் இவ் ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் மைய விடயங்களில் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்பட்டது. பேச்சு வார்த்தைகளின் அனுசரணையாளரான நோர்வே அதிகாரிகள் வெளியிட்ட கருத்துக்களின்படி, “18 வயதிற்கு உட்பட்ட நபர்களை குறிவைத்து ஆட்சேர்ப்புக்கான பிரச்சாரங்களையும், முற்று முழுதான ஆட்சேர்ப்பு நடவடிக்கையையும் நாங்கள் நிறுத்தி விடுகிறோம்”[147] என புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் வாக்குறுதி அளித்ததாக கூறப்படுகிறது. இவ்வாக்குறுதி அளித்தலானது முன்னர் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொண்ட, சண்டையில் ஈடுபடுத்தும் நபர்களின் ஆகக் குறைந்த வயதெல்லை 18ஆக இருக்க வேண்டும் என்பது

---

144 சிறார்களும் ஆயுத மோதல்களும் தொடர்பான விசேட பிரதிநிதியின் காரியாலயத்தில் இருந்து http://www.un.org/special-rep/children-armed-conflict/English/commitments.html(2004 செப்டம்பர் 14ம் திகதி மீள நினைவுறுத்தப் பட்டது)

145 “ சிறீ லங்காவில் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கும் சிறார்கள்” 2001யூலை 20ம் திகதி யுனிசெப்பின் பத்திரிகை அறிக்கை.

146 *யுத்தத்தினால் பாதிக்கபட்ட சிறார்களுக்கான செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை 2003*, யுனிசெப் 2004ஜனவரி.

147 ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு, “சிறிலங்கா:புலிகள் இயக்கத்தில் உள்ள சிறார்படையினரின் தலைவிதி,”சிறார்கள் உரிமை தொடர்பான ஆசிய வாராந்த செய்திமடல், தொகுப்பு 02,இல் 07,2003பெப்ரவரி12.*http://acr.hrschool.org/mainfile.php/0114 (2004அக்டோபர் 13ல் மீள நினைவுறுத்தப்பட்டது)*

மட்டுமல்ல, ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கும் இது பொருந்தும் என்ற உறுதிப்பாட்டை மேலும் பலப்படுத்துவதாகவே அமைந்தது.

2003ம் ஆண்டு மார்ச் மாதத்தில் யுனிசெப் அமைப்பும் புலிகள் இயக்கமும் இணைந்து, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயல் திட்டம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக உறுதிகூறி பத்திரிகைகளுக்கான ஓர் பொது அறிக்கையை வெளியிட்டனர். புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அப்போது கருத்து தெரிவிக்கையில், ''யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்கள் பற்றிய பொறுப்புணர்வின் பிரகாரம் அவர்களை படைகளில் சேர்த்துக் கொள்வதில்லை என்னும் எமது உறுதி இன்னமும் உறுதியாகவே இருக்கிறது.'' என்று கூறினார். அதே வேளை, தாம் தமது சகல இராணுவத் தளபதிகளுக்கும் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர்களுக்கும் 18 வயதுக்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளக்கூடாது [148] என்பதை எழுத்து மூலம் அறிவித்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஒரு மாதத்தின் பின்னர் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் புலிகள் இயக்கம், அங்கத்தவர்கள், இலங்கை அரசாங்கம், யுனிசெப் அமைப்பு மற்றும் சர்வதேச அமைப்புக்களின் 75 பேர் கூடி சந்தித்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்கள் தொடர்பான செயல் திட்டம் (Action Plan) தொடர்பாக பொது ஏற்றுக் கொள்ளலுக்கு வந்தனர். 2003ம் ஆண்டு யூன் மாதத்தில் புலிகள் இயக்கத்தினரும் அரசாங்கமும் உத்தியோக பூர்வமாக கையொப்பமிட்ட இச் செயல் திட்டத்தின்படி, புலிகள் இயக்கத்தின் வசம் தற்போதுள்ள சகல சிறார் போராளிகளையும் விடுவிப்பது, மற்றும் சிறார் சேர்ப்பை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக புலிகள் இயக்கத்தின் அதிகாரிகள் உறுதி கூறியுள்ளனர். ''தற்போது புலிகள் இயக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறார்களை விடுதலை செய்வது, மற்றும் புலிகள் இயக்கத்தில் சுயேட்சையாக சேர்ந்து கொள்ள விரும்புகின்ற சிறார்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு அளிப்பது தொடர்பாக தமது கரிசனையை புலிகள் இயக்கமானது அழுத்தமாக தெரிவிப்பதோடு, இது தொடர்பாக உள்ளூர் மற்றும் சர்வதேச ஸ்தாபனங்களுடன் மிக நெருக்கமாக ஒத்துழைப்புடன் பணியாற்றும் என்றும், புலிகள் இயக்கத்தின் எந்த ஒரு மட்டத்திற்கும் சிறார்களை சேர்த்துக் கொள்வதை தவிர்ப்பது தொடர்பாகவும் புலிகள் இயக்கமானது முற்று முழுதான உறுதியை பேணுகின்றது'' என்றே இந்த செயல் திட்டத்தின் மூலம் கூறப்படுகிறது.[149]

இச்செயல் திட்டமானது (கீழே விரிவாக ஆராயப்படுகிறது), புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்படுகின்ற சிறார்களை ஏற்றுக் கொள்வதற்கான மூன்று இடைமாற்று நிலையங்களை நிறுவுகின்ற விடயத்தையும் உள்ளடக்கி இருப்பதோடு, அந்நிலையங்கள் யுனிசெப் அமைப்பினாலும் புலிகள் இயக்கத்தின் மனிதாபிமான பிரிவான தமிழர் புனர்வாழ்வு கழகத்தினாலும் கூட்டாக நிர்வகிக்கப்படும் என்னும்

---

[148] 'யுனிசெப், சிறுவர்களுக்கான புதிய நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ்ப் புலிகள் ஏற்றுக் கொண்டார்கள்', பத்திரிகை அறிக்கை 2003 மார்ச்4 *http://www.unicef.org/media/ media_7304.html (2004ஒக்டோபர் 13.ல் மீள நினைவுறுத்தப்பட்டது)*

[149] *செயல் திட்டம்: வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான தேவைகளையும் கவனிப்புகளையும் கையாளுதல்: யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான ஏப்ரல் 10-11 வரையான பயிற்சிப் பட்டறையின் பிரதிபலன் தொடர்பான அறிக்கை,* 2003ஏப்ரல் 22ம் திகதி, பக்கம்.3

விடயத்தையும் உள்ளடக்கி இருக்கிறது. மேலும் அது பின்வரும் நிபந்தனைகளையும் உள்ளடக்கி இருக்கிறது: புலிகள் இயக்கம், அரசாங்கம் மற்றும் ஆயுதப் படையினருக்கு, சிறார்களின் உரிமைகள் தொடர்பான பயிற்சி- வடக்கு கிழக்கில் உள்ள சிறார்களுக்கென யுனிசெப் அமைப்பின் நிர்வாகத்தின் கீழான ஓர் கண்காணிப்பு வேலைத்திட்டம்- தொழில்சார் பயிற்சி, கல்வி, சுகாதாரம் மற்றும் நிறை உணவு சேவைகள், மனோவியல் கவனிப்பு போன்றவற்றிற்கு, சிறுதொகை நிதி திட்டங்கள் (Micro Credit) என்பவற்றையும் உள்ளடக்கி இருக்கிறது.[150]

## IX. தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் புலிகள் இயக்கம் தவறியுள்ளமை.

புலிகள் இயக்கமானது சிறார்களை படையில் சேர்ப்பது மற்றும் அவர்களை பயன்படுத்துவது என்பதை முடிவுக்கு கொண்டுவரும் தமது கடப்பாட்டை நிறைவேற்றத் தவறி உள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்த காலகட்டத்தில் சிறார்களை படையில் சேர்ப்பது தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளதோடு, அது அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உண்மையில் அதிகரித்துள்ளது. அத்துடன் புலிகள் இயக்கத்தின் வன்னிப் படைகளுக்கும் பிரிந்து சென்ற கருணா பிரிவினருக்கும் இடையே நடந்த நேரடி மோதல்களில் சிறார்களும் பங்குபற்றி உள்ளனர். அதே வேளை இடைமாற்று நிலையங்களுக்கும் நேரடியாக குடும்பங்களிடமும் விடுவிக்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையானது, செயல் திட்டத்தின் கீழ் எதிர் பார்க்கப்பட்டதைவிட மிக மிக குறைவாகும்.

2002ம் ஆண்டு ஜனவரிக்கும், 2004ம் ஆண்டு நொவம்பர் 1ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 4,600 வயது குறைந்தோர் ஆட்சேர்ப்பில் அகப்பட்டு இருப்பதாக யுனிசெப் அமைப்பு ஆவணப்படுத்தி உள்ளது.[151] இதே காலகட்டத்தில் தமது படைகளில் இருந்து 1,208 பேரை புலிகள் இயக்கத்தினர் விடுவித்துள்ளனர்.[152] 2003ம் ஆண்டு யூன் மாதத்தில் இருந்து செப்டம்பர் 2004ம் ஆண்டுவரை குறிப்பாக சிறுவர்களுக்கான செயல் திட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்பு, புலிகள் இயக்கத்தினால் படையணிகளில் புதிதாக சேர்க்கப்பட்ட அல்லது மீள சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையானது, அவர்களால் விடுவிக்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கையைவிட இரு மடங்கிற்கு மேலானதாகும்.[153] சிறார்கள் சேர்க்கப்பட்டது தொடர்பாக 2004ம் ஆண்டு நொவம்பர் 1ம் திகதி வரையான

---

150 சிறார் படையினர்களை மீள குடும்பங்களுடன் இணைத்தல் என்பது செயற்திட்டத்தின் ஒரு அம்சம் மட்டுமே. ஏனைய பல வழிகளிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்கள் தொடர்பாகவும் செயல் திட்டம் தன் கவனத்தை செலுத்துகிறது.

151 இவர்களில் சில சிறார்கள் 2002ம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கு முன்னர் பிடிக்கப்பட்டவர்கள்.

152 173 சிறார்கள் இடைமாற்ற நிலையங்களுக்கு நேரடியாக கையளிக்கப்பட்ட அதே வேளை 918பேர் நேரடியாக அவர்களின் குடும்பங்களிடம் கையளிக்கப்பட்டனர். இவ் எண்ணிக்கைக்குள் ஏப்ரல் மாதத்தில் கருணா பிரிவினரோடு ஏற்பட்ட மோதலில் பிடிக்கப்பட்டு இரு நாட்களின் பின் விடுவிக்கப்பட்ட 280 சிறார்களும் உள்ளடக்கப் படுகின்றனர்.

153 2003 யூன் மாதம் முதல் 2004 ஒக்டோபர் மாதம் வரை 1,424 ஆட்சேர்ப்பு சம்பவங்கள், 323மீள் ஆட்சேர்ப்பு சம்பவங்கள், 381விடுவிப்பு சம்பவங்கள் என்பவற்றை யுனிசெப் பதிவு செய்துள்ளது, இதில்

யுனிசெப் அமைப்பின் ஆவணத்தின் படி, இன்னும் 1,395 சிறார்கள் விடுவிக்கப்படாது எஞ்சி உள்ளனர்.[154] அவர்களில் அநேகமானோர் புலிகள் இயக்கத்திடம் இருப்பதாகவே அனுமானிக்கப்படுகிறது.

அதே வேளை உண்மையாக புலிகள் இயக்கத்தினால் சேர்த்துக் கொள்ளப்பட்ட சிறார்கள் தொகையில் ஒரு பகுதியினர் மட்டுமே தம்மால் ஆவணப்படுத்தப் பட்டுள்ளதாக யுனிசெப் நிறுவனம் குறிப்பிட்டுச் சொல்கிறது. புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்பட்ட அல்லது வீடுகளுக்கு திரும்பிய சிறார்களில் 25வீதமானோர் மட்டுமே முன்னர் யுனிசெப் நிறுவனத்தின் புள்ளி விபரக் கோவைக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளனர்.

சிறார்கள் தொடர்பான செயல் திட்டத்திற்கு இசைவாக பணியாற்றுவதற்கு புலிகள் இயக்கத்திற்கு உள்ள விருப்பமின்மையே இதன் வெளிப்படையான உண்மையாகும். 2003ம் ஆண்டு ஒக்டோபர் 3ம் திகதி, சிறார்களை பொறுப்பேற்பதற்கான முதலாவது இடைமாற்ற நிலையம் திறக்கப்பட்ட அன்றைய தினமே புலிகள் இயக்கத்தினர் 49 சிறார்களை கையளித்தனர். அச்சிறார்கள் சுயமாக தம்மோடு சேர்ந்துகொள்ள வந்தவர்கள் என்றும் அவர்களின் வயதெல்லை காரணமாக அவர்கள் விடுவிக்கப்படுவதாகவும் புலிகள் இயக்கத்தால் கூறப்பட்டது. ஆனால் இது நடைபெற்று சில மணித்தியாலங்களுக்கு இடையிலேயே கிழக்கில் ஒரு நகரத்தில் 23 சிறார்கள் புலிகள் இயக்கத்தினால் கடத்திச் செல்லப்பட்டதாக மிக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் கூறுகின்றன.[155] இடைமாற்று நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட மாதத்தில் மாத்திரம் புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் பிடித்து செல்லப்பட்டது தொடர்பாக, 80 முறைப்பாடுகள் தமக்கு கிடைத்ததாக சிறீ லங்கா கண்காணிப்பு குழுவினர் தெரிவிக்கின்றனர்.[156] இம்முறைப்பாடுகளில் பெரும்பாலானவை கிழக்கில் இருந்தே கிடைக்கப் பெற்றுள்ளன. தமது விசாரணைகளின் படி மொத்தமாக கடத்திச் செல்லப்பட்டோர்களின் எண்ணிக்கையில் பத்து வீதம் மட்டுமே தம்மிடம் அறிவிக்கப்பட்டுள்ளதாக சிறீ லங்கா கண்காணிப்பு குழுவினர் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தெரிவித்துள்ளனர்.[157]

2003 ஒக்டோபர் மாதம் முதன் முதலாக புலிகள் இயக்கத்தினால் 49 சிறார்கள் விடுவிக்கப்பட்ட பின்னர், இடைமாற்று நிலையங்களிடம் கையளிக்கப்பட்ட

---

[154] 2004 நொவம்பர் 2ம் திகதி மின்னஞ்சல் தொடர்பாடல் மூலம் யுனிசெப் அமைப்பானது மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவிற்கு வழங்கிய தகவல்களில் இருந்து. புலிகளால் முறையாக விடுதலை செய்யப்பட்ட சிறார்கள் தொடர்பான விபரங்களுக்கு மேலதிகமாக, புலிகள் இயக்கத்தில் இருந்து 507 சிறார்கள் விலகி ஓடியது, கருணா படையில் இருந்து 1,702 சிறார்கள் விடுவிக்கப்பட்டது 5 சிறார்கள் இறந்துபோனது என்பவற்றையும் யுனிசெப் அறிக்கைப் படுத்தியுள்ளது. அதனுடைய புள்ளி விபரக் கோவையில் உள்ள தகவல்களின் படி சுமாராக 43வீதமானோர் பெண்களும், 57வீதமானோர் ஆண்களும் ஆவர்.

[155] "புலிகள் இன்னமும் சிறார்களை சேர்க்கின்றனர்" பிறான்சிஸ் ஹரிசன், பீபீசி செய்தி (வெப்தளம்), 2003 டிசம்பர் 10 *http://news.bbc.co.uk/1/world/ south_asia/3306725.stm* (2002 ஆண்டு ஒக்டோபர் 13ம் திகதி மீள நினைவுறுத்தப்பட்டன)

[156] Ibid

[157] 2004மம் ஆண்டு மே மாதம் சிறீ லங்கா தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு

சிறார்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்துள்ளது. அது தனது முதலாவது வருட செயற்பாட்டில் மொத்தமாக 172 சிறார்களையே பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. அந்நிலையமானது 100 சிறார்களை ஒரே நேரத்தில் வைத்திருக்கக் கூடிய வசதிகளை கொண்டிருந்தாலும், ஒரு பொழுதுமே அது 49 சிறார்களுக்கு மேல் கொண்டிருக்கவில்லை, என அங்குள்ள அதிகாரிகள் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தனர். அத்துடன் 2004ம் ஆண்டு யூன் 14ம் திகதியில் இருந்து யூலை 19ம் திகதிவரை, ஆறு வார காலத்திற்கு அந்த நிலையமானது முற்றும் முழுதாக வெறுமையாகவே இருந்துள்ளது.[158]

புலிகள் இயக்கத்தினால் இத் தங்குமடங்களில் கையளிக்கப்பட்ட சிறார்களின் விபரங்களை பார்க்கையில், அச்சிறார்கள் முற்று முழுதாக புலிகள் இயக்கத்திற்குள் உள்வாங்கப்பட்ட அங்கத்தவர்களாக தெரியவில்லை. அவர்கள் தங்குமடங்களிடம் கையளிப்பதற்காக வென்றே பிரத்தியேகமாக பிடிக்கப்பட்ட சிறார்களாக இருக்கக் கூடும். யுனிசெப் அமைப்பின் கருத்துப்படி புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்பட்ட சிறார்களில் 70 வீதமானோர் புலிகள் இயக்கத்துடன் நான்கு மாதங்களுக்கு உட்டபட்ட காலமே இருந்துள்ளதாக தெரிய வருகிறது. அதிலும் சிலர் விடுவிக்கப் படுவதற்கு ஓரிரு வாரங்கள் அல்லது ஓரிரு தினங்களுக்கு முன்னரே புலிகளால் பிடிக்கப்பட்டுள்ளனர். இவ் இடைமாற்று நிலையத்தில் வைத்து மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவினரால் 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பேட்டி காணப்பட்ட ஐந்து சிறார்களில், ஒருவர் மட்டுமே புலிகள் இயக்கத்துடன் இரண்டு மாதங்களுக்கு மேல் இருந்துள்ளார். யுனிசெப் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (Save the Children Fund) ஆகிய இருசாரார்தும் அபிப்பிராயப்படி, புலிகளால் இவ்வாறு கையளிக்கப்பட்ட சிறார்களில் சிலர், பயிற்சிகள் செய்வதில் கஷ்டங்களுக்கு முகம் கொடுத்தோர், மருத்துவ அல்லது கட்டுப்பாடு பிரச்சினை உடையோர் போன்ற காரணங்களுக்காக புலிகள் இயக்கத்திற்கு அவசியப் படாதவர்களாக இருக்கக் கூடும். அத்தோடு நாம் அந்நிலையத்திற்கு விஜயம் செய்யும்போது அங்கிருந்த 15 பெண்களில் ஓரிருவரைத் தவிர ஏனையோரின் தலைமயிர்கள் நீளமாகவே காணப்பட்டன. புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்களாக ஆக்கப்படுவதற்கு கொண்டு செல்லப்படும் பெண்களின் தலைமயிர்கள், அவர்கள் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டவுடனேயே கட்டையாக வெட்டப்பட்டு விடும். மிக உயர்ந்த பொறுப்பில் இருக்கின்ற பெண் அங்கத்தவர்களை தவிர நீளத் தலைமயிர்களுடன் இருப்பவர்கள் இராணுவ சேவைக்காக கொண்டு செல்லப்படாதவர்கள் என்பதையே குறிக்கும் எனக் கருதலாம்.

புலிகள் இயக்கத்தின் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் எஸ்.புலித்தேவன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறும்பொழுது, புலிகள் இயக்கமானது ''இவ்விடயம் தொடர்பாக மிக கடுமையாக முயற்சிக்கிறது'' என்றார். அத்துடன், புலிகள் இயக்கம் பலவந்த ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதை மறுத்த அவர் ''நாங்கள், ஆட்களை எம்மோடு இணைந்து கொள்ளும்படி கேட்பதில்லை, அவர்கள் தாமாகவே வந்து எம்மோடு இணைந்து கொள்கின்றனர். அச்சுறுத்தல் மூலம் பலவந்தமாக ஆட்சேர்ப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. புலிகள் இயக்கமானது சுயேட்சையாகவே தமது சேவையை மக்களுக்கு வழங்குகின்றனர்''.

---

[158] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சி இடைமாற்ற நிலையத்தில் பணியாளர்களோடு நடத்திய பேட்டியில் இருந்து

அவர் மேலும் கூறுகையில் ‘‘ஆங்காங்கே சில குறைபாடுகள் இருக்கலாம். எமது சில படையினர் ஒரு சில சிறார்களை பலவந்தப்படுத்தி இருக்கலாம். ஆனால் அதுவே, புலிகள் இயக்கத்தின் தலைமையானது சிறார்களை பலவந்தமாக சேர்க்கும் நடவடிக்கைக்கு பச்சைக் விளக்கு காட்டிவிட்டதாக அர்த்தமாகிவிடாது……… ஆட்கடத்தல் என்பது மிக குறைவாகவே நிகழ்கிறது’’ என்றும் அவர் மேலும் கூறினார். ஆனால் புலிகள் இயக்கமானது தாமே ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச சட்டத்தின்படி ‘‘சுயாதீனமாக’’ வந்துசேரும் சிறார்களை படையில் சேர்த்துக்கொள்வதும் அச்சட்டத்தை மீறும் செயல் என்கின்ற விடயம் தொடர்பாக புலித்தேவன் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை.[159]

புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு செயலாளர் சு.ப தமிழ்ச்செல்வன் மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவுடன் நடத்திய சந்திப்பு ஒன்றின்போது சிறார் படையினர் பற்றி கருத்து தெரிவிக்கையில் ‘‘எங்களிடம் அந்த வகையான தன்மை இல்லை’’[160] சிறார்களை பலவந்தமாக படையில் சேர்ப்பதை புலிகள் இயக்கமானது ஓர் வழக்கமாக கொண்டிருக்கவில்லை என அவர் கூறினார். ‘‘பலவந்த ஆட்சேர்ப்பு என்கின்ற பதத்தையே நாம் நிராகரிக்கின்றோம். இல்லை, நிட்சயமாக இல்லை…… நாங்கள் அவ்வாறு செய்வது கிடையாது எவருமே அவர்களைப் பலவந்தப் படுத்துவது கிடையாது…..’’[161] சில சிறார்கள் வறுமை காரணமாகவும் கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் இன்மையினாலும் அல்லது அவர்களுடைய பெற்றோர்களை இழந்ததினால் கவனிப்பார் அற்ற நிலையிலும் தம்மோடு வந்து இணைந்து கொள்வதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர்கள் வயது குறைந்த சிறார்கள் என்பதை இனங்கண்டதும் உடனடியாக அவர்களை நாம் இடைமாற்று நிலையங்களுக்கு அனுப்பிவிடுவோம் என்றும் கூறினார்.

புலிகள் இயக்கமானது பல வருடங்களாக சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்கின்றது என்பதை காட்டும், எவ்விதத்திலும் மறைக்கப்பட முடியாத பல சாட்சியங்கள் இருக்கையில், தமிழ்ச்செல்வன் மிக வசதியாக மொத்தக் குற்றச்சாட்டையும் கேணல். கருணாவின் மீது சுமத்தினார். கேணல் கருணாமீது பிரபாகரன் ‘‘ஒழுக்காற்று’’ தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதான காரணமே கருணா சிறார்களை படையில் சேர்த்துக் கொண்டதுதான் என தமிழ்ச்செல்வன் கூறினார். கருணா சிறார்களை படையில் சேர்த்துக் கொள்ளும் முறையானது ‘‘கொடூரமானதும் இரக்கமற்றதும்’’ என்று அவர் மேலும் விபரித்தார். தமிழ்ச்செல்வன் மேலும் கூறுகையில் கருணாவின் படையில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறார்கள் அனைவரும் வன்னிப் புலிகள் இயக்கத்தினால் ‘‘அவர்களின் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டு விட்டனர்’’ என்றார். ஆனால் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சேகரித்த தகவல்கள் புள்ளி விபரங்கள் அடிப்படையில், கருணாவின் படையில் இருந்த சிறார்களில்

---

159 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சியில் புலிகள் இயக்கத்தின் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் எஸ்.புலித்தேவனுடன் நடத்திய பேட்டியில் இருந்து

160 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சியில் புலிகள் இயக்கத்தின் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் எஸ்.புலித்தேவனுடன் நடத்திய பேட்டியில் இருந்து

161 Ibid

பெரும்பாலோர் ஒன்றில் தாமாகவே தமது வீடுகளுக்கு சென்றனர் அல்லது கருணாவின் தளபதிகளினால் வீடுகளுக்கு செல்வதற்கு ஊக்குவிக்கப்பட்டனர்.

புலித்தேவனைப் போலவே தமிழச்செல்வனும், சிறார்கள் சேர்க்கப்படுவது தொடர்பாக ஆங்காங்கே சில ''தவறுகள்'' இடம்பெற்றிருக்கலாம் என்பதை ஏற்றுக் கொண்டதோடு, ''தலைமைத்துவமானது தராதரங்களை அமுல்படுத்துவதில் முழு நேரமும் மிக ஊக்கமாக இருந்ததில்லை'' என்றார். மேலும் அவர், செப்டெம்பர் நடுப்பகுதியில் சிறார்களை சேர்த்துக் கொண்டதிற்கு பொறுப்பான சில தனிநபர்கள் மீது புலிகள் இயக்கமானது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்ததாக கூறினாலும், அதுபற்றிய மேலதிக தகவல்கள் எதையும் அவர் வழங்கவில்லை.

யுனிசெப் அமைப்பும் சர்வதேச சமூகமும் சிறார் படையினர் தொடர்பான விடயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக தமிழ்செல்வனும் புலித்தேவனும் முறையிட்டனர். இதுபற்றி புலித்தேவன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறும்பொழுது:

> சிறார்களுக்கு அதிக உரிமைகள் உள்ளன, அதில் சிறார் படையினர் என்னும் விடயம் 10 அல்லது 11வது இடத்திலேயே இருக்கிறது. ஆனால் பலர் சிறார்களின் முக்கியமான உரிமைகளை எல்லாம் மறந்துவிட்டு சிறார் படையினர் என்கின்ற விடயம் பற்றியே அதிக கவனம் செலுத்துகின்றனர். தமது வீடுகளில் பயனுள்ள எதையுமே அச்சிறார்களால் அடையமுடிவதில்லை – பாடசாலைகள் கிடையாது அப்பிரதேசங்கள் ஆக்கிரமிப்புக்கு கீழ் உள்ளன. பலர் இவை பற்றி எல்லாம் கவனிக்காது தனியாக சிறார் படைகள் தொடர்பாகவே இவர்கள் கவனம் செலுத்துகின்றனர். இச்சிறார்கள் ஏன் வந்து சேருகிறார்கள் என்பதையிட்டு நாம் கவனத்தை செலுத்த வேண்டும்.[162]

புலிகள் இயக்கத்தோடு தொடர்புள்ள, புதிதாக நியமிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான வடகிழக்கு ஆணைக்குழுவின தலைவர், வயது குறைந்த சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக கிடைக்கும் தகவல்களைப்பற்றி தமது கரிசனையை வெளியிட்டார். அவர் கூறும் பொழுது ''புலிகள் இயக்கமானது இது தொடர்பாக தம்மை சீர்செய்து கொள்ளவேண்டும் என்றார். இது தொடர்பாக நாம் பணியாற்றுவோம், அதில் எந்த சந்தேகமும் இல்லை…''[163] ஆனால் என்றனர். எவ்வாறாயினும் அவரும், புலிகள் இயக்கமானது சிறார்களை படையில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்கின்ற விடயத்திற்கு அதிக முக்கியத்துவம்


---

[162] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சி புலிகள் இயக்கத்தின் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் எஸ்.புலித்தேவனுடன் நடத்திய பேட்டியில் இருந்து

[163] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சியில் உள்ள வடக்கு கிழக்குகான மனித உரிமைகள் ஆணைக்குழு(NECOHR) தலைவர் வண.பிதா கருணாரட்ணத்துடன் நடத்திய பேட்டியில் இருந்து. இவ் ஆணைக்குழுவானது தன்னை சுதந்திரமான அங்கமாக கூறிக்கொண்டாலும் அது புலிகளின் ஆதரவுடனேயே நடத்தப்படுகிறது. பின்னர் 2004 ஒக்டோபர் 5ம் திகதி ஜெனீவாவில் நடந்த கூட்டத்தின் பொழுது வண பிதா கருணாரட்ணம் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவிக்கும் பொழுது புலிகள் இயக்கத்திடம் இருந்து 4 சிறார்களை விடுவிப்பது தொடர்பான விடயத்தில் ஆணைக்குழு வெற்றி கண்டதாகவும், இது போன்ற இன்னும் பலவற்றை விசாரித்து வருவதாகவும் கூறினார்.

கொடுக்கப்படுகிறது என குற்றம் சாட்டினார். “பிள்ளைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக சர்வதேச சமூகத்துடன் நான் இணங்குகிறேன். ஆனால் இவ் அறிக்கைகளில் நான் வெறுமனே குற்றச்சாட்டுக்களை மட்டுமே காண்கின்றேன். புலிகள் இயக்கத்தினர் அதிகமான நல்ல விடயங்களை மேற்கொண்டு உள்ளனர். ஆனால் வயது குறைந்தோரை படையில் சேர்த்துக் கொள்வது பற்றி மட்டுமே பலரும் பேசுகின்றனர்.”[164]

## சிறார்கள் படைகளில் சேர்ப்பும் (மீள சேர்த்தல் உட்பட) விடுதலையும் 2002 ஜனவரி – 2004 ஒக்டோபர்




யுனிசெப் அமைப்பு அறிந்த வகையில் வயது குறைந்தோர் படைகளில் சேர்க்கப்பட்டது தொடர்பான புள்ளி விபரங்களே இங்கு தரப்பட்டுள்ளன. இப்புள்ளி விபரத்திற்கும் படைகளில் சேர்க்கப்பட்ட/விடுவிக்கப்பட்ட சிறார்களுக்கு இடையில் உள்ள வேறுபாடானது (Overlap) 25% அளவில் இருக்கும்.

---

[164] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சியில் உள்ள வடக்கு கிழக்குகான மனித உரிமைகள் ஆணைக்குழு(NECOHR) தலைவர் வண.பிதா கருணாரட்ணத்துடன் நடத்திய பேட்டியில் இருந்து.

குறிப்பு: 1,702 சிறார்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என யுனிசெப் பதிவு செய்துள்ளது. இச்சிறார்கள் அனைவரும் புலிகள் இயக்கத்தால் விடுவிக்கப் படுகின்றபோது விடுதலைக்கான முறையான கடிதங்களைப் பெற்றிருந்தாலே விடுவிக்கப்பட்டவர்கள் என கணிக்கப்படுவர்.

*மூலம்: யுனிசெப், இலங்கை*

## X. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயற் திட்டம் (Action Plan).

இலங்கையில் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தைகளின் பலாபலனாக 2004ம் ஆண்டு நடுப்பகுதி ஆகும்போது, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான செயற் திட்டம் (Action Plan) என்பதே யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின்பு, மனித உரிமைகள் அடிப்படையில் கையொப்பமிடப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தமாகும். வடக்கு கிழக்கில் நிகழ்ந்த மோதல் நிலமைகளால் பாதிப்புக்கு உள்ளான 30,000ற்கும் 50,000ற்கும் இடைப்பட்ட சிறார்கள் பல்வேறு வகையான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஊடாக பயன்பெற வேண்டும் என்பதையே இச்செயற்திட்டம் நோக்கமாக கொண்டிருந்தது. இச்செயற் திட்டத்தின் முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாக, புலிகள் இயக்கமானது தமது படையணிகளில் இருக்கும் சகல சிறார்களையும் விடுவிப்பது, மற்றும் சிறார்களை படைகளில் சேர்ப்பதை முற்றாக நிறுத்திக் கொள்வது என்னும் புலிகள் இயக்கத்தின் இணக்கப்பாடும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அரசாங்கமும் புலிகள் இயக்கமும் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இச்செயற்திட்டம் தொடர்பாக தமது இணக்கத்தை தெரிவித்ததுடன். 2003ம் ஆண்டு யூன் மாதத்தில் உத்தியோக பூர்வமாக அதில் கையொப்பமிட்டனர். இச்செயற் திட்டம் தொடர்பாக இரு சாராருக்கும் இடையே பரஸ்பரம் கலந்துரையாடும் பிரதான பாத்திரத்தை யுனிசெப் வகித்ததோடு அதுவே இதனை நடைமுறைப்படுத்தும் பிரதான பங்காளியாகவும் திகழ்கிறது.

குறைந்த வயதுடையோரை படையில் சேர்த்துக் கொள்ளுதல் உட்பட சிறார்களின் உரிமைகள் மீறப்படுவதை, கண்காணிக்க கூடியதான ஓர் முறையான பாத்திரத்தை இச் செயற்திட்டமானது யுனிசெப் அமைப்பிற்கு வழங்குகிறது. வயது குறைந்த சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதாக குடும்பங்களிடம் இருந்தும் ஏனையோர்களிடம் இருந்தும் தகவல்கள் யுனிசெப்பிற்கு கிடைத்த வண்ணம் இருக்கின்ற அதேவேளை, ஒவ்வொரு சம்பவம் தொடர்பாகவும் அவர்கள் தனியான புள்ளிவிபரக் கோவையொன்றைப் பேணுகின்றனர். அத்துடன் அத்தகவல்களின் துல்லியமான தன்மை தொடர்பாக அறிந்து கொள்வதற்காக, அவர்கள் மீள அவற்றை ஆராய்கின்ற அதேவேளை, கொண்டு செல்லப்பட்ட சிறார்களின் வயதுகளை அறிந்து கொள்வதற்காக அவசியப் படுகின்ற இடங்களில், பிறப்பு சாட்சி பத்திரம் அல்லது வேறு ஆவணங்களையும் பெற்றுக்கொள்ள முயலுகின்றனர். இச் சம்பவங்கள் தொடர்பாக யுனிசெப் அமைப்பு, புலிகள் இயக்கத்திற்கு அறிவிக்கின்ற அதே வேளை இப்பிரச்சினைகளை உள்ளடக்கிய மாதாந்த அறிக்கை ஒன்றையும் புலிகள் இயக்கத்திற்கு அனுப்பி வைக்கின்றது. யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனுக்கும் இடையேயும், புலிகள் இயக்கத்தின் மாவட்ட

ரீதியான பிரதிநிதிகளுக்கு இடையேயும் நடத்தப்படும் சந்திப்புக்கள், மிகக் கிரமமாக ஒவ்வொரு மாதமும் நடைபெறுகின்றன.

இச்செயற் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த பொழுதே சிறார்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைத் திட்டம் ஒன்றும் கூடவே உருவாக்கப்பட்டது. அதில் இச்செயற் திட்டத்தில் பங்குபற்றுகின்ற சகல தரப்பினர்களினதும் கடப்பாடுகள், மற்றும் குறிப்பாக 18 வயதுக்கு குறைந்த சிறார்களை படையில் சேர்ப்பதை புலிகள் இயக்கமானது முடிவுக்கு கொண்டுவர வேண்டும், என்னும் அவர்களுக்குரிய கடப்பாடுகளும் பகிரங்கமாக அறிவிக்கப்பட இருந்தன. இப்பிரச்சார நடவடிக்கையானது சுவரொட்டிகள், வீதி யோரங்களில் இடப்பட்டிருந்த அடையாளங்கள், குறியீடுகள் மற்றும் வானொலி விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை உள்ளடக்கி இருந்தது. இச் செயற்திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக வெளியிடக்கூடிய சுவரொட்டிகள் பலவற்றை யுனிசெப் அமைப்பு தயார் செய்து அவற்றை பரவலாக வெளியிடுவதற்காக புலிகள் இயக்கத்தின் அங்கீகாரத்திற்கு 2004ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அனுப்பி வைத்தது. ஆனால் 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையும் புலிகள் இயக்கம் இதற்கான அங்கீகாரத்தை வழங்கவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இச் சுவரொட்டிகள் தொடர்பாக புலிகள் இயக்க பிரதிநிதி ஒருவரிடம் வினவிய பொழுது, தாங்கள் அந்த சுவரொட்டிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும், ஆனால் அதைப் பரவலாக பிரச்சாரப் படுத்துவதற்கான “வழி முறைகள்” பற்றி இன்னும் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம், எனவும் தெரிவித்தார்.[165]

இச் செயற்திட்டத்தின் இன்னுமோர் அம்சம் 15க்கும் 18வயதிற்கும் இடைப்பட்ட இளம் வயதினருக்கு தொழில் பயிற்சி வழங்குதல் ஆகும். முன்னாள் சிறார் போராளிகள் 1,200 பேர் உட்பட 5,000 இளம் வயதினருக்கு, 2005ம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னதாக இப்பயிற்சிகளை வழங்குவதும், இதனை நடைமுறைப் படுத்தும் பிரதான பங்காளியான சர்வதேச தொழில் நிறுவனத்துடன் இணைந்து இதனை மேற்கொள்வது என்பதும், இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இப்பயிற்சியானது ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை ஆகஸ்ட் மாத ஆரம்பம் அளவில், மூன்று தொடக்கம் ஆறுமாத பயிற்சிகளுக்கு என 3,00 சிறார்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளனர். இவர்கள் கட்டிட நிர்மாணம், விவசாயம், மோட்டார் சைக்கிள் பழுதுபார்த்தல், தையற்கலை, வெல்டிங், மிருக வளர்ப்பு, மற்றும் தொலைக்காட்சி வானொலி பழுதுபார்த்தல் போன்ற திறன்களை கற்றுக் கொள்கின்றனர்.[166]

---

[165] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது 2004ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சியில் புலிகள் இயக்கத்தின் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் எஸ்.புலித்தேவனுடன் நடத்திய பேட்டியில் இருந்து

[166] 2004 ஆகஸ்ட் 30 திகதி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, தொழில்சார் கல்விப் பயிற்சி நிபுணர் ஆர்.சிவப்பிரகாசம் என்பவருடன் நடத்திய பேட்டி. சிறுவர்களுக்கான தொழில்சார் கல்விப் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி - வடகிழக்கு மாகாணம், சர்வதேச தொழில் நிறுவனம், சிறுவர் தொழில் முறைமை ஒழிப்புக்கான சர்வதேச நிகழ்ச்சித் திட்டம் (IPEC) கொழும்பு. தற்போது தமக்கு வழங்கப்படுகின்ற தொழில்சார் கல்விப் பயிற்சிகளில் தாங்கள் புலிகள் இயக்கத்தில் பெற்றுக்கொண்ட இராணுவ செயற்பாடற்ற பயிற்சிகளை (உதா.மருத்துவ பயிற்சி) மேற்கொண்டு வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் தமக்கு இல்லை என மனித உரிமைகள் கண்காணிப்பு குழு பேட்டிகண்ட பல முன்னாள் சிறார் படையினர் கவலைப்பட்டனர்.

இச்செயற் திட்டத்திற்குள் கல்வி தொடர்பான அம்சமானது, குறிப்பாக புலிகள் இயக்கத்தில் இருந்து திரும்பி வந்த சிறார்கள் உட்பட சகல சிறார்களையும் பாடசாலைகளுக்கு செல்ல ஊக்குவிப்பதை அடிப்படையாக கொண்டுள்ளதுடன், பாடசாலைகளில் அவர்கள் இடையில் விட்ட கல்வியை தொடர்வது, பாடசாலைகளுக்கு கொண்டுசெல்ல தேவையான உபகரணங்களை வழங்குவது மற்றும் பாடசாலைகளை திருத்துவது அவற்றை மீளமைப்பது என்பவை உள்ளடக்கப்படுகிறது. இந்நிகழ்சித் திட்டமானது யுனிசெப், இலங்கை அரசாங்கம், புலிகளின் கல்வி பிரிவு என்னும் பல பங்காளிகளினால் கூட்டாக நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். இச்செயற் திட்டம் தொடர்பாக 2004ம் ஆண்டு யூன் மாதம் யுனிசெப் விடுத்த முன்னேற்ற அறிக்கையில், 6,751 சிறார்கள் மீண்டும் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் 40,000 சிறார்கள் தாம் விட்ட இடத்தில் இருந்து கல்வியை தொடர்வதற்கும் வகைசெய்யப் பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நாம் ஏற்கனவே கூறியபடி இத்திட்டத்தின் பயன்பாடுகளை பெறுவதில் இருந்து முன்னாள் சிறார் போராளிகள் தவிர்க்கப்பட்டு உள்ளனர். அவர்கள் பாடசாலைகளுக்கு போகும் பொழுது மீண்டும் பிடித்துச் செல்லப்படக்கூடிய ஆபத்து பற்றிய அச்சமே இதற்கு காரணமாகும். 2004ம் ஆண்டு ஏப்ரலில் கருணாவின் படைகளில் இருந்து திரும்பிவந்த 40 வீதத்திற்கும் குறைவான சிறார்களே ஆகஸ்ட் மாதம்வரை பாடசாலைகளுக்கு மீளச் சென்றிருந்தாகள். ஆனால் அவர்களிலும் மீளச் சென்றவர்கள் பலர் அச்சம் காரணமாக பாடசாலையில் இருந்து நின்றுவிட்டனர்.

மேலே கூறப்பட்ட அம்சங்கள் உட்பட இச்செயல் திட்டமானது பத்து பிரதான பகுதிகளை கொண்டிருக்கிறது. அதில் ஏனைய அம்சங்களாவன சிறார்களின் உரிமைகள் தொடர்பான பயிற்சிகள், சிறு நிதிகளும் வருமான பெருக்கமும், சுகாதாரமும் நிறையுணவும், மனோவியல் கவனிப்பு, சமூகசேவை மற்றும் தமது குடும்பங்களிடம் போய்ச் சேரமுடியாத சிறார்களுக்கு மாற்று கவனிப்பு வாய்ப்புக்களை ஏற்படுத்தல் என்பன உள்ளடங்குகின்றன.

### *தங்கு மடங்கள் (Transit Centers)*

புலிகள் இயக்கத்தில் இருந்து திரும்பி வருகின்ற சிறார்களை மீண்டும் தமது சமூகங்களோடு போய் சேர்வதற்கு வசதிப்படுத்தும் வகையில் மூன்று தங்கு மடங்களை நிறுவுவது உட்பட, புலிகள் இயக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ள வயது குறைந்த சிறார்களை மீள சமூகத்தோடு இணைக்கும் அம்சமானது இச்செயல் திட்டத்தில் அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்ற பகுதியாகும். விடுவிக்கப் படுகின்ற சிறார்கள் நேரடியாக அவர்களின் குடும்பங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றே இச்செயல் திட்டத்தில் சுட்டிக்காட்டப் பட்டிருந்தாலும், உடனடியாக தமது வீடுகளுக்கு திரும்ப தயங்குகின்ற சிறார்களை பொறுப்பேற்று கொள்வதற்கும், குறிப்பாக விசேட பாதுகாப்புகள் தேவைப்படுகின்ற சிறார்கள் மற்றும் உடனடியாக குடும்பங்களை கண்டு பிடிக்க முடியாது இருக்கின்ற பிள்ளைகளுக்காகவுமே இவ் தங்கு மடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் புலிகள் இயக்கத்தின் மனிதாபிமானப் பிரிவான தமிழர் புனர்வாழ்வு கழகமானது யுனிசெப் அமைப்புடன் கூடவே இவ் தங்கு மடங்களை நிர்வகிப்பதற்காகவே நியமிக்கப் பட்டதோடு, இந்நிலையங்களை நிர்மாணிப்பதற்கான நிதியும் அவர்களிடம் வழங்கப்பட்டது.

முதல் தங்கு மடமானது 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் கிளிநொச்சியில் திறக்கப்பட்டது. ஏனைய இரு தங்கு மடங்களும் திருகோணமலை, மட்டக்களப்பு, ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்பட்டு முடிக்கப்பட்டிருந்தாலும், 2004 ஆண்டு நொவம்பர் வரை இவை திறக்கப்படவில்லை. இதற்கு பிரதானமான காரணம் புலிகள் இயக்கத்தினால் விடுவிக்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கை மிக குறைவாக இருந்தமையே.

இவ் தங்கு மடங்களில் சிறார்கள் தங்குகின்ற சராசரி காலமானது ஒன்று அல்லது இரண்டு மாதங்களாகும். விசேடமான பாதுகாப்பு ஏற்பாடு அவசியமில்லாத சிறார்களைத் தவிர ஏனையவர்கள் அங்கு தங்கியிருக்கும் கால அளவை குறைப்பதற்கான முயற்சிகள் 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாத அளவில் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையங்களில் தங்கியிருக்கின்ற காலத்தில் முழுநேர செயற்பாடுகள், நிகழ்ச்சித் திட்டங்களில் இச்சிறார்கள் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக கல்வி மற்றும் மனோவியல்-சமூக மதிப்பீடுகள், மொழி, கணிதம், விஞ்ஞானம், சமயம் போன்ற வகுப்புகள், மற்றும் நாடகங்கள், இசை, கலைச் செயற்பாடுகள், விளையாட்டு, உடற்பயிற்சி போன்ற அனைத்தும் இந்நிகழ்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் அங்குள்ள சமூக சேவையாளர்களுடன் உளவியல் சமூக உதவிகளிலும் (Counseling) பங்குபற்றுகின்றனர்.[167] 2004ம் ஆண்டு ஆகஸ்ட்டில் நாம் அங்கு சென்றிருந்த பொழுது அந்நிலையத்தில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உளவியல் சமூக உதவியாளர்கள் (Counselors) நான்கு பேரும் யுனிசெப் ஆலோசகர்கள் மூன்று பேரும் இங்கிருந்தனர்.

சிறுவர் பாதுகாப்பு நிதியமும் (Save The Children Fund) தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் வீடுகளுக்கு சென்று குடும்பங்களை சந்தித்து, அச்சிறார்களை பராமரிப்பதற்கு குடும்பங்களுக்கு இருக்கும் வசதிகள் பற்றியும் மதிப்பீடுகளை மேற்கொள்கின்றனர். அதே வேளை தங்குமட அதிகாரிகளும் சிறுவர் பாதுகாப்பு நிதியமும் கூட்டாக, ஒவ்வொரு சிறாருக்கும் இருக்கக்கூடிய சிறந்த மாற்று வாய்ப்புகள் பற்றி மீளாய்வுக் கூட்டங்களை நடத்துகின்றனர். தங்கு மட அதிகாரிகளின் கருத்துப்படி, "குறிப்பாக மிக வறிய குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகளின் நிலமையே மிகவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்றாக உள்ளது. ஏனெனில் அக்குடும்பங்களின் தகமைகள் மிக மிக மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளன. சில சிறார்கள் திரும்பி போவதற்கு கஷ்டப்படுகின்றனர். அநேகமானோர் தம் வீடுகளில் கவனிப்பின்மை என்னும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர்."[168]

ஒரு சிறுவனோ சிறுமியோ தனது குடும்பத்திடம் திரும்பிச் சென்றதன் பின்பு, அவர்கள் மீள தம் குடும்பங்களோடு சுமூகமாக கலக்கின்றனரா? என்பதை

---

[167] யுனிசெப் மற்றும் இடைமாற்ற நிலையங்களின் பணியாளர்கள் மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவிடம் கூறும்பொழுது கொள்கை அடிப்படையிலேயே தங்குமட பணியாளர்களோ உளவியல் சமூக உதவியாளர்களோ அச்சிறார்களிடம் அவர்களுடைய புலிகள் இயக்கத்திற்குள்ளான அனுபவங்களைப்பற்றி கேள்விகளை கேட்பதில்லை.

[168] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்ட் 13ம் திகதி கிளிநொச்சியில் உள்ள இடைமாற்ற நிலைய பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

தொடர்ச்சியான குடும்ப சந்திப்புகள் மூலம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சமூக சேவையாளர்கள் தமது அவதானிப்புக்கள் மூலம் மேற்கொள்வதோடு, அச்சிறார்கள் மீண்டும் பாடசாலைக்கோ அல்லது தொழில் பயிற்சிக்கோ செல்வதற்கு உதவிசெய்தல், அக்குடும்பத்திற்கு தேவையான உதவிகளை செய்தல் என்பவற்றை மேற்கொள்ளுகின்றனர். இந்நடவடிக்கையானது ஒவ்வொரு குடும்பங்களினதும், ஒவ்வொரு தனிப்பட்ட சிறாரினதும் குறிப்பான தேவைகளைக் கருதி ஒரு குறித்த கால இடைவெளியின் அடிப்படையில் நடத்தப்படுகின்றது. ஆனால் பருமட்டாக ஒரு சிறார் வீட்டுக்குத் திரும்பிய பின்னர், ஒரு வாரத்தில் - மூன்று வாரத்தில் - ஆறு வாரத்தில் - மூன்று மாதத்தில் - பின்னர் ஒரு வருடத்தில் என இச்சந்திப்புக்கள் மேற்கொள்ளப் படுகின்றன.[169] அநேகமான சிறார்கள் தமது குடும்பங்களிடமே திரும்பிச் சென்றாலும், அச்சிறாரின் நன்மை கருதி, அல்லது உடனடியாக குடும்பத்திடம் செல்வது இயலாத நிலைமையாக இருப்பின், அச்சிறார்கள் அவர்களது உறவினர்களின் குடும்பத்தினரிடமோ அல்லது தொழில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திலோ, பாடசாலை விடுதியிலோ, அல்லது சிறுவர் விடுதியிலோ அமர்த்தப்படுவர்.

### *தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் (தபுக) பாத்திரம்*

ஆரம்பம் முதலே இடைமாற்று நிலையம் மற்றும் சிறார்களுக்கான செயல்திட்டம் பற்றிய விடயங்களில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் (**தபுக**) ஈடுபாடானது சிக்கலுக் குரியதாகவே இருந்துள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது 1985ம் ஆண்டில், இலங்கையில் இருந்து தென்னிந்தியாவுக்கு அடைக்கலம் தேடி சென்ற தமிழ் அகதிகளுக்கு உதவி செய்வதற்காகவே புலிகள் இயக்கத்தினால் அமைக்கப்பட்டது. ஆனால் அது படிப்படியாக தனது செயற்பாடுகளை, வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது என்னும் நிலைக்கு மாற்றிக் கொண்டது. தபுக இன் இணையத் தளத்தின்படி வேறு பல விடயங்களும் அதன் செயற்பாடுகளாக காண்பிக்கப் பட்டுள்ளன, "இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் தேவைகளை கவனிப்பதும், அவர்களுக்கு மிக அவசியம் தேவைப்படுகின்ற நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி என்பவற்றை வழங்க தன்னை அர்ப்பணிக்கின்றது."[170] எனவும் அது கூறுகிறது.

தபுக ஆனது தன்னை ஒரு அரச சார்பற்ற, மனிதாபிமான அமைப்பாக பிரகடனப்படுத்திக் கொண்டாலும், அவர்களுக்கு புலிகள் இயக்கத்துடனான மிக நெருக்கமான இணைப்பு இருப்பதாகவே பரவலாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. திருகோணமலையில் இருந்து மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவுக்கு கிடைத்த உள்ளுர் தகவல்களின்படி தபுக இல் பணியாற்றும் அநேக பிரதிநிதிகள்

---

[169] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்ட் 10ம் திகதி மட்டக்களப்பில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதிய பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து. சிறுவர் பாதுகாப்பு நிதியமானது சமூகசேவை தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ளுகிறது. அவர்கள் இடைமாற்ற நிலையத்தால் விடுவிக்கப்பட்ட சிறார்களுக்கு மட்டுமல்ல, நேரடியாக குடும்பங்களிடம் விடுவிக்கப்பட்ட சிறார்களுக்கும் அக்குடும்பங்களுக்கும் தம் சேவைகளை வழங்குகின்றனர்.

[170] தமிழர் புனர்வாழ்வு கழகம், "எமது நோக்கு" http://troonline.org/en/?menu=about (2004 ஒக்டோபர் 13 மீள நினைவுறுத்தப் பட்டது)

முன்னாள் புலிகள் இயக்க அங்கத்தவர்களாவர்.[171] தபுக ஆனது பெரும்பாலும் புலிகள் இயக்கத்தினாலேயே கட்டுப்படுத்தப் படுகின்றதால், அதன் அரசியல் உள் நோக்கங்கம் கேள்விக்கு உட்படுத்தப்பட்டு அதன் அடிப்படையில் தபுக நம்பகத்தன்மை மீது பல கேள்விக் கணைகள் தொடுக்கப்படுகின்றன. கனேடிய புலனாய்வுப் பிரிவனரின் கூற்றுப்படி தபுக ஆனது இலங்கையில் உள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கும் முன்னாள் சிறார் போராளிகளுக்கும் உதவி செய்வதற்காக என்று கூறி வெளிநாட்டில் இருக்கும் தமிழர்களிடம் நிதியைப் பெறுகிறார்கள். ஆனால் அவற்றில் பெரும்பான்மையான தொகை நேரடியாக புலிகள் இயக்கத்திற்கே போய்ச் சேருகின்றது.[172]

தபுக இற்கு புலிகள் இயக்கத்துடன் இருக்கும் தொடர்பு காரணமாக, முன்னாள் சிறார் போராளிகளை பாதுகாப்பது, அவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கையை கையாளுவது போன்றவற்றில் தபுக இற்கு அனுமதி வழங்குவது, எவ்வளவு தூரம் விவேகமானது என சில உள்ளுர் அரச சார்பற்ற நிறுவனங்களும் அவதானிப்பாளர்களும் கேள்விகளை எழுப்பியுள்ளனர். தங்கு மடங்களை நிர்மாணிப்பதற்காக புலிகள் இயக்கத்திடம் நிதி வழங்க மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குகள் தொடர்பாகவும் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. 2003ம் ஆண்டு மே மாதத்திற்கும் 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்திற்கு மட்டும் 1.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இதற்கென கணக்கிடப்பட்டுள்ளது.[173] இந்த நிதியில் பெருந்தொகையானது, இத் தங்கு மட்களை நிர்மாணிப்பதற்கும் மற்றும் நடைமுறை செலவுகளுக்கும் தபுக விடமே கொடுக்கப் பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் எம்மிடம் கூறும் பொழுது, ‘‘தபுக விற்கு நிதி வழங்குவதன் மூலம் தாம் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு வழங்கவில்லை என சில குழுக்கள் கூறலாம். ஆனால் வெளியில் இருந்து நிதி வழங்கப்படுவதன் மூலம் அவர்களின் ஏனைய நிதி வளங்கள் இராணுவ விடயங்களுக்காக பயன்படுத்தப் படக்கூடும்’’.[174]

‘‘பலரைப் பொறுத்தவரை, தபுக வும் புலிகள் இயக்கமும் ஒன்றுதான்’’ என்பதை யுனிசெப் அமைப்பானது ஏற்றுக்கொள்கின்ற அதே வேளை தபுக வின் பாத்திரத்தை மறுக்கவும் முடியாது என்றும் அவர்கள் வாதிடுகின்றனர். ஆரம்பத்தில் எமக்கு பல மாற்று வழிகள் இருக்கவில்லை. நாங்கள் ஒரு இடக்கு முடக்கிற்குள் அகப்பட்டிருந்தோம். ஆரம்பத்தில் இத் தங்கு மடங்களை தபுக தான் கையாள வேண்டும் என புலிகள் இயக்கத்தினர் வாதிட்டனர். ஆனால் நாங்கள்

---

[171] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஒக்டோபரில் நடத்திய பேட்டியில் இருந்து. பெயர் வெளியிடப்படவில்லை.

[172] ஸ்ருவேட் பெல் (Stewart Bell) ‘‘பயங்கர வாதத்தின் முன்னணி அமைப்புக்களான பணியாற்றும் குழுக்கள், CSIS: எவ்விதமான இரகசிய பணிகளிலும் ஈடுபடுவதாக கூறும் இவ்அறிக்கையைத் தமிழர்கள் நிராகரிக்கிறார்கள்.

[173] மூன்று இடைமாற்ற நிலையங்களை நிர்மாணிப்பதற்கான சரியான செலவுத் தொகையானது 287,538அமெரிக்க டொலர்கள் என யுனிசெப் அமைப்பானது மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கு அறிவித்தது. அதே வேளை 2003ம் ஆண்டு ஒக்டோபர் முதல் 2004ம் ஆண்டு ஆகஸ்ட் வரை அதை பராமரிப்பதற்கான செலவு 97,321 அமெரிக்க டொலர்கள். 2004 ஒக்டோபர் 26ம் திகதி யுனிசெப் கொழும்பு காரியாலயத்தில் இருந்து கிடைத்த மின்அஞ்சல்

[174] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 4ம் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழு, கொழும்பு.தலைவர் ஹரேந்திர டீ சில்வாவுடன். நடத்திய பேட்டியில் இருந்து

மூன்று மாதம் தொடர்ந்து வாதிட்டு ஓர் இணக்கபாட்டிற்கு வந்தோம். தபுக இங்குதான் இருக்கப்போகிறது.[175]

தங்கு மடத்தை நிர்வகிக்கின்ற கிளிநொச்சி யுனிசெப் காரியாலயத்தில் இருக்கும் ஒரு பிரதிநிதி எம்மிடம் கூறும்பொழுது, “இதை நாம் தபுக வுடன் இணைந்து செய்திருக்காத விடத்து, இவ் இடைமாற்ற நிலையங்கள் விடயமானது மேற்கொள்ளப்பட்டிருக்கவே மாட்டாது. தபுக ஆனது வடக்கு கிழக்கில் மிகப் பலமாக தமது இருப்பை வைத்துள்ளது. அவர்களுக்கு புலிகள் இயக்கத்துடன் மிக நம்பிக்கையான உறவு இருக்கிறது. எனவே தபுக வுடன் பணியாற்றுவதில் பல வசதிகளும் இருக்கின்றன.”[176]

தபுக வுடன் சிறார்களுக்கு தொடர்புகள் ஏற்படுவதை இயன்றளவு தவிர்ப்பதற்காக பல பாதுகாப்பு ஏற்பாடுகளை தாங்கள் நடைமுறைப் படுத்தியிருப்பதாக யுனிசெப் சுட்டிக்காட்டியது. இத் தங்கு மடங்களில் சிறார்கள் தங்குகின்ற காலமானது மூன்று மாதங்களுக்கு மேற்படாமல் இருப்பதோடு, இத்தங்கு மடங்களில் கவனக் குறைவுகளைத் தவிர்ப்பதற்காக யுனிசெப் அதிகாரிகள் அங்கு எல்லாவேளைகளிலும் பிரசன்மாய் இருப்பர். சிறார்கள் தமது வீடுகளுக்கு திரும்பியதன் பின்னர் அவர்களோடு எந்தவிதமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்தும் தபுக தவிர்க்கப் பட்டிருக்கிறது. சிறார்களுடன் தொடர்பான சகல சமூகசேவை பணிகளுக்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியமே பொறுப்பாகும்.

அதேவேளை, எதிர்காலத்தில் தம்மால் “முடிந்தளவில்” புலிகள் இயக்கத்தில் இருந்து விடுவிக்கின்ற சிறார்களை இத் தங்குமடங்கள் பெற்றுக் கொள்ளக்கூடும் என அங்கிருந்த யுனிசெப் பிரதிநிதி நம்பிக்கை தெரிவித்த அதேவேளை புலிகள் இயக்கத்தில் இருந்த சிறுவர்களில் சகலரும் ஏற்கனவே விடுவிக்கப்பட்டு சென்று விட்டார்கள் என, தபுக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். “ஏனைய சகல சிறார்களையும் புலிகள் இயக்கத்தினர் நேரடியாகவே அவர்களின் வீடுகளுக்கு அனுப்பி விட்டனர். எனவே இன்னும் இங்கு கொண்டு வருவதற்கு சிறுவர்கள் இருக்கிறார்களா என்று எமக்கு தெரியாது”[177] என்றும் அவர் கூறினார். அதேபோலவே மட்டக்களப்பு தபுக அதிகாரி எம்மிடம் கூறும் பொழுது அங்குள்ள தங்கு மடமானது சிறார்களை பெற்றுக் கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும், ஆனால் சகல சிறார்களையும் புலிகள் இயக்கத்தினர் விடுவித்து வீடுகளுக்கு அனுப்பி விட்டார்கள் என்றார்.[178]

---

[175] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, இலங்கை யுனிசெப் பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[176] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்13ம் திகதி கிளிநொச்சி யுனிசெப் பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[177] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 24ம் திகதி ஜீ. எட்வின் றொசாயிறோ, தபுக ஆலோசகர் கிளிநொச்சி இடைமாற்ற நிலைய நடத்திய பேட்டியில் இருந்து.

[178] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்10ம் திகதி மட்டக்களப்பு தபுக பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

***கருணாவின் படையணிகளை விடுவிப்பது தொடர்பான பிரதிபலிப்பு***

ஏப்ரல் மாதத்தில் கருணா படையணிகளில் இருந்து, 1,800 சிறார்கள் உட்பட 4,000 திற்கும் 6,000 திற்கும் இடைப்பட்ட பெருந்தொகையான படையினர் விடுவிக்கப் பட்டமையானது சகல தரப்பினர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இப்பெருந்தொகையான நபர்களின் பிரச்சினையை கையாளுவதற்கு யுனிசெப் உட்பட சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் தயாரற்ற நிலையிலேயே இருந்தன. சிறுவர்களுக்கான செயல்திட்டம் பற்றிய யுனிசெப்பின் முன்னேற்ற அறிக்கையில்: "எவ்வகையிலும் எதிர்பார்க்கப்படாத இப்பாரிய எண்ணிக்கையிலான வருகையானது, செயல் திட்டத்தின் கீழ் பணியாற்றும் சகல அங்கத்துவ நிறுவனங்களையும், அவற்றின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் செயற் தகைமை போன்றவற்றின் மீது மிகப் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியது" என ஏற்றுக் கொள்ளுகிறது.[179]

இவ்விடுவிப்பின் பின்பு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஆதரவுடன் யுனிசெப் அமைப்பானது வீடுகளுக்கு திரும்பும் சிறார்களை பதிவு செய்து கொள்வதற்காக நடமாடும் பதிவு நிலையங்களை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நிறுவியது. வீடுகளுக்கு திரும்பிய சிறார்களின் நிலைமை பற்றி தொடர்ச்சியான அவதானிப்புக்களை செய்யும் பொறுப்பை சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஏற்றுக்கொண்டதோடு அவர்கள் மிக விரைவாக தமது சமூக சேவையாளர்களின் எண்ணிக்கையை 25தாக உயர்த்தி தமது நிகழ்ச்சித் திட்டத்தை தகவமைத்துக் கொண்டனர்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கருணா படையினரிடம் இருந்து திரும்பிவந்து யுனிசெப்பிடம் பதிவு செய்துகொண்ட 1,800 சிறார்களில், ஆகஸ்ட் நடுப்பகுதி ஆகும் பொழுது 1,300பேரை சமூக சேவையாளர்கள் சென்று சந்தித்துள்ளனர். அவ் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேலான நபர்களுடன் இரண்டாம் முறை சந்திப்புக்களும் நடத்தப்பட்டுள்ளன.[180] அதே வேளை திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை மிகச் சிறிய எண்ணிக்கையானோரே திரும்பி வந்துள்ளதுடன், அங்கு 100 பேரைவிடக் குறைவானவர்களே பதிவு செய்துள்ளனர். ஏப்ரலுக்கும் ஆகஸ்ட் மாதத்திற்கும் இடையில் சிறுவர் பாதுகாப்பு நிதியமானது இவர்களின் குடும்பங்களை சராசரியாக ஐந்து தடவைகள் சென்று சந்தித்து உள்ளன.[181]

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஓர் பிரதிநிதி எம்மிடம் கூறும் பொழுது, "பிள்ளைகளை திரும்பவும் பாடசாலைகளுக்கு அனுப்புவது அல்லது பயிற்சிகளுக்கு அனுப்புவது என்பவற்றுக்கே நாம் முன்னுரிமை வழங்குகின்றோம். ஆனால் அநேகமான சிறார்கள் அங்கு அவர்களின் வீடுகளில் இல்லை. சில பெற்றோர்கள் சிறார்களை தம் உறவினர் வீடுகளுக்கு அனுப்புகிறார்கள். சிலர்

---

[179] யுனிசெப் , *"யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான நிகழ்சித்திட்ட முன்னேற்ற அறிக்கை ஜனவரி-யூன் 2004."* செப்டம்பர் 2004.பக்.9

[180] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 10ம் திகதி சிறுவர் பாதுகாப்பு நிதியம் மட்டக்களப்பு. நடத்திய பேட்டியில் இருந்து.

[181] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்12ம் திகதி திருகோணமலை மாவட்ட காரியாலய யுனிசெப் பணியாளர்களுடன் திருகோணமலையில் நடத்திய பேட்டியில் இருந்து.

வெளிநாடுகளுக்கு அனுப்புவதோடு இன்னும் சிலர் திருமணம் செய்து கொள்ளுகின்றனர்".[182]

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தவரை 2004ம் ஆண்டு ஆகஸ்ட் முற்பகுதியில் 700 சிறார்கள் பாடசாலைகளுக்கு திரும்பிச் சென்றுள்ளனர். 150 பேர் மட்டில் தொழில்சார் பயிற்சிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதாவது பதிவுசெய்யப்பட்ட 60 வீதமானவர்கள் ஒன்றில் பாடசாலைகளுக்கு அல்லது தொழில் பயிற்சிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். அதே வேளை இன்னும் பெருந்தொகையான சிறார்கள் ஒன்றில் மீண்டும் தாம் பிடித்து செல்லப்படலாம் என்கின்ற அச்சம் காரணமாக எவ்வித உதவிகளும் கிட்டாத நிலையில் உள்ளனர். (நாம் ஏற்கனவே இவ்வறிக்கையில் விபரித்தபடி சிறார்கள் பாடசாலைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில் கடத்திச் செல்லப்படலாம் என்கின்ற அச்சத்தினால் பலர் தம் சிறார்களை வீடுகளிலேயே வைத்திருக்கின்றனர்). யுனிசெப்பின் கூற்றுப்படி செயல் திட்டத்தின் பங்காளிகளின் செயற்திறன் குறைவினாலும் இக் குறைபாடுகள் நிகழ்கின்றன.[183]

கிழக்கு மாகாணத்தில் தொழில் ரீதியான பயிற்சிகளை வழங்குவதில் உள்ள சவால்களைப் பற்றியும், யுனிசெப் வெளியிட்ட செயல்திட்ட முன்னேற்ற அறிக்கையில் குறிப்பாக சொல்லப்பட்டு இருக்கிறது: "சர்வதேச தொழில் நிறுவனமானது தன்னிடம் இருக்கும் வளங்களின் குறைவினால், மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருக்கிறது, தேவையான அதிகாரிகளை நியமித்தல் மற்றும் அவசியமான அடித்தள தேவைகள் என்பவற்றின் குறைபாடுகளினால் இந்நிகழ்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக கிழக்கில் பெருந்தொகையான சிறார்களின் வருகையின் காரணமாக சர்வதேச தொழில் நிறுவனம் தன்னிடமுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றலினால், பாரிய சவாலுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது".[184] இத்திட்டத்தின் பணிகள், பெருந்தொகையினருடன் தொடர்ச்சியாக செய்யப்படுவதற்கு, ஏனைய பங்காளி அமைப்புக்கள் தமது சேவைகளை தொடர்ந்து விஸ்தரிக்க வேண்டியதன் அவசியப்பாடும் இருப்பதாக, யுனிசெப் அமைப்பினர் பொதுப்படையாக ஏற்றுக்கொண்டனர்.[185]

## XI. செயல் திட்டத்தின் (Action Plan) எதிர்காலமும் யுனிசெப் அமைப்பின் பாத்திரமும்

புலிகள் இயக்கத்தினால் சிறார்கள் மீளப் பிடிக்கப்படுவது மற்றும் சிறார்களை படையினராக பாவிப்பது என்னும் விடயமானது இலங்கையில் யுனிசெப் அமைப்பின் நிகழ்ச்சி நிரலில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கிறது. ஏற்கனவே மேலே நாம் கூறியதைப்போல மோதல் நிலமைகளுக்குள் பாதிக்கப்பட்ட

[182] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்10ம் திகதி மட்டக்களப்பு சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[183] யுனிசெப் , *"யுத்தத்தால் பாதிக்கப்ட்ட சிறார்களுக்கான நிகழ்சித்திட்ட முன்னேற்ற அறிக்கை ஜனவரி-யூன் 2004."* செப்டம்பர் 2004.

[184] Ibid

[185] Ibid

சிறார்களுக்கென தயாரிக்கப்பட்ட பெரும் எதிர்பார்ப்புகளுடன் கூடிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய இச்செயல் திட்டத்தினை, நடைமுறைப் படுத்தும் பிரதான பங்காளி என்னும் பாத்திரத்தை யுனிசெப் அமைப்பு வகிப்பதோடு, அத்திட்டத்தை சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடும் பிரதான பணியையும் அதுவே மேற்கோண்டது. ஏனைய நாடுகளில் உள்ள யுனிசெப் காரியாலயங்களைவிட சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாகவே அர்ப்பணிக்கப்பட்ட உத்தியோகத்தர்களை பெரும் எண்ணிக்கையில் இது கொண்டிருப்பதோடு, ஆட்சேர்ப்பு தொடர்பான அதன் புள்ளி விபரக்கோவையானது மிக பரந்ததும் செயல் திறனுடனும் காணப்படுகிறது. இலங்கையில் உள்ள யுனிசெப் காரியாலயமானது சிறார் படையினர் பற்றி மிக அதிகமாகவே வெளிப்படையாக பேசுகின்ற காரியாலயமாக மாறிவருகின்ற அதேவேளை, புலிகள் இயக்கத்தில் ஏற்கனவே இருக்கின்ற சிறார்கள் விடுவிக்கப்படுவது தொடர்பாகவும் சிறார்களை படைகளில் சேர்ப்பதை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாகவும் பல பகிரங்க அறிக்கைகளையும் அது வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சியாக நடைபெறுகின்ற, சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வது மற்றும் அவர்கள் படைகளில் பாவிக்கப்படுவது என்னும் விடயம் தொடர்பாக, யுனிசெப் அமைப்பு மேற்கொள்ளும் காத்திரமான பிரதிபலிப்புக்களையும் அவர்களின் பகிரங்க அறிக்கைகளையும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வரவேற்கின்றது. மற்றும் அவர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள், இரு மாவட்டங்களிலும் உள்ள புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட மட்டங்களில் நடத்தப்படும் தொடர்ச்சியான நியாயப் பிரச்சாரம் (Advocacy), அப்பிரதேசத்தில் களமட்டத்திலான பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றையும் அது வரவேற்கிறது. சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவது இடம்பெறுகின்ற உலகின் வேறு நாடுகளில் பணியாற்றுகின்ற யுனிசெப்பின் நடவடிக்கைகளுக்கும் கூட இந்நடவடிக்கைகளானது பல வழிகளிலும் ஒரு முன்மாதிரியாக இருக்கக்கூடும்.

அதே வேளை யுனிசெப் அமைப்பும், இச்செயற் திட்டமும் மிகக் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளது. ஏற்கனவே மேலே கூறியதின்படி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை இச்செயற்பாட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஓர் பங்காளியாக ஏற்றுக்கொண்டதும், தமிழர் புனர்வாழ்வு கழகத்திடம் நிதி வழங்குவது தொடர்பாக யுனிசெப்பிற்கும் தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தமும், அதன்மூலம் தமிழர் புனர்வாழ்வு கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய பாத்திரம் என்பவையே இங்கு சிக்கலுக்குரிய விடயமாக முக்கியமாக பார்க்கப்படுகிறது. செயல்திட்டம் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப் படுத்துவதில் புலிகள் இயக்கமானது தவறியுள்ளமை தெளிவாக தெரிய வருவதால், குறிப்பாக இச் செயல்திட்டத்தில், வயது குறைந்த சிறார்கள் சேர்க்கப்படுகின்ற விடயம் தொடர்பாக யுனிசெப் அமைப்பானது தனது செயற்பாட்டை மீள வாபஸ் பெறவேண்டும் (Withdraw), அல்லது அதில் முக்கியமான அம்சங்கள் தொடர்பாக திரும்பவும் கலந்தாலோசிக்க வேண்டும், அல்லது புதிய திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும், என சில முக்கிய தரப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் சிறார்களை பாதுகாப்பதற்கு அவசியமான காத்திரமான செயல்முறைகள் எதுவுமே இலங்கை அரசாங்கத்திடம் இல்லை, என்றே உள்ளூர் மக்கள் பொதுவாக கருதுகின்றனர். எனவே இது விடயத்தில் யுனிசெப் அமைப்பிடம் இருந்தே மிக அதிகமாக எதிர்பார்க்கப் படுகின்றது. யுனிசெப் அமைப்பானது தங்களுடன் அவசியமான அளவிற்கு நெருக்கமாக பணியாற்றுகிறார்கள் இல்லை, என உள்ளூர் செயற்பாட்டாளர்கள் விமர்சிக்கின்றனர். குறிப்பாக ஆட்சேர்ப்பு நடவடிக்கையை தடுக்கும் விடயத்தில் அவசியமான அழுத்தங்களை செலுத்தாமலும், தனிப்பட்ட ஒவ்வொருவரின் பிரச்சினைகளில் போதிய தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ளாமலும், தாங்கள் மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைகள் பற்றி உள்ளூர் சமூகங்களுடன் போதிய அளவிற்கு பகிர்ந்து கொள்ளாமலும் இருப்பதாக யுனிசெப் மீது விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன.

உதாரணமாக, மட்டக்களப்பில் தொழில்சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்றில் ஈடுபட்டுள்ள ஒரு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறும்பொழுது, குறைந்த வயதில் படையில் சேர்க்கப்பட்ட சிறார்கள் தொடர்பாக யுனிசெப்பிடம் சென்று பதிவு செய்வது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றி உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் நபர்கள் உட்பட அநேகமான சாதாரண மக்களுக்கும் தெரியாது. ‘‘எல்லோருக்கும் இந்த விடயம் தெரியும் என ஒரு ஊகம் நிலவுகிறதே ஒழிய, உண்மை நிலை அதுவல்ல’’. மட்டக்களப்பில் யுனிசெப் மாவட்ட காரியாலயத்திற்கு அருகே, பிரதான வீதியில் இருக்கும் ஓர் உள்ளூர் மதகுருவின் நிலமையை அவள் எமக்கு ஓர் உதாரணமாக கூறினாள். புலிகள் இயக்கத்தில் இருந்து திரும்பி வந்த பெருந்தொகையான சிறார்கள் இம்மதகுருவின் பங்குக்கு (Parish) வந்தார்கள், ஆனால் அவர்களை எவ்வாறு பதிவு செய்வது என்பது தொடர்பாக அவர்கூட அறிந்திருக்கவில்லை.[186]

நிலைமையை தடுப்பதில் தேவையான அழுத்தங்களைப் போடாதது, அல்லது உள்ளூரில் சமூக மட்டத்தில் பணியாற்றும் அமைப்புக்களை தேவையான அளவிற்கு பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ளாதது, போன்ற விடயங்கள் தொடர்பாக ஓர் உள்ளூர் செயற்பாட்டாளர் யுனிசெப்பை விமர்சனத்திற்கு உள்ளாக்கினார்.

> யுனிசெப்பும் சர்வதேச அரசார்பற்ற நிறுவனங்களும் உள்ளூர் அரசார்பற்ற நிறுவனங்களுடன் இன்னும் அதிக சந்திப்புக்களை நிகழ்த்த வேண்டும். இவை கிரமமான முறைசாரா சந்திப்புகளாக இருக்கலாம். மிகப் பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கும் அவர்களுக்கு பிரதிநிதிகள் தேவை. கிறிஸ்தவ ஆலயங்களுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கு ஊடாக அவர்கள் செல்ல முடியும். ஆனால் அது கிரமமாகவும் ஓர் ஒழுங்கு முறைக்கு ஊடாகவும் செய்யப்பட வேண்டும். குறிப்பாக ஆட்சேர்ப்பு மிக அதிகமாக உள்ள பின்தஙகிய பகுதிகளில் இது அவசியம். ஆனால் சந்திப்புக்கள் மட்டும் போதுமாவை அல்ல. அவர்கள் களங்களுக்கு போக

[186] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்9ம் திகதி மட்டக்களப்பு சர்வதேச அரசார்பற்ற நிறுவன பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

வேண்டும். தாய்மார் தங்களிடம் வரும்வரை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்க கூடாது. அது போதுமானது அல்ல.

அவர்கள் பாடசாலைகளுக்கு தகவல்களை கொடுக்க வேண்டும். தமிழ் பத்திரிகைகள், வானொலி என்பவற்றில் விளம்பரங்களை வெளியிட வேண்டும். அவர்கள் இப்பிரதேசத்தை தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நிரம்பி வழியச் செய்ய வேண்டும். தடுப்பு நடவடிக்கை என்பது இத்திட்டத்தின் ஒரு பிரதான பகுதியாக இருக்க வேண்டும்.[187]

குறிப்பாக 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பெருந்தொகையாக சிறார்கள் விடுவிக்கப் பட்டபொழுது அவர்கள் மீள பிடித்து செல்லப்படக்கூடிய ஆபத்து மிக அதிகமாக இருந்தது. அந்த மிகத் தனித்துவமான சவாலுக்கு தாம் மிக மெதுவாகவே பிரதிபலிப்பு செய்திருக்கிறோம் என்பதை யுனிசெப் இன்னும் அறியாதிருக்கிறது. பதிவுசெய்யும் முறைகள் பற்றி தகவல்களை பரவலாக்குவது, மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பது, போன்றவற்றில் யுனிசெப் மிக காலம் தாழ்த்தியே செயற்பட ஆரம்பித்தது என்பதை சுட்டிக்காட்டிய ஓர் உள்ளூர் செயற்பாட்டாளர், அப்போது ஏற்பட்டிருந்த சவாலுக்கு அவர்களைப் போலவே முகம் கொடுப்பதற்கு முயற்சித்துக் கொண்டிருந்த ஏனைய உள்ளூர், மற்றும் சர்வதேச குழுக்களோடு இணைந்து செயற்படுவதில் யுனிசெப்பின் காலம் தாழ்த்தலையும் அவர் மேலும் குறிப்பிட்டார். இன்னுமொரு உள்ளூர் செயற்பாட்டாளர் கூறும்பொழுது இவ்வாறான ஒரு அவசர நிலமையில் பாதுகாப்பு வழங்குவது, மற்றும் கண்காணிப்பது என்னும் விடயங்கள் இயன்றளவு பரவலாக்கப் படுவதை உறுதிப்படுத்துவதற்கு, சகல தரப்பினர்களுக்கு இடையேயான நெருக்கமான தொடர்பு மிக அவசியமாகும்.

யுனிசெப்பினால் எல்லாவற்றையும் எல்லா இடமும் செய்ய முடியாது என்பதை நாம் புரிந்து கொள்கின்றோம், அவர்கள் எல்லா இடமும் செல்ல முடியாது. ஆனால் அவர்கள் ஏன் எம்முடன் இணைந்து செயற்படக் கூடாது? நாங்கள் அங்கே மிக ஆழ்ந்த கிராமங்களில், களத்திலே நிற்பவர்கள். அங்கு ஓடி ஓடி தகவல்களை சேகரிப்பதிலும் தகவல்களைப் பரப்புவதிலும் ஈடுபட்டிருக்கிறோம். இவ்வாறான ஓர் அவசர நேரத்தில் ஒருவரோடு ஒருவரான தொடர்பும் இணைந்து பணியாற்றுதலும் மிக முக்கியம். ஓர் இடத்தில் அமர்ந்துகொண்டு “சரி, நாங்கள் இங்கே இருக்கிறோம்… அவர்கள் எம்மிடம் வரட்டும்”, என கூறக்கூடாது. இது தற்பெருமை கொள்வதற்கான காலமல்ல.[188]

சில உள்ளூர் செயற்பாட்டாளர்கள் எம்மிடம் தொடர்ந்து சொல்கையில், கோயில் திருவிழாக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னரே நாங்கள் யுனிசெப் அமைப்பிடம் சென்று, சிறார்களை பலவந்தமாக சேர்ப்பதற்கு வாய்ப்பான இடமாக கோயில் திருவிழாக்கள் பாவிக்கப்படலாம் என எச்சரித்தோம். ஆனால் எங்களுடைய இந்த

---

[187] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பில் உள்ளூர் செயற்பாட்டாளருடன் நடத்திய பேட்டியில் இருந்து.

[188] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்டில் மட்டக்களப்பில் மனித உரிமை செயற்பாட்டாளருடன் நடத்திய பேட்டியில் இருந்து.

எச்சரிப்புக்குப் பின்னரும் கூட யுனிசெப் அமைப்பானது திருவிழாவை கண்காணிப்பதற்கு எதுவுமே செய்யவில்லை. திருவிழாவில் பல சிறார்கள் உட்பட 26பேர் கடத்தி செல்லப்பட்டனர். இது நடந்து முடிந்தபின்னர் யுனிசெப் அமைப்பானது, சர்வதேச அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு கோயில் திருவிழாக்களில் புலிகள் இயக்கமானது ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது தொடர்பாக அறிக்கை வெளியிட முயற்சித்தது. அதன் மூலம் திருவிழா நடைபெறும் இடங்களில் சர்வதேச சக்திகள் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்த முனைந்தனர். அவ்வாறான சக்திகளின் இருப்பு என்பது நிலமைகளை கண்காணிப்பதற்கும் ஆட்சேர்ப்பை தடுப்பதை நோக்கமாகவுமே கொண்டிருந்தது. அங்கு பெருந்தொகையான கோயில்களில் திருவிழாக்கள் நடைபெற்றதால் குறிப்பாக இறுதி சில நாட்களில் 10,000க்கும் 20,000க்கும் இடைப்பட்ட பக்தர்கள் பங்குபற்றுகின்ற பாரிய திருவிழாக்களில் மட்டுமே இக்கண்காணிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பை தடுப்பதற்கு இது நல்லதொரு மூலோபாயமாகும்.[189]

குறிப்பாக வெளி நாடுகளில் வாழும் தமிழர்களிடையே அமைக்கப்பெற்ற அரசசார்பற்ற நிறுவனமான சிறீ லங்கா ஜனநாயக அரங்கானது (SLDF) இச்செயல் திட்டம் தொடர்பாக, அடிப்படையான மீளாய்வு ஒன்று மெற்கொள்ளப்பட வேண்டும் என யூலை மாதத்தில், வெளியிட்ட அறிக்கையின் மூலம் வேண்டுகோள் விடுத்தது. அதில் முக்கியமாக, புதிதாக விடுவிக்கப்பட்ட சிறார்கள் முகம் கொடுக்கின்ற அதிக ஆபத்தான நிலை தொடர்பாகவும், புலிகள் இயக்கத்தின் ஈவிரக்கமற்ற ஆட்சேர்ப்பு நடவடிக்கை பற்றியும் விளக்கி இருந்தது. சிறீ லங்கா ஜனநாயக அரங்கானது குறிப்பாக தனது அறிக்கையில், விடுவிக்கப்படுகின்ற சிறார்கள் மீளவும் படைகளில் சோக்கப்படுவதில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு பலமான முயற்சிகளை மேற்கொள்ளும்படி யுனிசெப் அமைப்பிடம் கோரி இருந்தது. அதற்காக இப்பணியில் அக்கறையுள்ள பரவலான சக்திகளுடனும், மக்கள் மட்டத்தில் பணியாற்றுகின்ற குழுக்களுடனும் மிக நெருக்கமாக வேலை செய்வதோடு அக்குடும்பங்களுக்கும் உறுதியான ஆதரவுகளை வழங்கும் படியும் கோரியிருந்தது.[190]

அதன் பின்னர் யுனிசெப் அமைப்பும் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் விடயத்தை தொடர்பு படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த சற்று காத்திரமான முயற்சிகளை மேற்கொண்டது. ஆகஸ்ட் மாத ஆரம்பத்தில் யுனிசெப் அமைப்பானது புலிகளின் அனுமதி இன்றியே திருகோணமலை மட்டக்களப்பு மாவட்டங்களில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது. குறிப்பாக பாடசாலை வாயில்கள், வைத்தியசாலைகள், பஸ் நிலையங்கள், சந்தைகள், அரசாங்க கட்டிடங்கள் மற்றும் அரசாங்கத்தினதும் புலிகளினதும் வீதி தடைகள் போன்ற இடங்களிலும் இவை விநியோகிக்கப்பட்டன. தேசிய சர்வதேசிய சட்டங்களின் அடிப்படையில் சிறார்களை படைகளில் சேர்ப்பதானது தடைசெய்யப்பட்ட விடயம் என்றும், புலிகள் இயக்கமானது, தாங்கள் சிறார்களை படைகளில் சோத்துக்கொள்ள மாட்டோம் என ஏற்றுக் கொண்டுள்ளனர் என்கின்ற விடயமும்,

---

[189] 2004 செப்டம்பர் 22ம் திகதி யுனிசெப் மட்டக்களப்பு தலைமைக் காரியாலயத்தில் இருந்து ஆந்திரே ஜேம்ஸ்-மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவுக்கு அனுப்பிய மின் அஞ்சல்

[190] 2004 யூலை 16ம் திகதி சிறீ லங்கா ஜனநாயக அரங்கின் ''புனர்வாழ்வை நோக்கிய முதல் நடவடிக்கை சிறார்களின் பாதுகாப்பே''என்னும் பத்திரிகை அறிக்கை

அத்துண்டுப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. மேலும் வயது குறைந்தோரை படைகளில் சேர்த்துக்கொள்ளல் தொடர்பாக, குடும்பங்கள் யுனிசெப் காரியாலயத்திற்கு வந்து முறையிடுவதற்கு அவர்களை ஊக்குவிப்பதாகவும் அத்துண்டுப் பிரசுரங்கள் அமைந்திருந்தன.

இது தொடர்பாக மக்களின் பிரதிபலிப்புக்கள் மிக சாதகமாகவும் விரும்பத் தக்கதாகவும் இருந்ததாக யுனிசெப் கருத்து தெரிவிக்கின்றது. இத்துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த பின்னர் பல குடும்பங்கள் பழைய ஆட்சேர்ப்புச் சம்பவங்கள் பற்றி அறியத்தரவும், புதிய ஆட்சேர்ப்பு சம்பவங்கள் பற்றி தகவல்களைத் தரவும் யுனிசெப் காரியாலயத்திற்கு வந்தனர். எவ்வாறாயினும் மட்டக்களப்பிற்கு தெற்கே உள்ள ஒரு கிராமத்திற்கு சென்ற புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள், “உங்கள் குடும்பங்களைப் பார்த்துக் கொள்வதற்கு யுனிசெப் அமைப்பு எந்த நேரமும் இங்கே இருக்கமாட்டார்கள்” என கூறி குடும்பங்களிடம் இருந்து இத்துண்டுப் பிரசுரங்களை எடுத்து அழித்து விட்டதாகவும், செய்திகள் கிடைத்ததாக அவ்வமைப்பு கூறியது. இருந்தாலும் இச்சம்பவம் தொடர்பாக புலிகள் இயக்கத்துடனான அடுத்த சந்திப்பின் போது தாம் கேள்வி எழுப்புவதற்கு திட்டமிட்டுள்ளதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்தது.[191]

2004ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இச்செயல் திட்டம் தொடர்பாக அது வெளியிட்ட முன்னேற்ற அறிக்கையில், வயது குறைந்த சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதை தடுப்பதற்காக மக்கள் மட்டத்தில் வேலை செய்கின்ற அமைப்புக்களுடன் தாம் கூட்டுக்களை (Alliances) உருவாக்குவதற்கு அவசியமான பணிகளை மேற்கொண்டு வருவதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்ததோடு, இதுபற்றி சில குறிப்பான விடயங்களையும் வெளியிட்டது.[192]

யுனிசெப் அமைப்பின் பிரதிநிதியான, டெட் சைபான் (Ted Chaiban) கூறும் பொழுது இச் செயல்திட்டமானது ஒரு மூலோபாயம் மட்டுமே. ஆனால் யுனிசெப்பினுடைய பணியானது அச்செயல்திட்டத்திற்குள் மட்டுப்படுத்தப் பட்டதல்ல என்றார். ஒரு குறிப்பிட்ட அரசியல் சூழ்நிலையிலேயே இச் செயற்திட்டமானது உருவாக்கப்பட்டது என்பதை அவர் அழுத்தமாக தெரிவித்தார்:

> இச்செயற் திட்டமானது ஒரு வித்தியாசமான சூழ்நிலையிலேயே உருவம் பெற்றது. அது சம்பந்தப்பட்ட தரப்பினரின் கோரிக்கையின் அடிப்படையில், சமாதான நடவடிக்கைகளின் ஒர் அங்கமாகவே வகுக்கப்பட்டது. சமாதான செயற்பாடானது முன் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்றே எல்லோரும் கருதினர்…..ஆனால் சமாதான நடவடிக்கை முறிவடைந்து விட்டது. நாங்கள் இன்று ஒரு வெற்றிடத்திலேயே பணியாற்றிக் கொண்டிருக்கிறோம், ஆனாலும் நாங்கள் இன்னும் தொடர்ச்சியாக புலிகள் இயக்கத்தை சந்திக்கிறோம். ஆனால் இப்போதுள்ள கேள்வி சிறார்களின்

[191] 2004 செப்டம்பர் 22ம் திகதி யுனிசெப் மட்டக்களப்பு தலைமைக் காரியாலயத்தில் இருந்து ஆந்திரே ஜேம்ஸ்-மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவுக்கு அனுப்பிய மின் அஞ்சல்

[192] யுனிசெப், *யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான முன்னேற்ற அறிக்கை. ஜனவரி-யூன் 2004,* செப்டம்பர் 2004 பக்கம் 27

> மிகச் சிறந்த நலன் தொடர்பாக அடுத்ததாக செய்யப் படவேண்டியது என்ன என்பதே?[193]

சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாக இன்னுமோர் யுனிசெப் பிரதிநிதியும் கருத்துச் சொன்னார்: “சமாதான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று அரசியல் சூழ்நிலை இதைவிட சாதகமாக இருந்திருப்பின், நாங்கள் இன்னும் சாதகமான பலாபலன்களை தற்போது அடைந்திருக்க முடியும்.[194] இக்கணிப்பீடு அநேகமாக உண்மையாக இருந்தாலும் கூட, புலிகள் இயக்கமானது பேச்சுவார்த்தைகள் முறிவடைவதற்கு முன்னரே தமது கடப்பாடுகளை நிறைவேற்ற தவறியிருக்கின்றது, என்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். எனவே இவ் எதிர்பார்ப்பானது புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பு தொடர்பாக போதிய ஆதாரமற்ற நம்பிக்கை கொள்வதாகவே அமையும்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் சிறீ லங்காவுக்கான பணிப்பாளர் க்ரெக் டூலீ (Greg Duly) எம்மிடம் கூறும் பொழுது, “இச்செயற் திட்டமானது புலிகள் இயக்கம், இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகம், மற்றும் அனுசரணையாளர்கள் தமக்கிடையே கலந்துரையாடுவதற்கான மிக அரிய வாய்ப்பை வழங்குகிறது” என்றார்.[195]

புலிகள் இயக்கமானது இச் செயற்திட்டத்திற்கு அமைய ஒழுகி செயற்படாமல் இருக்கும் நிலையிலும் கூட, யுனிசெப் அமைப்பானது தொடர்ந்தும் புலிகளோடு கூட்டாக செயற்படுவதை சில அவதானிப்பாளர்கள் கேள்விக்கு உள்ளாக்கு கின்றனர். ஐக்கிய நாடுகளை சேர்ந்த ஓர் அதிகாரி அதை இவ்வாறு கூறினார்:

> இச் செயற் திட்டத்தின் கீழ் புலிகள் இயக்கத்துடன் தமக்கு கதைப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக யுனிசெப் அமைப்பானது தொடர்ந்து கூறுகிறது. உண்மைதான், மேல் மட்டங்களுடன் பேசும்போது புலிகள் இயக்கத்தினர் சரியானவற்றையே சொல்கிறார்கள். ஆனால் புலிகளுடன் யுனிசெப்பிற்கு கிடைத்துள்ள, பேசுவதற்கான இவ்வாய்ப்பானது ஏதாவது நன்மையை பெற்றுத் தரவல்லதாக இருக்கிறதா, என்பதை யுனிசெப் சிந்தித்ததா? அதாவது அடித்தள மட்டத்தில் அது என்ன நன்மையை பெற்றுத்தரக் கூடியதாக இருக்கிறது? அவர்கள் கௌசல்யனுடன் [மட்டக்களப்பு மாவட்ட புலிகள் இயக்க அரசியல் பொறுப்பாளர்] வாரம் தோறும் சந்திப்புக்களை நடத்துகின்றனர். இதன் மூலம் யுனிசெப்பானது சிறார்களை பலவந்தமாகக் கடத்துவதற்கு பொறுப்பாக இருக்கும் ஒரு நபருக்கு நியாயாதிக்கத்தை (legitimacy) வழங்குவதாகவே அமைகிறது. இவ்வகையான ஒரு கருத்துத்தான் வெளியிலே பரவுவதற்கு வாய்ப்புண்டு.[196]

---

193 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்17ல் யுனிசெப் கொழும்பு பிரதிநிதி டெட் சைபான் உடன் நடத்திய பேட்டியில் இருந்து.

194 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்12ம் திகதி திருகோணமலை மாவட்ட யுனிசெப் காரியாலய பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

195 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட்4ம் திகதி சிறுவர் பாதுகாப்பு நிதிய வதிவிடப் பிரதிநிதி க்ரேக் டூலி உடன் நடத்திய பேட்டியில் இருந்து.

196 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004, ஆகஸ்ட் 6ம் திகதி மட்டக்களப்பில் ஐ.நா.அதிகாரிகளுடன் நடத்திய பேட்டியில் இருந்து.

ஒரு முறையான சமாதான ஒப்பந்தத்திற்கு முன்னதாகவே, அவர்களின் படைகளில் உள்ள சிறார்களை விடுவிப்பது தொடர்பாக ஓர் அரசசார்பற்ற ஆயுதக் குழுவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரேயொரு முறையான ஒப்பந்தமாக இதை மட்டுமே நாம் கூறமுடியும். இது, தெற்கு சூடானிலும் இலங்கையிலும் மாத்திரமே ஏற்படுத்தப்பட்டுள்ள தனித்துவமான நிலைமையாகும் என சைபான் (Chaiban) குறிப்பிட்டு கூறினார். அத்துடன் யுனிசெப் அமைப்பானது இதனை வெளிப்படையாகவே கண்காணித்து அறிக்கை இடுவதற்கான ஒரு பாத்திரம் அதற்கு இதன் மூலம் வழங்கப்பட்டு இருக்கின்றது, என்பதையும் அவர் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறும்பொழுது இம்முன்முயற்சியின் காரணமாக 1,000 சிறார்கள் மட்டில் வீடுகளுக்குச் சென்றிருந்தாலும், விடுவிக்கப்பட்ட ஏனைய பல சிறார்களை பாதுகாப்பதற்கான மேலதிக வழிமுறைகள் இல்லாமல் இருக்கின்றது என்பதையும் குறிப்பிட்டார்.

2004ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இச் செயற் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையில், புலிகள் இயக்கமானது தமது படையணிகளில் உள்ள சிறார்களை விடுவித்தல் மற்றும் சிறார்களை படையில் சேர்க்கும் தமது நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவருதல் என்னும் தமது கடப்பாடுகளை நிறைவேற்ற தவறியுள்ளனர், என யுனிசெப் அமைப்பானது திரும்பத் திரும்ப வலியுறுத்திக் கூறியிருக்கிறது. “இக்கடப்பாடுகள் நிறைவேற்றப்படாத பட்டசத்தில், இச்செயல் திட்டத்தின் பங்காளி ஸ்தாபனங்கள் அனைவரும் அடையக்கூடிய பலாபலனானது மிக மட்டுப்படுத்தப் பட்டதாகவே இருக்கும்”.[197] தொடர்ச்சியான இவ் ஆள்சேர்ப்பு நடவடிக்கையானது, சிறார்களை மீண்டும் தமது சமூகங்களோடு இணைப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் மீது மிக பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக இவ்வறிக்கையானது மேலும் வலியுறுத்திக் கூறுகிறது. பாதுகாப்பானதும் உத்தரவாதப் படுத்தப்பட்டதுமான சூழல் ஒன்றிற்குள்ளேயே, குடும்பங்களுடன் மீள் இணைப்பு என்னும் நடவடிக்கையின் வெற்றியானது அமைந்துள்ளது. வடக்கு கிழக்குப் பிரதேசம் எங்கும் தொடர்ச்சியாகவும், சில இடங்களில் மிக வன்முறை கலந்ததாகவும் தற்போது நடத்தப்படும் இச்சிறார்களை படையில் சோக்கும் நடவடிக்கையானது, குடும்பங்களுடனான மீள் இணைப்பு முயற்சியின் வேகத்தை மிக மோசமாக பாதிக்கிறது.[198]

இச் செயற் திட்டத்தின் மூலம், சிறார்களை படைகளில் சேர்ப்பதும் அவர்களை பயன்படுத்துவதும் என்பவற்றை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான புலிகள் இயக்கத்தின் கடப்பாடுகளை தெளிவாக நடைமுறைப் படுத்துவதற்காக, புலிகள் இயக்கத்தினால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அத்துமீறல் பற்றிய விடயங்களை புலிகள் இயக்கத்திடம் நேரடியாகவே கேள்விக்கு உட்படுத்துவதற்கு யுனிசெப் அமைப்பானது மேற்கொள்ளுகின்ற முயற்சிகளை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது புரிந்து கொள்கிறது. கல்வி வாய்ப்பு, தொழில் பயிற்சி, சிறார் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் உட்பட முன்னாள் சிறார்

---

[197] யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான முன்னேற்ற அறிக்கை. ஜனவரி-யூன் 2004, செப்டம்பர் 2004 பக்கம் 28

[198] Ibid

படையினர் மீள குடும்பங்களோடு இணைவதை தடுக்கின்ற, சிறார்கள் படைகளில் சேர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்களை அதிகரிக்க செய்கின்ற மிக அடிப்படையான பிரச்சினைகளை கையாளுவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகளின் அமைப்புக்கள் என்பன கூட்டாக பணியாற்றுவதற்கு இச்செயற் திட்டமானது சில முக்கியமான வழிவகைகளை வழங்கியிருக்கிறது. எனவே ஒட்டு மொத்தமாக பார்க்கையில் இச் செயற்திட்டத்தில் இருந்து யுனிசெப் அமைப்பானது தம்மை வாபஸ் (Withdraw) பெற்றுக்கொள்ள வேண்டும் என்னும் கருத்தை மனித உரிமைகள் அமைப்பானது ஆதரிக்கவில்லை.

எவ்வாறாயினும், தமது படையணிகளில் உள்ள சிறார்களை விடுவித்தல் மற்றும் ஆட்சேர்ப்பை முடிவுக்கு கொண்டு வருதல் என்பவை தொடர்பாக தமது கடப்பாடுகளை நிறைவேற்ற புலிகள் இயக்கம் தவறியுள்ளமையானது செயற் திட்டத்தினால் முன்வைக்கப்பட்ட குறிக்கோள்களை மிக மோசமாக பாதிக்கின்றது, என்னும் விடயம் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது தனது அக்கறையை வெளிப்படுத்துகிறது. இச் செயற் திட்டம் தொடர்பாக புலிகள் இயக்கத்துடன் ஓர் முறையான ஒப்பந்தத்திற்கு வந்து 16 மாதங்கள் ஆகிவிட்ட நிலையிலும் கூட, குறிக்கோள்களை அடைவதில் கணிசமான முன்னேற்றம் காண முடியாத குறைபாடானது, இச் செயற் திட்டம் தொடர்பாக சமூகத்திலான நம்பிக்கையை சிதைத்துள்ளதோடு, யுனிசெப் அமைப்பானது தொடர்ச்சியாக புலிகளோடு மேற்கொண்டு வரும் அணுகுமுறை மூலோபாயத்தின் நியாயாதிக்கத்தையும் கேள்விக்கு உட்படுத்துகிறது. இச்செயல் திட்டத்திற்கு இசைவாக புலிகள் இயக்கம் செயற்படாமை தொடர்பாக பல பகிரங்க அறிக்கைகளை யுனிசெப் அமைப்பானது வெளியிட்டிருந்தாலும், அது தொடர்ந்தும் அச்செயற் திட்டத்தில் சிறார் படையினர் தொடர்பான விடயத்தில் தன்னை ஈடுபடுத்தி கொண்டுள்ளதன் மூலம் சிறார்கள் தொடர்பாக புலிகள் இயக்கமானது தற்போது கடைப்பிடிக்கும் கொள்கையை, எவ்வித தர்க்கங்களுக்கும், ஏற்றுக் கொள்ளலுக்கும் அப்பால் சென்று நியாயப் படுத்துகிறது என்றே மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நம்புகிறது.

தொடர்ந்தும் புலிகள் இயக்கமானது தமது கடப்பாடுகளை நிறைவேற்ற தவறியுள்ள வெளிப்படையான நிலமையில், இச்செயல் திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடப்பாடுகளை புலிகள் இயக்கம் நிறைவேற்றுவதற்கு மிக உறுதியான கால எல்லைகளை யுனிசெப் அமைப்பானது வரையறுக்க வேண்டும், என்று மனித உரிமைகள் கண்காணிப்பு குழு வலியுறுத்திக் கூறுகிறது. உதாரணமாக இக்கால எல்லை வரையறைக்குள், மூன்று மாத காலத்திற்குள் சிறார்கள் படையில் சேர்க்கப்படுதல் நிறுத்தப்பட வேண்டும். ஓர் குறிக்கப்பட்ட எண்ணிக்கையான சிறார்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்கின்ற விடயங்கள் உள்ளடக்கப்படலாம். அவ்வாறு குறிக்கப்பட்ட கால வரையறைக்குள் புலிகள் இயக்கமாது அவற்றை நிறைவேற்ற தவறுகின்ற பட்சத்தில், இடைமாற்று நிலையங்களுடன் தமது சகல பணிகளையும் யுனிசெப் அமைப்பு நிறத்திக் கொள்வதோடு, இடைமாற்று நிலையங்களை நடத்துவதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு நிதி வழங்கப்படுவது தொடர்பான நிபந்தனைகளையும் நிறுத்திவிட வேண்டும்.

சிறார்கள் படைகளில் சேர்த்துக்கொள்ளப் படுவதை சகல வழிகளிலும் முடிவுக்கு கொண்டுவருவதற்காக புலிகள் இயக்கத்துடன் மிக உயர்மட்ட நியாயப் பிரச்சாரம்

(Advocacy) என்பதையும் தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் யுனிசெப் அமைப்பானது மேற்கொள்ள வேண்டும், என்பதை நாம் ஆதரிக்கின்றோம். இச் செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகளுக்காக (follow ups) ஏனைய பங்காளிகளால் வழங்கப்படுகின்ற சமூக சேவை ஒத்துழைப்புக்களுடன், ஓர் மிக குறுகிய காலத்திற்குள் தனித் தனியான சம்பவங்களின் அடிப்படையிலேனும் சிறார்கள் தமது குடும்பங்களோடு மீள இணைந்து கொள்வதை வசதிப் படுத்துவதற்கான தகமைகள், யுனிசெப் அமைப்பின் மாவட்ட காரியாலயங்களுக்கு இருந்துள்ளன, என்பதையே அனுபவங்கள் காட்டுகின்றன.

எனவே புலிகள் இயக்கமானது தனது செயற்பாடுகளை மாற்றிக் கொள்வதற்காக, கௌவரமான நடவடிக்கைகளை எடுக்கும்வரை, யுனிசெப் அமைப்பானது செயல் திட்டத்திற்கு உதவுகின்ற ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் அதனை ஆதரிக்கின்ற அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் சமூக குழுக்கள் என்பவற்றுடன் கூட்டாக இணைந்து, இப்பாதுகாப்பு வழங்கும் தனது செயல் நடவடிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பட வேண்டும்.

## XII. தேசிய அரசாங்கத்தின் பிரதிபலிப்புக்கள்

புலிகள் இயக்கம் சிறார்களை படையில் சேர்ப்பது அல்லது பாவிப்பது தொடர்பாக சிறீ லங்கா அரசாங்கமானது மிக அண்மைக் காலம்வரை வெளிப்படையாக எதுவும் பேசவில்லை. அது சமாதான நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தி விடக்கூடும் என்பதே சிலவேளை இதற்கான காரணமாக இருக்கலாம். புலிகள் இயக்கத்தால் சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக பெருந்தொகையான சாட்சியங்கள் இருந்தும் கூட, அரசாங்கமானது தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் கூட சிறார்களை பாதுகாப்பதற்கு மிக சிறிதளவான நடவடிக்கைகளையே மேற்கொண்டுள்ளது. அரசாங்கமானது தனது பொறுப்பை யுனிசெப், சர்வதேச தொழில் ஸ்தாபனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகிய சர்வதேச நிறுவனங்களிடம் மிக வெற்றிகரமாக கைமாற்றி விட்டுள்ளது.

உண்மையிலேயே அரசாங்கமானது மிகச் சிக்கலான நிலைக்குள் அகப்பட்டிருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆயுத மோதல்கள் நிகழ்ந்த காலத்தில் இலங்கை அரசாங்கமானது பல்வேறு தருணங்களில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மீறி இருப்பதன் காரணமாக அரச பாதுகாப்பு படைகளின் மீதும் அரசாங்கத்தின் மீதும் தமிழ் மக்கள் அதிக நம்பிக்கையீனத்தை கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமன்றி கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் அங்கு அரசாங்கத்தின் கட்டுப்பாடானது பெருமளவில் பெயரளவிற்கே இருப்பதும் இன்னுமொரு பாரிய சவாலாகும். சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் இதுபற்றி தெளிவுபடுத்துகையில், கிழக்கு மாகாணத்தில் நிர்வாகத்தை புலிகள் இயக்கமே கட்டுப்படுத்துகின்றது என்றும், அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் கூட இதுவே நிலைமை என்றும், இப்பிரதேசங்களில் நடக்கின்ற விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்திற்கு மிகச் சிறிய ஆதிக்கமே நிலவுகிறது என்றும்

தெரிவித்தார்.[199] உதாரணமாக, நாடளாவிய ரீதியில் சுகாதாரம், கல்வி, உணவுச் சேவைகள் போன்றவற்றிற்கான நிதியை இலங்கை அரசாங்கமே பகிர்ந்தளிக்கிறது. ஆனால் கிழக்கு மாகாணத்தை உத்தியோக பூர்வமாக அரசாங்கமே தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தாலும், மேற்சொன்ன வளங்களைப் பகிர்ந்தளிக்கும் விடயங்களை புலிகள் இயக்கமே கட்டுப்படுத்துகிறது.

எவ்வாறாயினும், தம்மீது ஏற்பட்டிருக்கும் நம்பிக்கையீனங்களை களைவதற்கு அரசாங்கமானது சில அடிப்படையான நடவடிக்கைகளைக்கூட இன்னும் மேற்கொள்ளவில்லை. உதாரணமாக, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை பொலிசாரோ, இராணுவத்தினரோ பெரும்பாலும் அல்லது முழுமையாகவே சிங்களவர்களாகவே இருக்கின்றனர்.[200] ஒவ்வொரு காவல் நிலையங்களிலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் முறைப்பாடுகளை எழுதுவதற்கும் தமிழ் அதிகாரிகள் இருந்தாலும்கூட,- எந்தவித கேள்விகளுக்கும் இடமின்றி இப் பிரைச்சினையில் மொழி மிகக் காத்திரமான பங்கை வகித்துள்ளது- எனவே இவ்விடயமானது பொலீசாரிடம் சென்று முறையிடுவதில் மக்களுக்கு தயக்கத்தை ஏற்படுத்துகிறது.[201] பெற்றோர்களைப் பொறுத்தவரை அவர்கள் தமது மொழியில் முறைப்பாடுகளை பதிவு செய்வதையே மிக வசதியாக உணர்வார்கள், என்பதை ஏற்றுக்கொண்ட திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மேலும் அதிக தமிழ் பேசும் அதிகாரிகளை சேர்த்துக்கொள்வது மிகச் சிறந்த யோசனை என்பதை ஏற்றுக்கொண்டார்.[202]

கருணாவின் படையில் இருந்து விடுவிக்கப்பட்டு, புலிகள் இயக்கத்தினால் மீள பிடித்து செல்லப்படுவதற்கு குறிவைக்கப்படுகின்ற சிறார்களை பாதுகாப்பதென்பது இங்கு மிகவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.
திருகோணமலையை சேர்ந்த ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவினரிடம் கூறும்பொழுது, “ இக்குடும்பங்களுக்கு மேலதிகமான

---

[199] 2004ம் ஆண்டு ஆகஸ்ட் 14ம் திகதி அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய பேட்டியில் இருந்து. உதாரணமாக, அரசாங்கமானது பாடசாலைகளை பேரளவிற்கு நிர்வகித்தாலும், புலிகளின் நடவடிக்கையைப் பொறுத்தவரை அவர்கள் எந்தநேரமும் பாடசாலைகளுக்குள் நுழைந்து பிரச்சார நடவடிக்கைகளை (சரித்திர பாடங்கள் என்கின்ற போர்வையில்) தாம் விரும்பிய படி மேற்கொள்ளலாம்.அநேகமான பெற்றோர்கள் புலிகள் இயக்கத்தின் இந்நடவடிக்கையை எதிர்த்தாலும் அரசாங்கமானது தமிழ் வரலாற்றை சரியாக பிள்ளைகளுக்கு கற்பிப்பது இல்லை. ஒரு பெற்றோரின் வார்த்தைகளின்படி “எமது பிள்ளைகள் மனதில் ஏற்பட்ட வடுக்களோடு இருக்கிறார்கள். நாங்கள் என்ன நடந்தது என்று அவர்களுக்கு கூறவேண்டும். அரசாங்க ஆசிரியர்கள் தமது கடமைகளில் அக்றையீனமாக இருக்கின்றனர். எனவே புலிகள் இயக்கமானது வந்து எமது வரலாற்றைப் பற்றி எமது பிள்ளைகளுக்கு கற்பிப்பது சரியானதே” 2004 ஆகஸ்ட்டில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய பேட்டி.

[200] உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் 90வீதமான பொலீசார் சிங்களவர்களே. 2004 ஆகஸ்ட் 11ம் திகதி திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகேயுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய பேட்டியில் இருந்து

[201] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புடன் பேசிய பல சாட்சிகள் மீண்டும் மீண்டும் இதைக் கூறினார்கள் இப்போது முன்னரைவிட பாதுகாப்பு படையினர் சற்று நல்லவிதமாக நடந்து கொண்டாலும், இப்போதும் சோதனை சாவடிகளுக்கு ஊடாக நாம் நடந்து போகையில் எம்மை அவர்கள் சங்கடப் படுத்துவதாகவே நாம் உணர்கிறோம். இச்சாவடிகள் அநேகமாக சிங்களம் பேசுபவர்களைக் கொண்டே நிர்வகிக்கப்படுகிறது

[202] Ibid

பாதுகாப்பை எங்களால் வழங்க முடியாது" என்றார்[203]. அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு கீழுள்ள நபர்களின் பாதுகாப்பு பொறுப்பானது அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது. இது தொடர்பாக ஓர் மனித உரிமை செயற்பாட்டாளர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் விபரிக்கும் பொழுது, "தனது கட்டுப்பாட்டில் உள்ள சிறார்களை பாதுகாக்கும் கடமை என்பது ஓர் அரசாங்கத்திற்கு உண்டு. ஆபத்திற்கு முகம் கொடுத்திருந்த சிறார்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து வெளியே எடுத்து அவர்களுக்கு பாதுகாப்பான ஏற்பாடுகளை செய்யும்படி, அது தொடர்பாக அக்கறைப்பட்ட பல தனிநபர்கள் அரசாங்கத்துடன் பேசினார்கள். ஆனால் அதனைச் செய்வதற்கான தகைமை அரசாங்கத்திற்கு இருக்கவில்லை. அரசாங்கமானது அதனை செய்திருக்க வேண்டும்.[204]

தம்மால் உண்மையில் சிறார்களை பாதுகாக்க முடியும் என இலங்கை அரசாங்கமானது தன்னை விமர்சிப்பவர்களுக்கு நம்பிக்கை கொடுக்க வேண்டும். 2000 ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாமில் ஆக குறைந்தது 26 தமிழர்கள், வாள்கள், பொல்லுகள் சகிதம் நுழைந்த சிங்கள காடையர்களினால் கொல்லப்பட்டனர். அதில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் 14 வயதிற்கும் 23 வயதிற்கும் இடைப்பட்ட புலிகள் இயக்கத்தின் முன்னை நாள் அங்கத்தவர்களே. இப்படுகொலை சம்பவமானது தமிழர்களின் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கத்தின் அக்கறையீனத்தை நிருபிக்கும் இன்னுமொரு சாட்சியாகவே தமிழ் மக்கள் கண்ணுற்றனர். பல முரண்பாடுகளுடன் மிக நீண்ட வழக்கு விசாரணைகளின்பின் இக்கொலைகளோடு சம்பந்தப்பட்ட மூன்று கிராமத்தவர்களுக்கும் இரு பொலிஸ் அதிகாரிகளுக்கும் மரணதண்டனை என தீர்ப்புகள் வழங்கப்பட்டன. மேலும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருந்த ஏனைய 36 பேர் பல்வேறு காரணங்களுக்காக விடுதலை செய்யப்பட்டனர்.[205]

பல்வேறு சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் கூற்றுப்படி முன்னாள் சிறார் படையினர்கள், உள்ளுர் அரச காரியாலயங்களில் தமக்கான அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதிலும் பல சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிய வருகிறது. "அடையாள அட்டைகளை தம்மோடு வைத்திருக்கும் தனிநபர்கள் சுதந்திரமாக நடமாட முடியும். உங்களிடம் அடையாள அட்டை இல்லாவிட்டால் நீங்கள் சந்தேகத்தொடு பார்க்கப்படுவீர்கள்" ஒரு சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் எம்மிடம் கூறினார்.[206] முன்னாள் போராளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினால் புலிகள் இயக்கத்திடம் இருந்து பிரச்சினைகள் ஏற்படலாம் என உள்ளுர் அரசாங்க உத்தியோகத்தர்கள் பயப்படுவதாகவும் அவ் அரசசார்பற்ற நிறுவனம் மேலும்

---

[203] 2004ம் ஆண்டு ஆகஸ்ட் 11ம் திகதி திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவகேயுடன் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு நடத்திய பேட்டியில் இருந்து

[204] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சிறீ லங்கா ஜனநாயக அரங்கு அங்கத்தவருடன் நடத்திய பேட்டியில் இருந்து

[205] ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு: "சிறைக் கைதிகளை படுகொலை செய்ததற்காக இரு சிறீ லங்கா பொலிஸ் அதிகாரிகளுக்கு மரணதண்டனை" பத்திரிகை அறிக்கை 2003 யூலை 1ம் திகதி http://massacres.ahrchk.net/bindunuwewa/main_file.php/the+Bindunuwewa+massacre/151/ (2004ஒக்டோபர் 9ம் திகதி மீள நினைவுறுத்தப் பட்டது)

[206] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்டில் மட்டக்களப்பு சர்வதேச அரசசார்பற்ற நிறுவ பணியாளர்களுடன் நடத்திய பேட்டியில் இருந்து

தெரிவித்தது. அதே வேளை மறுபுறமாக உள்ளூர் அரசாங்க உத்தியோகத்தர்கள் புலிகளுக்கு ஆதரவானவர்களாக இருக்கிறார்கள் எனவே அவர்களிடம் போய் தமது பத்திரங்களுக்காக விண்ணப்பிக்க பெற்றோர்கள் அச்சப்படுகின்றனர். எனவே முன்னாள் சிறார் போராளிகள் உட்பட சகல இளம் வயதினரும் இப்பாதுகாப்பு அடையாளப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதை உறுதி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

சில உள்ளூர் அவதானிப்பாளர்களின் கருத்துப்படி, கடந்த காலங்களில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் மீது அரசாங்கம் மேற்கொண்ட அத்துமீறல்கள் மற்றும் அவர்களை மிக மோசமாக கையாண்ட சம்பவங்களை கருத்தில் கொண்டு, புலிகள் இயக்கத்தில் பங்குபற்றிய முன்னாள் சிறார் படையினர் அனைவருக்கும் அரசாங்கமானது ஓர் முறையான பொதுமன்னிப்பை அறிவிக்க வேண்டும், என்று கூறினர். மேலும் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் எம்மிடம் கூறுகையில், யுத்த நிறுத்தம் முறிவடைந்தால் அதன் பின் அரசாங்கத்தினால் பிரச்சினை ஏற்படலாம் என்கின்ற அச்சத்தில் முன்னாள் போராளிகளை தம்மோடு இணைத்துக் கொள்வதற்கு உள்ளூர் சமூகங்கள் அஞ்சுகின்றன.[207] மீண்டும் தாம் புலிகள் இயக்கத்தால் பிடித்து செல்லப்படலாம் என்னும் ஆபத்திற்கு முகம்கொடுத்துள்ள சிறார்களும் கூட, மீண்டும் மோதல்கள் ஆரம்பிக்குமா? அரசாங்கம் எங்கள் மீது வழக்குத் தொடருமா? என்னும் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். இவ்வாறான நிலமைகள், அரசாங்க ஸ்தாபனங்களை அணுகி உதவி கேட்பதற்கு அவர்களை தயங்கச் செய்கிறது. அரசாங்கமானது முன்னாள் போராளிகள் மீது வழக்கு தெடர்ந்ததான வரலாறு அதற்கு இல்லையாயினும், யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் புலிகளின் அங்கத்தவர்கள் மீது கடும் நடவடிக்கையை மேற்கொண்ட அரசாங்கத்தின் வரலாறு, அதைப்பற்றிய அச்சங்கள் தொடர்ச்சியாக இருப்பதற்கு வழி கோலுகின்றன. யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டார்கள் என குற்றஞ் சாட்டப்பட்ட நபர்களுக்கு அரசாங்கம் பொதுமன்னிப்புக் கொடுக்க தேவையில்லை. ஆனால் புலிகள் இயக்கத்தில் பங்குபற்றியது ஒன்றுதான் அவர்களின் குற்றமாக கருதப்படுகின்ற சிறார்களுக்கு அது பொது மன்னிப்பை வழங்க வேண்டும். இவ்வாறான ஓர் பொது மன்னிப்பானது அச்சிறார் போராளிகள் மீளவும் சிறீ லங்கா சமூகத்தோடு தம்மை ஒன்றிணைத்துக் கொள்ளுவதற்கான வாய்ப்புக்களை இலகுவாக்கும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள கொழும்பில் உள்ள இரு சுதந்திரமான ஸ்தாபனங்களாகும். சிறார்கள் படையில் சேர்க்கப்படும் பிரச்சினை தொடர்பாக வெவ்வேறு வழிகளில் விசாரணைகளை மேற்கொண்டு, அதுபற்றி அறிக்கைகளை வெளியிடுவதற்கான ஆணை (Mandate) இவ் இரு ஸ்தாபனங்களுக்கும் உண்டு. இவ் இரு ஸ்தாபனங்களும் தமது நடவடிக்கைகளுக்காக மிகச் சிறிய அளவு உதவிகளையே அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொள்கின்றன. அத்துடன் மிக குறைந்த நிதிவளத்தை கொண்ட அவல நிலமையிலேயே அவை இருக்கின்றன. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார

---

[207] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 செப்டம்பர் 30ல் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதியுடன் இலண்டனில் நடத்திய பேட்டியில் இருந்து

சபையானது நாடு பூராகவும் 26 உத்தியோகத்தர்களை கொண்டிருக்கிறது. அதற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணையில் ஒரு சிறு பகுதியை நிறைவேற்றுவதற்கு கூட இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லை. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவானது கொழும்பில் இருந்து பல முக்கியமான அறிக்கைகளை வெளியிடுகின்றது. ஆனால் அதன் காரியாலயத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் மூலம் அதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படவில்லை என புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சார்பில் திருகோணமலையில் பணியாற்றும் ஓர் அங்கத்தவர் எம்மிடம் கூறும்பொழுது, நாங்கள் கிரமமாக எமது பொறுப்பாளருக்கும், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் அறிக்கைகளை அனுப்புகின்றோம். அவ் அறிக்கைகள் பற்றி எவ்வாறான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது எமக்குத் தெரியாது.[208]

தேசிய மனித உரிமை ஆணைக்குழுவானது பல்வேறு சர்வதேச தரப்பினர்களுடன் சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் நிலமைகளை கண்காணிக்க முடியும் என முன்மொழியப்பட்டிருந்தது. அப்பணியை, தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு மிக வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு, கிழக்கு மாகாணம் முழுவதும் கண்காணிப்பாளர்களை அமர்த்தக்கூடிய தகைமை அதற்கு இருக்க வேண்டும். அந்த மட்டத்தில் பரவலாக கண்காணிப்புக்களை மேற்கொள்வதன் மூலம் சிறார்கள் கடத்தப்படுதல் என்பது குறைக்கப்படவும், குறிப்பாக தற்போது எவ்வித கேள்விகளும் இன்றி பெற்றோர்கள் மீது நடத்தப்படும் அத்துமீறல்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் என்பவையும்கூட கையாளப்படலாம். ஆனால் இது வெற்றிகரமாக நடைபெறுவதற்கு தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தேசிய அரசாங்கத்தினதும், சர்வதேச நிதி வழங்குநர்களினதும் உதவிகள் கிடைக்க வேண்டும்.

## XIII. சிறீ லங்கா கண்காணிப்பு குழு (சிறீ.ல.க.கு.- SLMM)

2002ம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை கண்காணிப்பதற்காகவே சிறீ லங்கா கண்காணிப்பு குழு (சிறீ.ல.க.கு) நியமிக்கப்பட்டது. ஐஸ்லாந்து, பின்லாந்து, சுவீடன், டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளே சிறி.ல.க.கு வில் அங்கத்தவாகளாக இருக்கின்றனர். சிறீ.ல.க.கு வின் தலைமைக் காரியாலயமானது கொழும்பில் அமைந்திருப்பதோடு, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டகளப்பு, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில், ஆறு மாவட்ட காரியாலயங்களையும் அது கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் கடல் கண்காணிப்பு குழுக்களையும் அது கொண்டிருக்கிறது. ஒவ்வொரு கண்காணிப்பு குழுவும் ஐந்து அங்கத்தவர்களை கொண்டிருப்பதோடு, அவற்றில் இருவர் அரசாங்கத்தினால்

[208] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்டில் திருகோணமலையில், தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதியுடன் நடத்திய பேட்டியில் இருந்து

நியமிக்கபட்டும், இன்னும் இருவர் புலிகள் இயக்கத்தால் நியமிக்கப்பட்டும் ஐந்தாவது நபர் சிறி.ல.க.கு வினால் நியமிக்கப்பட்டும் உள்ளனர்.[209]

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருக்கின்ற அடிப்படையில், சிறி.ல.க.கு விற்கு வழங்கப்பட்டுள்ள ஆணையானது (Mandate) "யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ள ஒழுங்கு விதிகளும் நிபந்தனைகளும் மீறப்படுகின்ற சம்பவங்களை விசாரிப்பது"[210] என்பதுடன், இருசாராரினதும் பொறுப்பேற்றுக் கொள்ளலுடன் "தமது சாராரினால் ஏதாவது பிணக்குகள ஏற்படும் பட்சத்தில அதனைத் தீர்ப்பதற்காக பரஸ்பரம் முழுமையாக ஒத்துளைக்க வேண்டும். மேலும் சிறீ.ல.க.கு வானது "முறைப்பாடுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுப்பது, மற்றும் அதனை விசாரித்து ஏற்படுத்தப்பட்ட முரண் நிலை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பாரை ஓர் பொது இணக்கப்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு உதவி வழங்குவது,"[211] என்னும் பணியை மேற்கொள்ளவும் பணிக்கப்பட்டுள்ளது. சிறீ.ல.க.கு வானது ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் படி, துணைப்படைகளை நிராயுத பாணியாக்குதல், ஆயுத தளபாடங்கள் நகர்த்தப்படுவதை கவனித்தல், ஏற்றுக்கொள்ளப்பட்டபடி இரு தரப்பினரும் தமக்கு இடையேயான தூரத்தை பராமரித்தல், தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை வெவ்வேறாக பராமரித்தல் போன்ற ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை விடயங்களை் கண்காணிக்கவும் பணிக்கப்பட்டுள்ளது.

மிகக் குறிப்பாக சிறீ.ல.க.கு வானது அரசாங்கத்தினாலும் புலிகள் இயக்கத்தினாலும் மேற்கொள்ளப்படுகின்ற சர்வதேச சட்டங்களை மீறும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு அதிகாரத்தைப் பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக, "ஆட்கடத்தல், அச்சுறுத்தல், சித்திரவதை செய்தல், பலவந்த நிதிசேகரிப்பு மற்றும் துன்புறுத்தல் உட்பட சாதாரண சிவில் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் " ஈடுபடுவதை இருசாராரும் தவிர்க்கின்றனரா எனவும் கண்காணிப்பர்.[212] அவர்களுக்கு கிடைத்துள்ள ஆணையில், பிற்பகுதியில் கூறப்பட்ட விடயங்களில் அவர்கள் அக்கறையற்றிருந்ததாக விமர்சனங்கள் சிறீ.ல.க.கு மீது முன்வைக்கப்படுகின்றன. மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு மேற்கொண்ட பேட்டிகளும் மற்றும் ஆய்வுகளும் இவ் விமர்சனங்களை உறுதிப் படுத்துகின்றன.

2002ம் ஆண்டு பெப்பரவரி 1ஆம் திகதிக்கும் 2004ம் ஆண்டு 30ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில், சிறார்கள் படையில் சோத்துக் கொள்ளப்பட்டமை தொடர்பாக 1,784 முறைப்பாடுகளும் சிறார்கள் கடத்தப்பட்டமை தொடர்பாக 97 முறைப்பாடுகளும் புலிகள் இயக்கத்திற்கு எதிராக, சிறீ.ல.க.கு விற்கு கிடைக்கப்

---

[209] ஸ்ரீ லங்கா ஜனநாயக சோஷலிசக் குடியரசான அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே 2002, பெப்ரவரி 22ம் திகதி கையொப்பமிடப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம்.

[210] Ibid
[211] Ibid
[212] யுத்த நிறுத்த ஒப்பந்தம் பிரிவு 2.1

பெற்றுள்ளன.[213] மேற்சொன்ன முறைப்பாடுகள் அனைத்திலும், சிறார்கள் படையில் சேர்க்கப்பட்ட சம்பவங்கள் 1,441 உம், சிறார்கள் கடத்தப்பட்டதான சம்பவங்கள் 51உம், யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் என்பதை சிறீ.ல.க.கு ஏற்றுக் கொள்ளுகிறது.

சிறீ.ல.க.கு விற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் பெருந்தொகையானவை புலிகள் இயக்கத்தால் சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கையைப் பற்றியதாக இருந்தும்கூட, மனித உரிமைகள் கண்காணிப்பு குழு, சிறீ.ல.க.கு வுடன் நடத்திய சந்திப்புக்களில் இருந்து, இச்சிறார்களை படையில் சேர்க்கும் விடயமானது தொடர்ச்சியாகவே முக்கியத்துவம் அளிக்கப்படாமல் இருந்துள்ளது என்பதே தெரியவருகின்றது. திருகோணமலையில் உள்ள சிறீ.ல.க.கு வின் பிரதிநிதி ஒருவர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் கூறும்பொழுது, ‘‘சிறார்களை படையில் சேர்க்கும் விடயமானது எந்த விதத்திலும் சமாதானத்துடன் தொடர்புள்ள விடயமாக நான் பார்க்கவில்லை. சிறார்களை படையில் சேர்க்கும் விடயத்தைவிட யுத்த நிறுத்தத்திற்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய வேறு பல பிரச்சினைகள் இருக்கின்றன, எனவே புலிகள் இயக்கத்துடனான சந்திப்புக்களில் இது பற்றி நாம் கேள்வி எழுப்புவதில்லை, என்றார்.[214] அதே வேளை மனித உரிமைகள் கண்காணிப்பு குழுவுடன் பேசிய இன்னுமொரு கண்காணிப்பாளர், சிறீ.ல.க.கு விற்கு வழங்கப்பட்டுள்ள ஆணையானது ‘‘சிறார்களை படையில் சேர்ப்பது பற்றி நேரடியாக குறிப்பிடவில்லை’’[215] என்றார்.

திருகோணமலை காரியாலயத்தின் கருத்துப்படி, சிறார் ஒருவர் படையில் சேர்க்கப்படுவது தொடர்பாக சிறீ.ல.க.கு விற்கு ஒரு முறைப்பாடு கிடைக்கின்ற பட்சத்தில், அவ்விடயம் தொடர்பாக மேலதிக விபரங்களை புலிகள் இயக்கத்திடம் கோருவது, முறைப்பாடு நம்பத் தகுந்ததாக இருக்கின்ற பட்சத்தில், உடனே புலிகள் இயக்கத்தின் கிளிநொச்சி காரியாலத்திற்கு அறியத் தருவது, என்ற வகையிலேயே நடைபெறுகிறது. வயது குறைந்த சிறார் படையில் சேர்க்கப்படுவது தொடர்பான முறைப்பாடுகளில் மிக சிலவற்றையே தாம் கையாளுவதாக சிறீ.ல.க.கு கூறுகின்றது. இதற்கு முக்கிய காரணம் அவர்கள் இப்பிரச்சினையை தாம் கையாள்வது இல்லை என மக்களிடம் தெரிவித்து இருப்பதாகும்.[216] அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஆணைக்குள் மிகத் தெளிவாகவே சிறார்கள் படையில் சேர்க்கப்படும் விடயம் குறிப்பிடப் பட்டிருப்பதால் அவர்களின்

---

[213] சிறீ லங்கா கண்காணிப்பு குழு, ‘‘சகல மாவட்டங்களிலும் நடந்த அத்துமீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளை பற்றிய அறிக்கையின் சாரம்சம், அறிக்கை தயாரிக்கப்பட்ட காலம்: 2002 ெப்பரவரி 1ம் திகதி -2004செப்டம்பா 30ம் திகதி பார்க்க, http://www.slmm.lk/OperationsMatter/complaints/2004_Alldistricts.edf (2004 ஒக்டோபர் 24ம் திகதி மீள நினைவுறுத்தப் பட்டது) இதே காலகட்டத்தில் சிறீ.ல.க.கு.வானது சிறீ லங்கா அரசாங்கம் சிறார் ஒருவரை படையில் சோத்தாக முறைப்பாடு ஒன்றை பெற்றுக் கொண்டது ஆனால் இது யுத்த நிறுத்த மீறல் என கணக்கிடப் படவில்லை.

[214] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஓகஸ்ட் 12ம் திகதி சிறீ.ல.க.கு திருகோணமலை கண்காணிப்பாளர் ஹெல்கே லைபர்க் உடன் நடத்திய பேட்டியில் இருந்து

[215] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பு சிறீ.ல.க.கு.கண்காணிப்பாளர் சுசானே பெடர்சன் உடன் நடத்திய பேட்டியில் இருந்து

[216] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஓகஸ்ட் 12ம் திகதி சிறீ.ல.க.கு திருகோணமலை கண்காணிப்பாளர் ஹெல்கே லைபர்க் உடன் நடத்திய பேட்டியில் இருந்து

இன்நிலைப்பாடானது மிகச் சஞ்சலம் ஊட்டுவதாகவே இருக்கின்றது. ஆட்கடத்தல், அச்சுறுத்தல், மற்றும் துன்புறுத்தல் போன்ற அவர்களின் ஆணையில் ஒவ்வொன்றாக குறிப்பிடப்பட்டுள்ள அத்துமீறல்களுடன் விசேடமாகக் குறிப்பிடப்படாத மற்றைய அத்துமீறல்களும் சர்வதேச சட்டங்களை மீறுகின்றன என்பது தெளிவு. இவ்வாறு இரக்க சிறாாகளைச் சேர்த்தல், தீவிர கண்காணிப்பிற்கு ஆட்படவேண்டிய முக்கியத்துவம் கொண்டதல்ல என்ற சிறீ.ல.க.கு வின் பார்வை கவலைக்குரியது.

இன்னும் ஒரு கண்காணிப்பாளர் எம்மிடம் கூறுகையில்: "நாங்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரின் அழைப்பின் பேரிலேயே இங்கு வந்துள்ளோம்...... எனவே பகிரங்க அறிக்கைகள் விடுவது என்பதை, நாம் இங்கு மேற்கொள்ளும் பணிகளில் ஓர் அங்கமாக பார்க்கவில்லை" என்றார்.[217] இருந்தாலும் அரசியல் படுகொலைகளானது யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன, என சிறீ.ல.க.கு இன் தலைவர் இரு பகிரங்க அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.[218] ஆனால் சிறார்களை படையில் சேர்ப்பது தொடர்பாக அவ்வாறான அறிக்கைகள் எதையும் வெளியிடவில்லை.

சிறீ.ல.க.கு வின் ஆணைக்குள் அடக்கப்பட்டுள்ள பல்வேறு அம்சங்களை கையாளுவதற்கு ஓர் வழிமுறையாக, சிறீ.ல.க.கு வினது மனித உரிமைகள் கண்காணிப்பு செயற்பாடுகளையும், யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் நடைமுறை விடயங்களை கண்காணிக்கும் நடவடிக்கைளையும் பிரித்து செய்வதை மேற்கொள்ளலாம். இதை செய்வதற்காக சிறீ.ல.க.கு ஆனது மனித உரிமைகளுக்கான பிரிவொன்றை நிறுவுதோடு சிறீ.ல.க.கு விற்கு வழங்கப்பட்டுள்ள ஆணையில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ள, சர்வதேச சட்டங்கள் மீறப்படுகின்ற சம்பவங்களை முறையாக கண்காணிப்பதற்கென்றே அர்ப்பணிக்கப்பட்ட, பயிற்சி பெற்ற மனித உரிமை கண்காணிப்பாளர்களை அங்கு பணிக்கு அமர்த்த வேண்டும்.

அவ்வாறான ஒரு பிரிவு இல்லாதிருப்பதனால், சிறீ.ல.க.கு ஆனது சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தொடர்பான பிரச்சினையை தமது கண்காணிப்பாளர்களிடம் முதன்மைப் படுத்த வேண்டும். தனது பெயரை வெளியிட விரும்பாத ஒரு கண்காணிப்பாளர் எம்மிடம் கூறும்பொழுது பல கண்காணிப்பாளர்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினை என்றால் என்னவென்றே தெரியாது: "மனித உரிமைகள் என்றால் ஏதோ மென்மையான, மங்கலான அல்லது உருவமற்ற ஒரு விடயமாகவே அவர்கள்

---

217 மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பு சிறீ.ல.க.கு.கண்காணிப்பாளர் சுசானே பெடர்சன் உடன் நடத்திய பேட்டியில் இருந்து

218 சிறீ லங்கா கண்காணிப்புக் குழு, "அரசாங்க படையினரையும் புலிகள் இயக்க அங்கத்தவரையும் கொலைசெய்வது – யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கும் சமாதான முயற்சிகளுக்கும் மோசமான ஆபத்தை விளைவிக்கும்" 2004, மே 10ம் தயதி பத்திரிகை அறிக்கை. அரசாங்க படையினரையும் அரசியல் கட்சி அங்கத்தவரையும் கொலைசெய்வது – யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு மோசமான ஆபத்தை விளைவிக்கும்" 2004, மே 7ம் தயதி பத்திரிகை அறிக்கை.

[கண்காணிப்பாளர்கள்] நினைக்கின்றனர். எனவே அவ்வாறான பிரச்சினைகளைக் கையாளகின்றபொழுது அவர்கள் மிகப் பதட்டமடைகின்றனர்.[219]

சிறீ.ல.க.கு விற்கும் உள்ளூர் சாதாரண மக்களுக்கும் இடையே தொடர்புகள் இல்லை என்பதும் சிறீ.ல.க.கு பற்றிய இன்னுமொரு விமர்சனமாகும். இக்குற்றச்சாட்டு தொடர்பாக தமது கருத்தை சிறீ.ல.க.கு வெளியிடுகையில், தமக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையானது அரசாங்கத்தோடும் புலிகள் இயக்கத்துடனுமான கலந்துரையாடல்களோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது என்கின்றது. எவ்வாறாயினும் இவ் ஆணை தொடர்பாக, உன்னிப்பாக கருத்திற் கொண்டால், முக்கியமாக பகுதி 2.1 இன்படி சிறீ.ல.க.கு வானது பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்துடன் சில கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் கடமைப் பட்டுள்ளது..

சிறீ.ல.க.கு விற்கும் ஏனையவர்களுக்கும் இடையே கருத்துப் பரிமாற்றம் மிக மிக குறைவாகவே இருக்கின்றது என்பது, மனித உரிமைகள் கண்காணிப்பு குழு மேற்கொண்ட பேட்டிகளின் மூலம் தெளிவாக தெரிகின்றது. ஏற்கனவே விபரிக்கப்பட்ட, மட்டக்களப்பு கோயில் திருவிழாக்களில் ஆட்சேர்ப்பு நடவடிக்கை அதிகரித்ததைத் தொடர்ந்து, கோயில் திருவிழாக்களை கண்காணிப்பதற்கு சர்வதேச ஸ்தாபனங்கள் ஏற்றுக்கொண்டன. ஆனால் இவ்வாறானதொரு முன்முயற்சி எடுக்கப்பட்டது தொடர்பாகவே மட்டக்களப்பு சிறீ.ல.க.கு அறிந்திருக்கவில்லை. அது மட்டுமன்றி இவ்வாறான ஒரு பாதுகாப்பு பிரச்சினை கலந்துரையாடப்பட்ட கூட்டத்திற்கு கூட இவர்கள் அழைக்கப் பட்டிருக்கவில்லை. இன்னுமொரு கண்காணிப்பாளர் கூறுகையில, சிறீ.ல.க.கு விற்கும் ஏனைய உள்ளூர் குழுக்களுக்குமிடையே நல்ல கூட்டு கிடையாது, அவர்கள் தகவல்களைத் திரட்டும் வேகத்தை கணிசமாகக் குறைத்த காரணியாக இதனைக் கொள்ள வேண்டும்.[220]

## XIV. சர்வதேச நிதி வழங்குநர்கள;

2003ம் ஆண்டு யூன் மாதத்தில் டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கான நிதி வழங்குநர்களின் மாநாட்டில், இலங்கையில் யுத்தத்திற்கு பிற்பட்ட அபிவிருத்தி மற்றும் மீளமைப்பு நிதி உதவியாக 4.5 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்குவது என சர்வதேச சமூகம் கூட்டாக உறுதி கூறியது.[221] அம்மாநாட்டிற்கு ஐரோப்பி யூனியன், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள்

---

[219] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்ட் முற்பகுதியில் சிறீ.ல.க.கு. கண்காணிப்பாளருடன் நடத்திய பேட்டியில் இருந்து

[220] மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு 2004 ஆகஸ்ட் 5ம் திகதி மட்டக்களப்பு சிறீ.ல.க.கு. கண்காணிப்பாளர் சுசானே பெடர்சன் உடன் நடத்திய பேட்டியில் இருந்து .

[221] 2003ம் ஆண்டு யூன் 9-10 இல் நடைபெற்ற சிறீ லங்கா வில் புனர் நிர்மானம் மற்றும் அபிவிருத்திக்கான டோக்கியோ மாநாடு. வெளியுறவு அமைச்சு ஜப்பான். பார்க்க: http://www.mofa.go.jp/region/asia-paci/srilanka/conf0306/ (2004,26ம் திகதி மீள நினைவுறுத்தப்பட்டது) மோத்தமாக 51 நாடுகளும் 22 சர்வதேச நிறுவனங்களும் பங்குபற்றின. இவ்வறிக்கை எழுதப்படும்போது வாஷிங்டன் டிசி யில் அண்மையில் 2004 பெப்ரவரி 17 இல் நடத்தப்பட்ட சந்திப்பு உட்பட இம்மாநாடு தொடர்பான பல தொடர்ச்சி சந்திப்புக்களும் நடத்தப்பட்டன.

கூட்டாக தலைமை (Co-chaired) வகித்தன.[222] இம்மாநாட்டின் தீர்மானமானது வெளிப்படையாகவே நிதி உதவிகளை சமாதானப் பேச்சுவார்த்தைகளோடு இணைத்திருந்தன: "நிதி வழங்கும் சமூகத்தினரால் வழங்கப்படுகின்ற எந்த ஒரு உதவிகளும் கணிசமாகவும் சமாந்தரமாகவும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றத்தோடு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சமாதான நடவடிக்கைகளும் வழங்கப்படும் நிதி உதவிகளுக்கும் இடையே இணைப்பு இருப்பதால் சர்வதேச சமூகமானது சமாதானப் பேச்சுக்களில் முன்னேற்றத்தை கண்காணித்து மீளாய்வு செய்யும்".[223] அம்முன்னேற்றத்தை அளவிடுவதற்கு தேவையான பத்து குறிக்கோள்கள் மற்றும் அடைய வேண்டிய மைல் கற்களையும் இப்பிரகடனமானது மேலும் பட்டியல் இட்டுள்ளது. முஸ்லீம் மக்களின் அதிக பங்கேற்பு, முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு மற்றும் பால்நிலை சமத்துவம் போன்றவை உறுதிசெய்யப்பட வேண்டும், என்பன அம் மைல்கற்களில் சிலவாகும். அரசியல் தீர்வு தொடர்பான முன்னேற்றத்தை அளவிடுவதற்கான மைல் கல்லாக புலிகள் இயக்கத்தினால் வயது குறைந்தோர் படையில் சேர்க்கப்படுவது முடிவுக்கு கொண்டுவருதல், என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.[224]

இவ்வாறான வெளிப்படையானதோர் இணைப்பு இருந்தும் கூட நிதி வழங்குநர்கள், சிறுவர்கள் படைகளில் சேர்க்கப்படுவது தொடர்பாக மிக அண்மைக்காலம் வரை பெரும் அளவில் மௌனமாகவே இருந்துள்ளனர். டோக்கியோ மாநாடின் தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட சந்திப்புக்களின்போது, டோக்கியோ மாநாட்டின் எதிர்பார்ப்புக்களின்படி நடவடிக்கைகளை மேற்கொளுள்வதற்காக, சம்பந்தப்பட்ட தரப்பார் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென ஊக்குவிப்புக்களை மேற்கொண்டனர். 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கருணாவின் பிளவைத் தொடர்ந்து வயது குறைந்தோர் படைகளில் சேர்க்கப்படும் நடவடிக்கை திடீரென அதிகரித்ததன் போது, குறிப்பாக இது தொடர்பான நிதி வழங்குநர்களின் மௌனம் வெளிப்படையாகத் தெரிந்தது. வயது குறைந்தோர் படைகளில் சேர்க்கப்படும் விடயம் தொடர்பாக நிதி வழங்குநர்கள் பகிரங்கமாக கண்டிக்காது இருந்தமையும், ஏனைய தரப்பினர்கள் இது பற்றி மேற்கொண்ட மௌனமான நிலமையும் இணைந்து, எவ்வித அர்த்தமுள்ள சர்வதேச அழுத்தங்களுக்கும் அஞ்சாமல், புலிகள் இயக்கமானது தொடர்ந்தும் சிறார்களை படைகளில் சேர்ப்பதற்கு வகைசெய்தது.

ஆனால் மிக அண்மையில் இருந்து நிதிவழங்கும் சமூகங்கள் அதிகமாக குரல் கொடுக்கின்றன. ஐரோப்பிய யூனியன், மற்றும் அமெரிக்கா ஆகிய இணை தலைமைகள் (Co-Chairs), 2004ம் ஆண்டு யூன் முதலாம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டன. அவ்வறிக்கையிலும் அவர்கள் திரும்பவும் சம்பந்தப்பட்ட

---

[222] புலிகள் இயக்கமானது தனது, தன்னாட்சி நிர்வாக அதிகார சபை தொடர்பான முன்மொழிவை தான் அர்த்தப்படுத்துகின்ற விதத்திலேயே அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மறுப்பதைக் காரணம் காட்டி நிதி வழங்குநர் மாநாட்டைப் பகிஷ்கரித்தது. 2003ம் ஆண்டு செப்டெம்பரில் கொழும்பில் நடத்தப்பட்ட தொடர்ச்சி சந்திப்புக்களிலும் அது பங்குபற்றவில்லை.

[223] டோக்கியோ மாநாட்டின் பிரகடனம், சிறீ லங்கா அரசாங்கம்ஃ "டோக்யோ நிதி வழங்குநர் மாநாடு முடிவடைந்தது" 2003 யூன் 11. http://www.priu.gov.lk/news_update/Current_Affairs/ca2003306/200330611tokyo_donor_conferance.htm (2004 ஒக்டோபர் 1ம்திகதி மீள நினைவுறுத்தப்பட்டது)

[224] Ibid

தரப்பார் மீண்டும் சமாதான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்ததோடு, வயது குறைந்தோர் படைகளில் சேர்க்கப்படும் பிரச்சினையை தொடர்ந்து நீடித்து வருகின்ற ஓர் பிரச்சினையாகவே குறிப்பாக கணிப்பிட்டு இருந்தனர்.[225] 2004ம் ஆண்டு ஒக்டோபர் 1ம் திகதி புலிகள் இயக்கமானது சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கையை நிறுத்த வேண்டும் என அமெரிக்கா ஓர் அறிக்கையின் மூலம் கோரிக்கை விட்டிருக்கிறது.[226]

புனர் நிர்மாணத்திற்காக வழங்கப்படுகின்ற நிதியில் கணிசமான வீதாசாரமானது, யுத்தத்தால் நாசம் செய்யப்பட்ட வடக்கு கிழக்கை நோக்காக கொண்டே வழங்கப்படுகிறது. எனவே புலிகள் இயக்கமானது வயது குறைந்த சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கையை நிறுத்துவதற்கு அழுத்தம் கொடுக்ககூடிய வகையில் நிதி வழங்குனர் சமூகமானது தமது சக்தியை பயன்படுத்த வேண்டும். இவ் அழுத்தமிடுதலானது மனிதாபிமான உதவிகள் அவசரமாக தேவைப்படும் இடங்களுக்கு தடை ஏற்படாமல் இருக்கும் அதெவேளை வேறு வழிகள் மூலம் புலிகள் இயக்கத்தின் மீது இவ் அழுத்தங்கள் இடப்படல் வேண்டும். புலிகள் இயக்கத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்களுக்கு நிதி உதவிகளை வழங்க மறுப்பதை, ஒரு முறையாக கைக்கொள்ளலாம். புலிகள் இயக்கமானது சிறார்களை படையில் சேர்க்கும் விடயத்தை நிறுத்துதல், மற்றும் ஏற்கனவே நிறுவப்பட்ட வரையறைகளின்படி தமது பணிகளில் கணிசமான முன்னேற்றத்தை புலிகள் இயக்கம் காண்பிக்காவிட்டால் மேற்சொன்ன முறையை கையாள முடியும். உண்மையாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிதி உதவிகள் அவர்களுக்கு செல்வது நிறுத்தப்பட வேண்டியதில்லை. ஆனால் இதன் மூலம் புலிகள் இயக்கத்திற்கு ஒரு கடுமையான செய்தியை அனுப்பகூடியதாக இருக்கும்.

சர்வதேச சட்டங்களுக்கு கீழ் புலிகள் இயக்கமானது தனது கடப்பாடுகளின் படி ஒழுக வேண்டும் என்பதை அழுத்தமிட்டு சொல்லக்கூடிய இடத்திலேயே நிதி வழங்குனர் சமூகமானது உள்ளது. ஏனெனில் புலிகள் இயக்கமானது வயது குறைந்தோரை படையணிகளில் சேர்ப்பது இல்லை என தானே பலமுறை பிரகடனப்படுத்தியிருக்கிறது. டோக்கியோ மாநாட்டு பிரகடனமானது இவ்வாறான அழுத்தத்ததை இடுவதற்கு அவசியமான வாய்பைக் கொடுத்திருக்கிறது. குறிப்பாக பேச்சுவார்த்தை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுகின்ற காலகட்டத்தில் சிறார்கள் படையில் சேர்க்கப்படுவதை தடுப்பதற்கு நிதி வழங்குநர் சமூகமானது தமது செல்வாக்கை பயன்படுத்த வேண்டும்.

---

[225] டோக்கியோ பிரகடனம் தொடர்பாக 2004 யூன் 1ம்திகதி இணை தலைமைகள் கூட்டாக வழங்கிய பத்திரிகை அறிக்கை.
http://www.dellka.cec.eu.int/en/press_office/press_releases_pdf/s/cochair_meeting_03062004.pdf (2004 ஒக்டோபர் 4ம் திகதி மீள நினைவுறுத்தப்பட்டது)

[226] அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் றிச்சர்ட் பவுச்சர்: "இலங்கையில் சமாதான நடவடிக்கைகள்" பத்திரிகை அற்க்கை, 2004 ஒக்டோபர் 1ம்திகதி
http://www.state.gov/t/pa/prs/ps/2004/36692.htm (2004 ஒக்டோபர் 4ம் திகதி மீள நினைவுறுத்தப்பட்டது)

## XV. சர்வதேச சட்டத் தராதரங்கள்

சிறார்களை படைகளில் சேர்ப்பதன் மூலமும் அவர்களை நேரடியாக மோதல்களில் பங்கேற்க வைப்பதன் மூலமும் புலிகள் இயக்கமானது சர்வதேச சட்ட நெறி முறைகளை மீறியுள்ளது.

சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை படையினராகப் பாவித்து சண்டைகளோடு சம்பந்தப்பட்ட ஏனைய நடவடிக்கைகளில் அவர்களைப் பாவிப்பது என்பது சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் (யுத்தத்திற்கான சட்டங்கள்), மற்றும் மனித உரிமை சட்டங்கள் மூலம் தடைசெய்யப் பட்டவையாகும். 1949ம் ஆண்டு ஜெனீவா ஒப்பந்தத்தின் இரண்டாவது சரத்தின் (Protocol II) படி சர்வதேச ஆயுத மோதல் அல்லாத (உள்நாட்டு யுத்தங்கள்) யுத்தங்களின்போது, அரச மற்றும் அரச சார்பற்ற ஆயுத குழுக்கள் 15 வயதுக்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்ப்பதும், அவர்களை ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. 1991ம் ஆண்டில் இலங்கை கையொப்பமிட்டு ஏற்றுக்கொண்ட சிறார்களின் உரிமைக்கான ஒப்பந்தத்திலும் (Convention on the rights of the Children ) இதே தராதரங்கள் பிரதிபலிக்கத்தான் செய்கின்றன.[227] 15 வயதுக்கு குறைந்த சிறார்களை படையில் சேர்ப்பதும் அவர்களைப் பாவிப்பதற்குமான தடையானது இப்போது ஓர் சர்வதேச சட்ட மரபாக (Customary Law) கருதப்படுகின்றதோடு, மோதலில் தொடர்புடைய சகல தரப்பினரையும் அது உள்ளடக்குகின்றது.

சிறார்களை ஆயுத மோதலில் ஈடுபடுத்துவது தொடர்பாக, 2000ம் ஆண்டு ஐ.நா. வினால் அங்கீகரிக்கப்பட்டு 2002ம் ஆண்டு அமுலுக்கு வந்த சிறார்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் மேலதிக சரத்தை (Optional Protocol) ஏற்றுக்கொண்டவர்களில் இலங்கையில் ஓர் தரப்பாகும். எந்த ஒரு மோதல்களிலும் நேரடியாக பங்குபற்றுவதற்கும், எந்தவிதமான கட்டாய அல்லது பலவந்த ஆட்சேர்ப்பு போன்றவற்றிற்குமான ஆகக் குறைந்த வயதெல்லை 18ஆக இருக்க வேண்டும், என்று சிறார்கள் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் சட்டவாக்கமும் ஓர் உயர் தரத்தை நியமித்தது. அரச சார்பற்ற ஆயுதக் குழுக்களின் கடப்பாடுகள் பற்றியும் தெளிவாக இச்சட்டவாக்கம் வரையறுக்கிறது. "அரசு அல்லாத ஆயுதக் குழுக்கள் எவ்வாறான சூழ்நிலையின் கீழும் 18 வயதுக்கு குறைந்த நபர்களை ஆயுதப் படைகளில் சேர்ப்பதை அல்லது அவர்களை மோதல்களில் ஈடுபடுத்துவதை மேற்கொள்ளக்கூடாது என 4வது இச்சரத்து தெளிவாக கூறுகிறது.[228]

அரசாங்கப் படைகளில் சுயேட்சையாக நடத்தப்படும் ஆட்சேர்ப்புக்கான குறிப்பான வயதெல்லை எதையும் இம்மேலதிக சட்டவாக்கமானது குறிப்பிடவில்லை. ஆனால் தமது நாடுகளில் சுயேட்சையான ஆட்சேர்ப்புக்கான ஆக குறைந்த

---

[227] சிறார்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தமானது சோமாலியா, அமெரிக்கா தவிர்ந்த ஏனைய அனைத்து நாடுகளினாலும் கையொப்பமிட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

[228] ஆயுத மோதல்களில் சிறார்களை ஈடுபடுத்துவது தொடர்பாக சிறார்களின் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தத்தின் மேலதிக சரத்து. A/RES/54/263 2000 ஆம் ஆண்டு மே 25ம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டு, 2002 பெப்ரவரி மாதம் 12ம் தகதி அமுலுக்கு வந்தது. 2000ம் ஆண்டு செப்டெம்பர் 8ம் திகதி சிறீ லங்கா இதில் கையொப்பமிட்டு ஏற்றுக்கொண்டது.

வயதெல்லையை உறுதிப்படுத்தும் இணைப் பிரகடனம் ஒன்றை அரசாங்கங்கள் வெளியிட வேண்டும், என அது அவ்வரசாங்கங்களைக் கோருகின்றது. ஆனாலும் அவ்வயதெல்லையானது 16 விட குறைவாக இருக்ககூடாது. இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அரசாங்கப் படைகளில் சுயேட்சையாக ஆட்களை சேர்ப்பதற்கான குறைந்த வயதெல்லை 18 என தெளிவாக உறுதிப்படுத்துகின்ற பிரகடனத்தை அது மேற்கொண்டுள்ளது. எனவே நடைமுறையில் இலங்கையின் அரச படைகளுக்கும், அரசசார்பற்ற படைகளுக்கும் நடத்தபடும் சகல ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்கும் ஒரே வயதெல்லையே பேணப்பட வேண்டும்.

1999ம் ஆண்டில் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் (ILO) அங்கத்துவ நாடுகளானது, அதி மோசமான சிறார் தொழில் முறைமை தொடர்பான ஒப்பந்தத்தை (182) (Worst form of child Lobour Conventions) ஏகமனதாக நிறைவேற்றியது. 18 வயதுக்கு குறைந்த எவரையும் சிறார்கள் என அது வரையறுப்பதோடு, *அதி மோசமான சிறார் தொழில் முறைமை* என்பதை தனது வரைவிலக்கணத்திற்குள் பின்வருமாறு உள்ளடக்கியிருக்கிறது.

> சிறார்களை கடத்துதல் மற்றும் விற்பனை செய்தல். கடனுக்காக அடிமைப் படுத்தல், பண்ணை அடிமை முறை, பலவந்த அல்லது கட்டாய வேலைமுறை மற்றும் பலந்தமாக சிறார்களை படைகளில் சேர்த்தல் அவர்களை மோதல்களில் ஈடுபடுத்தல் உட்பட்ட சகலவிதமான அடிமைத்தனத்தை அல்லது அதனை ஒத்த நடவடிக்கைகள்.[229]

இலங்கை அரசாங்கமானது 2001ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி, அதி மோசமான சிறார் தொழில் முறைமை தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

15 வயதுக்கு குறைந்த சிறார்களை படைகளில் சேர்ப்பது அவர்களை மோதல்களில் ஈடுபடுத்துவது என்பது சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சாசனத்தின்படி (Intrnational Criminal Court), ஓர் யுத்தக் குற்றமாகவே கணிக்கப்படும். தேசிய அரசாங்க அங்கத்தவர்களினாலோ, அரச சார்பற்ற ஆயுதக் குழுக்களின் அங்கத்தவர்களாலோ இவ்வாறான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் படுமானால், அது ஒரு யுத்தக் குற்றமாகவே இச்சட்டத்தின் கீழ் கணிக்கப்பட வேண்டும், என்பது ஒரு சாசனமாக 1998ம் ஆண்டு யூலை மாதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.[230] 2004ம் ஆண்டு செப்டெம்பர் மாதம்வரை இலங்கை அரசாங்கமானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இச்சாசனத்தில் கையொப்பமிடவில்லை.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் இச்சாசனத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற அங்கத்தவராக இலங்கை அரசு இல்லாதிருப்பினும், புலிகள் இயக்கத்தின் படைகளுக்குள் 15 வயதிற்கு குறைந்த சிறார்களை சேர்ப்பதற்கு பொறுப்பான

---

[229] அதி மோசமான சிறார் தொழில் முறைமையினைத் தடுப்பதும் அது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுப்பதற்குமான ஒப்பந்தம் (ILO No.182), பிரிவு.3 (அ), 38 I.L.M. 1207 (1999) 2000 ஆம் ஆண்டு நவம்பர் 19இல் அமுலுக்கு வந்தது.
[230] சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் உரோமானிய சாசனம். பிரிவு 8(9)(b)(xxvi) மற்றும் 8(2)(e)(vii), U.N. Doc. A/CONF.183/9, 1998,யூலை 17ம்திகதி பிரகடனப்படுத்தப்பட்டு, 2002ம் ஆண்டு யூலை 1ம்திகதி அமுலுக்கு வந்தது.

புலிகள் இயக்கத்தின் அங்கத்தவர்கள், சர்வதேச சட்டத்தின்படி யுத்தக் குற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கான குற்றச்சாட்டுக்களைப் பொறுப்பேற்க வேண்டியவர்களாவர். ஜெனீவா ஒப்பந்தத்தின் மேலதிக சட்டவாக்கம் மற்றும் சிறார்கள் உரிமை தொடர்பான ஒப்பந்தம் போன்றவற்றினால் முன்வைக்கப்படும் சர்வதேச தராதரங்களுக்கு இருந்த பரந்துபட்ட வரவேற்பையும் ஏற்றுக் கொள்ளலையும் ஒன்றாகப் பார்த்து, சியேரா லியோன் இற்காக அமைக்கப் பட்ட விசேட நீதிமன்றத்தின் மேன்முறையீட்டு சபையானது 2004ம் ஆண்டு மே மாதத்தில் 15 வயதிற்கு உட்பட்டவர்களை படைகளில் சேர்த்துக்கொள்ளுவதை தடை செய்கின்ற 1996க்கு முன்னைய சட்டத்தை, சர்வதேச சட்ட மரபாக தீர்மானித்தது.

சிறார்களை படைகளில் சேர்த்துக் கொள்வதற்கு பொறுப்பாக இருக்கும் தனிநபர்களும் கூட தமது நடவடிக்கைகளுக்கு கிரிமினல் குற்றங்களை மேற்கொண்டதாக பொறுப்பேற்க வேண்டியவர்களாவர் எனவும் சியேரா லியோனிற்கான விசேட நீதிமன்றம் அறிவித்தது.

> சிறார்களை படையில் சேர்க்கும் நடவடிக்கைகளான சிறார்கள் மீது மிக பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அடிப்படை உத்தரவாதங்கள் மிக மோசமாக மீறப்படுவதானது அதில் ஈடுபடும் தனிநபரையும் அக் கிரிமினல் குற்றத்திற்கு பொறுப்பாக்குகின்றது. சிறார்களை படைகளில் சேர்ப்பதானது ஏற்கெனவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான 1998ம் ஆண்டு உரோமானிய சட்ட சாசனத்தின்படி கிரிமினல் குற்றமாகிறது. சிறார்களை படையில் சேர்ப்பது தொடர்பாக நடப்பிலிருக்கும் சட்ட மரபியல் விழுமியங்களை (existing customary norm) உறுதிசெய்து இணைத்திருக்கும் இச்சட்டமானது புதியதொரு சட்டத்தின் தேவையை அவசியமற்றதாக்குகிறது. [231]

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சேகரித்த தகவல்களின்படியும் ஏற்கனவே இருக்கின்ற சாட்சியங்களின்படியும் 11 அல்லது 12வயது மட்டத்தில் இருந்து சிறார்களை பலவந்தமாக படையில் சேர்த்தல் அவர்களுக்கு சண்டைக்கான பயிற்சிகளை வழங்குதல், அவாகளை சண்டைகளில் ஈடுபடுத்துதல் அல்லது சண்டைகளின்போது வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல் என்பவற்றில் புலிகள் இயக்கமானது ஈடுபட்டு வருகிறது. மேலே குறிப்பிட்டு சொல்லப்பட்ட நடவடிக்கைகளாவன சர்வதேச குற்றவியல் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச தொழில் சட்டம் என்பவற்றை மீறும் செயலென சர்வதேச சமூகத்தினரால் கண்டிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல புலிகள் இயக்கமானது தாங்கள் ஒப்புக்கொண்ட நடைமுறைகளுக்கும் ஒவ்வாததாக இருக்கின்றது.

இலங்கை அரசாங்கமானது தனது ஆயுத படைகளுக்குள் சிறார்களை சேர்த்துக் கொள்வதில்லை. எவ்வாறாயினும் சர்வதேச சட்டங்களின் கீழ் சிறார் படையினர் தொடர்பாக அதற்கும் சில கடப்பாடுகள் உண்டு. சிறார்கள் உரிமை தொடர்பான

[231] Summary of Decision on Preliminary Motion on Lack of Jurisdiction (Child Recruitment), *Prosecutor v. Sam Hinga Norman*, Appeals Chamber of the Special Court for Sierra Leone, May 31, 2004, Case Number SCSL-2003-14-AR72 (E).

ஒப்பந்தத்தின் கீழ், ''ஆயுத மோதல் நிலமைகளால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு தேவையான கவனிப்பு, பாதுகாப்பு என்பவற்றை தன்னால் ஆன சகல வழிகளாலும் வழங்குவதை உறுதிப்படுத்தல்'' என்பது ஒரு அரசாங்கத்தினது பொறுப்பாகும்.[232] அத்துடன் ஆயுத மோதல்களினால் கடும் பாதிப்புக்கு உள்ளான சிறார்கள் உடல் ரீதியாக, மனோரீதியாக மீண்டும் சுமுக நிலைக்கு வரவும், சமூகத்தோடு மீள இணைந்து கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், அதற்கான அடிப்படை நெறிமுறைகளை வழங்குவதும்'' அரசின் கடமையாகும்.[233]

மேலதிக சட்டவாக்கத்தின்படி, அரச சார்பற்ற குழுக்களினால் சிறார்களை படைகளில் சேர்ப்பதும் அவர்களை மோதல்களில் பாவிப்பதையும் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசிற்கு உண்டு. அத்துடன் இச்செயற்பாடுகளை கிரிமினல் குற்றங்களாக ஆக்கவும் அரசிற்கு தகுதி இருக்கின்றது.[234]

சிறார்களை படைகளில் சேர்ப்பது மற்றும் ஆயுத மோதல்களில் ஈடுபடுத்துவது என்பது உட்பட, ''மிக அவசர நடவடிக்கையாக, அதி மோசமான சிறார் தொழில் முறைமையினை அடியோடு இல்லாமல் செய்வதற்கும், அவற்றை தடுப்பதற்கும், சிறார்களை பாதுகாப்பதற்குமான உடனடி மற்றும் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பு என, அதி மோசமான சிறார் தொழில் முறைமை தொடர்பான ஒப்பந்தமானது கூறுகிறது.[235] அதே வேளை அவ்வாறான சூழ்நிலைக்குள் அகப்பட்டு இருக்கும் சிறார்களை அங்கிருந்து வெளியே எடுப்பது மற்றும் அவர்களை புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது, சமூகத்தோடு மீள இணைப்பது என்பவற்றுக்கு தேவையான நேரடி உதவிகளை வழங்குவதும், அடிப்படை கல்வி மற்றும் முடிந்தவரை பொருத்தமான தொழில் பயிற்சிகளை பெறுவதற்கான சுதந்திரத்தை அச்சிறார்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதும், ஓர் அரசின் கடமை என அவ் ஒப்பந்தம் மேலும் கூறுகிறது. அத்தோடு ஆபத்து நிலைகளுக்கு முகம் கொடுத்திருக்கும் சிறார்கள், குறிப்பாக தனித்துவமான பிரைச்சினைகளுக்கு முகம் கொடுத்திருக்கும் பெண்சிறார்கள் ஆகியோரை இனங்கண்டு, அரசானது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.[236]

அதிமோசமான சிறார் தொழில் முறைமையைக் கையாளுவதற்கு குறிப்பான செயற் திட்டங்களை உருவாக்குவது அரச தரப்பினர்களின் கடப்பாடு எனவும் அவ் ஒப்பந்தம் கூறுகிறது. இவ் ஒப்பந்தத்துடன் இணைக்கப் பட்டுள்ள பரிந்துரைகளின் படி அச்செயல் திட்டங்களாவன், இவ்வாறான அத்துமீறல்களை மறுதலிப்பது, விசேடமான ஆபத்துக்களுக்கு சிறார்கள் முகம் கொடுக்கின்ற சமூகங்களிடம் நேரடியாக சென்று பணியாற்றுவது, அவர்களுக்கு அதை தெளிவுபடுத்தி உணர்வுமயப்படுத்தி மக்களிடையே ஓர் கருத்தை கட்டியெழுப்பி, அச்சிறார்கள்

---

232 சிறார்கள் உரிமை தொடர்பான ஒப்பந்தம் பிரிவு 38
233 Ibid பிரிவு 39
234 ஆயுத மோதல்களில் சிறார்களை ஈடுபடுத்துவது பற்றிய, சிறார்கள் உரிமை தொடர்பான ஒப்பந்தத்தின் மேலதிக சட்டவாக்கம் பிரிவு 4
235 அதி மோசமான சிறார் தொழில் முறைமையை இல்லாது ஒழித்தலும், உடனடி நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் தடைசெய்தல் தொடர்பான ஒப்பந்தம்
236 Ibid

குடும்பங்கள் உட்பட இதில் அக்கறையுள்ள குழுக்களை உருவாக்குவது, என்பவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.[237]

***இணக்கம் காணப்பட்டவற்றை அடைவது தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முயற்சிகள்.***

1998ம் ஆண்டில் இருந்தே ஐ.நா. பாதுகாப்புச் சபையானது ஆயுத மோதல்களில் அகப்பட்டிருக்கும் சிறார்கள் தொடர்பாக தமது கவனத்தை செலுத்தி உள்ளதோடு, அவ்விடயத்தில் சர்வதேச சட்ட தராதரங்கள் காத்திரமாக அமுல் படுத்தப்படுவதை நோக்காக கொண்ட, தொடர்ச்சியான பல பிரேரணைகளை அது வெளியிட்டும் உள்ளது. அத்துடன் ஐ.நா.வின் சாசனப்படி, ஆயுத மோதல்களின்போது சிறார்களை பாதுகாப்பதற்கான சர்வதேச தரங்கள் பேணப்படுவதை அம்மோதல்களில் ஈடுபடும் தரப்பினர் உறுதி செய்வதற்கு ''அவசியமான சட்ட, அரசியல், இராஜதந்திர, பொருளாதார மற்றும் பௌதீக ரீதியான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்படி'' தனது அங்கத்துவ நாடுகளிடம் ஐ.நா. பாதுகாப்புச் சபை கேட்டுக்கொண்டுள்ளது.[238]

அதுமட்டமன்றி பாதுகாப்புச் சபையானது ஒரு படி மேலே போய், தமது கடப்பாடுகளை மீறுகின்ற வகையில், சிறார்களை படைகளில் சேர்த்து அவர்களை மோதல்களில் பயன்படுத்துகின்ற, ஆயுத மோதல்களில் ஈடுபட்டிருக்கின்ற குறிப்பான தரப்பினர்களின் விபரங்களைத் தொகுத்து பட்டியல் ஒன்றை வெளியிட வேண்டும் என்றும், ஐ.நா.செயலாளர் நாயகத்திடம் கோரியது. இது, அத்துமீறல்களில் ஈடுபடுபவர்களை பொறுப்புச் சொல்ல வைக்கும் நோக்குடனும், குறிப்பாக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் தரப்பினரை அம்பலப்படுத்துவதன் நோக்கிலும் பாதுகாப்புச் சபையால் முதல் முறையாக மேற்கொள்ளப்பட்ட ''அம்பலப்படுத்தலும் அவமானப்படுத்தலும்'' (name and shame) என்னும் நடவடிக்கையாகும். இதன் ஆரம்பப் பட்டியலானது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரலுக்குள் அடங்குகின்ற, ஆயுத மோதல்கள் நிகழும் இடங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களை மட்டும் உள்ளடக்கியதால், அதற்குள் இலங்கை அரசு உள்ளடக்கப்படவில்லை.

எவ்வாறாயினும் 2003ம் ஆண்டில் பாதுகாப்புச் சபையானது தனது பட்டியலின் எல்லையை, பாதுகாப்பு சபையின் நிரலிற்கு அப்பாலும் விஸ்தரித்தது. அதன் பிரதிபலனாக 2003ம் ஆண்டு நவம்பர் மாதத்தில், புலிகள் இயக்கமானது சிறார்களை படையில் சேர்த்து, அவர்களை ஆயுத மோதல்களில் ஈடுபடுத்தும் ஒரு தரப்பினராக, செயலாளர் நாயகத்தினால் இப்பட்டியலில் குறிப்பாக பெயரிடப்பட்டது. இச்சகல தரப்பினரும் உடனடியாக சிறார்களை படையில் சேர்ப்பது மற்றும் அவர்களை பாவிப்பது போன்ற நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என, 2004ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், பாதுகாப்புச் சபையானது கோரியதோடு, நம்பத்தகுந்த தகவல்களை அடிப்படையாக கொண்டு இவ்விடயத்தைக் கையாளுவதற்கு '' அவசியமான நடவடிக்கைகள்'' மேற்கொள்ளப்

[237] பரிந்துரை 190 : அதி மோசமான சிறார் தொழில் முறைமையை இல்லாது ஒழித்தலும், உடனடி நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் தடைசெய்தல் தொடர்பான பரிந்துரைகள். பந்தி 2, ILO, இல.சு190, 1999, யூன் 17

[238] ஐ.நா.பாதுகாப்புச் சபை பிரகடனம் 1379, S/RES1379,(நொவம்பர் 20, 2001), Para. 9b

படவேண்டி வரலாம், என்பதை சுட்டிக்காட்டுவதாகவும் அவ் அறிவிப்பு அமைந்திருந்தது.[239] எமது இந்த அறிக்கையை நாம் தயாரித்துக் கொண்டிருக்கும் பொழுது, ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம், சிறார்களும் ஆயுத மோதல்களும் தொடர்பாக பாதுகாப்பு சபையின் அக்கறையை வெளிப்படுத்தும் ஐந்தாவது அறிக்கையை தயாரித்துக் கொண்டிருக்கிறார். புலிகள் இயக்கம் உட்பட அத்துமீறல்களில் ஈடுபட்டவர்கள் என ஏற்கெனவே இனங்காணப்பட்ட தரப்பினர்களினது கடப்பாடுகள், மற்றும் அவற்றை நிறைவேற்றுவதில் உள்ள முன்னேற்றங்கள், என்பவை தொடர்பான தகவல்கள் உட்பட, மேலதிக நடவடிக்கைகளுக்கான பல பரிந்துரைகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன.

[239] ஐ.நா.பாதுகாப்புச் சபை பிரகடனம் 1539, S/RES1539,(ஏப்ரல் 22, 2004), Para. 6

## நன்றியுரை

இவ் அறிக்கையானது மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறார் உரிமைகள் பிரிவின் நியாயப் பிரச்சார பணிப்பாளர் (Advocacy Director) ஜோ பேக்கர் (Jo Becker), மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் ஆசியப் பிராந்தியத்திற்கான தென்னாசிய ஆய்வாளர் த்ஜெஸ்த்றீ தாபா (Tejshree Thapa), ஆகிய ஆசிரியர்கள், 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையிலும், சிறார்கள் உரிமைப் பிரிவின் சட்ட ஆலோசகர் சாமா கோர்சன்-நெவ் (Zama Coursen-Neff) என்பவராலும் எழுதப்பட்டது.

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் லொயிஸ் வித்மன் (Lois Whitman), சிறார்கள் உரிமைப் பிரிவின் சட்ட ஆலோசகர் சாமா கோர்சன்-நெவ் (Zama Coursen-Neff), ஆசியப் பிரிவுக்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரெட் அடம்ஸ் (Brad Adams), மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிரேஷ்ட சட்ட அலோசகர் ஜேம்ஸ் றொஸ் (James Ross), மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் நிகழ்சித் திட்ட பணிப்பாளர் இயன் லெவீன் (Iain Levine), ஆகியோர் இவ்வறிக்கையை நெறிப்படுத்தினர். டிம் லொஹ்நெஸ் (Tim Lohnes), வரைபடத்தை தயாரித்தார். பிட்ஸ்றோய் ஹெப்கின்ஸ் (Fitzroy Hepkins), ஆந்திரே ஹோலி (Andrea Holley), வெரோணிக்கா மாத்துசாஜ் (Veronica Matushaj) மற்றும் டணா சோமர்ஸ் (Dana Sommers) ஆகியோர் இவ்வறிக்கையை தயாரித்தனர்.

தமது கதைகளை எம்மிடம் வெளிப்படுத்துவதற்கு ஒத்துக்கொண்ட சிறார்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும், எமது விசேட நன்றியைத் தெரிவிப்பதுடன் எமக்கு ஒத்தாசை வழங்கிய பல உள்ளூர் செயற்பாட்டாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியோருக்கு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது, என்றும் தமது நன்றியைத் தெரிவிக்கின்றது. பல்வேறு பாதுகாப்பு காரணங்களுக்காக இத் தனிநபர்களின், நிறுவனங்களின் பெயர்கள் வெளியிடப்படாமல் வைக்கப்படுகின்றன. எமது ஆய்வின் பொழுது தொடர்ச்சியாக யுனிசெப் அமைப்பு வழங்கிய உதவிகள் மற்றும் ஒத்துழைப்புக்களை நாம் வரவேற்கின்றோம்.

சிறார்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக எமது நடவடிக்கைகளுக்கு ஒத்தாசை வழங்குகின்ற *Oak Foundation, the Malcolm Hewitt Wiener Foundation,* மற்றும் மக்கள் சமூகத்தினர் ஆகியோரின் தாராள ஒத்துழைப்புக்கும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தனது நன்றியை பெருமனதுடன் தெரிவிக்கின்றது.

## சிறார் படையினர் தொடர்பாக இதற்கு முன்னர் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கைகள்

போரிடுவது எப்படி, கொல்வது எப்படி: லைபீரியாவில் சிறார் படையினர், 2004.
http://hrw.org/reports/2004/liberia0204/

"அழாமல் இருப்பது எப்படி என நீங்கள் கற்றுக்கொள்வீர்கள்" கொலம்பியாவில் சிறார் படையினர்., 2003
http://www.hrw.org/reports/2003/colombia0903/

கடத்தப்பட்டு துஷ்பிரயோகத்துககு உள்ளாக்கப்பட்டனர்: வடக்கு உகண்டாவில் மோதல் நிலைமை, 2003
http://www.hrw.org/reports/2003/uganda0703/

மறக்கப்பட்ட போராளிகள்: அங்கோலாவில் சிறார் படையினர், 2003
http://www.hrw.org/reports/2003/angola0403/

களவாடப்பட்ட சிறார்கள்: வடக்கு உகண்டாவில் கடத்தலும் படைகளில் சேர்த்தலும், 2003
http://hrw.org/reports/2003/uganda0303/

"எனது துப்பாக்கி என்னை விட உயரமானது": பர்மாவில் சிறார் படையினர், 2002
http://hrw.org/reports/2002/burma/

தயக்கத்துடன் படைகளில் சேர்க்கப்பட்டவர்கள்: வடக்கு கீவூவில் சிறார்களும் பெரியவர்களும் பலவந்தமாக இராணுவ சேவைக்கு சேர்க்கப்படுகின்றனர், 2001
http://www.hrw.org/reports/2001/drc3/

இடைவெளியே இல்லாத யுத்தம்: கொலம்பியாவும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமும், 1998
http://www.hrw.org/reports98/colombia/

மரணத்தின் வடுக்கள்: உகண்டாவில், பிரபுக்கள் தற்காப்பு இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்ட சிறார்கள், 1997
http://www.hrw.org/reports97/uganda/

பர்மா: சிறார்கள் உரிமைகளும் சட்டத்தின் ஆட்சியும், 1997
http://www.hrw.org/reports/1997/burma2/

சூடானின் சிறார்கள்: அடிமைகளும்,தெருச் சிறார்களும்,சிறார் படையினரும், 1995
http://www.hrw.org/reports/1995/Sudan.htm

இலகுவான இரை: லைபீரியாவில் சிறார் படையினர், 1994
http://www.hrw.org/reports/1994/liberia2/

தொலைந்துபோன சிறுவர்கள்: தெற்கு சூடானில் சிறார் போராளிகளும் யாருமில்லா சிறுவர்களும், 1994

"கடவுளின் பெயரால்": வடக்கு சூடானில் ஒடுக்குமுறை தொடர்கிறது, 1994
http://www.hrw.org/reports/1994/sudan/